TNLA Debates

No. 4

III

1980

C

D
V211, 31'N80
N81.3.4
3082

வெளியீடு 28–12–1980] [Issued 28–12–1980

83/81

1495

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

சனிக்கிழமை 1980 ஜூலை 12—தொகுதி III—எண் 4
Saturday 12th July 1980—Volume III—No. 4

தமிழ் நாடு அரசு—GOVERNMENT OF TAMIL NADU
1980

சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை–600 009
Assembly Department, Fort, St. George, Madras-600 009.

விலை 3-15 காசுகள்] [Price 3-15 Paise

D
V211,31 N80
N81-304
123082

உள்ளடக்கம்.

12—7—1980

பக்கங்கள்.

1 வினாக்கள்—விடைகள்—
உடுக்குறியிட்ட வினாக்கள் 561—568

2 ஒத்திவைப்புத் தீர்மானம்—
பெரம்பலூர் தொகுதி வேப்பந்தட்டை கிராமத்தில் இரண்டு சிறுவர்கள் நரபலி கொடுக்கப் பெற்றுள்ளது. .. .. 568—574

3 கவன ஈர்ப்புகள்—
(அ) சென்னை, பட்டினப்பாக்கம் பகுதியில் இரு கோஷ்டிகளுக்கிடையே ஏற்பட்டுள்ள மோதல். 574—579
(ஆ) சென்னை பால் வழங்கும் நிறுவனத் தாரால் வழங்கப்பெறும் பால் கலப்படம் செய்யப் பெறுதல். 579—583

4 தகவல் கோரல்—
(அ) உறுப்பினர்களது அறிவிப்புகள் 583—584
(ஆ) வினாக்கள் எடுத்துக் கொள்ளப் பெறுவது. 585

5 வரவு-செலவுத் திட்டம், 1980–81, வாக்கெடுப்பு—(தொடர்ச்சி)
கோரிக்கை எண் 17—கல்வி. 585—695
மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்.
திரு. செ. இராமலிங்கம்.
திரு. ஜே. சி. டி. பிரபாகரன்.
திரு. ந. சிவஞானம்.
திரு. பி. ஜி. நாராயணன்.
திரு. ரா. கிருஷ்ணன்.
திரு. எம். கே. ராஜமாணிக்கம்.
திரு. மு. அப்பாதுரை.
திரு. சா. கிருட்டிணமூர்த்தி.

திரு. ஜி. மூர்த்தி.
திரு. ஜி. கே. சுப்பிரமணியன்.
திரு. குமரி அனந்தன்.
திரு. ஏ. சாகுல் ஹமீது.
திரு. ஏ. சி. சண்முகம்.
திரு. பொ. விஜயராகவன்.
திரு. கே. எஸ். ஜி. ஹாஜாசெரீப்.
திரு. கோவைத்தம்பி.
திருமதி தா. இராசாம்பாள்.
திரு. ப. நெடுமாறன்.
திரு. க. அன்பழகன்.

6 பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

சனிக்கிழமை, 1980 ஜூலை 12.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

" நன்றாற்ற லுள்ளுந் தவறுண்டு அவரவர்
பண்பறிந் தாற்றாக் கடை. "

அவரவர்கள் குணநலன்களை ஆராய்ந்து அவரவர்களுக்குத் தக்க வகையில் நன்மைகளைச் செய்யாவிட்டால் நன்மை செய்யும் போதும் குற்றங்கள் உண்டாகக் கூடும்.

### 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### பேராவூரணி பகுதியில் ஆழ்குழாய் கிணறுகள், மேல்நிலைத் தொட்டிகள் பழுது பார்க்கும் பணி.

* வினா எண். 181—திரு. எம். ஆர். கோவேந்தன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், பேராவூரணி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அலிவலம், ஆவணம், அம்மையாண்டி, பேராவூரணி, பெருமகளூர், ராஜாமடம் ஆகிய கிராமங்களில் ஆழ்குழாய் கிணறுகள் மேல்நிலைத் தொட்டிகள் பழுதுபட்டிருப்பதை, பழுது பார்த்து குடி தண்ணீர் கிடைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :

(அ) அலிவலம், ஆவணம், அம்மையாண்டி மற்றும் ராஜாமடம் ஆகிய நான்கு சிற்றூர்களில் இயங்கி வரும் குடிநீர்த் திட்டங்களில் ஏற்பட்டுள்ள பழுதுகளைச் சரி பார்க்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தக்க நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது. பேராவூரணி, பெருமகளூர், ஆகிய இரண்டும் பேரூராட்சிகளானதால் அவைகளே பழுது பார்க்கும் வேலைகளை மேற்கொள்ள வேண்டும்.

(ஆ) அலிவலத்தில் ஒரு வாரத்திலும், ஆவணம் மற்றும் அம்மையாண்டி ஆகியவற்றில் ஓரிரு வாரங்களிலும் பழுது பார்க்கும் வேலை முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. ராஜா மடத்தில் உள்ள ஆழ்துளை கிணற்றிலுள்ள நீர் உப்பு நீராக மாறி விட்டதினால் மாற்றுக் குழாய் கிணறு அமைக்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. பாபு ஜனார்த்தனன் : பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக இப்போது இருக்கக் கூடிய இந்த முறை தொகுதிகளிலே ஆங்காங்கு பெரிய இன்னலை உண்டாக்குகிறது. குறிப்பிட்ட ஒரு இடத்திலே ஆழ்குழாய்க் கிணறுகள் கெட்டு விட்டதாக ஒன்றிய ஆணையரிடத்திலே சொல்லி, அதற்குப் பிறகு கோட்ட அலுவலகத்திலே சொல்லி, அதற்குப் பிறகு மாவட்ட அலுவலகத்திலே சொல்லி, அதற்குப் பிறகு டெக்னிஷியன் வந்து பார்ப்பதற்கு காலம் ஆவதாலே கிராமங்களிலே குடிதண்ணீர் வருவது மிகவும் பாதிக்கப்படுகிற காரணத்தினாலே ஒவ்வொரு தொகுதிக்கும் ஒவ்வொரு டெக்னிஷியனை நியமித்து குடிநீர் பிரச்சினையைத் தீர்த்து எல்லாக் கிராமங்களிலேயும் தொடர்ந்து தண்ணீர் கொடுப்பதற்கு அரசு ஏற்பாடுகளைச் செய்ய முடியுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, வில்லேஜ் பஞ்சாயத்து வரையிலே உள்ள மெயின்டனன்ஸ், பராமரிப்பு வேலைகளை குடிநீர் வடிகால் வாரியமே செய்து வருகிறது. பேரூராட்சி, நகராட்சி போன்றவைகளில் அந்தப் பராமரிப்பு வேலைகளை அவைகளே கவனித்துக் கொள்ள வேண்டும். அவைகளிலே ஏதாவது மாற்றம் செய்ய வேண்டுமென்றால் ஆற அமர பரிசீலனை செய்ய வேண்டும்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : தலைவர் அவர்களே, குடிநீர் வடிகால் வாரியத்தின் பராமரிப்பில் உள்ள ஆழ்குழாய் கிணறுகள், மேல்நிலைத் தொட்டிகள் இவைகள் எல்லாம் தஞ்சை மாவட்டத்தில் சரியாகப் பராமரிக்கப்படாத காரணத்தினால் கோடை காலத்தில் குடிநீர் கிடைப்பதிலே பொதுமக்களுக்கு பெரிய அவதி ஏற்பட்டது குறித்து அரசுக்குத் தெரிவித்தும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆகவே எந்தவிதமான தயக்கமும் இல்லாமல் ஆழ்குழாய் கிணறுகளையும், மேல்நிலை நீர்த் தொட்டிகளையும் நல்ல முறையிலே பராமரிப்பதற்கு மாற்று ஏற்பாடுகள் செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, கேள்வி தஞ்சை மாவட்டத்திலே உள்ள பேராவூரணி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்டதாகும். அதற்கு மேல் வேறு இடங்களில் ஏதாவது தவறுதல் இருந்து, அதைக் குறிப்பிட்டுச் சொன்னால் தக்க நடவடிக்கைகள் எடுக்க ஏற்பாடுகள் செய்யப்படும்.



திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் பேராவூரணிப் பகுதியிலே 4, 5 நாட்களுக்குள் குடிநீர் கிடைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பல இடங்களிலே தண்ணீர் கிடைக்கிறதா என்பதை ஆராயாமலேமேல்நிலை தொட்டியைக் கட்டுவதும், கட்டி விட்டு கனக்ஷன் கொடுப்பதும் பிறகு தண்ணீர் கிடைக்கிறதா என்று ஆராய்கிறபோது தண்ணீர் கிடைக்காத நிலைமையில் இருக்கிறது. தண்ணீர் கிடைத்தாலும் மோட்டாரை வைத்து இயக்குகிறபோது தொடர்ச்சியாக தண்ணீர் கிடைக்கிறதா என்றால் அதுவும் கிடைக்காத நிலைமை இருக்கிறது. இவைகளையெல்லாம் போக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டும் சிக்கல் தீரவில்லை. ஆகவே 4, 5 பஞ்சாயத்துக்களுக்கு 20, 30 லட்சம் ரூபாய் போட்டு ஒரு இடத்திலே அந்தத் தொட்டியைக் கட்டி அங்கிருந்து கிராமங்களுக்குக் குழாய்கள் அமைப்பதன் மூலமாக கனக்ஷன் கொடுத்து மக்களுக்குத் தண்ணீர் தொடர்ந்து கிடைப்பதற்கு வழிவகை செய்வதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, எங்கெங்கு தண்ணீர் கொடுக்க வேண்டுமென்று முடிவு எடுக்கப்படுகிறதோ அங்கு அதற்கு முன்பு இன்வெஸ்டிகேஷன்—ஆய்வு நடத்தப்படுகிறது. அங்கு எவ்வளவு தண்ணீர் கிடைக்கும், எத்தனை மக்களுக்குக் கொடுக்கலாம், எந்த அளவிற்குக் கொடுக்கலாம் என்று பார்த்த பிறகுதான் நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வறட்சி நிவாரணப் பணிகளின் கீழ் கிராமங்களில் காம்ரஹென்சிங் ஸ்கீம் என்ற வகையில் நடைபெற்று வந்த அந்தப் பணி பாதியிலே நிறுத்தப்பட்டிருக்கிறது. அந்தப் பணியை மீண்டும் குடிநீர் வடிகால் வாரியம் எடுத்துத் தொடர்ந்து நடத்துவதற்கு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, எடுத்த வேலைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. ஆனால் சில இடங்களில் எங்கள் ஊரிலிருந்து வேறு ஊருக்குத் தண்ணீர் கொண்டு போகக் கூடாது என்று கிளர்ச்சிகள் ஏற்படுகின்ற காரணத்தால் நிதானமாக இரு சாராரோடும் அல்லது சம்பந்தப்பட்டவர்களோடு பேசித் தீர்க்க வேண்டியிருக்கிறது. அதிலேதான் காலதாமதம் ஆகிறது.

திரு. இல. பலராமன் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் சொல்லும் பொழுது நிவர்த்திக்கப்படும் என்று சொன்னார்கள். தஞ்சை மாவட்டத்தில் மட்டுமல்லாமல்,

[1980 ஜூலை 12

குடிநீர் வடிகால் வாரியம் ஏற்றுக் கொண்டிருக்கும் பொறுப்புகள் அனைத்தும் மாநில அளவில் தேக்கமாக இருக்கிறது. பல இடங்களில் குடிநீர் வசதி இல்லை. மேலும் இது போன்று பழுது ஏற்பட்டு நீண்ட நாட்களாகியும் அவைகள் சீர்படுத்தப் படாமல் இருப்பது அமைச்சரவர்களின் கவனத்திற்கு வந்து இருக்கிறதா? அப்படி வந்திருந்தால் அவற்றை உடனடியாக நிவர்த்திக்க உத்தரவு இடப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, குறைகள் இருக்கின்றன என்ற முறையீடு வந்தால் மிக வேகமாக அதைக் களைவதற்கு ஏற்பாடு செய்யப் பட்டு வருகிறது.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : சபாநாயகரவர்களே, இந்தக் குடிநீர்த் திட்டத்தை அமைக்கின்ற பணி வேண்டுமானால் குடிநீர் வடிகால் வாரியத்திடம் இருப்பதைப் பற்றி ஆட்சேபணை இல்லை. ஆனால் ஏற்படுத்தப்பட்ட இந்தத் தேக்கங்களை நிர்வகிக்கும் பொறுப்பு அந்தப் பஞ்சாயத்திடம் இருக்கிறது, அதற்கு மேல் பஞ்சாயத்து யூனியன் இருக்கிறது, அதில் என்ஜினியர்கள் இருக்கிறார்கள்; அந்தத் திட்டம் சரியாகச் செயல்படுத்தப்படவில்லை என்றால் அந்தப் பஞ்சாயத்து யூனியன் என்ஜினியர்கள் சரிபார்த்துக் கொள்வார்கள். அதற்கான மெயின்டனென்ஸைக் குடிநீர் வடிகால் வாரியம் ஏன் எடுத்துக் கொள்ள வேண்டும்? பல இடங்களிலே அவை சரியாகச் செயல் படவில்லை என்பதை நான் அமைச்சருக்குச் சுட்டிக் காட்டு கிறேன். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன், என்னு டைய பகுதியிலே, அண்ணா கிராமம் ஊராட்சி ஒன்றியத்தில், மத்திய அரசின் உதவியோடு, 42 இலட்சம் ரூபாய் செலவிட்டு, எல்லாக் கிராமங்களுக்கும் குடிநீர் வழங்குவதற்கான திட்டம் 1975 ஆம் ஆண்டில் கலைஞர் அவர்களாலே திறந்து வைக்கப் பட்டது. அது சரியாக நடந்தது. பிறகு குடிநீர் வடிகால் வாரியம் அதன் மெயின்டனென்ஸை எடுத்த பிறகு ஏறக் குறைய 20 இடங்களில் சரியாக வேலை செய்யவில்லை. கவர்னர் ஆட்சியின் பொழுதுகூட தந்தி மூலம் இந்தத் தகவலைக் கொடுத்திருந்தேன். இது வரையில் அவைகள் சரியாகச் செயல் படவில்லை. எனவே, தயவு செய்து ஓவர்ஹெட் டேங்குகளின் மெயின்டனென்ஸைப் பஞ்சாயத்து யூனியன் பொறுப்பிலே கொடுக்க முன் வருவார்களா? இதற்கு அமைச்சரவர்கள் பதில் சொல்வார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலை வரவர்களே, கேள்வி பேராவூரணி சட்டமன்றத் தொகுதி பற்றி யது. எனவே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் இதற்குத் தனிக் கேள்வி போட்டால் பதில் அளிக்கிறேன்.



1980 ஜூலை 12]

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : தலைவரவர்களே, பேரா வூரணியிலும் மெயின்டனென்ஸ் செய்ய வேண்டும், இதையும் மெயின்டனென்ஸ் செய்ய வேண்டும். Maintenance is a general question நான் அண்ணா கிராமத்தில் இருக்கும் சமாச் சாரத்தை ஒரு அலகேஷனாகக் கொண்டு வரவில்லை. ஓவர் ஹெட் டேங்குகளின் மெயின்டனென்ஸ் குடிநீர் வடிகால் வாரியத்திடம் இருக்க வேண்டுமா, இருக்கக் கூடாதா என்பது தான் பிரச்னை. அது பேராவூரணியாக இருந்தாலும் சரி, அண்ணா கிராமமாக இருந்தாலும் சரி. இதற்கு அமைச்சரவர் கள் தயவு செய்து பதில் சொல்ல வேண்டும். உங்களால் நிர்வகிக்க முடியவில்லை என்றால் அந்தப் பஞ்சாயத்து யூனியன் களிடம் கொடுப்பதற்கு ஏன் தாமதம்? என்ன ஆட்சேபணை என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, பராமரிப்பை இப்பொழுது பேரூராட்சியும், நகராட்சிகளும் தான் பார்த்துக் கொண்டிருக்கின்றன.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, ஊராட்சிகளில் இருக்கும் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளை 1—1—80 முதல் குடிநீர் வடிகால் வாரியம் பராமரிக்க வேண்டுமென்று உத்தரவு போட்டிருப்பதாக அறிகிறேன். இப்படியிருப்ப தால் இந்தக் குடிநீர் ஆழ்குழாய்க் கிணறுகளைப் பராமரிக்க மிகக் குறைந்த சிப்பந்திகளே இருக்கிறார்கள். எனவே, அந்தச் சிப்பந்திகளை அதிகப்படுத்தி பழுது பட்டிருக்கும் கைப் பம்புகளைச் சரி பார்க்கும்படி செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, இதைப் பற்றித் தனிக் கேள்வி போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 9-10]

திரு. நன்னிலம் அ. கலையரசன்: தலைவரவர்களே, மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி இருக்கக்கூடிய இடங்களில், அந்த நீர்த் தேக்கத் தொட்டிகள் அமைக்கப்பட்டிருக்கும் இடங்களில் இருந்து ஒரு குறிப்பிட்ட தூரம் தான் தண்ணீர் கொண்டு செல்ல வேண்டுமென்று விதி வைத்திருக்கிறார்கள். அப்படி நீர்த் தேக்கத் தொட்டிகள் கட்டியிருக்கக் கூடிய இடங்களுக்கு அருகாமையில் இருக்கக் கூடிய அரிசனக் குடியிருப்புகளில் இருக்கக் கூடியவர்கள் எங்களுக்குத் தண்ணீர் வேண்டுமென்று கேட்கக் கூடிய நேரத்தில், அங்கே இருக்கக் கூடிய ஊராட்சி மன்றத் தலைவர்களே, அதற்கு எக்ஸ்டென்ஷன் வாங்குவதற்கு

அனுமதி வாங்கி, அதற்குப் பின்னாலே இயங்க வைக்கிறேன் என்று சொல்லக் கூடிய அளவுக்கு நிலையிருக்கிறது, ஏனென்று சொன்னால், அந்த....................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விளக்கமெல்லாம் வேண்டாம், கேள்வி கேளுங்கள்.

திரு. நன்னிலம் அ. கலையரசன் : எனவே, அந்த அனுமதி வழங்கக்கூடிய நேரத்திலேயே, பக்கத்திலே உள்ள அரிசனக் குடியிருப்புகளுக்கும் தண்ணீர்வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்றுகேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, கேள்விக்கு நேரடியாகத் தொடர்பில்லை என்றாலும் சொல்கிறேன், திட்டம் வகுக்கும் போதே, எந்தெந்த இடத்திற்குத் தண்ணீர் கொடுப்பது என முடிவெடுத்து, திட்டம் வகுத்துத்தான் தண்ணீர் கொடுக்கப்படுகிறது. ஆகவே, எதாவது அரிசனப் பகுதி விடப்பட்டிருக்குமேயானால் அதைச் சொன்னால் அதையும் பின்னால் கவனித்துச் சேர்த்துக் கொள்வார்கள். ஆனால், வேண்டுமென்றே எந்த அரிசனப் பகுதியையும் விட்டு விடுவதில்லை. திட்டமிடும்போது எந்த எந்தப் பகுதிக்கு எவ்வளவு எந்தபகுதிக்கு எவ்வளவு குழாய்கள் என்று தனித் தனியாகப் பிரித்துப் போட வேண்டுமென்று, அதற்கு வேண்டிய கணக்கு வழக்குகள், செலவினங்கள் எல்லாம் பார்த்துத்தான் செய்யப்படுகின்றன. குறிப்பாக, எந்தப் பகுதிக்காவது தண்ணீர் கொடுப்பது விடுபட்டிருக்கிறது என்று சொன்னால் அதைப் பற்றி அரசு ஆராயும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி பேராவூரணியைப் பற்றியது. இப்பொழுது துணை கேள்விகள் தமிழ் நாட்டையே சுற்றி வந்து கொண்டிருக்கின்றன.

திரு. பாபு ஜனார்த்தனன் : குடி தண்ணீர் பிரச்னை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லோருக்கும் குடி தண்ணீர் தேவை தான். அதிலே ஒன்றும் பிரச்னை இல்லை. தனியாக வேண்டுமானால் 1/2 மணி நேர விவாதம் வேண்டும் என்று கேளுங்கள் ; பரிசீலிக்கப்படும்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் வேறொன்றும் கேட்க விரும்பவில்லை. குடிநீர் விஷயம். அந்தக் குடிநீர் டாங்குகளை ரிப்பேர் செய்கின்ற பொறுப்பை, குடிநீர் வடிகால் வாரியம் எடுத்துக் கொண்ட காரணத்தினால், மக்கள் மிகவும் கஷ்டப்



படுகிறார்கள். இது சாதாரண விஷயம் அல்ல. வாரியத்தினர் வந்து மோட்டாரை எடுத்துக் கொண்டு போய் விடுவார்கள். 3 மாதம் வரைக்கும் திரும்ப வரமாட்டார்கள். ஆகவே, It is a question of maintenance.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது டிஸ்கஷன் வேண்டாம். அந்த இலாகா மானியம் வரும், அப்பொழுது பேசுங்கள். கேள்வி நேரம் தான் கிடைத்ததா அதற்கு ?

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : அது வரைக்கும் தண்ணீர் குடிக்காமல் இருப்பார்களா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் இங்கே பேசிய உடனே அவர்கள் தண்ணீர் குடித்து விடுவார்களா ? மூலக் கேள்வி பேராவூரணியைப் பற்றியது. அது சம்பந்தப்பட்டதைக் கேளுங்கள். நான் வரவேற்கிறேன். இப்படி மூலக் கேள்வியை யொட்டி நீங்கள் கேட்க வேண்டுமென்று விரும்புகிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : We want the Hon. Minister to reply to specific question நாங்கள் ஏன் ஒவ்வொரு கிராமத்திலும் குடி தண்ணீர் கொடுக்கவில்லை என்று கேட்கவில்லை. குடிநீர் வாரியம் பராமரிப்புப் பொறுப்பை எடுத்துக் கொண்டதால் பல இடங்களில் தவறுகள் இருக்கின்றன. Why don't you revert it back to Panchayat Unions and allow them to have their own repairs. நீங்கள் எடுத்துக்கொள்கிறீர்கள். உங்களுடைய வேலையை உங்களால் செய்ய முடியவில்லை. அப்படி இருக்கும்போது பஞ்சாயத்து யூனியன்களிடமிருந்து அந்தப் பொறுப்பையும் நீங்கள் ஏன் எடுத்துக்கொள்ள வேண்டும் ? This is general a question which the Hon. Minister has to answer : He cannot escape by simply saying 'put a separate question'.

மாண்புமிகு டாக்டர். இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே கேள்வி கேட்கும் போது, கேள்விக்கு எந்த அளவுக்கு விடை இருக்கலாம், அல்லது துணைக் கேள்விகள் கேட்டால், எந்த அளவுக்கு தகவல் இருக்க வேண்டுமோ அந்த அளவுக்குத்தான் அமைச்சரிடம் தகவல் இருக்குமே தவிர, அதற்குப் புறம்பாகப் போகிற அளவுக்கு இருந்தால் தனிக் கேள்விகள் போடுங்கள் என்று சொல்லுகிற நிலைதான் வரும். இது பேராவூரணி பற்றிய கேள்வி ஆகவே அதையொட்டிய கேள்வி வரும் என்ற நிலையில், விடையும் அந்தக் குறிப்பிட்ட எல்லைக் கோட்டுக்குள்

தான் அடங்கியிருக்கும். ஆனால், மாண்புமிகு உறுப்பினர்
கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கேட்டிருப்பது பொதுவானதாக
இருந்தாலும், அந்தப் பிரச்சினையைப் பற்றி முழுவதும் ஆராய்
ந்து தான் செய்ய வேண்டும். ஏனென்றால், அப்பணியை ஊராட்சி,
ஒன்றியங்களுக்குத் தருவதன் மூலமாக இருக்கிற சாதக பாதகங்
கள், குடிநீர் வாரியமே அப்பணியை மேற்கொள்வதனால் இருக்கிற
சாதக பாதகங்கள் எல்லாவற்றையும் ஒப்பிட்டு, எந்த வகையில்
வைத்தால் சாதகமாக இருக்கும் என்பதை ஆராய்ந்து செய்ய
வேண்டும். ஆகவே, உடனடியாக பதில் சொல்ல முடியாது.
ஆகவே, முழு விளக்கங்களை கேள்வி நேரத்தில் சொல்ல இயலாது.
என்றாலும் மானியக் கோரிக்கை வரும்போது விரிவாக சொல்ல
வாய்ப்பிருக்கும். ஆகவே, மானியக் கோரிக்கை இருப்பதனால்
தனியாக விவாதம் தேவையில்லை என்று சொல்ல விரும்புகிறேன்.
மானியக் கோரிக்கை இல்லை என்றால்; 1/2 மணி நேரம் ஒதுக்கி
விவாதம் செய்யலாம். மனியக் கோரிக்கை இருப்பதால்,
அப்போது விளக்கங்கள் கேட்கவும் சொல்லவும் வாய்ப்பிருக்
கிறது. ஆகவே, இந்த அளவில்தான் அமைச்சரவர்கள் விளக்கங்
களைச் சொல்ல முடியும் என்று சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள்
முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்
பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது
என்பதைக் குறிக்கும்.]

## 2. ஒத்திவைப்புத் தீர்மனம்.

### பெரம்பலூர் தொகுதி வேப்பந்தட்டை கிராமத்தில் இரண்டு சிறுவர்கள் நரபலி கொடுக்கப்பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ''திருச்சி மாவட்டம்
பெரம்பலூர் தொகுதியில் உள்ள வேப்பந்தட்டை கிராமத்தில்
இரண்டு சிறுவர்கள் நரபலி கொடுக்கப்பட்டுள்ளது'' பற்றி விவா
திக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும்
என்று கேட்டு—திருவாளர்கள் சோ. அழகர்சாமி, எம். ஆறுமுகம்
எம். அப்பாத்துரை , என். ஏ. பூங்காவனம், பி. உத்திராபதி,
ஈஸ்வர மூர்த்தி என்கிற சொரணம், ஆர். உமாநாத், உ. சுப்பிர
மணியன், பி. பொன்னுரங்கம், என். எஸ். வி. சித்தன், கே. எம்.
தங்கமணி, ஜே. எஸ். இராசு, அ. ரகுமான்கான், இரெ. இராச
மாணிக்கம், ஆகியோர் ஒத்திவைப்பு தீர்மானங்கள் கொடுத்துள்ள
னர் இது எப்படி அவசர முக்கியமானது என்பது குறித்து
சுருக்கமாக கூறும்படி கேட்டுக் கொள்கிறேன்.





* திரு சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே,
இந்த இரண்டு சிறுவர்கள் நரபலி கொடுக்கப்பட்ட விஷயம்
இருக்கிறதே, அது பத்திரிகையிலே படிக்கிற விஷயம் அல்ல.
தமிழகத்தையே குலுக்குகின்ற மோசமான சம்பவம் ஆகும்.
அது மட்டுமல்ல, ராஜேந்திரன் என்ற பையனும் நல்லசாமி
என்ற பையனும், மிகக் கொடுமையான முறையில் கை , கால்கள்
வெட்டப்பட்டு கொல்லப்பட்டிருக்கிறார்கள். அதற்குக் காரணம்
அவர்கள் கட்டக்கூடிய அந்த வீட்டிலே முன்னாலே இருந்தவர்
களுக்கு வாரிசு கிடையாது என்பதாலும், நரபலி கொடுத்தால்
வாரிசு கிடைக்கும் என்பதால் இப்படி நடந்தது என்றும் சொல்லப்
படுகிறது. இப்படிப்பட்ட சம்பவம் அங்கே நடந்திருந்தாலும்
அங்கே உள்ள அதிகாரிகள், போலீஸ் அதிகாரிகள், ஏதோ அவர்
களைக் கூப்பிட்டோம், கேட்டோம் என்கிற அளவுக்குத்தான்
இருக்கிறதே தவிர அதிலே சம்மந்தப்பட்டவர்கள் யார், யார்
அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்கிற
விஷயங்கள் ஒன்றும் தெரியவில்லை. இதற்கு ஒரு மந்திரவாதி
சம்பந்தப்பட்டிருக்கலாம், இன்னும் பல பேர்கள் திட்டம் போட்டு
செய்த காரியமாகவும் இருக்கலாம். அப்படிப்பட்ட ஒரு பெரிய
சதித் திட்டத்துடன் நடந்த இந்தப் படுகொலை நடந்திருப்ப
தாலே இதில் சம்பந்தப்பட்டவர்கள் மீது கடுமையான நடவடிக்கை
எடுப்பதற்கு அரசும், போலீஸ் இலாக்காவும் சரியாக செயல் பட
வேண்டும். வடநாட்டிலே தான் இப்படிப்பட்ட சம்பவங்கள்
அடிக்கடி நடக்கும் என்று பத்திரிகையிலே படித்திருக்கிறோம்.
அதிகமாகப் பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்கிற தமிழகத்திலேயும்
இப்படிப்பட்ட நரபலிகள் நடக்கின்றன. சுடந்த காலத்திலேயும்
2, 3 இடங்களில் நடந்திருக்கின்றன. இதற்கான மூல வேர்
எங்கிருந்து வருகிறது, அதற்கு என்ன காரணம் என்பதையும்,
அதன் மேலே என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை
விவாதிக்கவும், குற்றவாளிகள் தப்பித்துக் கொள்ளாமல் இருக்க
வேண்டும் என்பதற்காகவும்; இந்த அவையின் ஏனைய நடவடிக்
கைகளை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

திரு உ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்த நரபலி செய்தியைக் கேட்ட உடனேயே
உடலே நடுங்குகின்ற அளவுக்கு இருக்கிறது. இது வரையில்
சிறு குழந்தைகளை, கடத்துகிறவர்கள், பிள்ளைகளைக் கடத்து
கிறவர்கள் இருக்கிறார்கள் என்ற பீதி இருந்து வந்தது. ஆனால்,
இப்போது தங்களுடைய எண்ணங்களை நிறைவேற்றுவதற்காக
சாந்தி செய்வதற்காக, நரபலி கொடுப்பதற்காக 3 வயது, 4 வயது
குழநதைகளைப் பலியிட்டு இருப்பது மிகவும் பயங்கரமாக இருக்
கிறது. இன்னும் என்னென்ன செய்வார்களோ என்கிற அச்ச
உணர்வு இருக்கிறது. ஏற்கனவே பல நூற்றாண்டுகளுக்கு முன்
பாக கபால பைரவர்கள் சிறுவர்களை மட்டுமல்ல, பெரியவர்

களையும் தூபாய் கொடுத்து வந்ததாகக் கேள்விப்படுகிறோம். இப்போது நடக்கிற நரபலியைப் பார்க்கும் போது அவர்களின் மேல் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 9–20)

அதோடு சமீபத்தில் மலேசியாவில் கள்ளக்கடத்தல் சாமான் கொண்டு வந்தவர்களுக்கு தூக்கு தண்டனை விதித்திருக்கிறார்கள். அதுபோல், இந்த நரபலி செய்பவர்களைக் கடுமையாக தண்டிக்க நடவடிக்கை எடுக்கவும், மக்களிடையே உள்ள அச்ச உணர்வு களை அகற்ற நடவடிக்கை எடுக்கவும் தக்க வழிவகைகளைக் காண்பதற்கு ஏதுவாக இருக்கும் வகையில் இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இது குறித்து விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டம் பெரம்பலூர் தாலுக்காவில் இரண்டு சிறுவர்கள் 3, 4 வயதுடையவர்கள் நரபலிக்கு உள்ளாக்கப் பட்டு இருக்கக்கூடிய சம்பவம் உண்மையிலேயே மிகவும் சோகத் தில் ஆழ்த்தக் கூடிய சம்பவம். ஆகவே, இது குறித்து விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டியது மிகவும் அவசியம். காரணம் தந்தை பெரியார், அறிஞர் அண்ணா போன்றவர்கள் நீண்ட நாட்களாக மூடப் பழக்க வழக்கங்கள் முறியடிக்கப்பட வேண்டும் என்று பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்தும் கூட, இன்னும் அந்த மூட நம்பிக்கை பல்வேறு கிராம மக்கள் மத்தியில் ஒழியவில்லை என்பதற்குச் சாகாத சாட்சியாக இந்த இரண்டு சிறுவர்கள் நரபலிச் சம்பவம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த 20 ஆம் நூற்றாண்டில் எவ்வளவோ விஞ்ஞான முன்னேற்றம் ஏற்பட்ட பிறகு இன்னும் அறியாமையின் அடிப் படையில் மூடப்பழக்க வழக்கங்களை மக்கள் கடைபிடித்து வருவ தன் காரணமாகத்தான் இதுபோன்ற கொடுமையான சம்பவங்கள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன.

நம் மாநிலத்திற்குப் பக்கத்திலே உள்ள கருநாடக மாநிலத்தில் கூட இதுபோன்ற நரபலிச் சம்பவங்கள் தொடர்ந்து இருந்து, அதற்குக் காரணமாக இருந்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப் பட்டு இருக்கிறது என்பதை அறிவோம்.

பெரியார் வழியில் நடப்பதாகச் சொல்லும் இந்த அரசு இது போன்ற சம்பவங்களில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளை கண்டுபிடித்து அவர்களுக்குக் கடுமையான தண்டனை கொடுக்க வும், இதுபோன்ற சம்பவங்கள் இனி நிகழாமல் பார்த்துக் கொள் ளவும் வேண்டிய நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.





அந்த நேரத்தில், நான் இந்த அவையின் முன் ஒன்றைத்
சம்பவத்தையும் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய தொகுதி
தொகுதியான சேப்பாக்கத்தில் பாலை நாள் என்னும் 10 வயது
சிறுவன் ஒரு ஆண்டுக் காலத்திற்கு முன்பாகக் காணவில்லை.
அந்தப் பையனை யாரோ தூக்கிக் கொண்டு போய் இருக்கிறார்கள்.
அந்தப் பையனைக் காணோம் என்று போலீசில் புகார் கொடுக்கப்
பட்டு இருக்கிறது. உயர்ந்த போலீஸ் அதிகாரிகளிடத்தில் இது
பற்றி புகார் கொடுக்கப்பட்டு இருக்கிறது. அவனுடைய தகப்ப
னார் ஜனார்த்தனம் என்பவர் மத்திய பிரதேசத்தில் ரயில்வே
டிபார்ட்மெண்டில் வேலை செய்து கொண்டு இருக்கிறார்.
அவருடைய வயதான தாய், தந்தையர்கள் பாதுகாப்பில், உதவி
யில், என்னுடைய சேப்பாக்கம் தொகுதியில் உள்ள பள்ளியில்
அந்தப் பையன் படித்துக் கொண்டிருந்தான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்கும், இதற்கும் என்ன சம்பந்தம்?

திரு. அ. ரகுமான்கான் : எதற்காக இதைச் சொல்லுகிறேன்
என்றால், அந்த காணாமல் போன சிறுவனும் நரபலிக்கு
உள்ளாக்கப்பட்டு இருப்பானோ என்கிற ஐயப்பாடு எழுகிறது.
எங்கு தேடியும் இதுவரையில் அந்தப் பையனைக் கண்டுபிடிக்க
முடியாததால் இந்த ஐயப்பாடு எழுகிறது. இந்தச் சம்பவம்
வெளியில் வந்திருப்பதுகூட, தற்செயலாக நடைபெற்ற ஒன்று
தான், ஒரு பையனின் காலை நாய் கௌவிக்கொண்டு வந்த
காரணத்தால், அதைத் தொடர்ந்து போய், அந்த நாய் சென்ற
இடத்திற்குச் சென்று, அந்த வீட்டின் அஸ்திவாரத்தை தோண்டி
யதில் இந்த இரண்டு சிறுவர்களின் பிணம் கிடைத்து இருக்கிறது.
ஆகவே தான் இதுபோன்ற நரபலிக்கு அந்தச் சிறுவன் ஆளாக்கப்
பட்டு இருப்பானோ என்கிற அச்சம் ஏற்படுகிறது. ஆகவே,
இந்த நரபலி செய்பவர்களைக் கண்டுபிடித்து, தகுந்த தண்டனை
கொடுக்க வேண்டும். இது ஒரு சென்சிடிவ் பிராப்ளம். ஆகவே,
இது குறித்து விவாதிக்க சபையின் இதர அலுவல்களை ஒத்தி
வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர். இரா. நெடுஞ்செழியன் : பேரவைத்
தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டம் பெரம்பலூர் தாலுக்கா
வேப்பந்தட்டை கிராமத்தில் இரண்டு சிறுவர்கள் நரபலி கொடுக்
கப்பட்டு இருக்கிறார்கள் என்பது வேதனைக்குரிய செய்தியாகும்.
இந்த அவையில் இருக்கிற அத்தனை பேரும் மனக் கொதிப்பு
கொண்டுள்ளார்கள் என்பதில் ஐயமில்லை. இந்த இருபதாம்
நூற்றாண்டில் இப்படிப்பட்ட ஒரு நிகழ்ச்சி நடந்து இருப்பது
வெட்கப்பட வேண்டிய ஒரு நிகழ்ச்சியாகும். அதைத்தான்
மாண்புமிகு உறுப்பினர்கள் பெரும்பாலோர் இந்த ஒத்தி வைப்புத்
தீர்மானத்தைக் கொடுத்து இருக்கிற எண்ணிக்கையிலிருந்து தெரிய
வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே
இருக்கிற நிலைமைகளை எடுத்துக் காட்டினார்கள்.

திருச்சி மாவட்டம் அரியலூர் சப்டிவிஷன், அரும்பாவூர் காவல் நிலையத்திற்கு உட்பட்ட வெப்பந்தட்டை கிராமத்தில் சுப்பைய உடையார் மகன் நல்லுசாமி வயது 4, செல்லப்பிள்ளை உடையார் மகன் ராஜேந்திரன் வயது 3—இவர்கள் 6—7—80 ஆம் தேதியிலிருந்து காணாமல் போய்விட்டனர். 8—7—80 ஆம் தேதி ஒரு நாய் மனிதக்கால் எலும்பு ஒன்றைத் தூக்கிக் கொண்டு வந்தது. இதைப் பார்த்ததும் காணாமல் போன பையன்களை நாய் வந்த பக்கத்தை நோக்கித் தேட ஆரம்பித்தனர்.

அவ்வூரில் அரிசன வகுப்பைச் சேர்ந்த வேலுசாமி என்பவர் (பழையனூர் பஞ்சாயத்து யூனியன் எலிமின்டரி பள்ளி தலைமை ஆசிரியர்) ஓர் இடத்தை வாங்கி வீடு கட்டுவதற்கு அஸ்திவாரம் தோண்டிக்கொண்டிருந்தார். தோண்டப்பட்ட அவ்விடத்தில் ஊர்க்காரர்கள் காணமல் போன பையன்களை பிணமாகக் கண்டனர். நல்லசாமி என்ற பையனுக்கு வலது காலும், வலது கையும் கண்களும் காணவில்லை. மற்றொரு பையனான ராஜேந்திரனுடைய உடல் காயமில்லாமல் காணப்பட்டது.

கொடுக்கப்பட்ட புகாரில் அஸ்திவாரம் தோண்டிக்கொண்டு இருக்கின்ற வேலுசாமியையும் அவருடைய மனைவியையும் (மரகதம்) சந்தேகப்பட்டனர். அவ்விடத்தின் முன்னைய நில உரிமையாளர் எவருக்கும் குழந்தை பாக்கியம் கிடையாது, ஆகவே, புதிதாக அவ்விடத்தை வாங்கிய வேலுசாமி இக் குழந்தைகளை பலி கொடுத்து வாரிசு வரம் பெறலாமென்று நினைத்து இக்காரியத்தைச் செய்திருக்கலாம் என்று சொல்லப்படு கிறது.

காவல்துறை விசாரணை தொடர்ந்து நடந்து வருகிறது. வேலுசாமியையும் அவருடைய மனைவி மரகதத்தையும் பிடித்து வைத்து விசாரணை செய்து வருகிறார்கள். அஸ்திவாரம் தோண்டுகிற இடம் மணல் பாங்கான இடமாக இருப்பதால் விளையாடப்போன சமயத்தில் இச்சம்பவம் நடந்து இருக்கலா மென்றும் விசாரணையில் கருதப்படுகின்றது.

சந்தேக நபர் வேலுசாமி அரிசன வகுப்பைச் சேர்ந்தவர். அவருடைய மனைவி மரகதம் முதலியார் வகுப்பைச் சேர்ந்தவர். மரகதத்தின் தங்கையையும் இவர் தன்னுடன் வைத்திருக்கிறார். மேற்படி பையன்கள் காணாமல் போனவுடன் அவர்களுடைய தந்தையார்கள் சுப்பைய உடையார், செல்லப்ப உடையார் அரும்பாவூர் காவல் நிலையத்தில் புகார் செய்தனர். இவர் களுடைய புகாரின்பேரில் குற்ற எண் 144, 145 பிரிவின் கீழ் ''பாய்ஸ் மிஸ்ஸிங்'' என்று முதலிலும், பிறகு அதை இ.பி. கோ. 363 பிரிவின் கீழும், பிணமாக கண்ட பிறகு இ.பி.கோ. 302-லும் பதிவு செய்திருந்தனர். விசாரணை தொடர்ந்து நடந்து வரு கிறது. குற்றவாளிகளைக் கடுமையாகத் தண்டிக்கவும் நடவடிக் கைகளை அரசு முறைப்படி மேற்கொள்ளும்.



பகுத்தறிவுத் தந்தை பெரியாரின் பகுத்தறிவு பிரச்சாரம் இந்த நாட்டுக்கு இன்னும் எவ்வளவு அழுத்தமாகத் தேவைப்படுகிறது என்பதும் எந்த அளவுக்கு பகுத்தறிவு நெறியில் மக்கள் தங்கள் கவனத்தைச் செலுத்தியிருக்கிறார்கள் என்பதும் இந்த நிகழ்ச்சி யின் மூலம் நமக்குத் தெரிகிறது. இப்படிப்பட்ட மூட பழக்கங் களும் குருட்டு நம்பிக்கைகளும், அறவே அகற்றப்பட அறிவுக்கு முதலிடம் தர வேண்டியிருக்கிறது. அதிலும் என்ன ஆச்சரியம் என்றால் ஒரு பள்ளி ஆசிரியர்—வேலுசாமி என்பது அவருடைய பெயர்—அதுவும் தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர், மற்றவர்களைவிட குழந்தைகளிடம் அதிக பந்தமும் பாசமும வைத்திருக்கக் கூடியவர், வைத்திருக்கவேண்டியவர் இந்த 4 வயது, 3 வயது குழந்தைகளை கொன்று நரபலி கொடுத்ததாகச் சொல் லப்படுகிறது. அப்படி இருந்தால், அவர் இந்தத் தொழிலிலே இருக்கத் தகுதியற்றவர் என்றுதான் கருத வேண்டும். அவர் களுக்கு குழந்தை இல்லை என்றால் அவர்கள் மருத்துவ மனைக் குத்தான் செல்ல வேண்டுமே தவிர இரண்டு குழந்தைகளை பலி கொடுப்பதன் மூலம் குழந்தை இல்லை என்ற குறை நீங்கிவிடாது. ஆக, இந்த மன்றத்திலே உறுப்பினர்கள் எடுத்துச் சொன்ன கருத்துக்கள் நிச்சயமாக இந்த நாட்டு மக்களின் உணர்வுகளை சிந்தனைகளை கிளர்ந்தெழச் செய்யும், அதற்கு உதவியாக இருக்கும் என்று எடுத்துக் கொள்ளலாம். இதிலே இந்த நேரத்தில் மேற்கொண்டு விவாதிப்பதற்கு எதுவும் இல்லை. என்னென்ன கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்ல வேண்டுமோ அத்தனை கருத்துக்களையும் சொல்லிவிட்டார்கள். இந்த மன்றத்தில் அவர்கள் எடுத்துச் சொன்ன கருத்துக்கள் நிச்சயமாக இந்த நாட்டு மக்களின் சிந்தனைக் கிளர்ச்சிக்கு நல்ல தொரு சூழ்நிலையை உருவாக்கும் என்று எடுத்துக் கொள்ளலாம். எனவே, மேலும் விவாதிக்க இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்கத் தேவையில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் விளக்கம் அளிக்கும்போது குற்றவாளி இன்னார் என்று குறிப்பிட்டுச் சொன்னதுபோல் இருந்தது ; விசாரணையில் இருக்கும்போது அவ்வாறு சொல்வது பொருத்தமாக இருக்காது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நான் அப்படி இன்னார்தான் செய்தார் என்று சொல்லவில்லை. அவர் செய் தார் என்று சொல்லப்படுகின்றது என்றுதான் சொன்னேன். வழக்கு பதிவு செய்யப்பட்டு, விசாரணை நடந்து வருகிறது என்றும் சொல்லியிருக்கின்றேன்.

திரு. ஜே. எஸ். இராசு : தலைவரவர்களே, ஒரு கிளாரிபி- கேஷன். அமைச்சரவர்கள் சொன்ன பெயர்களில் சிறிது மாறுதல் இருக்கிறது...............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதெல்லாம் தேவை இல்லை; உட்காருங்கள்.

மாண்புமிகு அவை முன்னவர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு பிற அலுவல்களை ஒத்தி வைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்க வேண்டிய தேவை இல்லையென்ற காரணத்தால் இதற்கு இசைவு மறுக்கப்படுகிறது.

## 3. கவன ஈர்ப்புகள்.

### (அ) சென்னை, பட்டினப்பாக்கம் பகுதியில் இரு கோஷ்டிகளுக்கிடையே ஏற்பட்டுள்ள மோதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் நா. சுந்தரராஜ், ப. பொன்னுரங்கம் ஆகியோர் 54-வது விதியின் கீழ் அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வினைப்பற்றிக் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். திரு. சுந்தரராஜ் அவர்கள் அதை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

[முற்பகல் 9–30]

*திரு. நா. சுந்தரராஜ் : பேரவைத் தலைவரவர்களே, சென்னை பட்டினப்பாக்கம் பகுதியில் இரண்டு கோஷ்டிகளுக்கிடையே ஏற்பட்ட மோதலின் காரணமாக ஒருவர் மரணம் அடைந்ததாலும் பலர் காயமுற்றதாலும் அங்கு நிலவிவரும் பதட்ட நிலை குறித்து மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பட்டினப்பாக்கத்திற்கு பின்புறத்திலுள்ள சீனிவாசபுரம் மற்றும் எட்டுக் கட்டிடத்தைச் சேர்ந்த மீனவர்கள் சிலர் 23—6—1980 அன்று எட்டுக் கட்டிடத்திற்கு அருகில் இருக்கும் பால் டெப்போவிற்கு வந்து பாலில் கலப்படம் செய்திருந்ததற்காக பால் விநியோக ஊழியரிடம் சண்டையிட்டனர். இதனால் இரு தரப்பினருக்கும் கைகலப்பு ஏற்பட்டது. இதன் தொடர்பாக மயிலாப்பூர் காவல் நிலையத்தில் குற்ற எண் 1904/80-ல் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது. மீனவர்களால் தாக்கப்பட்டு சிலர் 23—6—1980 அன்றே எட்டுக்கட்டிடம் பகுதிக்குச் சென்று அங்கிருந்தவர்களிடம் பால் டெப்போவில் இருந்தவர்களை எப்படி அடிக்கலாம் என்று கேட்டு சோடா பாட்டில்களை வீசிவிட்டுச் சென்று விட்டனர். தகவலறிந்த காவல் துறையினர் அவ்விடத்திற்கு விரைந்து சென்று அமைதியை நிலைநாட்டினர். இதன் தொடர்பாக ஈ-1 மைலாப்பூர் காவல் நிலையத்தில் குற்ற எண் 1892/80-ல் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது.



எட்டுக்கட்டிடம் மற்றும் சீனிவாசபுரத்திலுள்ள சில மீனவர்கள் 24—6—1980 அன்று காரைகுட்டைப் பகுதிக்கு வந்து ஒரு வீட்டின் முன்பு தொல்லைகளை ஏற்படுத்தியதால் இரு பிரிவினருக்கிடையே சிறு மோதல் ஏற்பட்டது. இதன் தொடர்பாக காவல்துறையினர் காரைக் குட்டையைச் சேர்ந்த ஐவரையும் சீனிவாசபுரத்தைச் சேர்ந்த நால்வரையும் கைது செய்து ஈ 1 மைலாப்பூர் காவல் நிலையத்தில் குற்ற எண் 1032/80 முதல் 1040/80 வரை ஒன்பது வழக்குகளை பதிவு செய்தனர். காரைக் குட்டை பகுதியில் அமைதிக்கு பங்கம் ஏற்படாத வகையில் காவல் துறையினரால் பாதுகாப்பு போடப்பட்டது.

இதற்குப் பிறகு, சீனிவாசபுரம் மற்றும் எட்டுக்கட்டிடத்தைச் சேர்ந்த மீனவர்கள் சிலர் 24—6—1980 அன்றே காரைக்குட்டைக்கு மீன் விற்கச் சென்றபோது காரைக்குட்டையைச் சேர்ந்தவர்களால் மிரட்டப்பட்டனர். இதன் காரணமாக 24—6—1980 அன்று மாலை சுமார் 6 மணி அளவில் சீனிவாசபுரம் மற்றும் எட்டுக்கட்டிடத்தைச் சேர்ந்த சிலர் காரைக் குட்டையைச் சேர்ந்த சிலருடன் பட்டினப்பாக்கம் நுழைவாயிலின் அருகில் மோதலில் ஈடுபட்டனர். இம்மோதலில் மூவர் காயமடைந்தனர். தகவலறிந்த காவல் துறையினர் தகுந்த காவல் படையுடன் வந்து கலவரக்கும்பலை விரட்டினர். கலவரக் கும்பலின் கல்வீச்சினாலும் சோடா பாட்டில் வீச்சினாலும் சப்-இன்ஸ்பெக்டர் ஒருவரும் காவலர் ஒருவரும் காயம் அடைந்தனர். எனினும் காவல் துறையினர் 13 பேர்களை அவ்விடத்திலேயே கைது செய்தனர். இதன் தொடர்பாக ஈ1 மயிலாப்பூர் காவல் நிலையத்தில் குற்ற எண் 1887/80-ல் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது.

24—6—1980 அன்று நடந்த கலவரத்தில் காயமுற்ற குட்டியன், மனோகரன், பிரான்சிஸ் என்ற மூவரும் இராயப் பேட்டை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பப் பட்டனர். பிரான்சிஸ் புறநோயாளியாக சிகிச்சை அளிக்கப் பட்டார். குட்டியனும், மனோகரனும் சென்னை அரசினர் பொது மருத்துவமனைக்குச் சிகிச்சைக்காக அனுப்பப்பட்டு, அக நோயாளிகளாக சிகிச்சை அளிக்கப்பட்டனர். கலவரத்தில் மிகுந்த காயங்களுக்குள்ளான குட்டியன் 25—6—1980 அன்று அதிகாலை 5-30 மணி அளவில் இறந்து விட்டார்.

காரைக்குட்டை வாசிகளால் 3 மீனவர்கள் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டதாக 25—6—1980 அன்று காலை பரப்பப் பட்ட வதந்தியை நம்பி நொச்சிக்குப்பம், சீனிவாசபுரம், டொம்மிங்குப்பம் மற்றும் எட்டுக் கட்டிடம் ஆகிய பகுதிகளில் வசிக்கும் மீனவர்கள், காரைக்குட்டை வாசிகளைத் தாக்குவதற்கு பெருமளவில் திரண்டு வந்தனர். ஆனால் காவல் துறை

யினர் அக்கூட்டம் காரைக்குட்டையை நோக்கிச் செல்லாதவாறு விரட்டிவிட்டனர். பிறகு காலை சுமார் 9 மணியளவில் அக் கூட்டம் கையில் பயங்கர ஆயுதங்களுடன் மீண்டும் கூடி சாந்தோம் நெடுஞ்சாலை மற்றும் டொம்மிங்குப்பம் செல்லும் சாலைகளின் சந்திப்பில் திரண்டு வந்து காரைக்குட்டைக்குச் செல்ல எத்தனித் தது. தகவலறிந்த மைலாப்பூர் காவல் நிலையத்தினர் நிலை மையைச் சமாளிக்க சம்பவம் நடந்த இடத்திற்கு விரைந்து சென்றனர். கூட்டத்தினர் வன்முறையில் ஈடுபட்டு காவல் துறை யினர் மீது சோடா பாட்டில்களையும் கற்களையும் எறிந்தனர். பட்டினப்பாக்கம் மற்றும் டொம்மிங்குப்பம் பக்கமாக கூட்டத் தினர் விரட்டப்பட்டனர். டொம்மிங்குப்பத்தின் வடக்கு மற்றும் தெற்கு பகுதியிலிருந்த மீனவர்கள் பட்டினப்பாக்கம் சாலையில் மீண்டும் ஒன்று கூடி காவல்துறையினர் மீது சோடா பாட்டில் களையும் கற்களையும் எறிந்தனர். கல்வீச்சினால் 3 காவலர்கள் சொற்ப காயமடைந்தனர். கலவரக் கும்பல் காவல் துறையின ரைத் தொடர்ந்து தாக்கிக் கொண்டேயிருந்ததால் தகுந்த எச்சரிக்கைக்குப் பின்னர், காவல்துறையினர் கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வெடித்தனர். இதன் விளைவாக கும்பல் கலைந்தது. இச்சம்பவம் குறித்து ஈ1 மைலாப்பூர் காவல் நிலைய குற்ற எண் 1900/80-ல் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு புலனாய்வில் உள்ளது. மேற்கொண்டு அமைதிக்குப் பங்கம் ஏதும் ஏற்படா திருக்க மீனவர்கள் வசிக்கும் பகுதிகளிலும் காரைக்குட்டைப் பகுதியிலும் தகுந்த காவலர் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. தற்போது நிலைமை அமைதியாகவே உள்ளது.

திரு. நா. சுந்தரராஜ் : பேரவைத் தலைவரவர்களே, பட்டி னப்பாக்கம் பகுதியிலே 23 ஆம் தேதி அன்று காலையிலே பாலிலே கலப்படம் செய்யப்பட்டதாகக் கூறப்பட்ட நிலைமை யிலிருந்து 25 ஆம் தேதி மாலை வரை அங்கே தொடர்ந்து பதட்ட நிலை இருந்து கொண்டுதான் இருந்திருக்கின்றது. இது பற்றி எடுக்கப்பட்ட நடவடிக்கையைப் பொறுத்த வரையில் காவல் துறையினர் நிலைமையைக் கட்டுப்படுத்தி இருக்கிறார் களே தவிர அங்கே நிரந்தரமாக இதைத் தடுப்பதற்கு காவல் துறையினர் ஈடுபடவில்லை என்ற குற்றச்சாட்டு நிலவுகிறது. மேலும் அங்கே இது தொடர்பாக ஒருவர் மரணம் அடைந் திருக்கிறார். பலர் காயம் அடைந்திருக்கிறார்கள். இவ்வளவு பதட்டமான நிலை நிலவிய போதும் காவல் துறையினர் அஜாக் கிரதையாக இருக்கின்ற நிலைமை இருக்கின்றது. ஆகவே அங்கே இது போன்ற நிலைமைகள் ஏற்படாமல் தடுப்பதற்கு முயற்சிகள் எடுக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வைக்கப்பட்ட விவர அறிக்கையில் நடந்த இந்த நிகழ்ச்சிகள் பற்றி எடுத்துச் சொல்லப்பட்டிருக்



கின்றது. 23 ஆம் தேதியிலிருந்து 25 ஆம் தேதி வரையில்
என்னென்ன நடைபெற்றன என்றும் எந்த அளவுக்கு அதிலே
காவல் துறையினர் ஈடுபட்டார்கள் என்பதும் அதிலே குறிப்பிடப்
பட்டிருக்கின்றது. இரண்டு கோஷ்டிகளுக்கிடையே
இருந்து வந்த தகராறு முற்றி அதன் பிறகு இந்த நிலைமை
ஏற்பட்டிருக்கிறது. காவல் துறையினரையும் மீறி அவர்கள் அடிக்கடி
தந்திரமான முறைகளைக் கையாண்டு பல
தாக்குதலுக்கு முயற்சி செய்திருக்கிறார்கள். இடங்களில்
அது குறித்து கடுமையான நடவடிக்கையினை காவல் துறையினர்
எடுத்து தடுத்து தான் இருக்கிறார்கள். இந்த சம்பவம் ஆனால்
பாக 9 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். தொடர்
சாரார்களையும் கைது செய்திருக்கிறோம். இரண்டு
5 பேரையும், மற்றொரு சாரார் 4 பேரையும் ஒரு சாரார்
வழக்கு பதிவு செய்திருக்கிறார்கள். கைது செய்து
துறையினர் காயம் அடைகிற நிலை அதற்குப் பிறகு காவல்
இன்ஸ்பெக்டரும் காவலர்களும் ஏற்பட்டிருக்கின்றது.
அதன் பின்னர் கூட்டத்தினரைக் காயம் அடைந்திருக்கிறார்கள். சப்-
காவல் துறையினர் கண்ணீர் புகைக் கலைப்பதற்கு மூன்று முறை
பிறகு கூட்டம் கலைக்கப்பட்டது. குண்டுகளை வீசியதற்குப்
பந்தோபஸ்து கொடுக்கப்பட்டிருக்கின்றது. அதன் பிறகு தக்க போலீஸ்
யான சூழ்நிலை இருக்கின்றது. இப்போது அமைதி
களுக்கிடையே இருக்கின்ற மாச்சரியங்களைக் அங்கே இரண்டு கோஷ்டி
அந்தப் பகுதியில் இருக்கின்ற பெரியவர்களிடத்திலெல்லாம் குறைப்பதற்காக
கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கின்றது.
போக்கப்பட்டால் தான் இது மாதிரி அந்த மாச்சரியங்கள்
ஏற்படாமல் தடுக்க முடியும். நிலைமை அங்கே
தக்க பாதுகாப்பு கொடுத்து வருகிறார்கள். ஆனாலும் காவல் துறையில்
சம்பவத்திற்குப் பிறகு கலவரம் இப்போது அந்தச்
வழக்குகள் தொடரப்பட்டிருக்கின்றன. ஏதும் நடைபெற வில்லை.
காரணமானவர்கள் யார் என்று இதற்கெல்லாம் முக்கிய
செய்து வருகிறார்கள். போலீசார் புலன் விசாரணை
பிடிக்கப்பட்டால் அவர்கள் மீது அப்படி யார் காரணம் என்று கண்டு
களுக்கு தண்டனை வழக்கு தொடரப்பட்டு, அவர்
வடிக்கைகளில் அரசு வழங்குகின்ற வகையில் முறையான நட
கிறேன். ஈடுபடும் என்பதைத் தெரிவித்துக் கொள்

திரு. ப. பொன்னுரங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவ
ரவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் நல்ல விளக்
கத்தைத் தந்திருக்கிறார்கள். ஒரு வார காலமாக அந்தப்
பட்டினப்பாக்கத்தில் இப்படிப்பட்ட கோரச் சம்பவம் நடை
பெற்று வருகின்றது. அங்கே ஏற்பட்ட பால் விநியோகப்
பிரச்சினையைத் தொடர்ந்து இந்த நிலைமை இருந்து வருகின்
றது. இது குறித்து ஆரம்பத்திலேயே போலீஸ் தக்க நட
வடிக்கை எடுத்திருந்தால் இந்தச் சம்பவத்தைத் தவிர்த்திருக்
கலாம். பால் விநியோகம் சம்பந்தப்பட்ட வகையில் பல

தகவல்கள் அந்த அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டும் அந்த அதிகாரி கள் கூட தக்க நடவடிக்கை எடுக்கவில்லை. போலீஸ் இலாக்காவும் மற்ற இலாக்காவும் உரிய நடவடிக்கையினை எடுக்காத காரணத்தால் தான் இது போன்ற சம்பவங்கள் முற்றிவிட்டது என்பது அங்குள்ள நல்லவர்களினுடைய கருத்தாகும். ஆனால் அதே நேரத்தில் நம்முடைய அவையின் முன்னவர் அவர்கள் ஒரு அரிய கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அங்குள்ள பெரியவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டிருப்பதாகச் சொல்லி இருக்கிறார்கள். அவ்வாறு கேட்டுக் கொள்ளப்பட்டதற்குப் பிறகு ஒரு வார காலமாக என்ன நிலைமை அங்கே இருக்கின்றது? சீனிவாசபுரம், நம்பிக்கை நகர், காரைக்குட்டை பகுதிகளில் இருப்பவர்கள் அச்சத்தின் காரணமாக அங்கிருந்து வெளியேறி இருக்கிறார்கள். அது மட்டுமல்ல செகரட்டேரியட்டில் பணியாற்றுகின்ற ஊழியர்கள் பலர் அங்கு குடியிருக்கிறார்கள். அவர்கள் அங்கு செல்லவே அஞ்சுகிறார்கள். 6 மணிக்கு மேலே வெளியே வரவே பயப்படுகிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலை அங்கே இருக்கின்றது. ஆகவே இது குறித்து ஸ்பீடி ஆக்ஷன்—விரைவான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிகழ்ச்சி நான் முன்னமேயே குறிப்பிட்டதைப் போல வருத்தத்திற்குரிய ஒன்று. கடற்கரையோர பகுதிகளில் வாழும் மக்களுக்கிடையே இப்படி மாச்சரியங்கள் ஏற்படுவதும், அதன் தொடர்பாக கலவரங்கள் ஏற்படுவதும், பல்லாண்டு காலமாக தொடர்ந்து இருந்து வரும் நிகழ்ச்சி. காவல் துறையினர் நான் குறிப்பிட்டது போல, அங்கே அமைதியை நிலை நாட்ட தங்களால் இயன்ற வரையில் முயன்றனர். பால் வழங்குவதிலே ஏற்பட்டத் தகராறு தான் இதற்கு அடிப்படைக் காரணம் என்று சொல்ல முடியாது. அது ஒரு ஆரம்பம். ஆனால் அதற்குப் பிறகு பிரச்சினைகள் எங்கெல்லாமோ சென்று, 25 ஆம் தேதியன்று மூவர் காயமுறவும், அதில் ஒருவர் இறந்து படவும் நேரிட்டது.

இந்த நிகழ்ச்சிகள் உள்ளபடியே தவிர்க்கப்பட வேண்டியவை தாம். இந்தப் பகுதிகளைப் பொறுத்த வரையில் தொடர்ந்து அமைதியை நிலை நாட்டவும், சமாதானம் செய்வதற்கான பணிகள் மேற் கொள்ளப்பட்டிருக்கின்றன. அந்தப் பணியின் நிலைமை எவ்வளவு தூரத்தில் இருக்கிறது என்பது தெரியவில்லை. இப்பொழுது அங்கே அமைதி நிலவுவதினால், சமாதானப் பணிகள் மேற் கொள்ளப்பட்டிருக்கும் என்று தோன்றுகிறது.

திரு. ப. பொன்னுரங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முன்னவர் அவர்கள் அந்தப் பகுதியில் இப்படி அடிக்கடி சர்ச்சைகள் ஏற்படுவதாக கூறுகிறார். அந்தப் பகுதிக்கும் போலீஸ் ஸ்டேஷனுக்கும் இடையில் வெகு தூரம் இருப்பதாகத் தெரிகிறது. அப்படி ஒரு நிலைமையில் அந்த ஃபோர் ஷோர் எஸ்டேட் இருப்பதினால் அங்கே நிரந்தரமாக ஒரு சப்-போலீஸ் ஸ்டேஷனை அமைக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன் ?



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் அந்தப் பகுதி என்று சொல்லவில்லை. பொதுவாகவே கடலோரப் பகுதிகளில் இப்படிப்பட்ட மாச்சரியங்களும், அதன் விளைவாக தகராறுகளும் ஏற்படுகின்றன என்று சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற கருத்தின்படி அப்படி ஒரு அவசியம் ஏற்படுமேயானால் அது பற்றி நடவடிக்கை எடுக்கப்படும்.

## (ஆ) சென்னை பால் வழங்கும் நிறுவனத்தினரால் வழங்கப்படும் பால் கலப்படம் செய்யப் பெறுதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 54—வது விதியின் கீழ் திருவாளர்கள் சேலம் மு. ஆறுமுகம், இரா. தாமரைக்கனி, பொ. விஜயராகவன் ஆகியோர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வினைக் குறித்து, கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். திரு. சேலம் மு. ஆறுமுகம் அவர்கள் மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருவார்கள்.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, ''சென்னையில் பால் வழங்கும் நிறுவனத்தால் வழங்கப்படும் பாலில் கலப்படம் செய்யப்படுவதும் அதனால் 25—6—1980 அன்று சென்னை பட்டினப்பாக்கத்தில் பொது மக்களிடையே ஏற்பட்ட பதட்ட நிலைமை குறித்தும்'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, பட்டினப்பாக்கம் பகுதியில் வசிக்கும் மீனவர்களுக்கிடையில் 23—6—1980-லிருந்து 28—6—1980 வரை கலவரம் ஏற்பட்டது. இது அப்பகுதியை அடுத்துள்ள குப்பத்தில் வசிப்போரிடையே உள்ள போட்டியின் காரணமாக உண்டானதாகும். இக்கலவரத்தை அடக்கவும், சட்டம் ஒழுங்கை நிலை நிறுத்தவும் காவல் துறையினர் கண்ணீர்ப் புகையை உபயோகிக்க வேண்டியதாயிற்று.

இப்பகுதியில் உள்ள இரு சாராருக்குமிடையே உள்ள பகைமையின் காரணமாக அப்பகுதியில் பதட்ட நிலை நிலவி வந்தது. இதனால் 23—6—1980 அன்று பட்டினப் பாக்கத்தில்

உள்ள தானியங்கும் பால் வழங்கும் நிலையத்தினருகில் எதிர் பாராத வகையில் சில கலவரங்கள் நிகழ்ந்தன. அங்குள்ள தானியங்கும் பால் வழங்கும் நிலையத்தில் பணியாற்றுவோர் பாலில் தண்ணீர் கலப்பதாக செய்தித் தாள்களில் செய்திகள் வந்தன. இது விசாரணை செய்யப்பட்டு அங்கு பணியாற்றும் ரகு மற்றும் தெய்வசிகாமணி ஆகியோர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு அவர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டதோடு அவ்வட்டாரப் பால் விற்பனை அதிகாரி மீதும் தகுந்த ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு பால் வள நிறுவனம் சென்னை நகரில் நிறுவப் பட்டுள்ள 451 பால் வழங்கு நிலையம் (Milk Depot) 97 பாலகங்கள் (Milk Parlour) மற்றும் 12 தானியங்கும் பால் வழங்கு நிலையத்தின் ( Automatic Vending Machine ) மூலம் தற்போது நாள் ஒன்றுக்கு 2.5 இலட்சம் லிட்டர் பாலை விற்பனை செய்து வருகிறது. இப்பால் புட்டிகளில் அடைக்கப் பட்டும், பாலிதீன் பைகளில் நிரப்பப்பட்டும் தானியங்கும் பால் வழங்கு நிலையத்தின் வாயிலாகவும் பொது மக்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. பொது மக்களின் தேவை மட்டுமன்றி அரசு நிறுவனங்கள், மருத்துவமனைகள், பாதுகாப்பு நிறுவனங்கள், மத்திய சிறைச்சாலை, உணவு விடுதிகள் முதலியவற்றின் தேவை களையும் இந்நிறுவனம் பூர்த்தி செய்து வருகிறது. தமிழ்நாடு பால்வள நிறுவனம் வழங்கும் பால் அரசு நிர்ணயிக்கப்பட்ட தரமானது மட்டுமின்றி, விலையும் மிகக் குறைவு. இதனால் பொது மக்களால் மிகவும் விரும்பி வாங்கப்படுகிறது. இதனால் பால் விற்பனையை விரிவாக்கும் பணியில் 76 இலட்சம் ரூபாய் செலவில் மேலும் 38 தானியங்கும் பால் வழங்கு நிலை யங்களை இந்நிறுவனம் திறக்கவிருக்கிறது, மேலும் அதிக அளவில் பாலீத்தின் பைகளில் பால் வழங்குவதற்கான முயற்சி களையும் எடுத்து வருகிறது. இத்தகைய கூடுதல் வசதிகளால் இவ்வருடத்தில் பால் விற்பனையைத் தற்போதுள்ள 2.5 இலட்சம் லிட்டரிலிருந்து 3 இலட்சம் லிட்டருக்கு உயர்த்த இந்நிறுவனம் முயன்று வருகிறது. பால் வழங்கு நிலையத்தில் பணியாற்று வோர் செய்யும் தவறுகளைக் கண்டுபிடித்து தக்க நடவடிக்கை எடுக்க ஆய்வுக்குழு ஏற்படுத்தப்பட்டு அது ஒவ்வொரு நாளும் நகரத்தைச் சுற்றி வருகிறது. மேலும் தனி ஆய்வுக் குழு ஒன்றும் இப்பணியைச் செய்து வருகிறது. இவை கடந்த வருடம் ஜூலை மாதத்திலிருந்து 500-க்கும் மேற்பட்ட சோதனை களைச் செய்துள்ளது. இந்நிறுவனம் மிகக் குறைந்த விலையில் பால் விநியோகம் செய்வதற்கு இயன்ற அனைத்து முயற்சிகளை யும் செய்து வருகிறது.

இது மட்டுமின்றி மற்ற பால் உப பொருள்களையும் இந்நிறுவனம் பொதுமக்களுக்கு விற்பனை செய்துவருகின்றது. 97 பாலகங்களைத் திறந்து அதன் மூலம் பால் விற்பனை மட்டு



மின்றி சூடான பால், பனிக்குழைவு, தயிர், இனிப்புத் தயிர், பால்கோவா முதலியவற்றையும் விற்பனை செய்து வருகிறது. இவை பொது மக்களால் மிகவும் விரும்பப்படுவதால் நாளுக்கு நாள் இதன் தேவைகள் அதிகரித்து வருகின்றன.

பால் பெருக்குத் திட்டம் II-ன் (operation Flood II) கீழ் 39.82 கோடி ரூபாய் செலவில் 2,500க்கும் மேற்பட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களை நிறுவி 13 இலட்சம் கறவை மாடுகளிலிருந்து பால் பெறுவதற்கான திட்டம் உள்ளது. இத்திட்டம் நடை முறைக்கு வந்தால் பால் உற்பத்தி நாள் ஒன்றுக்கு 12 இலட்சம் லிட்டராகவும், பால் பண்ணைகளில். பால் பதனிடும் அளவு 6.17 இலட்சம் லிட்டராகவும் உயரும். அம்பத்தூர் பால் பண்ணையில் பால் பதனிடும் அளவை மேலும் 1 இலட்சம் லிட்டருக்கு விரிவாக்கும் திட்டமும் இதில் அடங்கும். இந்த நீண்ட கால திட்டத்தினால் பால் பெருக்குத் துறை நல்ல நிலைமை அடையும்.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே. பால் வழங்கும் நிறுவனம் சென்னை நகரில் 451 பால் டெப்போக் களின் மூலமாகவும், 12 தானியங்கு நிறுவனங்கள் மூலமாகவும் சென்னை நகரப் பொது மக்களுக்கு பாலை வழங்கி வருகிறார்கள். சென்னைப் பட்டினப்பாக்கம் பகுதியில் தானியங்கு பால் நிலை யம் வைத்து அதன் மூலம் பாலை விநியோகித்து வருகிறார்கள். அந்தப் பாலில், அங்கே பணியாற்றக் கூடிய பணியாளர்கள் நீரைக் கலப்படம் செய்வதாக ஒரு கருத்து அங்குள்ள பொது மக்களிடையே நிலவி வருகிறது. அது குறித்து தமிழ் பத்திரிக்கை களிலும் செய்தி வந்துள்ளது. அதனால் அங்கே பதட்ட நிலை உருவாகியிருக்கிறது.

இந்தப் பாலுக்கான முன் பணம் கட்டி கார்டு வாங்கி வைத்துக் கொண்டு பாலை வாங்குகிறார்கள் பொது மக்கள். முன் பணம் கட்டி பாலை வாங்குபவர்களுக்கு பாலில் நீர் கலந்து விட்டு, அந்த அளவு பாலை எடுத்து வெளியில் இருக்கும் சிறு சிறு பால் வியாபாரிகளுக்கு கொடுத்து விடுகிறார்கள் என்றும், அந்த வியாபாரிகள் அதைத் தெருவில் கொண்டு போய் விற்கிறார்கள் என்றும் ஒரு கருத்து நிலவி வருகிறது. ஆகவே நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஃபுட் செல் மூலமாக, உணவுத் துறையின் குற்றச் சாட்டு ஆய்வுத் துறை மூலமாக, அப்படி நீர் கலப்படம் செய்பவர்களை கண்டு பிடித்து, அவர்களை தற் காலிக வேலை நீக்கம் செய்தோ, அல்லது இட மாற்றம் செய்தோ இப்படிப்பட்ட தவறுகள் வருங் காலத்தில் ஏற்படாமல் தடுப்பதற்கான முயற்சிகளில் ஈடுபடுவாரா என்று அறிய விரும்பு கிறேன்.

[1980 ஜூலை 12

[முற்பகல் 9-40]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னது போல் பட்டினப் பாக்கம் பகுதியில் நடை பெற்ற அந்த சம்பவத்தையொட்டியும், அந்த சம்பவத்திற்குக் காரணமாக இருந்த அங்கு பணியாற்றி வந்த இரண்டு பணியாளர்கள் மீது, ரகு, தெய்வசிகாமணி என்ற இரண்டு பணியாளர்கள் மீது இன்றைய தினம் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு அவர்கள் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினரின் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதோடு இதைக் கண்காணிக்க வேண்டிய அந்த வட்டார பால் விற்பனை அதிகாரி மீதும் தகுந்த ஒழுங்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது என்பதையும் உறுப்பினர் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, பட்டினப்பாக்கம் பால் டிப்போவில் நடந்த தகராறு மாதிரி சென்னையில் மற்ற டிப்போக்களில் அவ்விதம் நடைபெறாவண்ணம் அமைச்சர் அவர்கள் ஆங்காங்கு விசிட் செய்து தடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுப்பதற்காக எனது நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். பாலிதின் பைகளிலிருந்து சிரிஞ்ச் போட்டு பாலை எடுத்துவிட்டு அதில் தண்ணீர் சேர்ப்பதாக புகார்கள் வந்திருக்கின்றனவா ? அப்படியானால் அவற்றின்மீது என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கிறது ? அரசு அலுவலர்கள் அங்கே அதிகமாக இருக்கிற காரணத்தினால் அங்கே இன்னொரு பால் டிப்போ அமைக்கும் உத்தேசமுண்டா ? இரண்டரை ஆண்டுக்கால புரட்சித் தலைவர், எம். ஜி. ஆர். அவர்கள் ஆட்சிக் காலத்தில் பாலில் தண்ணீர் கலப்பதைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல் இப்படிப்பட்ட முறைகேடுகளைத் தவிர்த்து, பால் விநியோகத் துறையை சீர்படுத்த, செம்மைபடுத்த தமிழக அரசு தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது. குறிப்பாக உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல்—பாலில் தண்ணீர் கலப்பது, அதே போல் அதிக விலை வாங்குவது, அதேபோல் நியாயமாக அவர்கள் அட்டை வைத்திருந்தால்கூட பால் இல்லை என்று சொல்வது, அதேபோல் குறிப்பிட்ட காலத்தில் அல்லது நேரத்தில் அந்த பால் டிப்போக்களை திறக்காமல் மூடிவிடுவது அதேபோல் வருகிற வாடிக்கையாளர்களிடத்தில் முறைகேடாக நடப்பது போன்ற ஐந்துவிதமான தலைப்புகளின்கீழ் வருகிற முறைகேடு களைக் களைவதற்காக தமிழக அரசு மிகத் தீவிரமான நடவடிக்கைகளை சென்ற சில நாட்களாக நன்கு உறுதியாகச் எடுத்து



1980 ஜூலை 12] [திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி]

வருகிறது. கடந்த இரண்டாண்டுகளாக மாண்புமிகு புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் ஆட்சியில், அவர்கள் முதல் அமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு இதுவரையில் 3,689 முறை தனி ஆய்வுக் குழு, பொது ஆய்வுக் குழு என்ற இரண்டு ஆய்வுக் குழுக்கள் வாயிலாக ஆங்காங்கு அவ்வப்போது பார்வையிட்டு பரிசோதனை செய்து அப்படிப்பட்ட ஆய்வு செய்து அதன்காரணமாக இன்றையதினம் 258 பணியாளர்கள்—மார்க்கட்டிங் பெர்ஸனல்ஸ்—மீது 96 வழக்குகள் போட்டு இப்படிப்பட்ட குற்றங்களைச் செய்தார்கள் என்பதற்காக இன்றையதினம் நடவடிக்கைகள் கடந்த இரண்டு ஆண்டுக் காலத்தில் எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேநேரத்தில இப்படிப்பட்ட குறைபாடுகள எதிர்காலத்தில் குறையவும், அந்தக் குறைகளைப் போக்கவும் எல்லா நடவடிக்கைகளையும் இந்த அரசு எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு உறுதிசொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. பொ. விஜயராகவன் : தலைவர் அவர்களே, சென்னையில் பால்வள நிறுவனத்தால் வழங்கப்படுகின்ற பால் சில வேளைகளில் பாலைக் காய்ச்சுகின்றபோது, அந்தப் பால் திரிந்து போய்விடுகிறது என்று பொதுமக்களிடையே குறைபாடுகள் வந்து கொண்டிருக்கின்றன. இந்த புட்டிகளில் அடைத்துக் கொடுக்கின்ற பால் புட்டிக்கு மேலே இலேசான அலுமினிய அடைப்பு போட்டுக் கொடுப்பதால், அதைகூட எளிதில் எடுத்துவிட்டு, அதிலே தண்ணீரைக் கலப்பதற்கு ஏதுவாக இருக்கின்ற காரணத்தினால், சோடா புட்டிகளில் போடுவதுபோன்ற கெட்டியான மூடிகள் போட்டு பாலை வழங்குவதற்கான முயற்சியினை பால்வள நிறுவனம் மேற்கொள்ள இந்த அரசு ஈடுபடுத்துமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் விஜயராகவன் அவர்கள் சொன்னதுபோல் இப்படிப்பட்ட குறைபாடுகள் இப்போது சில இடங்களிலே நடைபெற்றுக்கொண்டு வருகின்றது. அந்தக் குறைபாடுகளைப் போக்குவதற்கு தக்க நடவடிக்கைகள் எடுப்பதற்கும் அரசு முயற்சித்து வருகின்றது.

## 4. தகவல் கோரல்.

### அ. உறுப்பினர்களது அறிவிப்புகள்.

திரு. மு. அம்பிகாபதி: பாயின்ட் ஆப் ஆர்டர், மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே பட்டுக்கோட்டை போன்ற எல்லாப் பகுதிகளிலேயும் வெள்ளம் ஓடிக் கொண்டி

ருக்கின்றபோது, என்னுடைய பகுதியிலே மாத்திரம் சில அதிகாரிகள் பண்ணுகின்ற சதியால் தண்ணீர் இல்லாமல் கஷ்டப்படும் நிலைமை இருக்கின்றது. இது குறித்து நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். இம்பார்ட்டென்ட் அண்டு இம்மிடியட் மேட்டர். நீங்கள் அதை எடுக்கவிலலை என்று....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒத்திவைப்புத் தீர்மானம் ஒரு நாளைக்கு ஒன்று எடுத்துக் கொள்ளப்படுகிறது. இன்றைக்கு இரண்டு சிறுவர்கள் நரபலி கொடுக்கப்பட்ட முக்கியமான விஷயம் எடுத்துக் கொள்ளப்பட்டது. அதை மாண்புமிகு உறுப்பினர் கேட்டுக் கொண்டிருந்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். ஆகவே, ஒரு நாளைக்கு ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் என்ற வகையில இன்றைக்கு அது முடிந்து விட்டது. வரிசைக் கிரமத்தில் மற்ற ஒத்திவைப்புத் தீர்மானங்கள் வரும்.

திரு. மு. அம்பிகாபதி : தமிழ்நாட்டிலே இன்றைக்கு எல்லாப் பகுதிகளிலேயும் வெள்ளம் ஓடிக் கொண்டிருக்கும்போது....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் தொகுதியில் தண்ணீர் வராதது ரொம்ப கஷ்டம்தான். பொதுப் பிரச்னையில் முதலில் கவனம் செலுத்த வேண்டும். தொகுதிப் பிரச்னை பின்னர் கவனிக்கப்படும்.

திரு. மு. அம்பிகாபதி : கீழே இருக்கின்ற சில அதிகாரிகள் சதி பண்ணுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசாங்கத்திற்குச் சொல்லி விசாரிக்கச் சொல்கிறேன்.

*திரு. ஜே. ஹேமச்சந்திரன் : தலைவர் அவர்களே.....

MR. SPEAKER : What is the point the hon. Member wishes to make ?

THIRU J. HEMACHANDRAN : On 9—7—1980 I have given notice of an adjournment motion regarding handloom workers strike at Kanyakumari. On 10—7—1980 it has been converted into a Call Attention Notice Under Rule 54. On 2—7—1980 on the same ubject I have already given a Call Attention Notice under Rule 54 nd it has not yet been disposed of.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படிப்பட்ட பிரச்னைகளை எல்லாம் நீங்கள் என் அறைக்கு வந்து சொல்ல வேண்டும் ; அவையில் கேட்கக் கூடாது.



## (ஆ) வினாக்கள் எடுத்துக்கொள்ளப்பெறுவது.

திரு. செ. சிவசாமி : இன்றைக்கு சட்டப் பேரவை கூடி மூன்று வாரங்களுக்கு மேலாகிவிட்டது. நூற்றுக்கணக்கான கேள்விகள் கேட்கப்பட்டிருக்கின்றன. ஒரு நாளைக்கு ஒரு குறுகிய கால வினா மட்டுமே எடுத்துக் கொள்ளப்படுகின்றது. இப்படி நூற்றுக்கணக்கான கேள்விகள் கொடுக்கப்பட்டும், அவைகளுக்கெல்லாம் பதில்கள் வரவில்லையா ? என்ன காரணம் என்பதை விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேளவிகள் வந்து கொண்டிருக்கின்றன. 15 ஆம் தேதி முதல் கேள்விகளுக்கான விடைகள் அளிக்க கேள்விகள் எடுத்துக்கொள்ளப்பட இருக்கின்றன. ஆகவே, 15 ஆம் தேதி முதல் கேள்வி நேரம் ரொம்ப சுறுசுறுப்பாகவும், சுவையாகவும் இருக்கும்.

திரு. துரை முருகன் : அன்றைக்கு நல்ல நாளா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை விசாரிக்கிறேன்

[முற்பகல் 9–50.]

## (5) வரவு செலவுத் திட்டம், 1980–81 வாக்கெடுப்பு.—தொடர்ச்சி.

### கோரிக்கை எண். 17—கல்வி.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநரின் பரிந்துரைமேல், நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்;—

" மானியக் கோரிக்கை எண். 17—கல்வி என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,24,41,53,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

திரு. த. வேணுகோபால் : பேரவைத் தலைவர் அவர்களே, 'பயிற்சி பெற்றும் வேலையின்றி வாடும் ஆசிரியர்களுக்கு வேலைவாய்ப்பு தரப்பெற வேண்டிய அவசியம்பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்'.—

" மானியக் கோரிக்கை எண். 17—கல்வி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,24,41,53,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. கே. எம். தங்கமணி கவுண்டர் : பேரவைத் தலைவர் அவர்களே, திண்டிவனம் தொகுதி, மயிலம் பஞ்சாயத்து யூனியனில் உள்ள மோழியனூர் கிராமம் அரசினர் உயர்நிலைப் பள்ளிக்கு சொந்தக் கட்டிடம் கட்டுவது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

'' மானியக் கோரிக்கை எண். 17—கல்வி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,24,41,53,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. ரா. கிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே, வாசுதேவநல்லூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் மாணவர்களின் வகுப்புகளுக்குப் போதுமான கட்டிடங்களும் பரிசோதனைக் கூடமும் கட்டப்படாமல் இருப்பதைப் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:—

'' மானியக் கோரிக்கை எண். 17—கல்வி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,24,41,53,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. பொ. உத்திராபதி : பேரவைத் தலைவர் அவர்களே, கோட்டூர் ஹையர் செகண்டரி பள்ளியில் படிக்கும் மாணவர்களுக்கு இடமில்லாமல் இருப்பதால் மேலும் கட்டிடம் கட்டிக் கொடுப்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்—

'' மானியக் கோரிக்கை எண். 17—கல்வி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,24,41,53,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

THIRU P. VIJAYARAGAVAN Sir, discuss the deplorable condition of to Government School Building in Tamil Nadu particularly in Kanyakumari district, I move ''That the allotment of Rs. 2,24,41,53,000 under Deman No. 17. Education be reduced by Rs. 100''.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கையும் வெட்டுத்தீர்மானங்களும் பேரவையின் முன் விவாதத்திற்கு வைக்கப் பெறுகின்றன.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழ் நாட்டில் கல்வி வளர்ச்சி' என்ற அறிக்கை *ஒன்று என் பெயரால் வைக்கப்பெற்றிருக்கிறது. அதை மாண்புமிகு உறுப்பினர்கள் கவனத்தில் கொண்டு அவர்கள் விவாதத்தைத் தொடங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. செ. இராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, 1980-81 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் கல்வி மானியத்திற்கான ஒதுக்கீடு மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

*697 ஆம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது



இந்த ஆண்டு மொத்த வருவாயில் ஏறத்தாழ 23 சதவிகிதம் கல்வி வளர்ச்சிக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் கல்வி வளர்ச்சிக்கு ஒதுக்கப்படுகிற தொகை ஆண்டுக்காண்டு உயர்ந்துக் கொண்டே வந்திருக்கிறது. ஆனால் கல்வியின் தரம் உயர்ந்திருக்கிறதா என்றால் நிச்சயமாக உயரவில்லை. தேர்தல் அறிக்கையில் இன்றைய தினம் ஆளும் கட்சியாக இருக்கும் நீங்கள், ஆசிரியர்கள் அனைவரையும் அரசு ஊழியர்களாக மாற்றுவோம் என்று உறுதி அளித்திருந்தீர்கள். இன்றைய தினம் ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களை மட்டுந்தான் அரசு ஊழியர்களாக மாற்றுவோம் என்று கூறியிருக்கிறீர்கள். தயவு செய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். இப்படிப்பட்ட முரண்பாடான அடிப்படையில்தான் அறிவைப் போதிக்கும் ஆசிரியர் சமுதாயத்தினர் கொடி பிடித்துக் கோஷம் போடும் அவல நிலைமையை இந்த ஆட்சியாளர்கள் உண்டு பண்ணியிருக்கிறார்கள் என்று குறை கூற விரும்புகிறேன். ஒன்றியப் பள்ளி ஆசிரியர்களாக ஏறத்தாழ 95,000 பேர் மட்டுந்தான் பணி புரிகிறார்கள். அதைப் போல் இரண்டு மடங்கு ஆசிரியர்கள் தனியார் பள்ளிகளிலே பணி புரிகிறார்கள். அப்படிப்பட்ட தனியார் பள்ளி ஆசிரியர்களுக்குப் பாதுகாப்புத் தேவை, தனியார் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் அடிமை போல் நடத்தப்படுகிறார்கள். ஆசிரியர் பணியில் இருந்து தற்போது அமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கும் கல்வியமைச்சர் அவர்கள் இதை நன்றாக உணர்ந்திருப்பார்கள். எனவே, ஆசிரியர்கள் அனைவருக்கும், குறிப்பாக தனியார் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்குப் பாதுகாப்புத் தரும் வகையில் முன்னுரிமை கொடுத்து அவர்களை எல்லாம் அரசு ஊழியர்களாக மாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைய தினம் நர்சரி பள்ளிகள் என்ற பெயரால் வீதிகள் தோறும் பள்ளிகள் ஆரம்பிக்கப்படுகின்றன. அதிலே கட்டணத் தொகை என்றும், நன்கொடை என்றும் நூற்றுக்கணக்கான ரூபாய்களை சின்னஞ்சிறு சிறார்களிடமிருந்து வசூலிக்கிறார்கள். அப்படிப்பட்டவற்றை எல்லாம் அரசு கண்காணிக்க வேண்டும். ஏழை எளியவர்கள் தங்கள் பிள்ளைகளைப் படிக்க வைக்க முடியாத அளவுக்கு இந்த நர்சரிப் பள்ளிகள் மிகவும் அதிகமான தொகைகளை நன்கொடைகளாகப் பெறுகிறார்கள். அப்படிப்பட்ட கல்வி நிறுவனங்களைத் தடை செய்து முறையாக அங்கீகரிக்கப்பட்ட நர்சரி பள்ளிகளை அதிகமாக ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தனியார் பள்ளிகளில் பணி புரியும் ஆசிரியர்களுக்காக இன்றைய தினம் எப்படிப்பட்ட சட்டங்களைக் கொண்டு வந்தாலும் நிர்வாகத்தினர் அதன்படி ஊதியம் வழங்குவதில்லை. அவர்களுடைய சம்பளத்தில் 20 சதவிகிதத்தை நிர்வாகிகள் பிடித்துக் கொள்ளும் அவல நிலைமை இன்றைய தினம் இருந்து கொண்டி-

நீங்கள் நட ருக்கிறது. அப்படிப்பட்ட குறைகளைக்களைய வடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கி றேன்.

சென்ற ஆண்டு நம்முடைய கல்வியமைச்சர் அவர்கள் ஓர் உறுதி மொழியை இந்த மாமன்றத்திலே தந்தார்கள். தமிழ் நாட்டிலே இருக்கிற தொடக்கப்பள்ளிகளிலே எல்லாம் உடற் பயிற்சி ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள். அதன் மூலமாக உடற்பயிற்சி ஆசிரியர்களிடையே இன்றைய தினம் இருக்கிற வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்சினையை போக்க முடியும் என்று கூறியிருந்தார்கள். ஆனால் இங்கே அறிவிக்கப்பட்டிருக்கிற விதிகளைப் பார்த்தால் 400 மாணவர்கள் உள்ள தொடக்கப் பள்ளிகளிலே மட்டும்தான் உடற்பயிற்சி ஆசிரியர்கள் நியமிக்கப் படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த நிலைமையை மாற்றி அனைத்துத் தொடக்கப் பள்ளிகளுக்கும் அவர்களை நியமிக்க வேண்டும். அதனாலே அவர்களிடமுள்ள வேலையில் லாத் திண்டாட்டப் பிரச்சினையை தீர்க்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய மாநிலத்திலே தொடக்கப் பள்ளிக் கல்வியிலே அதிகமான கவனம் செலுத்தியாக வேண்டும். தொடக்கப்பள்ளி மாணவர்கள் சரியான முறையிலே கல்வி கற்காததன் விளை வாகத்தான் அகில இந்திய ரீதியிலே ஐ. ஏ. எஸ்., ஐ. பி. எஸ். போன்ற தேர்வுகளிலே நம்முடைய மாநிலத்திற்கு பிரதி நிதித்துவம் சரியான வகையிலே கிடைக்கவில்லை என்ற குறைபாடு இருக்கிறது. இதற்கெல்லாம் காரணம் தொடக்கப் பள்ளிகளிலே கல்வி சரியாக இல்லை என்பதை அனைவரும் அறிவார்கள். பட்டதாரி ஆசிரியர்கள், இன்னும் சொல்லப் போனால் முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர்களை ஆசிரியர்களாக நியமிக்கலாம் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளிலே உள்ள ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக மாற்றுவதன் மூலமாக அரசுக்கு எந்தவிதமான நட்டமும் கிடையாது. முன்னமேயே அரசு ஊழியர்களைப் போல அனைத்துச் சலுகைகளையும் அவர்கள் பெற்றுக்கொண்டிருந்தார் கள். ஆகவே ஒன்றியப் பள்ளி ஆசிரியர்களைப் போல தனியார் பள்ளிகளிலே உள்ள ஆசிரியர்களைப் பற்றியும் அரசு கவனத்திலே கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைய தினம் மாணவர்கள் 38 சதவீதம் பேர்கள் வரை யிலே பத்தாம் வகுப்பு வரையிலே படிக்கிற நிலைமை இருக்கிறது என்று கூறியிருக்கிறார்கள். மீதம் உள்ளவர்கள் ஏன் படிக்காமல் போகிறார்கள் என்பதை அரசு சிந்தித்துப் பார்க்க வேண்டும். மாணவர்களுக்கு உதவித் தொகை, நண்பகல் உணவுத் திட்டம்



இவைகளையெல்லாம் அமல்படுத்தியிருப்பினும் 38 சதவீத மாண வர்கள்தான் படிக்க முடிகிறது. மீதம் உள்ள 62 சதவீத மாணவர் கள் கற்க முடியவில்லை என்றால் என்ன காரணம் என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

உதவித் தொகைகள் வழங்கப்படுகிறபோது பாரபட்சம் காட்டப்படுகிறது. பள்ளியிலே உள்ள நிர்வாகிகள் உதவித் தொகைக்கான விண்ணப்பங்கள் வருகிற போது அவற்றை முறையாகப் பரிசீலனை செய்து டைரக்டர் அலுவலகத்திற்கு அனுப்புவதில்லை என்று தெரிகிறது. ஆகவே, உதவித் தொகையை மாணவர்கள் காலத்திலே பெறுகின்ற வகையிலே அந்த முறையிலே உள்ள சீர்கேடுகளைப் போக்கிட அரசு முன் வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நண்பகல் உணவுத் திட்டத்தைப் பொறுத்த வரையிலே தென்னாற்காடு மாவட்டத்திலே மையங்களை அமைத்து அவை மூலமாக வழங்கப்படுகிற திட்டம் அமல்படுத்தப் படுகிறது. அதைப்போல அனைத்து மாவட்டங்களிலும் ஒன்றியத் திற்கு குறைந்த பட்சம் 2 மையங்கள் என்ற அளவிற் காவது ஏற்படுத்தி அந்த மையங்களின் மூலமாக இந்த திட்டத்தை நல்ல முறையிலே அமல் படுத்தலாம். இப்படி மையங்கள், அமைத்து உணவு வழங்கப்படுவதன் மூலமாக ஆசிரியர்களுக்கு இந்த வேலை குறைந்து அவர்கள் முழு கவனத்தையும் கல்வியைப் போதிக்கிற பணியிலே செலுத்த முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றையதினம் ஒன்றியப் பள்ளி ஆசிரியர்கள் மூலமாக குடும்பநலத் திட்டம் சிறு சேமிப்புத் திட்டம் இவைகள் நிறை வேற்றப்படுகின்றன. ஆசிரியர்கள் அதிலே கவனம் செலுத்தக் கூடிய நிலைமை இருப்பதால் அவர்கள் போதனையில் அதிகமான கவனம் செலுத்தமுடியவில்லை. ஒன்றிய அலுவலர்கள் அந்தப் பணிகளுக்காக ஆசிரியர்களை நியமிக்கிறார்கள். அந்த நிலை மையை மாற்றி ஆசிரியர்கள் கல்வி போதனையில் முழுமையாக ஈடுபடுகின்ற வகையிலே ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அரசு ஊழியர்கள் பெற்று வருகின்ற அனைத்துச் சலுகைகளை யும் ஆசிரியர்கள் பெற முடியவில்லை. உதாரணத்திற்குச் சொன்னால், திருவிடைமருதூர் தனித் தாலுக்காவாக்கப்பட்டு 1 ஆண்டு காலமாகிறது, அங்கே தாலுக்கா தலைநகர் என்ற முறையிலே கூடுதலான வீட்டுவாடகைப் படியை அரசு ஊழியர் கள் ஒன்றியப் பணியாளர்கள், ஏனைய அலுவலர்கள் எல்லாம் பெற்று வருகிறார்கள். ஆனால் அங்கே வசிக்கின்ற ஆசிரியர் களுக்கு மட்டும் அந்த அளவுக்கு கூடுதலாக வீட்டு வாடகைப் படி கொடுக்கப்பட வில்லை. ஏன் அவர்களுக்கு கொடுக்கப்படவில்லை என்பதை அரசு ஆராய வேண்டும்.

[முற்பகல் 10-00]

அதை ஆராய்ந்து அவர்களுக்கு ரெட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட் கொடுத்து பழைய பாக்கிகளையும் கொடுக்கும் வகையில் வழிவகை செய்ய வேண்டு மென்று கேட்டுக் கொள் கிறேன்.

என்னுடைய தொகுதியில் ஆடுதுறை, திருபுவனம் ஆகிய இந்த இரண்டு பகுதிகளில் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் இருந்தன. அவைகள் இன்றைக்கு மூடப்பட்டிருக்கின்றன. குறிப்பாக ஆடுதுறையில் இரண்டு இலட்சம் ரூபாய் முதலீடு செய்து சிறப்பாக கட்டிடங்கள் எல்லாம் கட்டியிருக்கிறார்கள். அப்படியிருந்தும் இன்றையதினம் பயிற்சிப் பள்ளி மூடப்பட்டிருக்கிறது. அதில் பெண்கள் உயர்நிலைப் பள்ளியை ஏற்படுத்த வேண்டும் என்று நான் இதற்கு முன்பே இரண்டு மூன்று முறை கோரிக்கையாக வைத்திருக்கிறேன். அது பயன் படாமல் இருப்பதால் பழுதடைந்திருக்கிறது. எனவே உடனடியாக அதைப் பெண்கள் உயர்நிலைப் பள்ளியாக மாற்றித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பாடநூல் வல்லுநர் குழு தயாரித்த பாடங்களை மாணவர்களுக்குச் சொல்லித் தருகின்ற அளவிற்கு ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுவதில்லை. State Council of Educational Research and Training என்று ஒரு இலாக்கா இருக்கிறது. இந்தத் துறையிலே இருப்பவர்கள் பயிற்சி வகுப்புக்களை நடத்துவதன் காரணமாக ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள் மாணவர்களுக்கு முறையாகச் சொல்லிக் கொடுக்க முடியவில்லை எனவே, அந்த அமைப்பில் ஆற்றல் மிக்கவர்களை அனுபவம் மிக்கவர்களை இடம்பெறச்செய்ய வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். டி. இ. ஓ. க்களாகப் பணியாற்றியவர்கள் இந்த இலாக்காவில் பணிபுரிகிறார்கள். அவர்கள் அதிகாரிகளாக நடக்கிறார்களே தவிர ஆசிரியர்களாகவோ, பயிற்சி தருகின்றவர்களாகவோ நடந்து கொள்ளவில்லை. அதையெல்லாம் மாற்றி முறையாக போதிக்கத்தக்க ஆசிரியர் பயிற்சி பெற்றவர்களை அங்கே நியமிக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் இலாபநஷ்ட நோக்கோடு நடைபெறுகிறது. மத்திய அரசு கொடுக்கும் காகிதங்களை நோட்டாக மாற்றி பள்ளிகள் மூலமே அந்தந்தப் பள்ளிமாணவர்களுக்கு குறைந்த விலைக்குக் கொடுக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆசிரியர்களாக நீண்ட நாட்கள் பணிபுரிந்து ஓய்வு பெறுகின்றவர்களுக்கு மிகக் குறைந்த பென்ஷன்தான் வழங்கப்படுகிறது. பஞ்சாப் போன்ற மாநிலங்களில் குறைந்த பட்ச பென்ஷன்





150 ரூபாய் கொடுக்கிறார்கள். தற்போது நம்முடைய அரசு 100 ரூபாய்தான் கொடுக்கிறது. எனவே, இங்கு ஓய்வு பெறுகின்ற ஆசிரியர்களுக்கும் குறைந்த பட்சம் 150 ரூபாய் ஓய்வூதியமாகத் தர வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

தற்பொழுது உள்ள ஹையர் செகண்டரிப் பள்ளிக் கல்வித் திட்டம் நம்முடைய மாநிலத்திலே முழுமையாக வெற்றி பெற்று விட்டதாகக் கூற முடியாது. குறிப்பாக Vocational Course for small farms படித்தவர்கள் இன்றைய தினம் பி. எஸ். ஸி. அக்ரி. படிக்க முடியாமல் இருக்கிறது. காரணம் அதற்குப் பயாலஜி சப்ஜெக்ட் கேட்கிறார்கள். Vocational Course இல் பயாலஜி வைக்கப்படவில்லை. இதனால் மிக அதிகமான மதிப்பெண் பெற்றவர்கள் கூட, நன்கு படித்து வெற்றி பெற்றவர்கள் கூட தொடர்ந்து பட்டப் படிப்பிற்குச் செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதைக் கவனத்தில் கொள்ள வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் மாணவர்களைச் சேர்க்கும் பொழுதும், ஆசிரியர்களை ஆசிரியர் பணிக்குச் சேர்க்கும் பொழுதும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் அங்கே கடைபிடிக்கப்படுவது கிடையாது. இதை முறையாகக் கண்காணிக்கவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். மாணவர்கள் மெரிட் அடிப்படையில் தேர்வு செய்யப்படுவது கிடையாது. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஒவ்வொரு பாடத் துறைக்கும், ஒவ்வொரு பட்டப் படிப்பிற்கும் இன்ன ரேட் என்று வைத்து விற்பதாகச் செய்தி கிடைக்கிறது. இதை அரசு உடனடியாகக் கண்காணிக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மணி அடிக்கப்பட்டது.)

திரு. ஜே. சி. டி. பிரபாகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''வீடுதோறும் கலையின் விளக்கம்
வீதி தோறும் இரண்டொரு பள்ளி
நாடு முற்றிலும் உள்ளன ஊர்கள்
நகர்களெங்கும் பலபல பள்ளி''

என்று பாடினானே பாரதி, அந்தப் பாடல் வரிகளுக்கு இலக்கணமாக இன்றைக்குப் பள்ளிகளாகட்டும், கல்லூரிகளாகட்டும், தொழில் நுட்ப பயிற்சி தரும் இடங்களாகட்டும், அத்தனையும் இன்றைக்கு ஏற்பட்டு, பள்ளிகளே இல்லாத இடமில்லை என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது; வேண்டுமென்ற இடத்தில் கல்லூரி என்று சொல்லி பல்வேறு வகைகளிலேயும் கல்வித்துறைக்காகக் கோரியிருக்கின்ற இந்த மானியக் கோரிக்கையை அரசுக்குத் தரவேண்டு மென்று கேட்டுக் கொண்டு ஒரு சில கருத்துக்களை இங்கே வைத்திட விரும்புகிறேன்.

பள்ளிக் கல்வியாகட்டும், கல்லூரிக் கல்வியாகட்டும், இன்றைக்குப் பொறுப்பேற்றிருக்கின்ற அரசுதான் — புரட்சித் தலைவரின் தலைமையின் கீழ் இயங்குகின்ற அரசுதான் புரட்சிகரமான திட்டங்களையெல்லாம் தர முடியும் என்பதற்கு அத்தாட்சியாக ஒன்றை நான் இங்கே சொல்லியாக வேண்டும். பள்ளிக் கல்வியில் பிளஸ் 2 முறையைக் கொண்டு வந்த பொழுது இதை எப்படி நடத்த முடியும், இதில் உள்ள நடைமுறைச் சிக்கல்கள் எத்தனை எத்தனையோ என்று சொன்னவர்கள் வியக்கின்ற வண்ணம் இன்றைக்கு மேல் நிலைப் பள்ளிகளில் இருக்கின்ற இந்த பிளஸ் 2 எந்த அளவிற்கு சிறப்பாக நடந்திருக்கிறது என்பதை நாம் தெரிவித்துக் கொள்ள வேண்டும்.

கல்லூரிக் கல்வியைப் பொறுத்த அளவிலே பல்வேறு வியக்கத்தகு மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். மெக்காலே காலத்து கல்வி முறையிலே மாற்றங்கள் வேண்டும். மறுமலர்ச்சி வேண்டுமென்று சொல்கின்றவர்கள் இன்றைக்கு வியப்பு அடையத்தக்க வகையிலே ஒன்றைக் காணலாம். கல்லூரிகளுக்குத் தன் உரிமை அளிக்கக்கூடிய வகையிலே , தன் உரிமை உள்ள கல்லூரிகள் என்று பல கல்லூரிகளைத் தேர்ந்தெடுத்து, அவர்களும் தாங்களாகவே பாடத் திட்டங்களை வகுத்துக் கொள்வதற்கும், பாடத் திட்டங்களோடு தேர்வு முறைகளை வகுத்துக் கொள்வதற்கும் வழி வகுக்கப்படுகிறது. இந்தியத் திருநாட்டிலே முதல் மாநிலம் தமிழகம் தான் இதை அமுல் படுத்தியிருக்கிறது என்று சொல்வதிலே நான் பெருமைப்படுகிறேன்.

தமிழகத்திலே தான் தன் உரிமையுள்ள கல்லூரி என்று சொல்லி, பாடத்திட்டங்களிலே மறுமலர்ச்சி ஏற்படுத்த வேண்டுமென்பதற்காக இந்தத் திட்டம் அமுலாக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கல்லூரிகளிலே இருக்கிற நடைமுறைச் சிக்கல்களையும் நான் இங்கே குறிப்பிட்டாக வேண்டும். பொருளாதார ரீதியாகப் பல்கலைக் கழகங்களின் மானியங்களைப் பெற்றிருந்தாலும் கூட இன்னும் அதிகப்படியான பாடங்களைப் போதிப்பதற்கு ஆசிரியர்கள் குறைவாக இருக்கிற நிலைமைகளையும் அப்படிப்பட்ட கல்லூரிகளிலே இருக்கிற ஆசிரியர்களுக்குப் பணியிலே பாதுகாபும் இருக்கத்தக்க வகையிலே மாற்றங்கள் ஏற்படுத்த வேண்டுமென்று நான் பணிவாகக் கேட்டுக் கொள்கிறேன்.

பள்ளிக் கல்வியைப் பொறுத்த அளவிலே ஒன்றை நான் சொல்லியாக வேண்டும். பள்ளியிலே இருக்கின்ற பிளஸ் 2 கோர்சிலே —இங்கே உறுப்பினர் குறிப்பிட்டதைப் போல்— வைகஷனல் கோர்சில் படித்தவர்கள் கல்லூரிக்கு வரும்போது வஅர்களுக்குச் சரியான வரவேற்பு கொடுப்பதில்லை. அவர்கேளச் சேர்ப்பதில்லை, என்கின்ற குறைகளும் நீக்கப்பட்டாகக்ேண்டும்.





இன்னொன்று, நண்பகல் உணவுத் திட்டம் என்ற பெயராலே பள்ளியிலே மதிய உணவு வழங்கப்படுகிறது. பொருளாதார ரீதியாகப் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் அதே மாணவர்கள் கல்லூரிக்கு வருகின்ற பொழுது மதிய உணவுத் திட்டம் இல்லை. கல்லூரியிலே படிக்கின்ற மாணவர்களுக்கு மதிய உணவுத் திட்டம் தேவைதானா என்ற கேள்வி எழலாம். பள்ளியிலே படிக்கின்ற மாணவன் பொருளாதார ரீதியாக பிற்படுத்தப்பட்ட மாணவன் மதிய உணவு கோரி, அதைப் பெறுகின்ற போது, அதே மாணவன் கல்லூரிக்கு வருகின்றபோது, பொருளாதார ரீதியான சிக்கல்களினாலே மதிய உணவைப் பெற முடியாத நிலைமைகள் இருப்பதைப் பார்த்து, நான் ஒன்றை இங்கே கூற விரும்புகிறேன்.

1973 ஆம் ஆண்டிலே சென்னை லயோலா கல்லூரியிலே மாணவர் தமிழ் சங்கச் செயலாளராக இருந்த காலத்திலே, அங்கே படித்துக் கொண்டிருந்த மாணவர் சிலர் மதிய உணவுக்கு கூட வழியில்லை என்று சொல்லியபோது, அன்றைக்குப் புரட்சித் தலைவரைச் சந்தித்து, எங்கள் கல்லூரியிலே மதிய உணவுத் திட்டத்திற்கென்று ஒரு திட்டம் வகுத்திருக்கின்றோம் என்று சொன்ன போது தாயினும் சாலப்பரிந்து, பள்ளியிலே படிக்கின்ற மாணவர்களுக்குக் கர்ம வீரர் காமராஜர் அவர்கள் மதிய உணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள், கல்லூரியிலே படிக்கின்ற அந்த மாணவர்களுக்கு இல்லை என்று சொன்ன பொழுது, லயோலாக் கல்லூரி மாணவர்களுக்காக ஏறத்தாழ ரூ. 10,000 வழங்கி, மதிய உணவுத் திட்டத்திற்காக ரூ. 33,000—ஐ அங்கே நிதி வைப்பிலே வைத்து, அதிலே கிடைக்கின்ற வட்டியைக் கொண்டு, அந்தக் கல்லூரி மாணவர்களுக்கு மட்டும் மதிய உணவு வழங்கப்படுகிறது. அதே போன்று எல்லாக் கல்லூரிகளிலும் பொருளாதார ரீதியாகப் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு மதிய உணவுத் திட்டத்தை அமுல் படுத்த வேண்டுமென்று அரசின் கவனத்திற்கு இதைக் கொண்டு வர விரும்புகிறேன்.

அடுத்து, தீ விபத்து, வெள்ளம் போன்ற சோதனைகள் ஏற்படுகின்ற பொழுது, இழப்பால் வாடுகின்றவர்களுக்கு 5 கிலோ அரிசியும் வேட்டியும், சேலையும் ரூ. 200—ம் வழங்குவதோடு தீ விபத்திலே பாதிக்கப்பட்ட குடும்பங்களிலே மாணவர்கள் இருப்பார்களேயானால் அவர்கள் கல்லூரி மாணவர்களானாலும் சரி, பள்ளி மாணவர்களானாலும் சரி, தமிழ்நாடு பாடநூல் நிறுவனத்தின் சார்பாக ஏற்கனவே புத்தகங்கள் வழங்கப்பட்டிருந்தாலும் சரி, அரசே பொறுப்பேற்று, படிக்கின்ற மாணவர்களுக்கு எல்லா புத்தகங்களையும் இலவசமாக வழங்க முயற்சி செய்ய வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. ஜே. சி. டி. பிரபாகரன்]

விளையாட்டு வீரர்களுக்கு இங்கே மானியக் கோரிக்கையிலே கொடுத்திருக்கின்ற சலுகைகள் உண்மையிலேயே வரவேற்கத் தக்கவை. விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கின்ற இந்த நல்லரசுக்கு இன்னொன்றை நான் பணிவோடு சொல்லிக் கொள்கிறேன். விளையாட்டு வீரர்களைத் தொடக்கப் பள்ளிக் காலத்திலேயிருந்து கண்டுபிடித்து, உயர்நிலைப் பள்ளிக்கு வரும்போது அந்த மாணவர்களுக்கு நல்ல சத்துணவு வழங்கப்பட வேண்டும். இன்றைக்கு நம்மவர்கள் விளையாட்டுத் துறையிலே வீரம்காட்டத் தயாராக இருந்தும் கூட தங்களுக்கு ஊட்டமின்மை குறைவின் காரணமாக, நல்ல சத்துணவு இல்லாத காரணத்தினாலே, விளையாட்டுத் துறையிலே ஏனோ பின்தங்கியிருக்கிறார்கள். அரசு அறிவித்திருக்கிற பல்வேறு சலுகைகளிலே அதையும் சேர்த்து உயர்நிலைப் பள்ளியிலே படிக்கின்ற மாணவர்களுக்கு, விளையாட்டிலே தேர்ச்சி பெறுகின்ற மாணவர்களுக்குச் சிறப்புச் சத்துணவுத் திட்டம் என்று வைத்து, அப்படி விளையாட்டிலே வீரம் காட்டுகிற அந்த மாணவர்களுக்குத் தனிச் சலுகை காட்ட வேண்டுமென்று நான் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்று, 5 வருஷங்களாகத் தொடக்கப்பள்ளியாக இருக்கிற பள்ளிகளிலே போதுமான மாணவர்கள் இருப்பார்களானால், அந்தத் தொடக்கப்பள்ளிகளை உயர் தொடக்கப் பள்ளிகளாக அரசு அறிவிக்க வேண்டும். அப்படி இருக்கின்ற பொழுது அதிகத் தொலைவு சென்று உயர் தொடக்கப்பள்ளியிலே சேர்ந்திருக்கின்ற மாணவர்களுடைய கஷ்டம் தவிர்க்கப்படும். அந்த வகையிலே தொடர்ந்து 5 வருஷங்கள் தொடக்கப் பள்ளியாக இருக்கின்ற அந்தப் பள்ளியிலே போதுமான அளவுக்கு மாணவர்கள் இருக்கின்றபொழுது அந்தப் பள்ளிகளை உயர் தொடக்கப்பள்ளிகளாக ஆக்க வேண்டுமென என்னுடைய பணிவான வேண்டுகோளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய வில்லிவாக்கம் தொகுதியிலே, அம்பத்தூர் நகராட்சியிலே—நகரத்திலே—பெண்கள் உயர்நிலைப் பள்ளி ஒன்று இருக்கிறது. இன்றைக்குத் தனியார்கள் சேர்ந்து அந்தப் பள்ளிக்கு நல்லதொரு கட்டடம் கட்ட வேண்டுமென்ற ஆர்வத்தாலே ஏறத்தாழ ரூ. 22,000-ஐக் கல்வித்துறையிடம் வழங்கியிருக்கிறார்கள். அந்த இடத்திலே இருக்கிற அந்த உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக ஆக்க வேண்டுமென்ற வேண்டுகோளை வைத்து. அப்படி ஆக்குகின்ற பொழுது, நல்ல கட்டிடம் ஏற்படுத்த அவர்கள் தேர்ந்தெடுத்திருக்கின்ற வருவாய்த் துறைக்குச் சொந்தமான நிலத்தை உடனடியாகக் கொடுத்து, பள்ளியைக் கட்டுவதற்கான அனைத்து வேலைகளையும் நாம் மேற்கொள்ள வேண்டும் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

[முற்பகல் 10-10]

உள்ளாட்சித் துறையிலே இருக்கின்ற ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக ஆக்கியிருப்பதைப் பாராட்டி வரவேற்று போற்றிப் பாராட்டுகின்ற அதே நிலையில் நகராட்சி நகரத்திலே இருக்கிற





நாங்களும் அந்தச் சலுகைகளைப் பெறக்கூடாதா என்ற ஆசிரியர்களின் குமுறலையும் இங்கே தெரிவித்துக் கொள்ளுகிறேன். இன்னொன்றையும் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். அரசுப் பணிகளில் இருக்கிற ஆசிரியர்களுக்கும் தனியார் பள்ளியிலே இருக்கின்ற ஆசிரியர்களுக்கும் இருக்கின்ற வேறுபாட்டை நீக்கி அரசுப் பள்ளிகள் அல்லாத இடத்திலே இருக்கிற ஆசிரியர் பெருமக்களுக்கு அனைத்துச் சலுகைகளையும் மேற்கொண்டிருக்கிற இந்த அரசுக்கு பாராட்டையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். இன்னமும் தனியார் துறையில் இருந்து கொண்டு அரசின் முழுப் பிடிப்புக்குள் வராமல் இருக்கின்ற தனியார் பள்ளிகளை முழுமையாக அரசே எடுத்து நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை வைத்து இன்றைக்கு மாண்புமிகு அமைச்சர், தமிழுக்கும், தமிழ் அறிஞர்களுக்கும் கொடுக்கின்ற இந்தச் சலுகை மொழிப்பற்று உடைய வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத ஒரு மாபெரும் சலுகை என்று சொல்லி, புரட்சித் தலைவர் அரசு மட்டும்தான் புரட்சிகரமான வகையிலே இந்தக் கல்வி மறுமலர்ச்சியை தமிழகத்தில் காட்ட முடியும் என்பதை நிரூபிக்கின்ற வகையிலே, இந்த மானியத்தை அரசு வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு அமைகிறேன். நன்றி.

திரு. ந. சிவஞானம் : மதிப்பிற்குரிய பேரவைத் தலைவரவர்களே, தமிழக அரசினுடைய கல்வித்துறை நிதி ஒதுக்கீட்டின் 1980-81 ஆம் ஆண்டிற்கான மானியத்தில் காங்கிரஸ் (இ) சார்பில் பேசுவதற்கு வாய்ப்பு பெற்றதற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். கடந்த ஆண்டும், அதற்கு முன் உள்ள ஆண்டும் கல்வித் துறையில் முறையே 25.8, 24.6 விழுக்காடு செலவு செய்யப்பட்டது. இந்த ஆண்டு செலவு செய்யப்படுகின்ற விகிதாச்சாரம் 23 விழுக்காடுதான். இந்த விழுக்காட்டுக் குறைவுக்குக் காரணம் என்ன? கல்விக்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை அதிகமாக ஒதுக்கியுள்ளோம் என்று கூறினாலும், விழுக்காட்டை அதிகமாக மாற்றுகின்ற முறையில் தீவிரமாக செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தொடக்கப்பள்ளியை எடுத்துக் கொண்டால், 6 வயது வந்த அனைவரும் கட்டாயமாகப் பள்ளிக்குப் போக வேண்டும் என்ற நிலை இருந்தாலும், கிராமத்தில் உள்ள சில பகுதியினர் பள்ளிக்கு வருவது குறைவாக உள்ளது. அப்படியே வந்தாலும் படிப்பது கிடையாது. படிப்பைப் பாதியிலே நிறுத்திவிடுகின்றனர். அப்படி வருகின்ற மாணவர்களுக்கு நல்ல முறையில் கட்டிட வசதி கிடையாது. தொடக்கப்பள்ளியில் ஒவ்வொரு வகுப்பிலேயும் ஆசிரியர் மாணவர் விகிதாச்சாரம் 1 : 30 என்று அரசு உத்தரவிலிருந்தும் இந்த விகிதாச்சாரம் அமல்படுத்தப்படுவதே கிடையாது. இதனால் கல்வியின் தரம் அடிப்படையில் குறைவதற்குக் காரணமல்லாமல், வேலையில்லாத ஆசிரியர்களுக்கு வேலை கிடைக்கும்,

குறிப்பாக சென்னைப் பெருநகரத்தில் ஒவ்வொரு வகுப்பிற்கும்
60, 70 மாணவர்கள் அடைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைத்
தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நண்பகல் உணவுத் திட்டத்தை நாம் தொடர்ந்து அமல்
நடத்தி வருகிறோம். ஒரு மாணவனுக்கு ஒரு நாளைக்கு அரசு
மானியமாக 10 காசுகளும், உள்ளாட்சி மன்றங்கள் 5 காசுகளும்
கொடுத்து, ஆக மொத்தம் 15 காசுகள் செலவிடப்படுகின்றன.
ஆனால் சில இடங்களில் ஊராட்சி மன்றங்களின் மானியம் கூட
கிடைக்கப் பெறாமல் இருக்கிறது. விலைவாசிகள் உயர்ந்துள்ள
இந்தக் காலத்தில் மதிய உணவை 15 காசுகளில் போடுவது
என்பது எவ்வளவு சிரமமான காரியம் என்பதை இந்த மா
மன்றத்தில் உள்ளவர்கள் நன்றாக அறிவார்கள். ஆதலால் அரசு
அதைப் பரிசிலனை செய்து அரசு மானியத்தை 10 காசிலிருந்து
20 காசாக உயர்த்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மேலும் குறிப்பாக கான்வெண்ட் என்ற பெயரால் அதிலும்
குறிப்பாக சிருடை என்ற பெயராலும் நன்கொடை வசூலிக்கும்
நிலை எல்லா பகுதிகளிலும் நடைபெற்றுச் கொண்டிருக்கின்றன.
அதை ஒழுங்கு படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.
மேலும் குறிப்பாக சென்ற ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்
கழகம் நூற்றாண்டு விழாவை நடத்ியது. இந்த ஆண்டு 200,
300 ரூபாய்கள் நன்கொடை வேண்டும் என்று கேட்கிறார்கள்
என்பதை இந்த மன்றத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

தொடக்கப்பள்ளி கட்டிடங்கள் கட்டுவதற்காக ஒதுக்கப்
படுகிற தொகையில், ஊராட்சி ஒன்றியப் பள்ளிக் கட்டிடங்களுக்
காக ரூ. 5.5 கோடி சமுதாய வளர்ச்சித் துறையில் ஒதுக்கப்பட்
டிருப்பது வரவேற்கத்தக்கது. இன்றைய விலைவாசி உயர்வின்
அடிப்படையில் பார்த்தால், இந்தத் தொகை போதாது.
ஆகவே மேலும் இந்த ஒதுக்கீட்டை அதிகரிக்க வேண்டும்,
அதன் மூலம் கிராமத்தில் அதிக பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவ
தற்கு அரசு முயல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் கல்வித்துறையில் புரட்சிகரமான மாற்றத்தை
உண்டாக்கியவரும், அரசியலில் நேர்மையையும், நாணயத்தையும்
வாழ்க்கையில் எளிமையையும், உழைப்பையும் தன் வாழ்நாளில்
கடைபிடித்த பெருந்தலைவர் காமராசரின் வாழ்க்கை வரலாறு
ளை உயர்நிலைப்பள்ளி, தொடக்கப்பள்ளி புத்தகங்களில் இடம்
பறச் செய்ய அரசை இந்த நேரத்தில் நான் வலியுறுத்திக்
கட்டுக் கொள்கிறேன்.

உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்த வரையில் கட்டிட வசதி
வும் குறைவு. கட்டிட வசதியில்லாமல் ஒழுங்காக வகுப்புகள்
த்த முடியவில்லை. அதேபோல், விஞ்ஞான ஆய்வுக் கூடமும்



பள்ளி நூலகமும் சரியான வகையில் இல்லை. ஆகவே அத்தகைய வசதிகளை கிராமங்களில் பல நூற்றுக்கணக்கான உயர்நிலைப் பள்ளிகளுக்கு முன்னுரிமை கொடுத்து, புதிய கட்டிட வசதி செய்து கொடுப்பதற்கு 'பேஸ்ட் ப்ரோகிராம்' ஒன்று தயார் செய்து, இந்த திட்டத்திற்கு மேலும் அதிக நிதி ஒதுக்கீடு செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேல்நிலைப் பள்ளிகள் தமிழ்நாட்டில் 1978–79-ம் ஆண்டில் தொடங்கப்பட்டது என்றாலும், அந்தப் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு விஞ்ஞான ஆய்வுக் கூடம், நூலகம் போன்றவை கள் இல்லாததால், மாணவர்களின் தரம் குறிப்பாக கிராமப்பகுதி யில் உள்ள மாணவர்களின் தரம் குறைந்துள்ளது. இந்த நிலையைப் போக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பெருகி வரும் மக்கள் தொகைக்கு எற்ப இந்த ஆண்டு மேலும் 150 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளியாக மாற்றுவ தென அரசின் முயற்சி பாராட்டுக்குரியது என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன். மேல்நிலைப் பள்ளிக்கு ஆசிரியர்கள் நியமிக்கும் முறையில் சில மாற்றத்தையும் அரசு செய்ய வேண்டும். முதுநிலைப் பட்டம் பெற்ற உடனே ஆசிரியராக நியமிக்கி றனர். ஆனால் அவர்களைவிட அந்தப் பள்ளியில் பல்வேறு ஆண்டு களாக ஆசிரியர் வேலை பார்த்து வருகின்றவர்கள் அனுபவம் மிக்கவர்களாக இருப்பார்கள் என்பதால், அவர்களை அந்தப் பள்ளிக்கு நியமிப்பதன் மூலம் மாணவர்கள் தரம் தாழ்ந்துவிடா மல் பார்த்துக் கொள்ள முடியும். வருங்கால மாணவர்கள் தரம் மிக்கவர்களாக இருக்க வேண்டும் என்கிற காரணத்தாலும், அனுபவம் வாய்ந்த ஆசிரியர்கள் இந்தப் பள்ளிகளில் பணியாற்று வதன் மூலம் அதை அடைய முடியும் என்கிற காரணத்தாலும், இந்தக் கருத்தை நான் வலியுறுத்துகிறேன்.

சென்னையில் உள்ள கல்வி இலாக்கா இயக்குனரிடம் உள்ள பல அதிகாரங்களை மாவட்டத்திலுள்ள சி. இ. ஓ. அலுவலகங் களுக்கு பிரித்துக் கொடுத்து, துரிதமாக வேலை நடைபெற வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால், ஒரு சிறிய வேலை முடிய வேண்டும் என்று சொன் னால் கூட கிராமத்தில் இருந்து சென்னைக்கு வர வேண்டி இருக் கிறது.

தமிழ்நாட்டில் பொது நூலகப் பணி தொடர்ந்து நல்ல முறை யில் நடந்து வருகிறது. மாவட்டத்திலுள்ள பொது நூலகங்களை யும் கிராமத்திலுள்ள நூலகங்களையும் அரசுப் பொறுப்பில் எடுத்துக் கொண்டு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நூலகங்களில் இருக்கும் பணியாளர்கள் சரிவர சம்பளம் கொடுக்கப்படவில்லை என்று புகார் கூறுகிறார்கள். அது குறித்து அரசு கவனம் செலுத்தி தக்க நடவடிக்கை எடுக்க

வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தஞ்சையிலுள்ள சரஸ்வதி மகால் நூல்நிலையம் வெளிநாட்டுப்பயணிகளை ஈர்க்கத் தக்க அளவில் உள்ளதால், கட்டிடம் மோசமாக இருப்பதால், புதிய கட்டிடம் கட்டி நல்ல புத்தகங்களையும், பழங்காலச் சுவடிகளையும் போற்றிக் காப்பாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கிராமத்தில் உள்ள ஆசிரியர்களுக்கு குடியிருப்பு வசதி செய்து கொடுக்க வேண்டுகிறேன். ஊராட்சி ஒன்றியத்தின் ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக ஆக்கியதைப் பாராட்டுகிறேன். அதே போல் நகராட்சி ஆசிரியர்கள், தனியார் பள்ளி ஆகியவற்றில் உள்ள ஆசிரியர்களையும் அரசு ஊழியர்களாக ஆக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடு மதுரையில் இந்த ஆண்டு நடைபெறுமென அறிகிறேன். இந்த மாநாட்டின் நினைவாக அரசு அலுவலகங்கள், தலைமைச் செயலக அலுவலகங்கள் ஆகியவற்றில் வெளியிடப்படுகிற அரசு ஆணைகளும் தமிழில் வெளியிட வேண்டும் என்றும், அதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் உள்ள வல்லம், மாரியம்மன் கோவில், மேல உழுார், ஈச்சங்கோட்டை, கண்டிகுடி ஆகிய உயர்நிலைப் பள்ளிகளை மேல் நிலைப் பள்ளியாக மாற்ற அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைய தினம் செய்தித்தாளில் மதுரை, அண்ணாமலைப் பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த ஆசிரியர்கள் தங்களுடைய குறைகளை வைத்து போராட்டம் நடத்தப் போவதாக தகவல் வந்துள்ளது. இதனைஅரசு கவனித்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு பி. ஜி. நாராயணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இந்த அவைமுன் வைத்துள்ள மானியக் கோரிக்கைகளை ஆதரித்துப் பேச வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்த என்னுடைய தொகுதியைச் சேர்ந்த வாக்காளப் பெருமக்களுக்கு என் நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

நிதிநிலை அறிக்கையில் கல்வி மேம்பாட்டிற்கான பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் சொல்லப்பட்டிருக்கிறது. மற்ற எல்லாத் துறைகளைக் காட்டிலும், இந்தக் கல்வித் துறைக்குத்தான் அதிக நிதி ஒதுக்கீடு செய்வது தொடர்ச்சியாக பின்பற்றப்பட்டு வருகிறது. ஆண்டுக்கு ஆண்டு ஆகும் செலவும் அதிகமாவது தவிர்க்க முடியாதது.



[முற்பகல் 10-20]

இந்த ஆண்டு கல்விக்காக 224 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். இந்தத் தொகையிலே ஒரு சிறிய பகுதியை மதிய உணவு திட்டத்திற்கும் ஒதுக்கியிருக்கிறார்கள். இந்த மதிய உணவுத் திட்டம் செயல்படுத்தப்படும் போது, ஊராட்சி ஒன்றியங்களிலே மதிய உணவுத் திட்டத்தை செயல் படுத்தும் போது அதற்குச் செலவாகும் தொகையை மானியமாக ஊராட்சி ஒன்றியம் ஏற்றுக் கொள்கிறது. ஆனால் பேரூராட்சி நடத்தும் பள்ளிகளில் இந்த மதிய உணவுத் திட்டத்தைச் செயல் படுத்தும் போது அந்தச் செலவை அந்த பேரூராட்சி தான் ஏற்றுக் கொள்ள வேண்டி இருக்கிறது. பல பேரூராட்சிகள் தங்களுடைய பணியாளர்களுக்கு கூட சம்பளம் கொடுக்கக் கூடிய நிலைமையில் இல்லாமல் மிகுந்த தொல்லைகளுக்கு ஆட்பட்டு இருப்பதால் மதிய உணவுத் திட்டத்தை சரிவர செயல் படுத்த முடியாமல் இருக்கிறது. ஆகவே, பேரூராட்சிகளிலும் இந்த மதிய உணவுத் திட்டத்தை செயல்படுத்த நபருக்கு 5 பைசா வீதம் ஊராட்சி ஒன்றியம் மானியம் கொடுத்தால் நல்ல முறையில் இந்த திட்டத்தை செயல் படுத்த முடியும், என்ற என்னுடைய கருத்தை அவை முன்னால் வைக்க விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, முறைசாரா கல்வி ஒரு நல்ல நோக்கத்தோடு செயல்பட்டு வருகிறது. இந்த கல்வி நிலையங்களை மேலும் விரிவு படுத்தினால் இந்த நல்ல நோக்கம் சிறந்த பலனைத் தரும். பள்ளியிலே சேர்ந்து படிக்கும் வாய்ப்பை இழந்தவர்களும் பள்ளியில் சேர்ந்து தங்களுடைய படிப்பை இடையிலே நிறுத்திக் கொண்டவர்களும் இந்த முறைசாரா கல்வி நிலையங்கள் மூலம் நல்ல பலன் பெற வாய்ப்பு இருக்கிறது. இந்த மானியக் கோரிக்கையில் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் இரண்டு முறைசாராக் கல்விக் கூடங்களை ஏற்படுத்த வகை செய்யப்பட்டிருக்கிறது. மேலும் இத்திட்டத்தை விரிவு படுத்தினால் நல்ல பலன் கிடைக்கும்; படிக்காதவர்கள் எண்ணிக்கை கணிசமாக குறையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக ஆக்கும் திட்டத்திற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. அதை ஆசிரியர்கள் வரவேற்கிறார்கள். ஆசிரியர் பெருமக்கள் இந்த சமுதாயத்தில் சிறந்த பணியைச் செய்து வருகிறார்கள். அவர்களுக்கு சமுதாயத்தில் ஓர் உயர்ந்த இடம் தரப்படவேண்டும்; அவர்களுடைய அந்தஸ்தை உயர்த்த வேண்டும் என்ற எண்ணத்தோடு ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களை அரசு ஊழியர்கள் ஆக்கும் இந்தத் திட்டத்தை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன்.

அடுத்தபடியாக அரசு ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளுக்கு கல்விக்காக ஆகும் செலவை மானியமாக 'ஃபுல் கிராண்ட்'' முழு மானியமாக அளித்து வருகிறது. அதே போன்று நகராட்சிப்

பள்ளிகளுக்கு முழு மானியம் அளிக்க இப்போது வழிவகை இல்லை. நகராட்சிகளில் 'எஜுகேஷன் டாக்ஸ்' என்ற வகையிலே ஒரு வரியைப் போட்டு, அந்த நிதியிலிருந்து நகராட்சிப் பள்ளிகளை நடத்த வேண்டியிருக்கிறது. அதனால் புதிதாக அமைக்கப்பட்டிருக்கும் பல நகராட்சிகளில் இந்த பள்ளிகளை சரியாக நடத்த முடியாமல் இருக்கிறது. குறிப்பாக என்னுடைய தொகுதியில் புதிதாக அமைக்கப்பட்டிருக்கும் பவானி நகராட்சி போன்ற நகராட்சிகளிலே, முதலிலே வரிப்பளு அதிகமாக இருப்பதால் மேலும் வரி போட்டு வசூல் செய்வது கஷ்டமாக இருக்கிறது. பேரூராட்சியாக இருந்து, நகராட்சியாக மாற்றப்படும்போது வரி உயர்வைத் தடுக்க முடியாது. அதோடு கல்வி வரி என்று தனியாகப் போட்டு, அதை வசூல் செய்ய முடியாமல், நகராட்சி பள்ளிகளை சரியாக நடத்த முடியாமல் இருந்து வருகிறது. ஆகவே இந்த நகராட்சிகள் நடத்தும் பள்ளிகளுக்கும் 'ஃபுல் கிராண்ட்' எஜுகேஷன் டாக்ஸ் விதிக்காமல் அரசு கொடுத்தால் அந்தப் பள்ளிகளை சிறந்த முறையில் நடத்த முடியும் என்ற கருத்தை இங்கே வைக்க விரும்புகிறேன்.

மேலும் கிராமப்புறங்களில் உள்ள மாணவர்கள் கல்லூரிகளில் படிக்க வேண்டுமென்ற ஆர்வம் உள்ளவர்களாக இருக்கிறார்கள். பெற்றோர்களும் தங்களுடைய பிள்ளைகளை கல்லூரிக்கு அனுப்பி வைக்க ஆர்வம் காட்டி வருவதனால், இப்போது கல்லூரிப் படிப்பிற்கு பெரிய நகரங்களுக்கு வரவேண்டியிருக்கிறது. இந்த மேல் நிலை (பிளஸ் 2) கல்வியை ஆங்காங்கே இருக்கின்ற உயர்நிலைப் பள்ளிகளில் தொடங்கியதால் கிராமப்புற மாணவர்கள் எல்லாம் பெரிய நகரங்களுக்குச் சென்று கல்லூரி படிப்பு படிக்கும் நிலை மாறி கிராமங்களிலேயே படிக்கக்கூடிய வாய்ப்பு உருவாகியிருக்கிறது. மேலும், கிராமப்புறங்களிலே இந்த கல்லூரிப் படிப்பை விரிவாக்கும் வகையில், தனியார் கல்லூரியாக இருந்தாலும் அல்லது அரசு கல்லூரியாக இருந்தாலும் வட்டத்திற்கு ஒரு கல்லூரி ஏற்படுத்த வேண்டும். தனியார் கல்லூரி ஏற்படுத்த முன்வராத இடங்களில் அரசாங்கமே கல்லூரிகளை ஆரம்பிக்க வேண்டும். ஆக, தனியார் ஆரம்பித்தாலும் சரி அல்லது அரசாங்கம் ஆரம்பித்தாலும் சரி எந்த வட்டத்திலும் கல்லூரி இல்லை என்ற நிலை இருக்கக்கூடாது என்ற கோரிக்கையை பவானி தொகுதி மக்கள் சார்பாக இந்த மாமன்றத்தில் வைத்து, எனக்கு பேசுவதற்கு வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி தெரிவித்து முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவைக்கு ஓர் அறிவிப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு சி. வி. வேலப்பன் அவர்களை மாற்றுத் தலைவராக நியமிக்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

திரு ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, கல்வி மானியத்தின் மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.





மது மொத்த நிதி ஒதுக்கீட்டில் 23 சத வீதத்தைக் கல்வி யம் பெற்றிருக்கின்றது. பொதுவாக நம் நாட்டு கல்வி முறை ி ஆதிக்கக்காரர்களால் எழுத்தர்களை உருவாக்கவே காலே பிரபு மூலம் உருவாக்கப்பட்ட முறை. பெரும்பாலும் ;கைக்கும், கற்கும் கல்வி முறைக்கும் சம்பந்தமில்லாமல் பது தொடர்கிறது. பிரித்தாளும் சூழ்ச்சியைக் கையாண்ட பத்திய வாதிகள், திவான்களுக்கும், திவான் பகதூர் நம் கல்வி நிறுவனங்கள் ஏற்படுத்த வகை செய்தார்கள்.

த்தின் பெயரால் பல நிறுவனங்களை உருவாக்கி சுரண் நியாயப் படுத்தும் பெரும் கும்பலை உருவாக்கினார்கள். லமைப்புச் சட்டம் எழுதியவர்களும் அக்கூட்டத்தினரை ாதுகாக்கவே வகை செய்தமையால் இன்று சிறுபான்மையினர் ரிமை என்னும் போர்வையில் தப்பிக்கின்றனர். தனியார் நிறுவனம் அமைப்பதே பெரும்புள்ளிகள் கருப்புப் பணத்தை வெள்ளையாக்கவும் குறைந்த மூலதனத்தில் கொள்ளை லாபம் சம்பாதிக்கவும்தான் அப்படிப்பட்ட அமைப்பாகவே அது பயன் படுகிறது. வெளிநாட்டு உளவு ஸ்தாபனங்களும் தங்கள் பணிகளை இதன் மூலம் செய்வதும் உண்டு. எனவே தனியார் கல்வி நிறுவனங்களை அரசே எடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்துகிறேன்.

அடுத்து, பாலர் பள்ளியைப் பொறுத்தவரையில் தமிழ்நாட்டில் ஆங்கில மோகம் பெருகி வருகின்றது. இன்றைக்கு ஆங்கிலம் பாடமொழியாக உள்ள பாலர் பள்ளிகளில் அதிகார வர்க்கமும் சில அரசியல் தலைவர்களும் இடம் பிடிக்க தவம் கிடக்கின்றனர். இதன் மூலம் இந்த நிலைமையை நாம் அறியலாம். இந்தப் பள்ளிகளில் கட்டணம் வசூலிப்பது, நன்கொடை வசூலிப்பது ஆகியவற்றிற்கு அளவே இல்லை. அதற்குக் கணக்கும் கிடையாது. இதை முறைப்படுத்த சட்டமும் கிடையாது. இங்கு பணியாற்றுபவர்களுக்கும் பணி பாதுகாப்பு ஏதும் இல்லை. சலுகைகளும் கிடையாது. இவற்றை ஒழுங்கு படுத்தி அரசே ஏற்று நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அத்துமீறி நன்கொடை வசூல் செய்வதைத் தடுப்பதற்கு கர்நாடகத்தில் ஒரு சட்டம் கொண்டு வந்திருப்பது போன்று இங்கும் பிரத்தியேகமாக ஒரு சட்டத்தைக் கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தொடக்கப் பள்ளியில் பயில்பவர்கள் இடையில் நின்று விடுகின்ற நிலைமை 'டிராப் அவுட்' —53 சதவீதத்திலிருந்து 33 சதவீதமாகக் குறைந்திருப்பது மகிழ்ச்சிக்குரியது. இருந்தாலும் இன்னும் கணிசமான அளவு குறைய வகை செய்ய வேண்டும்.

[திரு. ரா. கிருஷ்ணன்] [1980 ஜூலை 12

அடுத்து, மதிய உணவு வழங்குவதில் ஊழல் நடப்பதைத் தடுக்க வேண்டும். தனியார் நிறுவனங்களிலும், சில ஆசிரியர்களும் தவறு செய்கிறார்கள். இதற்கான பணத்தை ஒன்றியங்களில் வாங்கப் போனால் அங்கும் லஞ்சம் கொடுக்க வேண்டியிருக்கின்றது. ஆகவே இதைக் கட்டுப் படுத்துவதற்கு மதிய உணவை ஒரே மையத்தின் மூலமாகவே தயார் செய்து அனுப்புவதற்கு அப்படிப்பட்ட மையங்களின் எண்ணிக்கையை அதிகப் படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஏராளமான குழந்தைகள் தொடக்கக் கல்வியை படித்து முடிப்பதற்குவழிவகை செய்ய வேண்டும். அதில் டிராப் அவுட்டைக் குறைக்க வேண்டும்.

அடுத்து, ஆசிரியர்—மாணவர் ரேஷியோ பற்றிச் சொல்ல விரும்புகிறேன். மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் உள்ள ரேஷியோ இப்போது 35 பேர்களுக்கு ஒரு ஆசிரியர் என்று இருக்கிறது. அதை மாற்றி 20 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற அளவுக்குக் குறைத்து இன்னும் அதிகமான கவனத்தை அந்த ஆசிரியர்கள் மாணவர்கள்மீது செலுத்துவதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து பள்ளி மாணவர்களுக்கு நோட்டுப் புத்தகங்கள் கிடைப்பதில் தட்டுப்பாடு ஏற்படுகிறது. தமிழ்நாட்டில் ஆண்டுக்கு 8,000 டன் காகிதம் தேவைப்படுகிறது. என்றாலும் 6,000 டன் வழங்குவதற்குத்தான் மத்திய அரசு முன் வந்திருக்கின்றது. அதிலேயும் பாதிதான் வந்துள்ளதாகவும் இந்தக் குறிப்பிலே கூறப்பட்டிருக்கின்றது. மேலும் நோட்டுகள் மலிவு விலையில் கிடைப்பது மிகவும் சிரமமாக இருக்கின்றது. நோட்டுகளைப் பொறுத்தவரையில் மாவட்டத் தலை நகரங்களில் உள்ள சிறப்பங்காடிகளில் சென்று வாங்க வேண்டிய நிலை இருக்கின்றது. அங்கு இரண்டு நாட்கள் காத்திருந்து வாங்க வேண்டிய நிலை இருக்கின்றது. ஆகவே பள்ளிகளிலேயே அவர்களின் தேவைக்கேற்ப ஒவ்வொரு பள்ளிக்கும் நோட்டுப் புத்தகங்களை அரசாங்கமே நேரடியாகக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து இலவச புத்தகங்களைப் பொறுத்தவரையில் 3 விதமாகக் கொடுக்கப்படுகின்றது. மதிய உணவு பெறக் கூடிய மாணவர்களுக்குக் கொடுக்கிறார்கள், அரிசன மாணவர் என்ற அடிப்படையில் கொடுக்கப்படுகிறது. டி.என்.டி. என்ற அடிப்படையிலும் இலவசப் புத்தகம் வழங்கப்படுகின்றது.

[முற்பகல் 10·30.]

ஆனால் சில பள்ளிகளில் இரண்டு விதமான, இரண்டு செட் புத்தகங்கள் கிடைக்கின்றன. சில வேளைகளில் நிர்வாகமோ, தவறான நோக்குடைய ஆசிரியர்களோ அவற்றில் ஒரு செட்டை கடையில் விற்று விடுகிறார்கள்.



1980 ஜூலை 12] [திரு. ரா. கிருஷ்ணன்]

ஒரு பள்ளியில் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த மாணவர்களே இல்லை. ஆனால் அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட 30 செட் புத்தகங்களை மார்க்கெட்டிங் சொசைட்டியினர் ஆசிரியர்களிடம் கொடுக்கும்போது, இது தேவையில்லை, தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த மாணவர்களே இல்லை என்று சொன்னாலும், வாங்கித்தான் செல்ல வேண்டும், அப்படி தாழ்த்தப்பட்ட சமூகத்து மாணவர்கள் இல்லையென்றால் புத்தகங்களை கடையில் விற்று பணத்தை இங்கே செலுத்தி விடுங்கள் என்று சொல்கிறார்கள். வாங்க மறுத்தால் டி.என்.டி.க்கு கொடுக்கப்படும் புத்தகங்களை வழங்க மறுக்கிறார்கள். அதனால் வேறு வழியின்றி எல்லாவற்றையும் வாங்கிக் கொண்டு, தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கென ஒதுக்கப் பட்ட புத்தகங்களை விலைக்கு விற்று பணத்தை திருப்பி செலுத்த வேண்டிய பணியும் ஏற்பட்டது அந்தப் பள்ளி ஆசிரியர்களுக்கு.

வியாபாரிகள் நோட்டு புத்தகங்களை பதுக்கி வைப்பதாகவும் அவைகளை பின்பு வெளிநாட்டுக்கு கடத்துவதாகவும் தெரிகிறது. இதைத் தடுத்து குறைந்த விலையில் கிடைக்க வழி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு இலவசப் புத்தகங்கள்இரண்டாண்டுகளாகவே தாமதமாகக் கிடைக்கின்றன. இதனால் கல்வி தரம் பாதிக்கப்படுகிறது. அவைகளைச் சீர், செய்து சீக்கிரமாக வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களின்கீழ் பணியாற்றும் ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக ஆக்கியதை வரவேற்கிறேன். ஆனால் ஊழல், கொடுமைகள் எல்லாம் அநேகமாக தனியார் பள்ளிகளில் தான் நிறைந்திருக்கின்றன. ஆகையால் அனைத்து ஆசிரியர்களையும் அரசு ஊழியர்களாக ஆக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் ஹையர் கிரேடு ஆசிரியர்கள் 71,802 பேர்கள் இருக்கிறார்கள். இவர்களில் முதல் கட்டமாக 2,500 பேர்களுக்கு மட்டுமே, அரசு ஆணை எண் 117, கல்வித்துறை, 1980ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 23ஆம் நாளின்கீழ், பயிற்சி அளிக்கப்பட்டு இடைநிலை ஆசிரியர்களாக வகை செய்யப்பட்டிருக்கிறார்கள் இப்படி போனால், அத்தனை பேர்களுக்கும் பயிற்சி அளிக்க எவ்வளவு ஆண்டுகள் ஆகும்? ஆகையால் அதை கொஞ்சம் அதிகமாக்கிதுரிதப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சில தனியார் பள்ளிகள், குறிப்பாக மதம் அடிப்படையில் அங்கீகாரம் இல்லாமல் பள்ளியை தொடங்குவதும், பின் சிறுபான்மையினர் என்று சொல்லி கட்டாயமாக அங்கீகாரம் பெறுவதும் வழக்கமாகி விட்டது. இதனால் ஏற்கெனவே உள்ள

பள்ளிகளில் மாணவர்கள் குறைகிறார்கள். சாதி மதம் பெயரால் பூசல்களும் ஏற்படுகின்றன. ஆகையினால் இப்படிப்பட்ட அங்கீகாரம் வழங்குவது தவிர்க்கப்பட வேண்டும்.

ஆசிரியர்கள் இல்லாத சில தேவையான பள்ளிகளில் ஆசிரியர்களை நியமனம் செய்ய அனுமதி கொடுக்காமல், லஞ்சம், ஊழல் செய்து தவறான முறையில் அதற்கான அனுமதி வழங்குவது தடுக்கப்பட வேண்டும். குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு டெபுடி இன்ஸ்பெக்டர்களை மீண்டும் ஆசிரியர்களாக நியமனம் செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சில இடங்களில் 'சி' பிரிவு பள்ளிகள் இருக்கின்றன. அவ்வாறு கழுதியில் உள்ள உயர்நிலைப் பள்ளியை போன்று இன்னும் சில இடங்களில் உள்ள 'சி' பிரிவு பள்ளிகளை இணைத்து அவற்றின் பணிகளை முறைப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டும் அல்லாமல் போதுமான ஆசிரியர்கள் பல பள்ளி களில் நியமிக்கப்படாமல் அந்த இடங்கள் காலியாகவே இருக்கின்றன. மேல் நிலைப் பள்ளிகளில் சர்வீஸ் ரூல்ஸ், சம்பள ரூல்ஸ் என்று எதுவுமே இருப்பது இல்லை.

வொகேஷனல் இன்ஸ்டிரக்டர்களுக்கு பி.இ.டி.களுக்கு வழங்குவது போல 25 ரூபாய் ஸ்பெஷல் ஊதியம் கொடுக்கலாம். அதை அரசு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதுவுமல்லாமல் இப்படிப்பட்ட வொகேஷனல் வகுப்புகளை விரிவுபடுத்த வேண்டும் என்றும் என் கருத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

தனியார் பள்ளிகளில் உதவி தலைமை ஆசிரியர்களை சீராகவோ விதிப்படியோ நியமிப்பதில்லை. அந்தப் பதவிகளுக்கு முதுநிலை பட்டப் படிப்பு படித்தவர்களைப் போடலாம். அது போலவே மேல்நிலைப் பள்ளிகளில் தணிக்கை (இன்ஸ்பெக்ட்) செய்வதற்கும் முதுநிலைப் பட்டம் பெற்றவர்களையே நியமிப்பது சரியாக இருக்கும் என்று என் கருத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

பல மேல்நிலை உயர்நிலைப் பள்ளிகளில் கட்டிட வசதிகள் கிடையாது. ஆராய்ச்சிக் கூடங்கள் கிடையாது. இப்படி எந்த வசதியுமே கிடையாது. பல பள்ளிகளில் மாணவர்களுக்கு உட்கார இருக்கைகள் கிடையாது. குளிர் பகுதியான மாஞ்சோலை எஸ்டேட்டின் உயர்நிலைப் பள்ளியில் மாணவர் களுக்கு பெஞ்சுகள் கிடையாது. ஆசிரியர்களுக்கு நாற்காலி, மேசைகள் கிடையாது. இப்படி அந்தப் பள்ளியில்தான் என்று இல்லை, பல பள்ளிகளில் இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது. அரசாங்கம் இவைகளை கவனித்து செம்மை படுத்த நடவடிக்கை கள் எடுக்கவேண்டும்.



கட்டிட வசதிக்கென்று குறைவாகவே நிதி ஒதுக்கம் செய்யப் பட்டிருக்கிறது. ஏற்கெனவே கட்டிக் கொண்டிருக்கும் கட்டடங்களை நிறைவுபடுத்த 25 லட்சம் ரூபாயுடன், புதிதாக கட்டுவதற்கென்று 17 லட்சம் ரூபாய் மட்டுமே ஒதுக்கப்பட்டி ருக்கிறது. இது மிகவும் குறைவு. தேவையோ மிக அதிகம். குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள ஒரு தொடக்கப் பள்ளியில் கூரையே கிடையாது. அந்தப் பள்ளியின் போட்டோவைக் கூட எடுத்துக் கொண்டு வந்திருக்கிறேன். அமைச்சர் அவர்கள் அதைப் பார்க்க வேண்டும். மேற்கூரையே கிடையாது. வெயில் காலத்தில் வெயில் எல்லாம் பிள்ளைகள் தலையில் தான். மழைக் காலத்திலும் அப்படியே பெய்கிற மழை எல்லாம் பள்ளிக்கூட அறையின் உள்ளேயே விழும். இவற்றைத் தீர்ப்பதற்கான வழி வகைகளை அமைச்சர் அவர்கள் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வாசுதேவநல்லூரில் இருக்கும் மேல்நிலைப் பள்ளியில் வகுப்புகள் நடத்த இடமேயில்லை. கட்டிட வசதிகளும் கிடையாது. ஷிப்ட் முறையில்தான் வகுப்புகள் நடப்பதாக தெரிகிறது. ஆகையினால் அமைச்சர் அவர்கள் பள்ளிக் கட்டிடங் களுக்கென்று அதிக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு இந்த எஸ்.ஐ.இ.டி. கல்லூரி தமிழக அரசுக்கு ஒரு சவாலாக இருக்கிறது. முறைகேடான கட்டணம் வசூலிப்பது இங்கே தெரிவிக்கப்பட்டு, அதைக் கட்டுப்படுத்த முடியாமல் வரலாறு காணாத அளவில் அங்கே ஆசிரியைகள், மாணவிகள் போராட்டம் ஏற்பட்டு, பின்னர் அக் கல்லூரி திறக்கப்பட்டது. சில ஆசிரியைகளை பழி வாங்கும் நோக்கத்தோடு இந்த ஆண்டு பல வகுப்புகளில் மாணவிகளைச் சேர்க்கவில்லை. இதற்கான முன் அனுமதியும் பெறவில்லை. அரசின் மானியம் வாங்கும் இந்த நிறுவனம் இப்படி மாணவிகளைச் சேர்க்காமல் இருப்பது சரிதானா? எந்த அடிப்படையில் இப்படிச் செய்கிறார்கள்? ஆகவே இந்த ஆசிரியைகள் எந்த விதத்திலும் பாதிக்கப்படாத அளவில் அவர்களுக்கு அரசு உத்தரவாதம் அளிக்க வேண்டும். அவர்களுக்கு ஒரு உறுதி மொழி அளிக்க வேண்டும்.

அடுத்து, சென்னையில் உள்ள ஜெயின் கல்லூரி ஒரு பெரிய வியாபார ஸ்தலமாக இருக்கிறது. இந்த இடத்தில் நான் ஒரு போட்டோஸ்டெட் காபியைக் காண்பிக்க விரும்புகிறேன். நிர் வாகத்தினர் மூலம் கல்லூரி முதல்வருக்கு ஒரு கடிதம் வருகிறது. பார் செகரட்டரி என்று கையெழுத்து போட்டு கடிதம் வருகிறது.

Mr. Chandreshkumar has passed P.U.C. with Maths., Physics and Chemistry with 73% marks. As he could not register the application earlier please give him the application form and

register the same. He may be admitted in B. A. Corporate. என்று எழுதப்பட்டிருக்கிறது. அதில் பார் செகரட்டரி என்று கையெழுத்து போட்டிருக்கிறார்கள். கைலாஸ் என்று மானேஜர் கையெழுத்து போட்டிருக்கிறார். Yes. Please effect the admission, என்று சொல்லி இருக்கிறார்கள். ஆனால் அந்த மாணவரின் மார்க் ஷீட்டை கேட்கிறார் முதல்வர். அந்த மார்க் ஷீட்டை உற்று நோக்கிப் பார்க்கின்றார். அப்போது 22 என்றிருந்த மார்க் 122 ஆக மாறியும், அதே போன்று 10 என்றிருந்த மார்க் 30 ஆக மாறியும் இருக்கிறது. அதை அவர் காண்கிறார். அந்த அடிப்படையில் அவர் எழுதுகிறார். This is a false document of P.U.C. No admission for him. என்று அந்த லெட்டர் எழுதுகிறார் அவர் கையெழுத்து போட்டு அனுப்பி விடுகிறார் அந்த மாணவனை. அந்த மாணவன் உடனே நிர்வாகத்தினரிடம் போய்ச் சொல்கிறான். மாணவர் சொன்னவுடன் உடனடியாக நிர்வாகத்தினர் கல்லூரி முதல்வரை மிரட்டுகிறார்கள், நீங்கள் ஸ்கூட்டரில்தான் போகிறீர்கள், விபத்துக்கள் ஏராளமாக நடக்கும் என்பது உங்களுக்குத் தெரியும் என்று மிரட்டுகிறார்கள். உடனே கல்லூரி முதல்வர் பயந்து கோர்ட்டில் ஒரு க்ரிமினல் கம்ப்ளெயின்ட் கொடுக்கிறார்கள். அந்த க்ரிமினல் கம்ப்ளெயின்டில் நிர்வாகத்தினரில் இரண்டு பேர்கள், அஸிஸ்டென்ட் செகரட்டரி, சந்திரேஸ் குமார் இவர்கள் அக்யூஸ்ட். 10—6—1980-ல் முதன் முதலாக கோர்ட்டில் ஆஜராக வேண்டும். ஆனால் அக்யூஸ்ட் தரப்பில் இருந்து செக்ஷன் 317 படி ஒரு மனு தாக்கல் செய்யப்படுகிறது. சந்திரேஸ் குமார் நகரில் இல்லை, வெளி ஊர் சென்றிருக்கிறார் என்று மனு தாக்கல் செய்யப்பட்டு பைலாகியிருக்கிறது.

ஆனால் 13—6—1980-ல் ஒரு மனு தாக்கல் செய்யப்பட்டது. அதே அக்யூஸ்ட் சார்பாக ஒரு மனு தாக்கல் செய்யப்பட்டு இருக்கிறது. 10—6—1980-ல் அந்த மாணவர் சந்திரேஸ்குமார் சென்னையில் ஒரு விபத்தில் இறந்து போனான் என்று. இதில் மர்மம் இருக்கிறது.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் : (திரு. ஏ. வி. வேலப்பன்) : கோர்ட்டில் நடவடிக்கை இருப்பதால் அதிக விளக்கம் கொடுக்க வேண்டாம்.

திரு. ரா. கிருஷ்ணன் : நான் அதன் விவரங்களுக்குள் போக விரும்பவில்லை. அவர் இறந்து விட்டார் என்று மனு தாக்கல் செய்யப்படுகிறது. இந்த சந்திரேஸ் குமார் இறந்ததில் ஒரு பெரிய மர்மமே அடங்கி இருப்பதாக நான் கூற முற்படுகிறேன். இதற்காக ஒரு விசாரணைக் கமிஷன் அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை விடுக்கிறேன்.



இன்றைக்கு இந்த ஜெயின் கல்லூரியைப் பொறுத்தவரையில் பி.காம்., பி.ஏ. கார்ப்பொரேட் போன்ற கோர்ஸ்களுக்கு பல ஆயிரக் கணக்கான ரூபாய் இலஞ்சம் வாங்குவதாக எனக்கு தகவல் இருக்கிறது. இதே ப்ரின்ஸ்பால் சஸ்பென்ட் செய்யப்பட்டிருக்கிறார் கடந்த நான்கு மாத காலமாக. சட்டப்படி அவர்கள் இரண்டு மாதங்களுக்கு மேல் ஸஸ்பென்ஷனில் இருக்கக் கூடாது, ஆனால் அவரை வேலை நீக்கம் செய்வதற்கும் அவர் உயிருக்கு ஆபத்தான ஒரு நிலையும் உருவாகி இருக்கிறது என்பதையும் நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

[முற்பகல் 10-40]

அதே போன்று, சென்னைப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்தவரையில் ஏற்கனவே நியமனங்களில் முறை கேடுகள் இருப்பதும், ஆளுக்கு ஆள் தலையீடு செய்வதும் வழக்கமாகத் தான் இருக்கிறது. ஆனால் இப்போது லஞ்சம் அதிகமாகிக் கொண்டிருக்கிறது. ஏற்கனவே ரிஜிஸ்திரார் என்ன செய்தார் என்பதைப் பற்றி இங்கே பேசப்பட்டது. சி.ஐ.டி. ரிப்போர்ட்டும் அதை ஊர்ஜிதம் செய்திருக்கிறது. ஆனால், இன்னும் அந்த ரிஜிஸ்திரார் தொடர்ந்து அந்தப் பணியில் இருந்து கொண்டு இருக்கிறார். வேடிக்கை என்னவென்றால், ரிஜிஸ்திரார் அறையில் வால் பெயின்டிங் செய்ய ரூ. 40,000 செலவு செய்யப்பட்டு, இருக்கிறது. ஆனால், மாணவர்கள் பலர் குடிநீர் வசதி இல்லை கழிப்பிட வசதியில்லை என்பன போன்ற தேவைகளை பல தடவைகள் சொல்லியும் செவி சாய்க்காத நிலை இருக்கிறது. இந்த மாணவர்கள் வைஸ் சேன்சலரிடம், செனட்டிலும் பல முறை சொல்லியும் அது கவனிக்கப்படவில்லை. எனவே, இது சம்பந்தமாக கடந்த மார்ச்சு மாதம் 31 ஆம் தேதி செனட் கூட்டத்தில் புகுந்து தங்கள் உணர்வுகளை காட்ட வேண்டிய நிலைமை ஏற்பட்டது. எனவே, அரசாங்கம் இதிலே தலையிட்டு இப்படிப்பட்ட குறைகளைப் போக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இதே போன்று, திருச்சி யூனிவர்சிடி சென்டரில் எகனாமிக்ஸ் பேராசிரியர் பதவிக்கு பி.ஜி. அனுபவம் இல்லாத திரு. நீலகண்டன் என்பவரை நியமனம் செய்திருப்பதாகவும், 18 ஆண்டுகள் பி. ஜி. அனுபவமுள்ளவர் நேர்முகத் தேர்வுக்கு வந்தும் இந்தப் பதவி அவருக்குக் கொடுக்கப்படவில்லை என்றும் சொல்லப்படுகின்றது. அதே போன்று, கோயம்புத்தூர் யூனிவர்சிடி சென்டரில் ஜூனியரான ஒருவரை அதன் டைரக்டராக நியமிக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதே போன்று இங்கே சென்னைப் பல்கலைக்கழகத்தில் டிபார்ட்மெண்ட் ஆப் அடல்ட் அண்டு கன்டினியூவிங் எஜுகேஷன் என்று இருக்கிறது. இதிலுள்ள துறைத் தலைவர் ஏராளமான ஊழல்

கள் செய்துள்ளார் என்று சிண்டிகேட் ஒரு விசாரணைக் குழுவை நியமித்தது—அப்போது அந்தத் துறையின் ஆசிரியர்களும், மற்ற ஊழியர்களும் விசாரணைக்கு பல்கலைக் கழகம் மூலம், சம்மன் செய்யப்பட்டனர். அப்போது துறையின் தலைவர் திரு. செல்வராஜ், சீதாராம், ஜெரோம் ஜோசப் ஆகிய ஆசிரியர் களிடம் விசாரணையில் கலந்து கொள்ள வேண்டாம் என்று சொன்னார். ஆனால், ஆசிரியர்கள் விசாரணையில் கலந்து கொண்டனர். அப்போது விசாரணைக் குழுத் தலைவர் சொல்லப்படும் சாட்சியங்கள் அனைத்தும் ரகசியமாகவே பாதுகாக்கப்படும் என்று உறுதியாகச் சொன்னார்கள். எனவே, அவர்கள் உண்மையைக் கூறினார்கள். ஆனால், என்ன நடந்தது ? ஒரு நாள் அந்தத் துறையின் தலைவர், ஆசிரியர் திரு. செல்வராஜை அழைக்கிறார். வந்தவுடன் ஒரு பேப்பரை வீசுகிறார். அதை வாசிக்கச் சொல்கிறார். அதைப் படித்துப் பார்க்கும் போது, விசாரணையில் என்ன வார்த்தை கூறினாரோ, அவை அப்படியே அதிலே எழுதப்பட்டு இருக்கிறது. ஆகவே, விசாரணைக் குழுவின் தலைவர் ரகசியமாக பாது காக்கப்படும் என்று சொன்ன வாக்குறுதி என்னவாயிற்று ? இன்றைக்கு அதன்படி நடக்கவில்லை. இதைவிட வேடிக்கை என்னவென்றால், திரு. செல்வராஜ் பல்கலைக் கழகத்தின் மூலமாக எக்ஸ்பர்டுகளால் இன்டர்வியூ செய்யப்பட்டு, பல் கலைக் கழக சிண்டிகேட்டால் நியமனம் செய்யப்பட்டவர். ஆனால், இத்துறைத் தலைவரின் கடிதப்படி, பள்ளிக் கல்வி இயக்குநரால் அவர் பதவி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். அவர் பதவி இறக்கம் செய்யப்பட்டு, ஒரு மேல்நிலைப் பள்ளிக்கு மாற்றம் செய்யப்பட்டிருக்கிறார். இராமநாதபுரம் மாவட்டத் திற்கு மாற்றம் செய்யப்பட்டிருக்கிறார். இப்படி செய்தது இந்தப் பல்கலைக் கழகத்திற்கும் தெரியாது. இது இந்தத் துறையின் தலைவருக்கும், பள்ளிக் கல்வி இயக்குநருக்கும் இடை யிலே நடைபெற்ற ஊழலாகும். அதோடு மட்டுமல்ல. மூன்று டைபிஸ்டுகள், மூன்று அட்டெண்டர்கள் அன்றிரவே டிஸ்மிஸ் செய்யப்பட்டிருக்கிறார்கள். இந்த அளவுக்கு முறைகேடுகள் அங்கே நடந்திருக்கின்றன. எனவே, இதற்கு ஒரு விசாரணைக் குழுவை ஏற்படுத்தி, இதை விசாரிக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு, இன்றைக்கு அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தைப் பொறுத்த வரையில் ஒரு போராட்டமே வெடித்துக் கொண்டிருக்கிறது. குறுகிய காலத்தில் அங்குள்ளவர்கள் தேர்வுகளை பகிஷ்கரிக்கக் கூடிய நிலைமை உருவாகிக் கொண்டு இருக்கிறது. அதற்கு முன்பாக இந்த அரசு தலையிட்டு இந்தப் பல்கலைக் கழகத்தை டேக் ஓவர் செய்து கொள்வது அவசியம் என்று நான் கருதுகிறேன். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்த வரையில் அங்கே 420 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள்; அதிலே 232 பேர்கள் டெம்பரரி





யாக இருக்கிறார்கள். அதே போல், அங்கே 600 ஊழியர்கள் இருக்கிறார்கள் ; அவ்வளவு பேர்களும் டெம்பரரி. அங்கே எந்தவிதமான முறையும் கிடையாது ; சட்டமும் கிடையாது. 23 ஆண்டுகளாக பணியாற்றிய ஒரு பேராசிரியரிடமிருந்து ஒரு கடிதம் வந்திருக்கிறது.

துறையிலிருந்து கொடுக்கப்பட்டிருக்கிறது. 26 மே, 1980 கொடுத்திருக்கிறார்கள்—

Thiru So and So is continued temporarily up to 30-6-80. 23 ஆண்டுகள் பணியாற்றிய பேராசிரியர். ஆக, தொடர்ச்சி யாக டெம்பரரி என்று போடுகிறார்கள். இவர்கள் செய்யக் கூடிய அத்தனை அக்கிரமங்களுக்கும் இந்த அடிப்படையில் டெம்பரரி என்று போடுகிறார்கள். இங்கு சின்டிகேட், செனட், போர்டு ஆப் செலக்ஷன் ஆகியவற்றிற்கு இரகசிய மாக தபால் ஓட்டு முறை உண்டு. ஆசிரியர்களுக்கு தபாலில் ஓட்டுச்சீட்டு வந்தால் போஸ்ட்மேன் ஆசிரியரிடம் கொடுத்துப் போவார். பின்னாலேயே நிர்வாகத்தின் ஆள் ஒருவர் அதில் கையெழுத்து மட்டும் வாங்கிச் செல்வார். யாருக்கு வாக்களிப்பது என்று ஆசிரியர் முடிவு செய்ய முடியாது. நிர்வாகந்தான் முடிவு செய்யும். இப்படிப்பட்ட முறைகேடு கள் தேர்தலில் தொடர்ச்சியாக நடைபெறுகின்றன.

ஆசிரியர்களுக்கு வீடுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அந்த வீடுகளில் மழை காலத்தில் ஒழுகும். மழை பெய்தால் வீட்டிற்குள் குடை பிடித்துக் கொண்டுதான் இருக்க முடியும். வீட்டின் சுவரைத் தொட்டால் எலக்ட்ரிக் ஷாக். உயிருக்கே பாதுகாப்பு இல்லையென அரசரின் வாரிசு திரு. முத்தையாச் செட்டியார் அவர்களிடம் பல முறை முறையிட்டும் வள்ள லாருக்கு மனம் இரங்கவில்லை.

இங்கு அரசு ஆணை எண் 613, கல்வி, 27—3—1978-ன் படி பி.ஜி. டிகிரி உள்ள ட்யூட்டர்; டெமான்ஸ்ட்ரேட்டர்கள்; லெக் சரர்கள் ஆக்கப்பட வேண்டுமென்ற உத்தரவு அமலாகவில்லை.

பொறியியற் துறை, உழவியல் துறை ஆசிரியர்களுக்கு மற்ற இடங்களில் வழங்குவது போல வழங்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். அவர்களை நிரந்தரப்படுத்த வேண்டும். இங்கே காணப்படும் பல குறைபாடுகளை நீக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, முடித்துக் கொள்கிறேன்.

* திரு எம். கே. ராஜமாணிக்கம்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் நிதிநிலை அறிக்கையின்படி மொத்தச் செலவான ரூ. 967 கோடியில் 23 விழுக்காடுகள் கல்விக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. வரவேற்கத்தக்க

ஒன்றாகும். 1975—76-ல் 123 கோடி ரூபாய் கல்விக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் தற்சமயம் புரட்சித் தலைவரின் அரசு 224 கோடி ரூபாயை கல்விக்கு ஒதுக்கியுள்ளது. இந்த அரசு கல்வி வளர்ச்சியின் மேல் கொண்டுள்ள அக்கறையைக் காட்டுவதாக இது அமைந்துள்ளது. இதற்கு முன்னர் எந்த அரசும் செய்யாத வரவேற்கத்தக்க பல புதிய மாற்றங்களை இந்த அரசு ஏற்படுத்தியதன் மூலம் கல்வியின் வளர்ச்சி தமிழகத்தில் சிறப்பாக உள்ளது. பிளஸ் 2 முறையைக் கொண்டு வந்து அதைக் கிராமப் புறங்களிலும் பரவலாக்கியதன் மூலம் முன்னர் புகுமுக வகுப்புகளில் சேர்ந்து பயில வாய்ப்புக் கிட்டாத மாணவர்கள் தற்சமயம் மேல்நிலைக் கல்வியைப் பெறும் வாய்ப்பினைப் பெற்றனர். பிளஸ் 2 முறை தமிழக கல்வி வளர்ச்சியைப் பாதித்துவிடும் என்ற தவறான கருத்து அடிபட்டுப் போய்விட்டதை இன்றைய தினம் தமிழகம் உணருகிறது. புகுமுக வகுப்பு கல்லூரியிலிருந்து நீக்கப்பட்டால் கல்லூரிக் கல்வியும், கல்லூரி ஆசிரியர்களின் பணியும் பாதிக்கப்படும் என்ற கூற்றும் தவறு, என்று நிரூபிக்கப்பட்டு விட்டது. ஏடுகளில், இன்றையதினம் செய்தித் தாள்களைப் பார்த்தால் கல்லூரிகளில் பட்டப் படிப்பு வகுப்புகளில் மாணவர்கள் பெருமளவில் விண்ணப்பித்துக் கொண்டிருப்பதாக செய்திகள் வருகின்றன. பள்ளிக் கல்வியிலும் கல்லூரிக் கல்வியிலும் இருந்த ஒரு தேக்க நிலை மாறி இந்நிறுவனங்களில் ஒரு சுறுசுறுப்பு ஏற்பட்டுள்ளதை இன்று காண்கிறோம்.

அடுத்து, 95,000 ஊராட்சி ஒன்றிய பள்ளி ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக்கும் திட்டம் பல்லாயிரக்கணக்கான ஆசிரியர்களின் வாழ்வில் மறுமலர்ச்சியினை ஏற்படுத்தும் என்ற வகையில் அதனையும் வரவேற்கிறேன்.

ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டை சிறந்த முறையில் நடத்துவதற்கு ஏற்கனவே இந்த அரசு செயல்படுத்தவிருந்த திட்டம், ஆளுநர் ஆட்சியில் நிறுத்தி வைக்கப்பட்டது. ஆனால், இப்பொழுது மீண்டும் அதை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆளுநர் ஆட்சியில் நிறுத்தி வைக்கப்பட்ட தந்தை பெரியாரின் ஒளி ஒலி காட்சி மீண்டும் துவக்கப்பட்டுள்ளது. வரவேற்புக்குரிய இத் திட்டங்களால் தமிழக மக்களின் உணர்வுகள் சிறந்த முறையில் வெளிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது. வரவேற்கத்தக்கது.

திருச்சியிலும் கோவையிலும் இரண்டு பல்கலைக் கழகங்கள் நிறுவப்பட உள்ள அறிவிப்பு மேற்படிப்பு வளர்ச்சியில் இவ்வரசுக்குள்ள அக்கறையை எடுத்துக் காட்டுவதாக அமைகிறது. அந்த பல்கலைக்கழகங்களுக்கு திருவள்ளுவர், தந்தை பெரியார் பெயர்களை வைக்கும்படி அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.





கல்லூரி ஆசிரியர் கல்லூரிக் கல்வியைப் பொறுத்த வரையில கல்லூரி ஆசிரியர் வகையில் பல களுக்கு இதுவரை எந்த அரசும் செய்யாத நன்மைகளை இவ்வரசு செய்துள்ளது. 1974 ஆம் ஆண்டிலி ருந்தே யு.ஜி.சி. ( யூனிவர்சிடி கிராண்ட் கமிஷன்) சம்பள விகிதம் கொடுக்கப்பட்டுள்ளது. மூன்று ஆண்டுகள் பதவி வகிக்கும் பயிற்றுனர், விளக்குனர்கள் (டியூட்டர், டெமான் ஸ்ட்ரேட்டர்ஸ்) துணைப் பேராசிரியர்களாக பதவி உயர்வு பெறுகின்றனர். 10 ஆண்டுகள் பணியாற்றும் துணைப் பேராசிரியர்கள், பேராசிரியர்களாக பதவி உயர்வு பெறுகின் றனர்.

[முற்பகல் 10-50]

தற்காலிகமாக பணியாற்றும் ஆசிரியர்கள் இன்றைக்கு நிரந்தரமாக்கப்படுகின்றனர். இவற்றிற்கெல்லாம் மேலாக தனியார் கல்லூரிகளிலே பணியாற்றுகின்ற கல்லூரி ஆசிரியர் களுக்கு நேரடி சம்பளம் வழங்கப்படுகிறது. கல்லூரி ஆசிரியர்களுடைய குறைகள் இதுவரையில் களையப்படாமல் இருந்த நிலைமை போய் இப்போது புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியிலே அவர்களுடைய குறைகள் மிகவும் விரைவிலே போக்கப்படுகின்றன. அதைப்போலவே . இன்னும் விட்டுப்போன சில இன்னல்களையும் தீர்த்துவைக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

தற்காலிகமாகப் பணியாற்றும் ஆசிரியர்களை நிரந்தர மாக்கவேண்டும் என்று சொல்லப்படுகிறபோது, அவர்கள் தற் காலிகமாகப் பணியாற்றிய பணிக்காலத்தையும் சேர்த்து வரன்முறைப்படுத்த வேண்டுமென்று நியாயமான கோரிக் கையை அவர்கள் வைத்திருக்கிறார்கள். அதையும் நிறை வேற்றித் தரவேண்டுமென்று நம்முடைய அரசை நான் கேட்டுக் கொள்கிறேன். ஏனெனில் இதுபோன்ற தற்காலப் பணியையும் வரன்முறைப்படுத்தும் முறை அரசின் பல துறை களிலும் குறிப்பாக பொதுப் பணித் துறையிலே இருந்து வருகிறது.

பத்து ஆண்டுகளில் பேராசிரியர் பதவி உயர்வு என்று இருப்பதை 8 ஆண்டுகள் என்று குறைக்கும் அவர்களது கோரிக்கையையும் அரசு பணிவோடு கவனிக்கும் என்று கருது கிறேன். அரசு ஆசிரியர்களை அவர்கள் விரும்பும் இடத்தில் குறைந்தது 10 ஆண்டுகளாவது பணியாற்ற அனுமதிப்பது நல்லது. அடிக்கடி இடமாற்றம் செய்வது அவர் களின் குடும்பத்திற்கு பல இன்னல்களை ஏற்படுத்துகிறது. இப்பிரச்சினையில் அரசு போதிய கவனம் செலுத்தக் கேட்டுக் கொள்கிறேன். ஆசிரியர்களுக்குத் தனியாக குடியிருப்பு வசதிகளை கல்வி நிறுவனங்களுக்கு அருகிலேயே ஏற்படுத்தித் தருவது நலம்.

எனது முசிறித் தொகுதியை பொறுத்தவரையில் புதியதாக தொடங்கப்பட்டுள்ள சிறுகாம்பூர் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு விரைவில் அறிவியல் ஆய்வுக் கூடத்திற்கான கருவிகள் வழங்கும்படியும் நூலக வசதியும் ஏற்படுத்தித் தரும்படி கேட்டுக் கொள்கிறேன். முசிறியில் இருக்கும் அறிஞர் அண்ணா அரசுக் கல்லூரியில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படாமல் இருந்து வருகிறது. 4 பட்டப்படிப்புடன் ஆரம்பிக்கப்பட்ட இக்கல்லூரியில் 10 ஆண்டுகள் கழித்து இப்போதுதான் மேலும் இரண்டு பட்ட வகுப்புகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன. ஆனால் போதிய இடவசதி இல்லாமல், மேற்கொண்டு கல்வி வளர்ச்சி ஏற்படாமல் இருக்கிறது. ஆகவே அக்கல்லூரிக்கு மேலும் கட்டட வசதியை ஏற்படுத்தித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன். கல்லூரிக்குப் போதிய குடி தண்ணீர் வசதியில்லாமல் பல நாட்கள் கல்லூரி நடத்தமுடியாத சூழ்நிலை இருக்கிறது. எனவே கல்லூரி குடி தண்ணீர் கிணற்றில் 10 எச்.பி. மோட்டார் ஒன்றும் டீசல் எஞ்சின் ஒன்றும் நிரந்தரமாக அமைக்கப்படவேண்டும். கல்லூரியின் வசதிகளைப் பராமரித்து வரும் பொதுப்பணித் துறை இப் பிரச்சினைகளில் காலதாமதம் செய்யாமல் உடனுக்குடன் கவனிக் கும்படி கேட்டுக்கொள்கிறேன். மேலும் இக்கல்லூரி ஊரிலி ருந்து 3½ கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. ஆனால் போதிய பேருந்து வசதியில்லாமல் நூற்றுக் கணக்கான மாணவ மாணவியர்களும் ஆசிரியர்களும் தினமும் இன்னலுறுகின்றனர். இப்பிரச்சினைகள் கடந்த 10 ஆண்டுகளாக தீர்க்கப்படாமல் இருக்கின்றன. கல்லூரி அலுவலகத்தில் பெரியார், பேரறிஞர் அண்ணா, காந்தி போன்ற தலைவர்களின் படங்கள் அல்லாமல் வேறு சில அரசியல் தலைவர்களின் படங்களும் பெரிய அளவில் அமைக்கப்பட்டுள்ளன. அப்படங்களை அகற்றும்படி அரசு ஆணை பிறப்பித்தும் அவைகள் இன்றுவரை அகற்றப் படவில்லை. திருச்சியில் புதிய பல்கலைக்கழகம் அமைக்கப் படும்பொழுது' முசிறி கல்லூரியில் புதிய பட்ட மேற்படிப்புகள் ஏற்படுத்தித் தரும்படி அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

எனது முசிறித் தொகுதியில் டி. புதுப்பட்டி பஞ்சாயத்தைச் சார்ந்த வெங்கிடாச்சலப்புரத்தில் போதிய தொடக்கப்பள்ளி கட்டட வசதி இல்லாத காரணத்தால் கிராம மக்களே முன் வந்து கட்டடம் எழுப்பினர். இதுபோன்ற பல்வேறு கிராமங்களில் பஞ்சாயத்து ஒன்றிய அதிகாரிகள் அசட்டையான போக்குக் காரணமாக கட்டட வசதி ஏற்படுத்திக் கொடுக்காமல் கிராம மக்கள் இன்னலுக்குள்ளாகின்றனர். இது போன்றே மேலச் சந்தப்பாணயம் கிராமத்தில் பள்ளிக்கு கட்டடத்தைக் கிராம மக்களே கட்டித் தந்தும் பஞ்சாயத்து அதிகாரிகள் பள்ளி தொடங்குவதற்கு தயக்கம் காட்டுவது ஏனோ என்று புரிய வில்லை.





மதிய உணவுத் திட்டத்தின் கீழ் பள்ளிச் சிறுவர் சிறுமி ளுக்கு அளிக்கும் உணவுப் பொருட்களை தவறான வழிகளில் யன்படுத்துவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கக் கட்டுக்கொள்கிறேன். மேலும் பள்ளிச் சிறுவர் சிறுமிகள் ருடை அணிவது ஏழை பணக்காரக் குழந்தைகள் வேறுபாடு ாட்டாத முறைக்காகத்தான். எனவே, சீருடை அணிவது ட்டாயப்படுத்தப்படவேண்டும். ஏழைக் குழந்தைகளுக்கு அரசே சீருடை வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தனியார் கல்வி நிறுவனங்களில் பல லாப நோக்குடனே செயல்படுவதால் அந்நிறுவனங்களை அரசே ஏற்று நடத்தவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

மொத்தத்தில் தமிழகக் கல்வி வளர்ச்சியில் ஒரு சிறந்த திருப்பத்தை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ள கல்வி மானியக் கோரிக்கையைப் பாராட்டி, வரவேற்று, சட்ட மன்றத்தில் பேசுவதற்கு வாய்ப்பு அளித்த எனது முசிறி தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், எங்களது அன்பிற்கும் பாசத் திற்கும் உரிய மாண்புமிகு முதல்வர் அண்ணன் புரட்சித் தலைவர் அவர்களுக்கும் எனது மனப்பூர்வமான நன்றியினையும் வாழ்த்துக்களையும் கூறி அமைகிறேன், வணக்கம்.

* திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவரவர்களே, கல்வி மானியக் கோரிக்கையின் மீது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துக்களை' கூற நான் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய மானியக் கோரிக்கையில் தமிழ்நாட்டில் மூன்றில் ஒரு பங்கு கல்விக்காகச் செலவழிக்கி றோம். இப்படிச் செய்கின்ற செலவுகளனைத்தும், எந்த அளவிற்கு இந்த நாட்டிற்கும், இந்தச் சமுதாயத்திற்கும் பயன் படுகிறது என்பதை நாம் ஆழமாகப் பார்க்க வேண்டும். ஏன் என்றால், இந்த மானியங்கள் அத்தனையும் வருங்காலத்தில் தமிழ் நாட்டையும், இந்தியாவையும் நிர்மாணிக்கக்கூடிய நவயுக வல்லுநர்களை உருவாக்கக் கூடிய பெரிய துறைக்காக இதைச் செலவழிக்கிறோம். ஆனால் இந்தப் பணம் அனைத்தும், நாம் எத்தனை முயற்சிகள் எடுத்தாலும், கடலில் கரைத்த பெருங் காயத்தைப் போன்று, இன்றைக்கு இந்தக் கல்வித் துறையில் மிகப் பெரிய அளவிற்குத் தனியார் பள்ளிகள் இருப்பதால், நாம் எத்தனைதான் முயற்சிகள் எடுத்தாலும் அவைகள் வீண் ஆகின்றன.

ஆரம்பப் பள்ளிகளை எடுத்துக் கொண்டால் இன்றைக்குக் கிராமங்களைப் பொறுத்த வரையிலே பெரும்பாலும் மதத்தின் பெயராலும், ஜாதியின் பெயராலும் இந்த அமைப்புகளெல்லாம் இருக்கின்றன. ஆதலால், அங்கே வேலை பார்க்கும் ஆசிரியர் கள்—என்னைப் பொறுத்த வரையில் எனக்குக் கடவுள்

விஷயத்தில் நம்பிக்கை கிடையாது—ஆனால் சொல்லிக்கொடுத்து இருக்கிறார்கள், ''எழுத்தறிவித்தவன் இறைவன் ஆகும்'' என்று—அந்த முறையில் எழுத்தைச் சொல்லிக் கொடுக்கும் அந்த ஆசிரியர்கள், அந்தத் தெய்வங்கள் எப்படிப்பட்ட கேவல மான முறையிலே நடத்தப்படுகின்றார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். கடந்த ஆண்டில் தஞ்சை மாவட்டத்தில், ஒரு ஆரம்பப் பள்ளி ஆசிரியர், அந்தப் பள்ளியினுடைய நிர்வாகியால் செருப்பால் அடிக்கப்பட்டிருக்கிறார். இப்படிபட்ட கொடுமை கள் இந்த நாட்டில் நடந்து கொண்டிருக்கின்றன.

ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் இந்த நாட்டிலே ஊற்றுக் கண்களாக இருந்து ஆரம்பத்திலே சொல்லிக் கொடுக்கிறாாகள. அவர்கள் படுகின்ற துயரங்கள் மாற்றப்படவில்லை. குறிப்பாக, இன்றைக்குக் கிராமப் புறங்களில் இருக்கின்ற ஆசிரியர்கள் ஐந்து மைல், பத்து மைல் தூரம் நடந்து சென்று படிபபு சொல்லிக் கொடுக்கின்ற அவல நிலைமை இருக்கிறது. அது மட்டுமல்ல, நம்முடைய அரசுத் துறையில் இருக்கும் பள்ளிகளில் மாணவர்கள் விகிதம் குறைந்திருந்தாலும், தனியார் நடத்தும பள்ளிகளில் 50, 60 மாணவர்கள் என்று வைத்துச் சொல்லிக் கொடுக்கின்ற அவல நிலை தொடர்ந்து இருக்கிறது. இதைப் போக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதைப் போல, இன்றைக்கும் ஆரம்பப் பள்ளிகள் இருக்கும் கட்டிடங்கள் கட்டிடங்கள் இல்லாமல், அந்தக் காலத்தில் இருப்பதைப் போன்று, தெருத் திண்ணைகளிலே இருக்கின்ற அவல நிலை இருக்கிறது. இடைநிலைப் பள்ளிகளில் இன்றைக்குப் போதுமான ஆசிரியர்கள் நியமிக்கப்படாமல் இருப்பதை நான் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மதிய உணவைப் பொறுத்தவரையில், இன்றைக்குச் சொல்லி இருக்கிறார்கள், பத்து காசு அரசாங்கமும், ஐந்து காசு யூனியனும் கொடுக்கிறது என்று. இன்றைக்கு ஏறியிருக்கும் விலைவாசியில், இந்த பதினைந்து காசுகளைக் கொண்டும், ஊர் மக்கள் கொடுக் கின்ற நன்கொடைகளைக் கொண்டும் மதிய உணவு வழங்குவது என்பது ஏமாற்றமாகத் தான் இருக்கும். குறிப்பாக, மதிய உணவு பற்றித் தலைமையாசிரியர்கள் கவனிக்க வேண்டியிருக் கிறது. பல கிராமங்களில் இந்தத் தலைமையாசிரியர்களே அந்த உணவை சமைக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. இதை மற்ற ஆசிரியர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

உயர்நிலைப் பள்ளிகளில் இன்றைக்குத் தமிழகத்தில் பிளஸ் 2 என்று சொல்லி ஹையர் செகண்டரி என்பது அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது. இதை நாங்கள் வரவேற்கிறோம்





ஆனால், இப்படிக் கல்வித் திட்டத்தில் மாற்றம் வந்தாலும், அதற்குத் தகுந்த ஆய்வுக் கூடங்கள் இல்லை. அது மட்டு மல்லாமல், அதற்குத் தகுதியான ஆசிரியர்களும் நியமிக்கப்பட வில்லை.

இந்த மானியக் கோரிக்கையின் மீது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளையாட்டுத் துறைக்கு அதிகப் பணத்தை ஒதுக்கி இருக்கிறார்கள் என்பதைக் காணுகின்ற பொழுது பெருமைப் படுகிறேன். ஆனால் அப்படிப் பணத்தை அதிகமாக ஒதுக்கி னால் மட்டும் போதாது. இந்தத் துறைக்கு 400 பி. டி. உடற் பயிற்சி ஆசிரியர்களைச் சேர்ப்பது என்று சென்ற ஆண்டில் சொல்லி இருக்கிறார்கள். ஆனால் இது வரையில் அவர்கள் போடப்படவில்லை என்ற தகவல் எனக்கு வந்திருக்கிறது.

[முற்பகல் 11-00]

அதே போன்று, இந்த ஆண்டும் 200 ஆசிரியர்களைப் போடுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதை உடனடியாக அமுல் படுத்த வேண்டுமென்று நான் சுட்டிக்காட்ட கடமைப் பட்டிருக்கிறேன்.

அதே போன்று இன்றைக்கு தனியார்—அரசுப் பள்ளிகளிடையே மிகப் பெரிய வித்தியாசம் இருக்கிறது. அரசுத் தேர்வுகளில், தனியார் பள்ளிகளிலே படிக்கக் கூடிய மாணவர்கள் தான் அதிகமாகத் தேறுகிறார்கள் என்பதை நாம் பார்க்கிறோம். அதற்கு, அரசுப் பள்ளிகளில் உள்ள ஆசிரியர்களை நான் குறை சொல்ல மாட்டேன். அங்கே உள்ள சில நிர்வாகச் சீர் கேடுகளைச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே போன்று, இன்றைக்கு அரசுப் பள்ளிகளில் மிகவும் மோசமான சூழ்நிலை இருக்கிறது. குடி தண்ணீர், போதிய சோதனைக் கூடங்கள் போன்றவற்றை உடனடியாக அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தனியார் பள்ளிகளைப் பொறுத்த வரை இன்றைக்கு மிகவும் கொடுமையான முறையில் நன்கொடை வசூல் செய்கிறார்கள். இன்றைய தினம், காலையிலே கூட என்னுடைய நெல்லை மாவட்டத்திலிருந்து எனக்குச் செய்தி வந்திருக்கிறது. சாதாரண உயர்நிலைப் பள்ளியிலே கூட, ஆரம்பப் பள்ளி மாணவர்களிடமும் கூட, ஓல்ட் ஏஜ்-வயதானவர்களுக்கு உதவி செய்வதற்கான நிதி என்ற பெயரில், ஒவ்வொருவரிடமிருந்தும், ரூ. 30 வசூல் செய்ய வேண்டுமென்று வற்புறுத்துகிறார்கள். இதில் சம்பந்தப் பட்டவர்கள் மேல், மாண்புமிகு அமைச்சரவர்கள் தக்க நட வடிக்கை எடுக்க வேண்டுமென்று சுட்டிக்காட்ட கடமைப் பட்டிருக்கிறேன்.

தனியார் பள்ளிகளுக்கும் அரசுப் பள்ளிகளுக்கும் மிகப் பெரிய வித்தியாசம் எங்கே இருக்கிறது என்று சொன்னால், தனியார் பள்ளிகளிலே மிகவும் கொடுமையான முறையில் பணம் வசூல் செய்கிறார்கள். அந்த வசூலைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று சுட்டிக்காட்ட கடமைப் பட்டிருக்கிறேன்.

அதேப்போன்று பாடப் புத்தகம். நாம் பாடத் திட்டங் களை மாற்றி விடுகிறோம். ஆனால், பாடப் புத்தகம் வரு வதற்க்கே 6 மாதம் ஆகிறது. 10 மாத காலத்தில், 6 மாதம் கழித்துப பாடப் புத்தகங்கள் வருமானால், 4 மாதங்களில் அந்த ஆசிரியர்கள் எப்படிச் சொல்லிக் கொடுப்பார்கள்—குறிப்பிட்ட காலத்தில் என்பதைப் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இதை விட வேடிக்கையான விஷயம் என்னவென்று சொன் னால் பரீட்சைக்கு வினாத் தாள்களைத் தயாரிக்கின்ற பொழுது, அந்த சப்ஜக்டுக்கு அப்பாற்பட்ட கேள்விகளைத் தயாரிக்கின்றார் கள்' குறிப்பாக இந்த ஆண்டும் அப்படி நடந்திருக்கிறது. அந்த நேரத்தில் சம்மந்தப்பட்ட மாணவன் நம்பர் போட்டு திருந்தாலும் கூட முழு மதிப்பெண்கள் கொடுக்கப்படுமென்ற இருத்தமும் கூடத் தந்திருக்கிறார்கள். அப்படிப்பட்டச் சம்பவம் தொடரக் கூடாது என்று இந்த அவையிலே சுட்டிக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏறக்குறைய ரூ. 200 கோடி செலவழிக்கின்றோம் ; கல்விக் கென பல்வேறு திட்டங்களைப் போட்டிருக்கிறோம். அந்தத் திட்டங்களைப் எல்லாம் பார்க்கும்போது, இன்றைக்கு 1-வது வகுப்பிலிருந்து 5-வது வகுப்பு வரை படிக்கின்ற மாணவர் களுடைய எண்ணிக்கை 67 இலட்சம். அதே மாணவர்களுடைய விகிதம் 6 ஆவதிலிருந்து 10 வது வகுப்புக்குச் செல்லும் போது, 38 இலட்சமாகக் குறைந்து விடுகிறது. அதே போன்று, ஹையர் செகண்டரி —உயர்நிலைப்பள்ளி முடிக்கின்ற காலத் தில் அது 16 இலட்சமாகக் குறைந்து விடுகிறது. அங்கிருந்து கல்லூரிக்குப் பிள்ளைகளை எடுக்கின்ற காலத்தில் அது 7 இலட்ச மாகக் குறைந்து விடுகிறது. இறுதியில், பட்டப் படிப்பை முடித்து வெளியேறுகின்ற மாணவர்களின் எண்ணிக்கை 3½ இலட்சமாகக் குறைந்து விடுகிறது. இவ்வளவு பெரிய வித்தி யாசம் ஆரம்பப் பள்ளியிலே சேர்ந்து, கல்லூரியிலே படித்து முடித்து வெளியேறுகின்ற பொழுது ஏற்படுகிறது.

அதனை ஈடேற்றத்தான் முதியோர் கல்வித் திட்டம் என்று சொல்கிறோம். நான் இருக்கிற மாண்புமிகு அமைச்சர் களைக் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன் ; இந்த அமைச்சர்களை மட்டுமல்ல, இந்த ஆண்டு சுதந்திரம் அடைந்து 32, 33 ஆண்டுகள் ஆன பின்னாலும் கூட, ஏறத்தாழ 40 சதவீதம் எழுதப் படிக்கத் தெரியாத மக்கள் இந்த நாட்டில்





இருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அப்படி எழுதப் படிக்கத் தெரியாதவர்கள் முதியவர்களாக இருந்தால் கவலைப்பட வேண்டாம். ஆனால், இன்றைக்கும் 18 வயதுக் குள்ளே உள்ளவர்கள், எழுதப் படிக்கத் தெரியாமல் இருக் கிறார்கள்.

நாம் முதியோர் கல்வி என்று வைத்திருக்கிறோம். அந்த முதியோர் கல்வி, எந்த அளவுக்கு நம் நாட்டில் செயல்படுத்தப் படுகிறது என்பதை ஆழமாகச் சிந்திக்க வேண்டும். கடந்த காலங்களில், முதியோர் கல்வி அரசியல் கட்சிகளின் ஆதாயங் களுக்குத்தான் பயன்பட்டது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்பு கிறேன். சாமானிய மக்களது, கிராமப்புற மக்களது வாக்கு களைப் பெற்று வந்துள்ள நாம், இந்தத் திட்டத்தை எந்த அளவுக்குத் தீவிரப்படுத்த வேண்டுமோ அந்த அளவு தீவிரப் படுத்த வேண்டும். கையெழுத்துக் கூட போடத் தெரியாத மக்கள்—எத்தனையோ சட்டங்களை இந்த மன்றத்திலே நாம் இயற்றினாலும், அந்தச் சட்டங்களை. அந்தச் சட்டங்களின் பலனை—அறிய வேண்டுமென்று சொன்னால், அவர்கள் மத்தியில் நிலவுகின்ற எழுத்தறியாமையைப் போக்க வேண்டுமென்ற வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, கல்லூரி. கல்லூரி என்று சொன்னாலே, அது மிகப் பெரிய வியாபார ஸ்தலமாக ஆகிவிட்டது. மாண்பு மிகு உறுப்பினர்கள் சுட்டிக் காட்டியதைப் போல், இன்றைக்குத் தனியார் கல்லூரிகள் மிகப் பெரிய வர்த்தக ஸ்தலங்களாக இருக்கின்றன. இன்றைக்குத் தமிழகத்திலே இருக்கக் கூடிய 3 பல்கலைக் கழகங்களிலும் கடந்த சில ஆண்டுகளாகப் பல் வேறு போராட்டங்களைச் சந்தித்துக் கொண்டிருக்கிறோம். அங்கே இருக்கக்கூடிய ஆசிரியர்கள்—பேராசிரியர்கள் சொல் கிறார்கள்.

அவர்கள் எல்லாம் தெய்வத்தின் தெய்வங்கள். ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் தான் தெய்வங்கள். அவர்களுக்கு கற்றுத்தருகின்ற இவர்கள் தெய்வத்தின் தெய்வங்கள். கடந்த சில நாட்களுக்கு முன்னாலே நான் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்குச் சென்றிருந்தேன். அப்போது அங்கே இருக்கக் கூடிய ஆசிரியர்கள் ஒரு கூட்டத்தைக் கூட்டி இருந்தார்கள். அந்தக் கூட்டத்தின் முடிவில் ஒரு பாட்டைப் பாடினார்கள். அதாவது இந்த நாட்டிற்குச் சுதந்திரம் வேண்டும் என்று கேட்டு பாரதி பாடிய பாட்டை அங்கே பாடினார்கள். என்று தணியும் இந்த அடிமையின் மோகம்' என்று பாடினார் கள். அங்கே இருக்கக்கூடிய 342 ஆசிரியர்களுக்குப் பணிப் பாதுகாப்பு கிடையாது. அங்கு மட்டுமல்ல. தமிழகத்திலே உள்ள 3 பல்கலைச் கழகங்களிலும் ஆசிரியர்களுக்குப் பணிப் பாதுகாப்பு கிடையாது. இது எனக்கு வேடிக்கையாக இருக்

கிறது. நாம் எல்லாம் கிராமப் புறத்திலே இருக்கிற மக்களுக்கு உழைக்கின்ற மக்களுச்கு முதலிலே பணிப்பாதுகாப்பு வேண்டும் என்று போராடுகிறோம். ஆனால் 2 பட்டங்கள். 3 பட்டங்கள் டாக்டரேட் என்று வாங்கி இருக்கக்கூடிய பேராசிரிய பெருமக்களும் எங்களுக்குப் பணி பாதுகாப்பு வேண்டும் என்று கேட்கிறார்கள்.

ஒன்றை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அண்ணா மலைப் பல்கலைக் கழகத்தில் இராமமூர்த்தி என்கிற பேராசிரியர் 22 ஆண்டு காலம் பணி செய்திருக்கிறார். ஆனால் அவர் பணி இன்னும் நிரந்தரம் செய்யப்படவில்லை. இன்னும் 2 மாதங்களில் அவர் ஓய்வு பெறப் போகிறார். அப்படி அவர் ஓய்வு பெறும்போது, அவருக்குப் பென்ஷன் கிடைக்குமா, பிராவிடன்ட் பண்டு பணம் கிடைக்குமா, ஓய்வூதியம் கிடைக்குமா என்றால் எதுவுமே கிடைக்காது.

இன்றைக்கு கல்விச்சாலைகளில் மிகப் பெரிய மோசடி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அனைத்துக் கல்லூரிகளும், தனியார் கல்லூரிகளும், தனியார் பள்ளிகளும் அரசு மானியங் களைப் பெறுகின்றன. அவர்கள் அந்த மானியத்தை வைத்து கொண்டு வியாபாரம் செய்கின்றார்களே தவிர, இந்த நாட்டுக்கும், தேசத்திற்கும் வருங்கால சந்ததியினர்க் கும் பாடுபட வில்லை.

குறிப்பாக கல்லூரியில் ஆடிட் கமிஷன் என்று ஒன்று இருக்கிறது. அரசு கொடுக்கின்ற பணம் சரியான முறையில் செலவிடப்படுகிறதா என்று பார்ப்பதற்காகத்தான் அது இருக்கிறது. அது, பல்வேறு கல்லூரிகளில் அரசு கொடுக்கின்ற பணம் சரியாக செலவழிக்கப்படவில்லை என்று பரிந்துரை செய்து, அந்தப் பணம் ரெக்கவர் செய்யப்படவேண்டும் என்றும் சொல்லியுள்ளது. ஆனால் இதுவரையில் எந்தச் கல்லூரியில் இருந்தும் ரெக்கவர் செய்யப்படவில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, அட்மிஷனுக்கு போகும்போது, குறிப்பாக அண்ணா மலைப் பல்கலைக் கழகத்தில் இன்றைக்கு ஒப்பனாக விண்ணப் பத்திலே 200 ரூபாய்கள் நன்கொடை கொடுங்கள் என்று சொல்லி இருக்கிறார்கள். இதே போன்று சென்ற ஆண்டு மணிவிழா கொண்டாடவேண்டும் என்று 200 ரூபாய் வசூல் செய்திருக்கிறார்கள். நான் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தை மட்டும் குறிப்பாகச் சொல்லவில்லை. தமிழகத் திலே உள்ள சிறுபான்மையினர் மதம், ஜாதி என்ற போர்வையில் புகுந்து கொண்டு இந்தக் கொள்ளையை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இப்படி மிகப்பெரிய தொகையை வருங்கால நாட்டிற்கு செலவழிக்கின்ற நாம், அந்தப் பணம் நல்ல





முறையில் செலவழிக்கப்படுகிறதா என்பதைப் பார்க்கிற போது நிச்சயமாக இல்லை. இத்தனைக்கும் அவர்கள் எழுது கின்ற எழுதுகோலில் இருந்து, அவர்கள் கட்டியுள்ள கட்டடங் களுக்கு வெள்ளை அடிக்கிற வரையிலேயும், ஆசிரியர்கள் சம்பளம் கொடுக்கின்ற அதற்கும், அரசு மானியத்திலேதான் நடக்கிறது. அப்படி இருக்கும்போது அரசு அதை ஏன் அனுமதிக்க வேண்டும்?

அதேபோன்று இன்றைக்கு நம்முடைய நாட்டில் உள்ள மிகப் பெரிய பிரச்சினை வேலையில்லாத் திண்டாட்டமாகும். படித்துப் பட்டம் பெற்ற பட்டாதாரி ஆசிரியர்களுக்கு வேலை இல்லை. ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கும் வேலை இல்லை. ஆகவேதான் இந்த ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளை நாம் மூடி இருக்கிறோம். ஷிப்டு சிஸ்டத்தில் திறக்கிறோம். 2 ஆண்டுக்கு ஒரு முறைதான் திறக்கிறோம். இன்றைக்கு நாடு பூராவும் நர்சரிப் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. அதற்கு ஆசிரியர் பயிற்சி தேவையில்லை. எஸ். எஸ். எல். சி-ல் இருந்து எம். ஏ. வரை படித்தவர்கள் சொல்லித் தருகிறார்கள். அவர்களுக்கும் பணி பாதுகாப்பு இல்லை. சட்டதிட்டங்கள் இல்லை. அவர்களுக்கு எந்த ஊதியமும் கிடையாது என்ற அவல நிலை இருக்கின்றது. இந்த அரசை நான் கேட்பது எல்லாம் நாம் பயிற்சி கொடுத்து, அசிரியர் பயிற்சிக்குத் தகுதி பெற்றவராக செல்கிற காலத்திலே இப்படிப்பட்ட தனியார்கள் கல்வியின் பெயராலே, அடிமை மோகத்தின் பேராலே நர்சரிப் பள்ளிகள் அடிக்கின்ற கொள்ளைகளைத் தடுத்து நிறுத்தி ஆகவேண்டும்.

இன்றைக்கு நம்முடைய தமிழகத்திலே ஆர்பனேஜ்கள் அனாதை விடுதிகள் இருக்கின்றன. 300 ரூபாய் வருமானம் இருந்தால் தான் அதிலே சேர்த்துக் கொள்வோம் என்று சொல்லுகிறார்கள். ஆனால் எந்த நாசில்தார் 300 ரூபாய் வருமானம்தான் என்று சர்டிபிகேட் கொடுக்கத் தயாராக இருக்கிறார் என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

[முற்பகல் 11-10]

குறிப்பாக, இன்றைக்கு மாறி வரும் சூழ்நிலைக்கு ஏற்ப நம்முடைய கல்வி முறையும் மாறவேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன். இந்தக் கல்வித் திட்டம், 'மெக்காலே' அவர் களால் கொண்டு வரப்பட்ட திட்டம். அடிமையாக நாடு இருந்த காலத்தில் கொண்டு வரப்பட்ட திட்டம். நாடு சுதந்திரம் பெற்று, ஜன நாயக அடிப்படையில் நாம் ஆட்சி நடத்தி வருகிறோம். ஆகவே, நம்முடைய கல்வித் திட்டத்தையும் ஜனநாயக பூர்வமான கல்வித் திட்டமாக மாற்றவேண்டும்.

ஆரம்பப் பள்ளிகளில் இல்லாவிட்டால் உயர்நிலைப் பள்ளிக் கல்வியை தொழில் கல்வியாக மாற்றவேண்டும், என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறி, பேச சந்தர்ப்பம் அளித்ததற்கு தலைவருக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

திரு. சா. கிருட்டிணமூர்த்தி : தலைவர் அவர்களே, தமிழகத்தின் நூற்றுக்கலத்து முத்தில் தூற்றி எடுத்த என் நன்முத்தாகிய புரட்சித் தலைவருக்கு என் வணக்கத்தைத் தெரிவித்து இந்த அவைமுன் வைக்கப்பட்டுள்ள கல்வி மானியத்தின் மீது என் கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

குறிப்பாக நான் சார்ந்து இருக்கின்ற பகுதியில் உள்ள பல்கலைக் கழகத்தின் நிர்வாகத்தைப் பற்றி இங்கே எடுத்து இயம்ப விரும்புகிறேன். சிதம்பரத்திலுள்ள அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பலப்பல அடுக்கடுக்கான தவறுகள் நடந்து கொண்டு இருக்கின்றன என்பதை இந்தச் சபையில் தெரிவிக்க விரும்புகிறேன். குறிப்பாக தனியார் நிர்வாகத்தில் ஒருவர் நிரந்தரப் பதவிக்கான இடத்தில் ஓராண்டு வேலை செய்தால், அவரை நிர்வாகம் நிரந்தரப்படுத்தவேண்டுமென்று அரசு ஆணை இருக்கிறபோது, அண்ணாமலைப் பல்கலைக் கழகம் மட்டும் இதில் கொத்தடிமை தன்மையைக் கடைபிடிக்கிறது.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தேர்வுக் குழுவால் (போர்ட் ஆப் செலக்ஷன்) நிரந்தரப் பதவிக்கான இடத்தில் ஒரு விரிவுரையாளர் தேர்ந்தெடுக்கப்பட்டு, குறைந்தது 5 ஆண்டுகள் ஆகியும், அவரை நிரந்தரம் செய்வதில்லை, வேண்டியவர்களை மட்டும் 2 ஆண்டில் நிரந்தரம் செய்து விட்டு மற்றவர்களைப் பத்தாண்டுகள் வரை நிரந்தரம் செய்யாமல் வைத்துள்ளார்கள். சில பேர் 5 ஆண்டுகள் வேலை செய்த பிறகும் வேலையில் இருந்து நீக்கப்பட்டு உள்ளார்கள்.

ஒவ்வொரு ஆண்டும் 31—5—1970, 31—5—1980 என்று ஓராண்டுக்கு ஆணை கொடுக்கப்படுகிறது. இந்த ஆண்டு 31—5—1980 தேதி முடிந்த பிறகு 30—6—1980 தேதி வரை என ஒரு மாதம் நீடித்துக் கொடுத்துள்ளார்கள். அந்தத் தேதி முடிந்த பிறகு அதே ஆணை 15 நாட்களுக்கு நீடிக்கப்பட்டு உள்ளது. இந்த 15 நாள் முடிந்த பிறகு தினமும் ஆணைப் பிறப்பிப்பார்கள் போல் உள்ளது. இந்த கொத்தடிமை முறையை ஒழித்து அரசு அப்பல்கலைகழகத்தை தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரவேண்டும்,





மேட்சிங் கிரான்ட் போடாமல் அரசு கொடுக்கின்ற பணத்லேயே லாபக் கணக்குப் பார்த்து விட்டு, ஒவ்வொரு ஆண்டும் ட்டக் கணக்கு காட்டுபவர்கள் அந்தப் பல்கலைக் கழகத்தை ரசிடம் ஒப்படைக்காமல் இருப்பதில் பல மர்மங்கள் இருக்ன்றன.

ஒவ்வொரு ஆண்டும் பி. இ., பி. எஸ்.ஸி. (அக்ரி) எம். பி. ஏ., போன்ற இடங்களையும் பேராசிரியார் துணைப் பேராசிரியர் போன்ற நியமனங்களையும் அரசியல் உயர் பதவிகள் வகிப்வர்களின் கண்சாடைக்குக் காணிக்கை ஆக்கி விட்டு அவர்களைக் கொண்டு தனது தொழிற் நிறுவனங்களின் வாணிபப் பெருக்கு போன்றவைகளுக்கு பல சலுகைகளை பெற்று ஊழலுக்கு மூல காரணமாக இப்பல்கலைக்கழகம் இருக்கிறது. ஊழலை ஒழிக்கும் வகையில் இவ்வரசு இப்பல்கலக்கழகத்தை தனது அதிகார வரம்பிற்குள் கொண்டு வரவேண்டும்.

அடுத்து ரிஜிஸ்டிரார் போன்ற முக்கிய பதவிகளை அங்கேயே பணி மூப்படைந்தவர்களுக்கு கொடுக்காமல், வெளியில் இருந்து பணி ஒய்வு அடைந்தவர்களை (ரிடையர்) நியமனம் செய்து அவர்களுக்கு பதவி ஆசை காட்டி, ஊழலைப் புரிகிறார்கள். மேலும் ஆசிரியர் அனுபவம் பெறாத ஆசிரியர் அல்லாத மற்ற பதவிகளை வகித்து பணி ஓய்வு பெற்றவர்களை விசிட்டிங் ப்ரொபசராக நியமித்துக்கொண்டு இருக்கிறார்கள். ரிட்டயர் ஆனவர்களை நியமிக்கும் முறையை ஒழித்து அங்கே இருக்கின்றவர்களை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது என்னுடைய வேண்டுகோள். சென்னை மதுரை பல்கலைக் கழகங்களைப் போன்று அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தையும் அரசு எடுத்து நடத்த வேண்டும். அதற்கு நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சவரவர்கள் இணைவேந்தராக வேண்டும். தேவையான ஏற்பாடுகளை அதற்கு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. நாம் பிற்பட்ட வகுப்பினருக்கு 50 விழுக்காடு இட ஒதுக்கீடு என்று நிர்ணயித்தும் அங்கே பிற்பட்டவர்களுக்கு அந்த 50 விழுக்காடு கொடுக்கப்பட்டிருக்கிறதா என்றால் நிச்சயமாக கொடுக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் இதை கூறுவதற்குக் காரணம் எங்களுடைய பகுதியில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் படிக்கின்ற மாணவர்கள் அதிகமாக இருக்கிறார்கள் ; பெரும்பாலானவர்களுக்கு அங்கே இடம் கிடைக்கவில்லை. அப்படியே கொடுப்பதாக இருந்தாலும் அதற்கு ஒரு " ரேட் " வைத்து வசூலித்துக்கொண்டுதான் கொடுக்கிறார்கள். அதனால் சாதாரண பொதுமக்கள் பெரிதும் பீதி அடைந்திருக்கிறார்கள் ; எந்த நேரத்திலும் அங்கே குழப்பங்கள் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. எனவே, அந்த பல்கலைக் கழகத்தை அரசே ஏற்று நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, எனது தொகுதி திருச்சி மாவட்டத்திலே மிகவும் பின்தங்கிய பகுதியாக இருக்கிறது. அங்கே படித்தவர்கள் எண்ணிக்கை அதிகமாக இருந்தாலும் பள்ளிகள் வளர்ச்சி, அதாவது பள்ளிக் கட்டிடங்கள் சரியாக இல்லாத காரணத்தால், கல்வித் துறை ஒரு குறிப்பிட்ட நிதி அதற்காக ஒதுக்கியிருந்தாலும் எனது தொகுதிக்கு ஒரு கணிசமான தொகையை ஒதுக்க வேண்டும். எங்கள் பகுதியில் குறிப்பாக, பெண்கள் சேர்ந்து படிக்கும் வசதி கல்லூரிகளில் இல்லை ; அவர்கள் வெளி இடங்களுக்குச் சென்று கல்வி பயில வேண்டிய அவசியத்தில் இருக்கிறார்கள். அதனால் எங்கள் பகுதியின் மையமாக இருக்கிற ஜெயங்கொண்டானில் ஒரு பெண்கள் கல்லூரி அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், எங்கள் பகுதியிலே தொழிற் பயிற்சிக் கல்லூரி இல்லாத காரணத்தால் ஆண்டிமடத்தில் ஒரு தொழில் பயிற்சிக் கல்லூரி அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, பல உயர்நிலைப்பள்ளிகளில் கட்டிட வசதி சரியாக இல்லை. அதனால், அப்படிப்பட்ட பள்ளிகளில் இன்றைக்கு கல்வி நல்ல முறையில் நடைபெறவில்லை. பள்ளிகள் நல்ல முறையில் நடைபெறாததற்கு மாணவர் விடுதி இல்லாததும் ஒரு குறையாக இருக்கிறது. ஆகவே, அங்கே நல்லமுறையில் பள்ளிக் கட்டிடங்களை அமைத்து, அந்தப் பள்ளிகளுக்கு பிற்பட்டோர் மாணவர்கள் விடுதியையும் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் இந்த பள்ளிக்கட்டிடங்களைப் பொறுத்தவரையில் மக்கள் மிகவும் கவலைப்படுகிறார்கள். அங்கே கல்வி நிலையங்களில் கட்டிடங்கள் மிகவும் அலங்கோலமாக காணப்படுகின்றன. ஆகவே, இந்த அரசு கணிசமான நிதி ஒதுக்கீடு செய்திருந்தாலும் என்னுடைய தொகுதியான ஆண்டிமடம் இருக்கிற பகுதிக்கு அதிக நிதி உதவி செய்ய வேண்டுமென்று கேட்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

<u>திரு. ஜி. மூர்த்தி:</u> மாண்புமிகு சட்டப்பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, கல்வித்துறை மானியக் கோரிக்கையின்மீது பேசுகின்ற நல் வாய்ப்பை ஏற்படுத்தித் தந்ததற்காக முதற்கண் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த பின்னால்தான் கல்வித் துறையிலே, குறிப்பாக கல்லூரிகளிலும் மருத்துவக்கல்லூரிகளிலும் அனுமதி வழங்கப்படுகிற விவகாரத்திலே ஊழல் இல்லாத ஒரு நிர்வாகத்தை மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் செய்துகாட்டியிருக்கிறார்கள் என்பதை எடுத்துக் காட்டி, இந்த அவை முன்னால் அவர்களைப் பாராட்டக்கடமைப் பட்டிருக்கிறேன்.





பள்ளிக்கூடங்களைப் பொறுத்த அளவில் பல மாவட்டங்களிலே உயர் தொடக்கப் பள்ளிகளும், எலிமென்டரி பள்ளிகளும் இன்னும் கூரை வேய்ந்த பள்ளிகளாகவே இருக்கின்றன. என்னுடைய மாவட்டத்திலே எடுத்துக் கொண்டாலும் பல பள்ளிக்கூடங்கள் இன்னும் கூரை வேய்ந்தவைகளாகவே இருக்கின்றன. அவைகளை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. முதியோர் கல்வியைக் கண்டிப்பாக விரிவுபடுத்த வேண்டுமென்று கனம் அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். தாழ்த்தப்பட்ட மக்கள் வாழக்கூடிய சேரிப் பகுதிகளில் அதிகமாக முதியோர்கள் இருந்தாலும் அவர்கள் கல்வி அறிவு இல்லாமல் இருக்கிறார்கள் ; இதைப்போன்றத் திட்டங்கள் அவர்களுக்குப் போய்ச் சேர வாய்ப்பு இல்லை. இந்த முதியோர் கல்வித் திட்டம் அந்த மக்களையும் எட்டும் வண்ணம் செய்ய வேண்டும் ; அவர்களுக்கு இதன் பலனை எடுத்துச்சொல்ல ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, என்னுடைய தொகுதியில் பேரணாம்பட்டு நகரில் ஒரு உயர்நிலைப்பள்ளி ஏற்படுத்த வேண்டும். கண்டிப்பாக அங்கே ஒரு மாணவர் விடுதியும் ஏற்படுத்தித்தர வேண்டும். இதுவரையில் அங்கே மாணவர் விடுதி இல்லாத குறை இருந்து வருகிறது. அந்தக் குறையைப் போக்க கண்டிப்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்து, மசிகம் என்ற ஊர் அங்கே இருக்கிறது. அங்கே ஒரு உயர் தொடக்கப் பள்ளியை ஆரம்பிக்க வேண்டும். பாலூரில் ஒரு பள்ளிக்கட்டிடம் கட்டப்பட்டது. வேலை ஆரம்பித்து 8 வருடங்கள் ஆகிவிட்டன ; இன்னும் முடியவில்லை ; சுவர் எழுப்பப்பட்டதோடு நிற்கிறது. அதையும் அரசு கவனத்திற்கொண்டு, விரைவிலே அந்தப் பணியை முடிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 11-20]

அடுத்து மாவட்டங்கள் முழுவதும் இருக்கின்ற நூலகங்களை இன்னும் சிறிய சிறிய கிராமங்களிலும் ஏற்படுத்துவதற்குரிய அளவிலே விரிவுபடுத்த வேண்டும். படித்து வேலையில்லாமல் இருக்கின்ற மாணவர்கள் தங்களுடைய பொழுதுபோக்குக்காகவும், அவர்களுடைய கவனம் வேறுபக்கம் செலுத்தப்படாமல் இருப்பதற்காகவும் நூலகங்களைப் பரவலாக ஏற்படுத்த வேண்டும். 5, 6 சிறிய கிராமங்களுக்குச் சேர்ந்தாவது ஒரு நூலகத்தை அமைக்க வேண்டும். மேலும், பல நூலகங்களுக்குச் சென்று நான் பார்த்திருக்கிறேன். அங்கு கம்யூனிஸ்ட் தத்துவப் புஸ்தகங்கள் இருக்கின்றன, மார்க்ஸிஸ்ட் தத்துவப் புத்தகங்கள் இருக்கின்றன, பேரறிஞர் அண்ணாவின் புத்தகங்கள் இருக்கின்றன.

ஆனால், அம்பேத்கார் பற்றிய புத்தகங்களே அங்கே கிடைப்ப
தில்லை. பல நூலகங்களுக்கு அவை இன்னும் போய்ச் சேராமல்
இருக்கின்றன. ஆகவே, அன்பு கூர்ந்து அம்பேத்கார் அவர்
களுடைய புத்தகங்களை அந்த நூலகங்களுக்குத் தரவேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கிராமப் புறங்களிலே இன்றைக்கு எல்லோருக்கும்
ஆங்கிலத்தின் மீது மோகம் வந்திருக்கின்றது. அதை நான் வர
வேற்றாலும் தாழ்த்தப்பட்ட மக்கள் கான்வென்ட்களிலே சேர்ந்து
படிக்க வசதி இல்லாமல் இருக்கிறார்கள். தனியார் கான்வென்ட்
களிலே அதிகமாக பணம் வாங்குகின்ற காரணத்தாலே அவர்கள்
போய் அங்கு சேர முடியாத நிலை இருக்கின்றது. ஆகவே, தாழ்த்
தப்பட்ட மக்களுக்கென்று அரசு தனியாக கான்வென்ட்டுகளை
ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் பணியாற்றுகின்ற
ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக மாற்றியதை நான் பெரிதும்
பாராட்டுகிறேன். ஆனால் அதேபோன்ற எய்டெட் ஸ்கூல்ஸ்
என்று இருக்கின்ற பள்ளிகளின் ஆசிரியர்களையும் அரசாங்க ஊழி
யர்களாக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மதிய உணவுத் திட்டத்தைக் கொஞ்சம் தரமாக
நடத்துவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். பல பள்ளிக்கூடங்
களில் உள்ள பிள்ளைகளுக்குக் கொடுக்கப்படுகின்ற அந்த உணவு
உண்ணக்கூடிய நிலைமையில் இல்லை. அந்த உணவு தரமாக
இல்லாததால் அவர்கள் சாப்பிடாமல் வந்துவிடக்கூடிய சூழ்நிலை
இருக்கின்றது. ஆகவே, அங்கே கொடுக்கப்படுகின்ற உணவினைக்
கொஞ்சம் தரமானதாகக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்
டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து எங்கள் பேரணாம்பட்டு தொகுதியிலே கண்டிப்பாக
ஒரு மாணவர் விடுதியை ஏற்படுத்தி, ஒரு உயர்நிலைப்பள்ளியையும்
கட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து எங்கள்
பகுதியிலே அரவட்டலா என்ற ஊர் இருக்கின்றது. எங்கள்
தொகுதியை மாண்புமிகு அமைச்சரவர்கள் சுற்றிப் பார்த்தால்
பல பெரிய இடங்கள் இருப்பது நன்கு தெரியும். அரவட்டலா
என்ற இடம் பேரணாம்பட்டு டவுனிலே இருந்து 10 மைலுக்கு
அப்பாலே இருக்கின்ற ஒரு மலை மீது இருக்கின்றது. அங்கே
ஒரு பள்ளிக்கூடம் இருக்கின்றது. அங்கு ஆசிரியர்கள் போய்
வேலை செய்ய முடியாத சூழ்நிலை இருக்கின்றது. அந்த மலை
மீது எந்தவிதமான வசதியும் கிடையாது. ஆகவே, அங்கே
கணவன் மனைவியாக இருக்கின்ற ஆசிரியர்களைப் போட வேண்
டும். மேலும், அங்கிருந்து வருவதற்கு பஸ் வசதி கிடையாதா
கையால் ஆசிரியர்களுக்கு அங்கே இல்லம் கட்டிக்கொடுக்க வேண்
டும். மேலும், ஆசிரியர்களை மாற்றம் செய்யாமல் வைத்திருந்
தால்தான் அங்கே பாடம் சொல்லிக்கொடுக்க முடியும் என்பதைத்
தெரிவித்துக்கொள்கிறேன்.





அடுத்து, ஜம்னாமுத்தூர் என்ற இடத்திலே உள்ள ஒரு பள்ளி
யிலே 7 மாத காலமாக சம்பளம் வழங்கப்படாத சூழ்நிலை
இருக்கின்றது. இது அரிசன நலத்துறை சம்பந்தப்பட்ட பள்ளிக்
கூடம் என்றாலும் கல்வித்துறை அமைச்சரவர்கள் கவனிக்க வேண்
டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, அவர்களுக்குச் சம்
பளம் கொடுக்க ஏற்பாடு செய்து அரவட்டலா பள்ளிக்கூடத்
திற்கும் ஆசிரியர்களை கணவன் மனைவியாகப்போட்டு மாற்றம்
செய்யாத நிலையை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்
கொண்டு என்னுடைய உரையை முடித்து கொள்கிறேன்.

*திரு. ஜி. கே. சுப்பிரமணியன்: மாண்புமிகு தலைவ
ரவர்களே, கல்வி மானியக் கோரிக்கையைப் பொறுத்த
மட்டில் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.
என்னுடைய பவானிசாகர் தொகுதி மலைப்பாங்கான பகுதி.
அது அணைக்கட்டை ஒட்டி இருக்கின்றது. அந்தத் தொகுதி
யிலே சுற்றி இருக்கின்ற சத்தியமங்கலம், நம்பியூர் போன்ற
இடங்களில் கிட்டத்தட்ட 42 பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன.
ஆகவே அங்கே உள்ளவர்கள் கல்லூரிப் படிப்பு படிக்க வேண்டும்
என்றால் கோவைக்கோ அல்லது ஈரோட்டுக்கோ வந்து அங்கே
யும் இடம் கிடைக்காத நிலையில் மிகவும் கஷ்டப்படுகிறார்கள்.
ஆகவே இயற்கைச் சூழ்நிலை மிகுந்திருக்கின்ற பவானிசாகர்
தொகுதியிலே ஒரு கல்லூரியை அமைக்க வேண்டும் என்றும்
அதற்குரிய ஆக்கபூர்வமான பணிகளை மேற் கொள்ள வேண்டும்
என்றும் கல்வி அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து கல்வி மானியத்தைப் பொறுத்தவரையில் நாடகப்
பள்ளிகள் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். பொதுவாக படித்து
நாம் புரிந்து கொள்வது ஓரளவுக்கு இருந்தாலும் அதைச் சிறப்
பான முறையிலே செயல் முறையிலே காட்டினால் மாணவர்
களின் மத்தியிலே அவை நன்றாகப் பதிவதற்கு ஏதுவாக இருக்
கின்றது.

அண்ணா அவர்கள்கூட, ஆயிரம் பாடங்கள் நடத்தி, ஆயிரம்
புத்தகங்களை வெளியிட்டு நாம் கருத்துக்களைச் சொல்வதைக்
காட்டிலும் ஒரு நாடகத்தை போடுவது மிகச் சிறப்பான நிலை
யில் மக்களுக்குப் புரிய வைக்கும் என்று குறிப்பிட்டுக் கூறியிருக்
கிறார்கள். அந்த வகையிலும் நாடகப் பள்ளியை கோவை
மாவட்டத்திலும் ஆங்காங்கு இருக்கிற பெரிய இடங்களிலும்
அமைத்து, நாடகக் கலையில் ஆர்வம் மிக்க, இசைக் கலையில்
ஆர்வமிக்க மாணவர்களுக்கு ஊக்கம் அளிக்க ஏற்பாடு செய்ய
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அத்தனை பள்ளிகளிலும் இன்றைக்கு மற்ற சப்ஜெக்டுகளைக்
காட்டிலும் ஓவியக் கலையைப் புறக்கணித்து முக்கியத்துவம்
கொடுக்கப் பெறாத நிலையை நாம் பார்க்கிறோம். நான் 8

ஆண்டுகாலமாக ஓவிய ஆசிரியனாக பணி புரிந்த அனுபவத்தில் சொல்கிறேன். ஓவியம் பயிற்றுவிக்கும் ஆசிரியரையும், இசைப் பயிற்றுவிக்கும் ஆசிரியரையும் அதிக முக்கியத்துவம் கொடுக்காமல் புறக்கணிக்கப்படுகிற ஒரு நிலை இருக்கிறது. ஏதாவது விழாக்கள் காலத்தில் கலர் காகிதங்களை வெட்டி ஒட்டவும், நிகழ்ச்சிகளை தயார் செய்யவும் மாத்திரமே அவர்கள் இருப்பது போல் நடத்தப்படுகின்றனர். இந்த நிலையைப் போக்கி இசை, ஓவியம் ஆகியவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வகுப்புகள் நடத்தப்பட வேண்டும் என்றும் அதற்கான வழி வகைகள் செய்யப்பட வேண்டும் என்றும் நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதே மாதிரி பள்ளிகளில் பணியாற்றுகிற ஆசிரியர்கள், அலுவல் நேரம் முடிந்த பிறகு டியூஷன் சொல்லிக் கொடுக்கக் கூடாது என்று இருந்தாலும் கூட, ஆசிரியர்கள் பள்ளி வேலை நேரங்களில் மாணவர்களுக்கு கல்வி போதிக்கும் வேலையில் அதிக கவனம் செலுத்தாமல் இருந்து வருவதைப் பார்க்கிற போது, இதற்கு முக்கியக் காரணம், டியூஷன் சொல்லிக் கொடுப்பதில் ஆசிரியர்கள் தங்கள் முழு கவனத்தையும் செலுத்திவிடுவதுதான் என்று சொல்வேன். சில பள்ளிகளில் தேர்வுகளில் தேர்வு பெறும் சதவிகிதம் குறைந்திருப்பதற்கும் இதுதான் முக்கிய காரணம் என்பதை நான் அனுபவத்தோடு சொல்கிறேன். ஆகையால் அப்படிப்பட்ட நிலைமைகளை தயவு செய்து மாற்றி அமைக்கும் வண்ணம் நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே மாதிரி 10, 15 வருடங்கள் ஆசிரியர்கள் ஒரே பள்ளியில் பணி செய்கிறார்கள். இப்படி பணி செய்யும் ஆசிரியர்கள் தாங்கள் கல்வி போதிக்கிற வேலையில் அதிக கவனத்தைச் செலுத்துவதைக் காட்டிலும், மற்ற சிறு தொழில்கள் ஏதாவது செய்வதில் அதிக கவனத்தை செலுத்துகிறார்கள். இது பிள்ளைகளின் கல்வியை மிகவும் பாதிக்கிறது. நான் அனுபவப்பட்டவன் என்ற முறையில் சொல்கிறேன். தொடர்ந்து 10, 15 ஆண்டுகள் ஆசிரியர்கள் ஒரே இடத்தில் வேலை செய்தால், அவர்களை நிச்சயமாக வேறு பணிகளில் ஈடுபடுவதை தவிர்க்கவே முடியாது. ஆகையினால் இதை மாற்றி, அவர்கள் கல்விப் பணியிலே அதிக கவனத்தைச் செலுத்தும் வகையில் நடவடிக்கை எடுக்க நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து பெற்றோர்—ஆசிரியர்கள் சங்கம் என்ற ஒரு அமைப்பு 10 ஆண்டுகளுக்கு மேலாக இருக்கிறது. ஆனால் எந்தவித முன்னேற்றமும் இல்லை. அந்தச் சங்கங்கள் சரியாக செயல் படாத நிலையில் இருக்கிறது. ஒவ்வொரு வருடமும் தேர்தல் நடத்தி அதன் தலைவர்களை மாற்றி அமைப்பதற்கான வழி வகை செய்ய வேண்டும். ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்கும்



இடையே ஒரு சுமுகமான உறவு நிலவ வேண்டும். அப்போதுதான் பெற்றோர்கள் ஆசிரியர்களுக்கு உதவியாய் இருப்பார்கள். அப்படிப்பட்ட நிலைமையில்தான் அந்தச் சங்கங்கள் முழுமையாகச் செயல்பட முடியும். அப்போதுதான் மாணவர்களின் படிப்பின் முன்னேற்றத்தைப் பற்றியோ, அல்லது அவர்கள் ஒழுக்கம் தவறினால் எடுத்துச் சொல்லி திருத்துவது பற்றியோ ஆசிரியர்களும் பெற்றோர்களும் ஒருவருக்கொருவர் எடுத்துச் சொல்லிக் கொண்டு, பிள்ளைகளை சீர்திருத்தும் வேலையில் அந்தப் பெற்றோர்—ஆசிரியர்கள் சங்கம் சரிவர இயங்க முடியும்.

அடுத்து மத்திய அரசிலே இன்றைக்கு 1-வது வகுப்பிலிருந்து 8-வது வகுப்பு வரை தேர்வு இல்லாமலே அடுத்த வகுப்புக்கு பாஸ் செய்ய வேண்டுமென்ற முறையை வைத்திருக்கிறார்கள். அந்த முறை மாநிலங்களிலே கொண்டு வரப்பட்டால் நிச்சயமாக அது கல்வித் தரத்தை உயர்த்தாது, சிறப்பாக இருக்காது என்று கூறி, இப்போது இருப்பது போலவே 1-லிருந்து 3 வரையிலான வகுப்புகளுக்கு இந்தச் சலுகை இருப்பதே நலம் என்று என் கருத்தைக் கூறிக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியான புளியம்பட்டியிலே இருக்கிற பள்ளியில் ஆண்கள், பெண்கள் இருபாலரும் படிக்கின்றனர். அங்கே பெண்கள் உயர்நிலைப் பள்ளி ஒன்று கட்டப்பட ஆவன செய்ய வேண்டுகிறேன். ஆண்கள் மேல் நிலைப் பள்ளிக்கு கே. வி. கே. என்று பெயர் மாற்றம் தேவைதான் என்று அங்கு வந்த அதிகாரிகளிடத்திலும் கூட சொல்லிப் பார்த்தோம்.

(முற்பகல் 11—30)

அவர்களும் அதை தீவிரமாகச் செயல்படுத்துவதாகக் கூறிச் சென்றார்கள். ஆகவே தயவு செய்து கே. வி. கே. பள்ளி பெயர் மாற்றத்திற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பெரியார் அவர்கள் எவ்வளவோ கொள்கைகளை எடுத்துச் சொன்னார்கள். அவற்றை அரசியல் வடிவமாக்கி சட்டபூர்வமாக நாட்டு மக்களுக்கு எடுத்துச் சொல்லக் கூடிய அளவில் அண்ணா அவர்கள்தான் அதை சட்ட வடிவமாக்கி நாட்டுக்குத் தந்திருக்கிறார்கள். அந்நிலை மேலும் வளர வேண்டுமென்றால் அண்ணாவின் மொழிக் கொள்கை, சட்டமன்றக் கொள்கை போன்றவற்றையெல்லாம் அரசு பதிப்புகளாக வெளியிட்டு எல்லா மக்களும் பயன் பெறத்தக்க அளவில் அப்புத்தகங்களை வெளியிட வேண்டும், அவற்றை எல்லா மக்களும் படிக்க வேண்டும் என்று வேண்டிக் கேட்டுக் கொண்டு விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

செல்லுகின்ற ஏற்பாட்டைச் செய்கின்றபோது, அது தொடர்புடையதான ஒன்றை நான் அரசினுடைய கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

சில பிரிவினரிடையே எடுத்துக்கொண்டால், சில தொழிலாளர்கள் ஒரு இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு இடம் பெயர்த்து போகின்ற நிலையிலே இருக்கிறார்கள். மைக்ரேஷன் பேர்ட்ஸ் எப்படி ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குச் செல்லுகின்றதோ, அப்படி இவர்களும் செல்வார்கள். குறிப்பாக, பனை ஏறும் தொழிலாளர்களை எடுத்துக்கொண்டால், ஒரு பகுதியிலே இருந்து இன்னொரு பகுதிக்குச் செல்வார்கள். அறுவடை செய்யும் தொழிலாளர்களும் இப்படி ஒரு பகுதியிலே இருந்து இன்னொரு பகுதிக்குச் செல்வார்கள். அதைப்போல் சாலைகள் போடுகின்றவர்கள், பெரிய பெரிய அணைக்கட்டுகளை கட்டுகின்ற தொழிலாளர்கள் ஒரு பகுதியிலே இருந்து இன்னொரு பகுதிக்குச்செல்லுவார்கள். அவர்கள் போகும்போது தங்களுடைய குழந்தைகளையும் அழைத்துக்கொண்டு போகின்றார்கள். அப்படி அவர்கள் தங்கள் குழந்தைகளை அழைத்துச் செல்கின்ற போது, அவர்களுடைய வருங்காலம் என்னவாகும்? அவர்கள் கல்வி என்னவாகும் ? என்பதை நாம் எண்ணிப்பார்த்தாக வேண்டும். எனவே, இந்த குழந்தைகள் காப்பகங்கள் ஆங்காங்கே இருக்குமானால், அவர்கள் இடம் விட்டு இடம் பெயர்ந்து போகின்ற இடத்திலும், இத்தகைய தொழிலாளர்கள் தங்கள் குழந்தைகளை அங்கே விட்டுச் செல்வதற்கு வசதியாக இருக்கும். எனவே, இத்தகைய ஏற்பாடுகளைச் செய்ய முடியுமா என்பதை கல்வி அமைச்சர் கவனத்தில் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏனென்றால், இப்படி ஒரு பகுதியிலே இருந்து இன்னொரு பகுதிக்கு தங்களுடைய குழந்தைகளை எடுத்துச் செல்லும்போது, அவர்களுடைய குழந்தைகளுக்கு கல்வி வசதி செய்துகொடுப்பதை வருங்காலத்திலே கவனிக்கின்ற முயற்சியினை நாம் மேற்கொள்வது நல்லது. ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குச் செல்லுகின்றவர்கள் என்று சொல்லும்போது, நரிக் குறவர்களையும் சொல்ல வேண்டும். இந்த நரிக் குறவர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் ஏறத்தாழ 50,000 பேர்கள் இருப்பதாகச் சொல்கிறார்கள். குடுகுடுப்பைக்காரன், பூம்பூம்காரன், லண்டன், மணியாட்டிக்காரன் என்று சொல்லப்படுபவர்கள் எல்லாம் இந்த நரிக் குறவர் இனத்தைச் சார்ந்தவர்கள் என்று சொல்லப்படுகிறது. இந்த நரிக் குறவர்களை மேம்பாடு அடையச் செய்ய வேண்டுமென்ற எண்ணம் நமக்கெல்லாம் இருந்தாலும் கூட, தமிழகத்திலே இரண்டே இரண்டு இடத்தில்தான் இவர்களுக்கு பள்ளிகள் இருக்கின்றன. ஒன்று திருச்சி மாவட்டத்திலே, தேவராயப்பட்டி என்ற இடத்திலே. மற்றொன்று, சென்னை நகரிலே, சைதாப்பேட்டையிலே இருந்து கொண்



டிருக்கின்றது. இந்த சைதாப்பேட்டையிலே இருப்பதை எடுத்
துக்கொண்டால், அவர்களுக்கு கொடுக்கவேண்டிய மானியம்
முழுவதும் கிடைக்க முடியாத ஒரு குறை இருந்து கொண்டிருக்
கிறது. ஒரு மாணவருக்கு ஆண்டுக்கு 33 ரூபாய் என்றும்,
துணி தைத்துக்கொள்ள 10 ரூபாய் என்றும், இன்னும் புத்தகம்
போன்ற செலவுக்கு 5 ரூபாய் என்றும், ஆக இதற்கு 15 ரூபாய்
கொடுக்கப்படுகின்றது என்று சொல்லப்படுகிறது. இது புத்தகம்
வாங்குவதற்கு ரூ. 10 என்றும், துணிக்கு ரூ. 5 என்றும் இருக்
கலாம். அதை நான் மாற்றிச் சொல்லியிருக்கக்கூடும். ஆக 33
பிளஸ் 10 பிளஸ் 5 என்று கொடுத்ததை, இப்போது 25-க்குள்
ளேயே குறைக்கப்பட்டிருக்கின்றது என்ற ஒரு தகவலைச் சொல்கி
றார்கள். இந்தத் தகவல் சரியானதா என்பதை அரசு கவனிக்க
வேண்டும். 33 பிளஸ் 10 பிளஸ் 5 என்றிருந்ததை, இன்று
25-க்குள்ளாக கொண்டுவர வேண்டுமா என்பதை கவனிக்க
வேண்டும். அதைப்போக்குகின்ற முயற்சியினை நாம் பார்த்தல்
வேண்டும்.

[முற்பகல் 11-40]

மத்திய அரசு செய்ய வேண்டிய பணி இதிலே அதிகமாக இருந்
தாலும் இதை ஒரு சிறப்பு வேலையாகக் கருதி அல்லது ஸ்பெஷல்
ஐடமாகக் கருதி மாநில அரசு செய்ய முடியும் என்ற காரணத்
தினால் அந்த ஏழைப்பட்டவர்களை நீங்கள் மேம்படுத்துவதற்
கான திட்டத்தினைச் சற்று ஊன்றிக் கவனிக்க வேண்டுமென்று
அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

கிராமப் புறங்களிலே இருக்கின்ற பள்ளிக்கூடங்களைப் பற்றி
வந்து கொண்டிருக்கும் தகவல்கள் மகிழ்ச்சிகரமாக இல்லை.
ஆசிரியப் பெருமக்கள் இறைவனுக்கு சமம் என்று சொல்லுவது
தமிழ் பழக்கம். மாதா, பிதா, குரு, தெய்வம் என்றெல்லாம்
நாம் சொல்லுகிறோம். ஆனால் அந்த தெய்வங்கள் சில பள்ளிக்
கூடங்களில் காட்சி அளிப்பதே இல்லையென்று சொல்லுகிறார்
கள். இந்த தெய்வங்கள் காட்சியளிப்பது எப்போதாவது ஒரு
தடவை தேர் திருவிழாவில் வெளியே எடுப்பது போல்தாம் இங்
கேயும் தெய்வங்கள் காட்சியளிக்கிறார்கள், என்று சொல்லு
கிறார்கள். இந்த தெய்வங்கள் நிச்சயமாகக் காட்சியளிப்பது
டி.இ.ஓ., சி.இ.ஓ. போகின்ற காலத்தில்தான், அந்த நேரத்தில்
மட்டும் எப்படி நிச்சயமாகக் காட்சியளிக்கிறார்கள்? அந்த
டி.இ.ஓ அவர்கள் இந்த நாளில் வருகிறேன் என்று பத்து நாட்
களுக்கு முன்னாலேயே தகவலைக் கொடுத்து விடுகிறார். சர்ப்
ரைஸ் விசிட் இருக்க வேண்டும்: 'நான் வருகிறேன்' என்று
சொன்னால் அவர்கள் உண்மையிலேயே சேர்த்து வைத்திருக்கும்
மாணவர்கள் அளவு எவ்வளவு, அன்று சேர்த்தது எவ்வளவு என்
பதை நாம் பார்க்க முடியாது. எனவே இப்படிப்பட்ட
சோதனைகளுக்குச் செல்லுகிறவர்கள் எல்லாம், தணிக்கையாளர்

கள் எல்லாம் முதலிலேயே அறிவிப்பைக் கொடுக்காமல் திடீரென்று போய் அவர்களைச் சோதிக்கவேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

சில குறிப்பிட்ட பகுதிகளில் நாங்கள் சென்றிருக்கும் போது எங்களுக்கு கொடுக்கப்பட்ட தகவல் இந்தப் பள்ளிக்கூடங்களில் பெண்களுக்குக் கழிவறைகள் கூட இல்லை : பெண்களுடைய பள்ளிக்கூடங்கள் மிக ஒதுக்குபுறமாக இடங்களில் இருக்கின்றன. திருவொற்றியூரில் எடுத்துக் கொண்டீர்கள் என்று சொன்னால் பெண்களுக்கு என்று இருக்கும் பள்ளிக்கூடம் மிக ஒதுக்குபுறமாக இடத்தில் இருக்கும் காரணத்தால் என்றாவது மாலையில் சற்று நேரம், அதிக நேரம் பாடம் நடந்தாலும் அல்லது யாருடைய சொற்பொழிவாவது ஏற்பாடு செய்யப்பட்டு விட்டாலும் அந்தக் குழந்தைகள் திரும்பி வரும் போது மிக அச்சமூட்டுகின்ற வகையில் இருக்கும் தெருக்கள் வழியாக வரவேண்டியிருக்கிறது. திருவொற்றியூர் போன்ற பகுதிகளிலேயே இவ்வளவு சிரமங்கள் இருக்கின்றன என்றால், மற்ற ஊர்களில் எவ்வளவு சிரமம் இருக்குமென்று பார்க்க வேண்டும். அதே திருவொற்றியூரிலிருந்து நான் இப்போது பார்க்கிறேன்-திருவொற்றியூரிலிருந்து என்னூர் வரையில் ஒரு அரசினர் மேல்நிலைப் பள்ளிகூட இல்லை. ஒரு அரசினர் மேல்நிலைப் பள்ளிகூட இல்லாத காரணத்தால் தனியார் நடத்துகிற பள்ளிக்கூடங்களில் இருக்கும் கூட்டம் ஏராளமாக இருந்து, அவர்கள் வைப்பதே சட்டம் என்று ஆகி, அங்கே இருக்கின்ற கூட்டம் எந்த நேரத்திலும் குறையாமல் பலர் வேலைக்குக் கூடப் போகாமல் அங்கேயே தங்கி தங்கள் குழந்தைகளுக்கு இடம் கிடைக்குமா என்று ஏங்கிக் கொண்டிருக்கிற காட்சியைப் கூடப் பார்க்கிறேன்.

திருவொற்றியூர் போன்ற பகுதிகள் எல்லாம் தொழில் நிறைந்த இடமாக இருக்கும் காரணத்தால் தொழிற் பள்ளிகளை கல்லூரிகளை அமைக்கும் ஆலோசனை அரசாங்கத்திற்கு வந்தால் நலம் என்று கருதுகிறேன். தொழிற் கல்வி என்று சொல்லும் போது நம்முடைய கல்வி இன்றைய தினம் தொழில் மயம் ஆக வேண்டுமென்று சொல்லுகின்ற ஆசை அரசுக்கு இருப்பதாக நிதிநிலை அறிக்கையில் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். அதை நான் பாராட்டுகிறேன். வெறும் படிப்பு மட்டும் மனிதனுடைய வாழ்வுக்கு தூண்டுகோலாக, துணையாக நிற்க முடியாது. பாரதி சொன்னான்—

''செலவு தந்தைக்கோ ராயிரஞ் சென்றது
தீதெனக்குப்பல் லாயிரஞ் சேர்ந்தன
நலமோ ரெட்டுணை யுங்கண்டிலேனிதை
நாற்பதாயிரங் கோயிலிற் சொல்லுவேன் ''

ஆக, நாற்பதாயிரம் கோயிலிலே சொல்லுவேன் ; எனக்கு நலம் எத்துணையும் கிடைக்கவில்லை ; ஆனால் செலவு தந்தைக்கு





ஆயிரம் சென்றது ; தீது எனக்குப் பல்லாயிரம் சேர்ந்தன என்று சொல்லுகின்ற வகையில் இருப்பதால் அவனுக்கு வாழ்க்கையிலும் உதவுகின்ற கல்வி வேண்டும்.

சைக்கிள் ரிப்பேர் செய்கிற தொழில் செய்து கொண்டிருக்கும் மாணவர்கள் மாணவப் பருவத்தில் எவ்வளவு பேர்? விவசாயக் குடும்பத்தில் படித்து கொண்டிருக்கும் மாணவர்கள் பிளஸ் 2-ல் கிராப்ட் என்ற பெயரில்; தொழிற் கல்வி என்ற பெயரில் சில உளிகளை, இரண்டு மூன்று கொத்தாரிகளை வாங்கிக் கொடுத்து அதை மட்டும் தட்டிக் கொண்டிருங்கள் என்று சொல்லுவது கிராப்ட் கல்வி என்ற வகையில் நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. விவசாயப் பெருங்குடி மக்கள் மத்தியில் இருந்து கொண்டிருக்கும் படித்து வெளியே வருகிறவன் மோட்டார் பம்ப் செட்டில் இருக்கும் காயில் எரிந்து போய்விட்டால் அதைச் சுற்றத் தெரியுமா? சைக்கிள் ரிப்பேர் செய்யத் தெரியுமா? தையல் மெஷினில் கோளாறு ஏற்பட்டால் சரி செய்யத் தெரியுமா? ஏன் ஒரு டிரான்சிஸ்டரில் கோளாறு ஏற்பட்டு விட்டால் செம்மைப் படுத்தத் தெரியுமா என்பதைப் பார்க்கும்போது அந்தக் கல்வி கிடைக்கவில்லை. இதையும் பாரதி சொல்லியிருக்கிறான்—

''பயிற்றிப் பலகல்வி தந்து-இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும் ''

ஆக, பல கல்வி என்று சொல்லும்போது வெறும் ஏட்டுக் கல்வியாக மட்டுமல்லாமல் நாட்டுக்கு தேவைப்படுகிற, பயன்படுகிற அத்தனையையும் செய்து கொடுக்கின்ற, செய்வதற்கு உதவியாக கற்றுக் கொடுக்கின்ற கல்வியை நாம் போதிக்கும் முயற்சியில் ஈடுபட வேண்டுமென்று உங்களை நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

இதே நேரத்தில் தொழிற் கல்விக் கூடங்களில் பயின்று கொண்டிருக்கும் சில தோழர்கள் அருமையான இயந்திரங்களைத் கண்டு பிடித்து விடுகிறார்கள். சாரயத்தை எரிபொருளாகப் பயன்படுத்தி காரை ஓட்டுகின்ற ஆற்றலைக் கொண்டு வரமுடியும் என்று மாணவன் கண்டு பிடிக்கிறான் என்று சொன்னால் அவனைத் தேடிப் பிடித்துப் பாராட்ட வேண்டும். தேடிப் பிடித்துப் பாராட்ட வேண்டுமென்று சொல்லக் காரணம்-அப்படிப் பட்டவர்கள் நம்முடைய நாட்டுக்குச் செய்கிற, செய்யும் சேவையை நாம் தேடிப் பிடித்துப் பாராட்டினால் மேலும் பல இளைஞர்கள் இந்தத் திசையில் ஊக்கத்தோடு ஈடுபடுவார்கள். டிரேட் பேர் என்று வைக்கிறோம், பெரிய பெரிய பொருட் காட்சிகள் என்று வைக்கிறோம், அவற்றிற்காக அரசாங்கமே செலவு செய்து காட்சிக் கூடங்களை ஏற்படுத்தி அத்தகைய மாணவர்கள் கண்டுபிடித்த அந்த இயந்திரங்களையும் அந்த மாணவர்களையும் அழைத்து வந்து ஊர் மக்களுக்கு காட்டி அதன்

மூலமாக அவர்களை எல்லோரும் பாராட்டுகிற வகையிலேயும் அதோடு மற்றவர்கள் ஊக்கம் பெறுகின்ற முறையிலேயும் நீங்கள் காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து உலகத் தமிழ் மாநாடு நடக்கிறது. உலகத் தமிழ் மாநாடு நடக்கிற நேரத்திலே ஒப்பியல் இலக்கணம் ஏற்கெனவே சிறிதளவே இருக்கிறது. அதை அதிகமாகப் படிக்கச் செய்ய வேண்டுமென்பது ஒருபுறம் இருக்க, ஒப்பியல் இலக்கணத்தைப் போலவே ஒப்பியல் இலக்கியத்தையும் அதிகமாக வளர்க்கின்ற பணியிலே நாம் அதிகமாக ஈடுபட வேண்டும். ஒப்பியல் இலக்கியம் என்கிறபோது நம்முடைய நாட்டு இலக்கியங்கள் மட்டுமல்ல, வெளிநாட்டு இலக்கியங்களுக்கு நம் நாட்டு இலக்கியங்கள் எப்படி ஈடு கொடுத்துக் கொண்டிருக்கின்றன என்பதையும், நம் நாட்டு இலக்கிய கர்த்தாக்களின் பார்வைகள் எப்படி இருக்கின்றன என்பதையும் வெளிநாட்டு இலக்கிய கர்த்தாக்கள் பார்வைகள் எப்படி இருக்கின்றன என்பதையும் அறிந்து கொள்கிற முறையிலே ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

இலக்கியம் என்பது ஒரு இலக்கை நோக்கி இயங்குவது. ஆகவே நம்முடைய இலக்கியங்கள் எந்த இலக்கை நோக்கி இயங்குகின்றன என்பதையெல்லாம் ஒப்புநோக்கிப் பார்க்கிற படிப்பும் இருக்கிறது ; ஆனால் இன்னும் மேம்பட வேண்டும். உலகத் தமிழ் மாநாட்டை நடத்துகிற நேரத்திலே நீங்கள் உலகத்திலே இருந்தெல்லாம் பேரறிஞர்களையெல்லாம் வரவழைக்கிற போது அந்தக் கண்ணோட்டத்தோடு நீங்கள் அழைப்பீர்கள் என்று சொன்னால் தமிழினுடைய வளத்தை, தமிழினுடைய நலத்தை, உயர்தனிச் செம்மொழியாக இருக்கிற அந்த செம்மாந்த தன்மையை உலகத்திலே இருக்கிற மக்களுக்கு எல்லாம் செகத்தவர்கள் அத்தனை பேர்களும் புரிந்துகொள்கிற அளவுக்கு அந்த ஒப்பிலக்கியத்தையும் நீங்கள் படைத்துக் காட்டுவதற்கு வழிவகை காண வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். நேற்று நற்பெயரின் காரணமாக ஒரு பேராசிரியரிடம் நான் பேசிக்கொண்டிருக்கிற சூழ்நிலை வந்தது. அப்போது அவர்கள் சொன்னார்கள். அவர் ஹைதராபாத்திலே ஒப்பிலக்கியத்தையும் மொழியியலையும் படித்து வருகிறார், அவர் டாக்டர் பட்டம் பெறுவதற்காக பயின்று கொண்டிருக்கிறார், அவர் சில தகவல்களைச் சொன்னார். அராபிய நாட்டிலே ஒட்டகத்திற்கு மட்டும் அதனுடைய வளர்ச்சியில் பல்வேறு நிலைகளைக் கருத்தில் வைத்து 65 பெயர்கள் இருக்கின்றனவாம். கேமல் என்பததனுடைய வளர்ச்சியின் பல்வேறு நிலைகளை வைத்து 65 பெயர்கள் அதற்கு இருக்கின்றன என்று சொல்வதைப் போல் நம்முடைய பால்காரரைக் கேட்டால் கன்றுக்கு அதனுடைய வளர்ச்சிக்குத் தகுந்தவாறு என்ன என்ன பெயர்கள் உண்டு என்பதை— ஈன்றவுடனேயே என்ன பெயர், அது பசுமாடாக பால் கறந்து கொண்டிருக்கின்றபோது என்ன பெயர்—கேட்டு பல்வேறு பெயர்



களை வளர்ச்சியின் பல்வேறு நிலைகளைக் கருத்திற் வைத்து பெயர்களை அறிகிற முறையிலே நம்முடைய தமிழ் இலக்கியத்திலே இருக்கிற மிக உயர்ந்த நிலையிலே இருக்கிற பெயர்களை எல்லாம் எடுப்பதற்கான வழிவகைகளை நீங்கள் பார்த்தால் மிக நன்றாக இருக்கும், என்று தெரிவித்து அதிக நேரம் எடுத்துக் கொள்ளக்கூடாது என்ற காரணத்தால் இறுதியிலே நான் ஒரு வேண்டுகோளை சொல்வதற்கு அனுமதி கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நாம் கற்றுக்கொடுக்கிற கல்வியால் இன்று இருக்கிற சமுதாயம் புதுத் தெம்பைப் பெற வேண்டும் ; இந்த சமுதாயம் புதுத் தெம்பைப் பெறுவதற்கு நீங்கள் தமிழ்ப் பல்கலைக் கழகம் ஆரம்பிக்கிறீர்களே, அந்தத் தமிழ் பல்கலைக் கழகத்திற்கு என்னுடைய பாராட்டைத் தெரிவித்து அந்த தமிழ்ப் பல்கலைக் கழகம் தமிழை வளர்ப்பதற்காகவும் தமிழர்களை வளர்ப்பதற்காகவும் தமிழர்களுக்குரிய இந்த நாட்டை வளர்ப்பதற்காகவும் இருப்பதற்குரிய எல்லாச் சூழ்நிலைகளையும் உருவாக்கித் தருவீர்கள் என்ற நம்பிக்கையிலே உங்களுடைய எண்ணம் நல்ல எண்ணமாக இருக்கிற காரணத்தால் அந்த எண்ணத்தைச் செயல்படுத்துங்கள்

'' எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியராகப் பெறின் ''

என்று சொல்கிற வகையிலே அந்த எண்ணம் எல்லாம் கைகூடுகிற வகையிலே உங்களுடைய முயற்சி இருக்கட்டும் என்று சொல்லி அமர்கிறேன்.

[மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை]

*திரு. ஏ. சாகுல் ஹமீது : மாண்புக்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கல்வி மானியத்தின்மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்ததற்காக உங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அரசு பிற்பட்டோருக்காக இடங்கள் 50 சதவீதம் ஒதுக்கித் தந்ததோடு 95 ஆயிரம் ஊராட்சி ஒன்றிய பள்ளிகளின் ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக ஆக்கியிருப்பதற்காக இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சியின் சார்பாக நான் பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நகராட்சி பள்ளிகளிலேயும் மாநகராட்சிப் பள்ளிகளிலேயும் பணியாற்றுகின்ற ஆசிரியர்களையும் அரசு ஊழியர்களாக ஆக்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். மேல்நிலைப் பள்ளிகளிலே தொழிற் கல்வி ஆசிரியர்களாக பணியாற்றும் பகுதி நேர ஆசிரியர்களை முழு நேர ஆசிரியர்களாக ஆக்கவேண்டுமென்று கேட்டுகொள்கிறேன். அதைப் போலவே மேல்நிலைக் கல்வியில் தொழில் கல்வியில் முதலாம்

ஆண்டும், இரண்டாம் ஆண்டும் வாரத்திற்கு 20 பாடவேளைக்குக் குறையாமல் பணியாற்றி சிறப்பு ஊதியம் பெறுகின்ற ஆசிரியர்களை முழு நேர ஆசிரியர்களாக ஆக்கவேண்டுமென்று கேட்டுகொள்கிறேன்.

[முற்பகல் 11–50]

ஆசிரியர்களிடமிருந்து பிடித்துக்கொண்ட அடடா தொகைகளைத் திருப்பித் தருவதில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்த்திட இந்த அரசு ஆவன செய்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நண்பகல் உணவுத் திட்டம் சீராக நடைபெற அரசு தரும் 10 பைசாவை 20 பைசாவாக உயர்த்தியும், நகராட்சிகள் தரும் 5 பைசாவை 10 பைசாவாக உயர்த்தியும் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். காரணம் என்னவென்றால், தற்காலத்தில் ஏற்பட்டிருக்கும் உணவுப் பண்டங்களின் விலையேற்றத்தின் காரணமாக அந்த ஏழை எளிய சிறார், சிறுமிகளுக்குப் போதிய அளவு உணவும், சுவையான உணவும் கொடுப்பதற்கு வாய்ப்பு இல்லாமல் இருப்பதால் எந்த நோக்கத்திற்காக இந்த நண்பகல் உணவுத் திட்டம் ஏற்படுத்தப்பட்டதோ அந்தத் திட்டம் செம்மையுற நடப்பதற்கு இந்த விகிதத்தை உயர்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தென்காசி நகர்மன்றப் பகுதியில் 21 பள்ளிகளைச் சார்ந்த பொது உணவு மையம் அமைத்து, அதன் மூலமாக 2,000 சிறுவர் சிறுமிகளுக்கு உணவு வழங்கப்படுகிறது. பொது மைய சமையல்கூடமும், உணவு எடுத்துச் செல்ல மூடு வண்டியும் கிடைத்திட ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒய்வுபெறும் ஆசிரியர்களின் வைப்பு நிதி, ஓய்வு நிதி போன்ற ஒய்வு ஊதியங்களை அவர்கள் ஒய்வு பெற்ற 30 நாட்களுக்குள் கிடைத்திட ஆவன செய்ய அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

மேல்நிலைப் பள்ளிகளில் ஆய்வுக் கூடங்கள் இல்லாத, இருந்தும் செயல்படாத ஆய்வுக்கூடங்கள் சீர் செய்திடப்பட வேண்டும்.

சிறுபான்மையினரால் நடத்தப்படும் கல்விக்கூடங்கள், துவக்கப்பள்ளி முதல் கல்லூரிவரை இயங்குவதை அச்சிறுபான்மையினரின் தனித்தன்மை பாதுகாக்கப்படும் வகையில் அரசு ஆதரவு அளித்திட பரிவோடு கேட்டுக்கொள்கிறேன்.





முஸ்லீம் சமுதாயத்தினருக்கு லெப்பை என்ற சான்றிதழ் கிடைப்பதற்கு ஏற்படுத்துகின்ற நடைமுறைச் சிரமங்கள் கொஞ்சமல்ல. உதவி நிதி பெறுவதில் அவர்கள் படும்பாடு வேதனைக்குரியதாக இருக்கிறது. தமிழ் பேசும் முஸ்லீம்கள், உருது பேசும் முஸ்லீம்கள் அனைவரும் லெப்பைகள் என்று ஜீ.ஓ. 72, 1980-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 1-ஆம் தேதி இல் சமூக நலத் துறை வெளியீடு தெளிவாக அறிவித்திருந்தும் கூட கர்ணம், கிராம முன்சீப், ரெவின்யூ இன்ஸ்பெக்டர், தாசில்தார் போன்ற அதிகாரிகளால் முஸ்லீம் சமுதாய மக்களுக்குப்பெரும் சிரமங்களும், காலதாமதமும் ஏற்பட்டு வருத்தத்தை அளிக்கின்ற அளவிற்கு இருக்கின்ற காரணத்தால் முஸ்லீம் சமுதாயம் இந்த அரசை வாழ்த்தும் வகையில் அந்த ஜீ. ஓ. 72-ஐ அமுல்படுத்தும் வகையில் பகிரங்கமாக வெளியிட்டு நல்ல தெளிவினை அதிகாரிகளுக்கு ஏற்படுத்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொறியல் கல்லூரி, தொழிற் கல்லூரி போன்ற கல்வி துறை சார்ந்த அனைத்துத் துறைகளிலும் முஸ்லீம் சமுதாயத்திற்கு உரிய வாய்ப்புகள் அளிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பாடப் புத்தகங்களில் இஸ்லாமியர்களைப் பற்றிய வரலாறுகள் இடம் பெறுவது குறைவே என்றாலும், இடம் பெறுகின்ற ஒன்று இரண்டிலும்கூட தப்பும் தவறுமாக இஸ்லாமியர்களின் உள்ளம் புண்படும் அளவிற்கு அப்பாடங்கள் இருந்ததைத் தவிர்க்கும் வகையில், அரசின் பாடபுத்தகக் குழுவில் இஸ்லாமியத்தைப் பற்றித் தெரிந்த தெளிந்த அறிஞர்களை இடம் பெறச் செய்வதின் மூலம், இந்தத் தவறுகள் நேராவண்ணம் காத்துக்கொள்ள வாய்ப்பாகும் என்று கூறிக் கொள்கிறேன். மேலும் மாநில ஆய்வுக் குழுவிலும் இடம் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முஸ்லீம்கள் குறைந்த அளவு 20 மாணவர்கள், மாணவிகள் பயிலும் கல்விக்கூடங்களில் அரபி மொழிப்பாடமும், உருது மொழிப்பாடமும் போதிக்க இந்த அரசு ஆவன செய்வதின் மூலம் முஸ்லீம் சமுதாயத்தின் உலமாக்கள் என்று கூறுப்படுகின்ற மார்க்க அறிஞர்களின் வாழ்த்துக்களைப் பெறுவார்கள் என்பது திண்ணம்.

கேரள மாநிலத்தில் முஸ்லீம்களுக்கு இந்தச் சலுகைகள் அளிக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு அரபி கற்பதன் காரணமாக வேலைவாய்ப்பு அரேபியநாடுகளில் பெருகிக் கொண்டிருக்கிறது; அதனால் பொருளாதார உயர்வு ஏற்படவழியும் அந்த உயர்வினைப்பெற எல்லா மாணவர்களும் அரபி கற்பதற்கு வகை செய்து, நம்முடைய தமிழகத்தின் பொருளாதாரத்தையும் உயர்த்த வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எ. சாகுல் ஹமீது]

கல்வித் துறையைப் பொறுத்தவரையில் ஒரு கால கட்டத்தில் மாவட்ட பிரதம கல்வி அதிகாரி, மாவட்டக் கல்வி அதிகாரி, பிராந்தியக் கல்வி ஆய்வாளர் ஈறாக இயக்குனர், துணை, இணை இயக்குநர் வரை முஸ்லீம்கள் பெற்றிருந்த வாய்ப்புகளை எண்ணுகின்றபோது கடந்த ஆண்டுகளில் முஸ்லீம்கள் இத்துறையில் மிகவும் பின் தள்ளப்பட்டுள்ளார்கள் என்பதை என்னால் எடுத்துக் கூறாமல் இருக்க முடியாது; அந்த விகிதம் குறைந்திருக்கிறது. அதை நிறைவு செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் எத்தனையோ உயர்நிலைப்பள்ளிகளை மேல் நிலைப்பள்ளிகளாக மாற்றி ஒரு புதிய வரலாற்றை உருவாக்கி வரும் இந்த அரசின் செயல் திறனைப் பாராட்டுகின்ற நேரத்தில், இஸ்லாமியர்கள் ஏறக்குறைய இருபதாயிரம்பேர் வாழக்கூடிய லால்பேட்டையில் அரசினர் உயர்நிலைப்பள்ளியை மேல் நிலைப்பள்ளியாக உயர்த்திட கடந்த மூன்றாண்டுகளாக அப் பகுதி மக்கள் பெரும் முயற்சி எடுத்தும்கூட, இப்பொழுது 150 மேல் நிலைப் பள்ளிகளுக்கு அரசு வழங்கிய அனுமதி இப்பள்ளிக்குக் கிடைக்காததை எண்ணிப் பார்க்கின்ற நேரத்தில், இந்த அரசு இன்னும் லால்பேட்டை அரசினர் உயர்நிலைப்பள்ளிக்கு மேல்நிலைப்பள்ளியாக அனுமதி வழங்கிட இயலும் என்று நம்புகின்ற முஸ்லீம்களின் உணர்வை மதித்து உயர்வு வழங்கிட வேண்டுமென்று அன்போடு வேண்டுகிறேன். லால்பேட்டை அரசு உயர் நிலைப்பள்ளியில் அரிசனங்களும் முஸ்லிம்களும், தாழ்த்தப்பட்ட மக்களும் அதிகம்பேர் படிக்கிறார்கள். இவர்கள் மூன்று மைல், நான்கு மைல் தூரம் சென்றால்தான் தங்களுடைய உயர்நிலைப் பள்ளிப் படிப்பைத் தொடர வேண்டிய நிலைமையிருப்பதால் லால்பேட்டை உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்றித் தர வேண்டுமென்று மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் கண்ணியம் நிறைந்த காயிதேமில்லத் அவர்கள் பிறந்த மாவட்டமாம் நெல்லை. அதை அடுத்துள்ள பாளையங்கோட்டையில் முஸ்லீம் சமுதாயத்தின் தந்தையாக போற்றி மதித்து வந்த கண்ணியம் நிறைந்த காயிதேமில்லத் அவர்கள் பெயரால் முகமது இஸ்மாயில் தொழிற் பயிற்சிக் கல்லூரி துவங்கிட அனுமதி அளித்திட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் இஸ்லாமிய தமிழ் இலக்கியத்தில் ஆராய்ச்சிக்காக நபிகள் நாயகத்தின் வரலாற்றுக் காவியமாம், சிறாப்புராணத்தைப் பாடிய கவிமேறு உமறுப் புலவர் பெயரில் ஆராய்ச்சிப் பணியிடம் ஒன்றை ஏற்படுத்தித் தந்த இந்த அரசை மனதாரப் பாராட்டுகிறோம், நன்றி கூறுகிறோம்.



[திரு. ஏ. சாகுல் ஹமீது]

சென்னைப் பல்கலைக் கழகத்தில் கண்ணியம் நிறைந்த காயிதே மில்லத் அறக்கட்டளைச் சொற்பொழிவு பேரால் விருது வழங்கிடக் கேட்டுக் கொள்கிறேன்.

அரசு துறையைச் சார்ந்த கல்வி நிலையநூல் நிலையங்களில் இஸ்லாமிய அறிஞர்களின் வரலாற்று சம்பந்தமான நூல்களையும் வாங்கி வைத்திடக் கேட்டுக் கொள்கிறேன்.

உலகத் தமிழ் மாநாட்டில், இஸ்லாமிய தமிழ் இலக்கியங்களும் பங்கு பெறும் வகையில் வழி செய்திட வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொண்டு, இந்த வாய்ப்பினைத் தந்த உங்களுக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன்.

*திரு. ஏ. சி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடைபெறும் இந்த மானியக் கோரிக்கைகளிலே, கல்வி மானியம் மிக முக்கியத்துவம் வாய்ந்த மானியமாக இருப்பதால் இந்த அரசுக்கு நான் என்றென்றும் பாராட்டு தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். மொத்தச் செலவினுடைய ரூ. 967 கோடியில், கல்வி மானியத்திற்கு ரூ. 224 கோடியை ஒதுக்கியது பாராட்டி வரவேற்கத் தகுந்த ஒன்றாகும்.

1980-ம் ஆண்டு, இங்கே, தமிழ்நாட்டுக்கு, தமிழ் மொழிக்கு ஆபத்து வந்துவிடுமோ என்ற அச்சம் இருந்து கொண்டிருக்கிற வேளையிலே, தமிழகத்தினுடைய புரட்சித் தலைவருடைய அரசு, இரு மொழிக் கொள்கைத் திட்டத்தை அறிவித்து, தமிழ் மொழியைக் காப்பாற்றி, தமிழ் மாநிலத்தைக் காப்பாற்றிக் கொண்டது. இந்தக் கொள்கையை நாங்கள் என்றென்றும் வரவேற்று பெருமைப் பட்டுக் கொண்டிருக்கிறோம் என்பதாலும், தமிழ்ச் சமுதாயம் இந்த அரசுக்கு என்றென்றும் கடமைப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

95,000 பஞ்சாயத்து யூனியன் ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக மாற்றியது, ஆசிரியப் பெருமக்களுடைய வாழ்க்கையிலே, ஆசிரியப் பெருமக்களுடைய இதயங்களிலே பாலை வார்த்த செய்தியாக இருக்கிறது. அவர்கள் சாதாரணமாக கோரிக்கை தான் வைத்தார்கள். போராட்டம் நடத்தவில்லை. எந்தவித மான விளைவும் ஏற்படுத்தவில்லை. மாநாடு கூட்டி வேண்டுகோள் வைத்தார்கள். அந்த அளவிலே தமிழக அரசு அவர்களை அரசு ஊழியர்களாக மாற்றியிருக்கிறது. அதனால், அந்தப் பஞ்சாயத்து யூனியன் ஆசிரியர்களுக்கு, அரசு ஊழியர்களுக்குக் கிடைக்கும் அனைத்துச் சலுகைகளும் கிடைக்கும் என்பதோடு, இவ்வளவு நாட்கள் பஞ்சாயத்து யூனியன் ஆணையர்களுடைய சர்வாதிகார ஆணைகளுக்கு உட்பட்டிருந்தவர்கள் இன்றைய

தினம் நிம்மதியோடு, அவர்கள் ஆதிக்கத்திலிருந்து வெளிவந்து, இந்த அரசுக்கு வாழ்த்துச் செய்திகளைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைக் கவனப்படுத்த விரும்புகிறேன்.

உயர்நிலைப் பள்ளிகளிலே தமிழ் ஆசிரியர்களைத் தலைமை ஆசிரியர்களாக நியமிக்கும் உத்தரவைத் தமிழ்ச் சமுதாயம் பாராட்டிக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

மேல்நிலைப் பள்ளித் திட்டத்தை தமிழ்நாட்டிலே புகுத்தி ஒரு வரலாற்றைப் படைத்திருக்கிற புரட்சிகரமான திட்டத்தைக் கொண்டு வந்த இந்த அரசைப் பாராட்டாமல் இருக்க முடியாது. இந்த ஆண்டு, மேலும் 150 உயர்நிலைப் பள்ளிகளைக் கொண்டு வர இந்த அரசு உத்தேசித்திருக்கிறது. இந்த மேல் நிலைப் பள்ளிகள் திட்டம் வெற்றி பெற வில்லையென்று மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். பல மாநிலங்களை எல்லாம் மையமாக வைத்துப் பார்ப்போமேயானால், கர்நாடக மாநிலம், ஆந்திர மாநிலம் ஆகியவற்றை எடுத்துக் கொள்வோமானாலும் கூட இரண்டே ஆண்டில் தமிழ்நாட்டிலே மேல் நிலைப் பள்ளி வெற்றிகரமாக ஆரம்பிக்கப்பட்டு செயல் பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

மேலும், உயர்நிலைப் பள்ளிகள் 62-ம், தனியார் பள்ளிகள் 42-ம் இந்த ஆண்டு கொண்டுவந்திருக்கிறது. இந்த அரசு, மேலும் ஆசிரியப் பெருமக்கள் ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கும் நல்ல திட்டத்தை வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய ஆரணித் தொகுதியிலே, 20 ஆண்டுகாலமாக இருக்கிற குறையை, ஒரு உள்ள வேட்கையை, ஒரு உள்ளக் குமுறலை இங்கே சொல்லலாம் என்று நினைக்கிறேன். 20 ஆண்டு காலமாக, ஆரணிக்குக் கல்லூரி வேண்டுமென்று அந்த மக்கள் மிகவும் வேதனையோடு குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். எனக்கு முன்னால் வந்த சட்டமன்ற உறுப்பினர்களும் அந்தக் கோரிக்கையை விடுத்திருக்கிறார்கள். ஆரணியில், 20 மைல் சுற்று வட்டாரத்திற்கு அங்கே கல்லூரிகள் கிடையாது. ஆரணிக்கு வந்த கல்லூரியைத்தான் செய்யாறுக்குக் கொண்டு சென்று விட்டார்கள். ஆரணிக்கு வந்த பெண்கள் கல்லூரிதான் வாலாஜாவுக்குச் சென்று விட்டது. எனவே, அங்கு கல்லூரி கொண்டு வர மாண்புமிகு அமைச்சரவர்கள் முன் வரவேண்டும். கல்லூரியைக் கொண்டு வரவில்லையென்றால், பாலிடெக்னிக் அல்லது, தொழிற் பயிற்சிக் கல்லூரியையாவது கொண்டு வர ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



அடுத்தது, ஆரணி பெண்கள் உயர்நிலைப் பள்ளி ஆரம்பித்து 16 ஆண்டுகள் ஆன போதிலும் கட்டிடம் பாதியிலே நின்று விட்டதைப் பலதடவை எடுத்துச் சொல்லியும், கட்டிடம் முழுவதும் முடிக்காமல் பாதியிலே நிறுத்தப்பட்டிருக்கிறது. அதனால் மாணவிகளுக்குப் பாதுகாப்பில்லாத நிலை இருக்கிறது. அந்தக் கட்டிடத்தை இந்த அரசு முடித்துத் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த மானியக் கோரிக்கையை வரவேற்று விடை பெறுகிறேன்.

[நண்பகல் 12-00]

*திரு. பொ. விஜயராகவன் : பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி அமைச்சரால் கொண்டு வரப்பட்ட இந்த மானியக் கோரிக்கையின் மீது கொடுக்கப்பட்ட வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து ஒரு சில வார்த்தைகளைப் பேச ஆசைப்படுகிறேன். பொதுவாகச் சொல்லப் போனால், பள்ளிகளின் கட்டிட வசதிகள் தமிழகத்திலே உள்ள ஆரம்பப் பள்ளியானாலும் சரி, உயர்நிலைப் பள்ளியானாலும் சரி, மேல் நிலைப் பள்ளியானாலும் சரி, கட்டிடங்களே சரியாக இல்லை என்று எடுத்துச் சொல்லிக் கொண்டு இருக்கிற நேரத்தில், என்னுடைய தொகுதியில் கருங்கல் மேல் நிலைப் பள்ளிக்குக் கட்டிட வசதியை ஏற்படுத்தித் தரவேண்டும் என்றும், உதயமார்த்தாண்டம் நடுநிலைப் பள்ளிக்குக் கட்டிடம் கட்டித் தரவேண்டும் என்றும், நல்லூர் நடுநிலைப் பள்ளிக்குக் கட்டிட வசதி ஏற்படுத்தித் தரவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். கன்னியாகுமரியில் பெண்கள் கல்வி அதிகமாக இருக்கிற காரணத்தாலே அங்கே பெண்கள் பாலிடெக்னிக் ஒன்று ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, உடற்பயிற்சி ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் அவர்களுடைய கோரிக்கைகள் பன்னெடுங்காலமாகக் கவனிக்கப்படாமல் இருக்கிறது, அதைக் கவனித்து அவர்களுக்கு நல்ல பரிகாரம் செய்து தரவேண்டும் என்று அரசைக் கேட்டுக் கொள்கிறேன். 750 பேர்களுக்கு மேல் உள்ள உயர்நிலைப் பள்ளிகளுக்கு உடற்பயிற்சி இயக்குநர் போட வேண்டும். 200 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற வகையில் பள்ளிகளுக்கு உடற்பயிற்சி ஆசிரியரை நியமிக்க வேண்டும். ஆண்களும் பெண்களும் சேர்ந்து படிக்கின்ற கல்லூரிகளிலே, மாணவிகளுக்குப் பெண் உடற்பயிற்சி இயக்குநர்களை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கல்லூரிகளைப் பொறுத்தவரையில் அதை விரிவு படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சென்னைப் பல்கலைக் கழகத்தைப் பற்றி ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்தியாவிலேயே முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்ட பல்கலைக் கழகங்களிலே நமது சென்னைப் பல்கலைக் கழகமும் ஒன்று என்று சொன்னால் அது

மிகையாகாது. 1857-லே தொடங்கப்பட்ட அந்தப் பல்கலைக் கழகம் மிகப் பெரிய பாரம்பரியத்தைக் கொண்டதாக இருந்தது. அதிலே இன்றைக்கு வேதனைத் தரத்தக்க சூழ்நிலை இருக்கிறது. சென்னைப் பல்கலைக் கழக செனட் உறுப்பினர்களே இன்றைக்கு அந்தப் பல்கலைக் கழக சின்டிகேட்டின் மீதும், துணை வேந்தர் மீதும் நம்பிக்கை அற்றுப் போகின்ற சூழ்நிலை அங்கே உருவாகியிருக்கிறது என்பதை இந்த மன்றத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். 1980-ம் ஆண்டு மார்ச் மாதம் 31-ம் தேதி, அங்கே செனட் மீட்டிங் நடைபெற்றபோது அந்தக் கூட்டத்தில் ஒரு வெட்டுத் தீர்மானத்தைக் கொடுத்து, செனட் பாஸ் செய்திருக்கிறது என்று சொன்னால், அதை நிறைவேற்றி இருக்கிறது என்று சொன்னால், அந்தப் பல்கலைக் கழக நிர்வாகிகள் மீது செனட் உறுப்பினர்களுக்கு நம்பிக்கை இல்லை என்பதைத் தான் அது காட்டுகிறது. பல்வேறு முறைகேடுகள், ஒழுங்கீனங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். உதாரணத்திற்கு எத்தனையோ எடுத்துக் காட்டுகளைச் சொல்ல முடியும். தேர்வில் தோற்று விட்டவர்களுக்குக் கூட பட்டம் கொடுக்கின்ற சூழ்நிலை அங்கே இருக்கின்றது. அதேபோல டாக்டர் பட்டம் வழங்குவதைப் பொறுத்தவரையில் அங்கே ஒவ்வொரு துறையிலும் எவ்வளவு டாக்டர் பட்டங்கள் உருவாகி இருக்கின்றன என்பதைக் கவனித்துப் பார்க்கவேண்டும். உதாரணத்திற்குச் சரித்திர பாடங்களிலும், பொருளாதார பாடங்களிலும் எத்தனை டாக்டர் பட்டங்களை உருவாக்கி இருக்கிறார்கள் என்பதை நீங்கள் ஒரு விசாரணைக் கமிஷன் மூலம் தெரிந்து கொள்ள வேண்டும். அங்கே வேண்டிய மாணவர்களுக்கு ஒரு சலுகை, வேண்டாத மாணவர்களுக்கு ஒரு சலுகை. அங்கே பேராசிரியர்களுக்கும் பேராசிரியர்களுக்கும் இருக்கிற தகராறில் மாணவர்கள் பழி வாங்கப்படுகிறார்கள். பேராசிரியர்களுக்கும் துணை வேந்தர்களுக்கும் இடையே உள்ள தகராறில் மாணவர்கள் தான் பாதிக்கப்படுகிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, யுனிவர்சிடி கிரான்ட்ஸ் கமிஷன் கொடுத்த பல இலட்சக்கணக்கான பணம்—ஆஸ்டல் வசதிக்காகக் கொடுக்கப்பட்ட அந்தப் பணம்—செலவழிக்கப்படாமல் அந்தப் பணத்தை யுனிவர்சிடி கிரான்ட்ஸ் கமிஷனுக்கே திருப்பி சரண்டர் செய்து இருக்கிறார்கள். அதே நேரத்தில் பல்வேறு பட்டப் படிப்புகள், பட்ட மேல் படிப்புகள் குறைக்கப்பட்டிருக்கின்றன. காரணம், என்ன என்றால், அதற்கான ஆஸ்டல் வசதி இல்லை என்று சொல்லுகிறார்கள். ஆஸ்டல் வசதி ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற காரணத்திற்காகக் கொடுக்கப்பட்ட பணத்தை திருப்பிக் கொடுத்துவிட்டு போஸ்ட் கிராஜுவேட் கோர்சைக் குறைத்திருக்கிறார்கள் என்று சொன்னால், இப்போது நடைபெற்றுக்கொண்டு வருகிற நிர்வாகம் திறமையற்ற நிர்வாகம் என்று எடுத்துச் சொல்லி, இன்னும் பல்வேறுற் குற்றச்சாட்டுக்களைச் சொல்ல





லாம் என்று எண்ணினாலும், இதற்கென ஒரு விசாரணைக் குழு வைப் போட்டு, இந்த நிர்வாகம் சிறப்பாக முன்பிருந்ததைப் போல சிறப்பாகப் புகழ் ஈட்டித் தரவேண்டும் என்று இந்த சர்க்காரைக் கேட்டு நேரம் இல்லாத காரணத்தால் இத்துடன் முடித்துக் கொள்கிறேன்.

திரு. கே. எஸ். ஜி. ஹாஜாசெரீப் : மாண்புமிகு கனம் சபாநாயகர் அவர்களே, இந்தக் கல்வி மானியக் கோரிக்கையை நான் ஆதரித்து என் கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். ஏறக்குறைய 230 கோடி ரூபாய் அளவிற்கு நாம் செலவு செய்வதற்கு இங்கே அனுமதி கேட்கப்பட்டு இருக்கிறது. அதை நல்ல முறையில் செலவு செய்ய வேண்டும். அதனால், மிகுதியான பள்ளிகள் பலன் அடைய வேண்டும் என்று நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

தமிழ் நாம் ரொம்ப பலமாகச் சொல்லிக்கொடுக்க வேண்டும். எல்லாத் துறைகளிலும் தமிழ் இருக்கட்டும். அதிலே நமக்குச் சங்கடம் கிடையாது. இருந்தாலும் ஆங்கிலம் சொல்லிக் கொடுப்பதையும் நாம் பலப்படுத்திச் சொல்லிக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இப்போது ப்ரைவேட் பள்ளிகளில்தான் ஆங்கிலம் சொல்லிக்கொடுக்கிறார்கள். ஊராட்சி ஸ்கூல்களில், அரசு ஸ்கூல்களில் சொல்லிக்கொடுப்பது இல்லை. இது நமக்கே பெரிய வம்பாக முடியும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

காரணம், இலட்சக்கணக்கான மக்கள் படித்த பிறகு, வேலைக்கோ அல்லது மற்ற பட்டப்படிப்பிற்கோ வருகிறார்கள் என்று சொன்னால், அவர்களுக்கு நம்முடைய மாநிலத்தில் வேலை வாய்ப்பு கிடைக்கிறது என்பது மிகவும் அரிதாக இருக்கிறது, ஆங்கிலம் இல்லாமல் மேல் படிப்பு படிப்பது என்பதும் கஷ்டமாக இருக்கிறது. அதுமட்டுமல்ல, ஆங்கிலத்தைக் கீழே இருந்து மேல் மட்டம் வரையில் படித்துத் தேர்ச்சி பெற்றால்தான் பிற மாநிலங் களுக்கோ அல்லது வெளிநாடுகளுக்கோ சென்று அவர்கள் தங் களுடைய வாழ்க்கையை இனிது நடத்துவதற்கு உபயோகமாக இருக்கும்.

இப்போது எடுத்துப் பார்த்தால், ஆயிரக்கணக்கான மக்கள் பிற மாநிலங்களில் வேலை செய்கிறார்கள்—இலட்சக்கணக்கான மக்கள் கூட இருப்பார்கள்—கணக்கு எடுத்துப் பார்த்தால் தெரியும்—பாம்பே, கல்கத்தா, டெல்லி, அஹமதாபாத்— என்று இந்த மாதிரி பல ஊர்களில் பணிசெய்கிறார்கள். அவர்களுக்கு ஆங்கிலம் தெரியாவிட்டால் நிச்சயமாக அவர்கள் அங்கே வேலை செய்யமுடியாது.

நம்முடைய தேசத்தில் நாம் இப்போது பெரிய தொழில் வளர்ச்சியில் அனுபவம் பெற்று வருகிறோம். வளர்ச்சி பெற்று வருகிற இந்த நேரத்தில் உலக நாடுகளில் உள்ள அபிவிருத்தியை நாம் எய்த வேண்டும் என்று சொன்னால் அது ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்றிருந்தால்தான் முடியும். நம்முடைய மாநிலத்தில் '' இன்டஸ்டீரிஸ் அன்டு காமர்ஸ் '' முன்னேற்றம் அடைந்து இருக்கிறது. அப்படி , இருக்கும்போது, உலகத்திலேயே ஒரு சிறந்த மொழியாக இருக்கும் ஆங்கிலத்தில் நாம் சாமர்த்தியம் பெற்றால்தான் அவசியம் நமக்கு அது பெரிதும் உதவிகரமாக இருக்கும். நல்ல வாழ்க்கை வாழ்வதற்கும் மிகவும் நன்றாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

இப்போது ஒவ்வொரு ஊரிலும் செகண்டரி, ஹயர் செகண்டரி ஸ்கூல் என்று இருக்கிறது. இவற்றில் ரூரல் செக்டாரில் இருக்கும் பள்ளிகளில் ஒரு செக்ஷனிலாவது ஆங்கிலம் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய மாநிலத்து மக்கள் பிற தேசங்களுக்கு ஆயிரக் கணக்கில் செல்கிறார்கள். டாக்டர் முதற்கொண்டு, ஆர்ட்டிசான் முதற்கொண்டு செல்கிறார்கள். முக்கியமாக பெர்சியல் கல்ப் நாடுகளுக்கு அதிகமாகச் செல்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கை மேன்மேலும் விருத்தியாவதற்கு வொகேஷனல் ஸ்டடீஸ் ஹைஸ்கூல் நிலையில் கொண்டு வரவேண்டும். ஹயர் செகண்டரி ஸ்கூலில் இருக்கிறது என்று தெரிந்து கொண்டேன். அதை ஹைஸ்கூல் மட்டத்தில் கொண்டு வந்தால் மிகுதியான மக்கள் பயிற்சி எடுத்து, பிற தேசங்களுக்குச் சென்று அவர்கள் வாழ்க்கை நல்ல முறையில் அமைத்துக்கொள்ள அனுகூலமாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

[பிற்பகல் 12–10]

இதை நான் சொல்லுகிறபோது, கவர்னர் அறிக்கையில் பேசும்போது ஒரு '' காமர்ஸ் யூனிவர்சிடி '' ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். கனம் அமைச்சர் அவர்கள் அதைப்பற்றி யோசனை செய்வதாகச் சொன்னார்கள். வளர்ச்சி பெற்ற பெரிய தேசத்தில் எல்லாம் இந்த மாதிரி பல யூனிவர்சிட்டிகள் இருக்கின்றன. அமெரிக்க தேசத்தை எடுத்துக்கொண்டாலும் சரி, வெஸ்ட் ஜெர்மனியை எடுத்துக் கொண்டாலும் சரி, ஜப்பான் தேசத்தை எடுத்துக்கொண்டாலும் சரி—அங்கே எல்லாம் காமர்ஸ் யூனிவர்சிட்டிஸ் நிறைய இருக்கின்றன. அதிலே எல்லாவிதமான சப்ஜெக்டும், வியாபாரம், இன்டஸ்டிரீஸ் போன்றவைகளைச் சொல்லிக்கொடுக்கிறார்கள். இங்கே மிகுதியாக அம்மாதிரி சப்ஜெக்ட்ஸ் ஒவ்வொரு காலேஜிலும் சொல்லிக் கொடுத்தாலும் கூட அங்கே ஒரே யூனிவர்சிட்டியில் வைத்து சொல்லிக் கொடுக்கிறார்கள். நம்முடைய நாட்டில், இந்தியாவிலேயே அம்மாதிரி எந்த





யூனிவர்சிட்டியும் இல்லை என்று தெரிகிறது. ஆனால், பிரைவேட் மானேஜ்மென்ட் நடத்துகிறது. இராஜஸ்தானில் அம்மாதிரி ஒரு இன்ஸ்டிடியூஷன் இருக்கிறது. அகமதாபாத்தில் இருக்கிறது. இன்னும் கல்கத்தாவில் இருக்கிறது.

சில வருஷங்களுக்கு முன் நம்முடைய மாநிலத்திலேயும் இன்ஸ்டிடியூட் ஆஃப் மானேஜ்மென்ட் வைக்க புதிதாகத் தீர்மானம் செய்தோம் அல்லது யோசனை செய்வோம் என்று ஒரு அறிவிப்பு வந்ததாக எனக்கு ஞாபகம் இருக்கிறது. அதற்கு நிதி கூட ஒதுக்கப்பட்டிருந்தது. அது என்னவாயிற்று ? டெவலப்மென்ட் ஆனதா இல்லையா என்று தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன். அப்படி அந்த யோசனை இருந்தால் அதை ஒரு காமர்ஸ் யூனிவர்சிட்டியாக ஏன் நாம் கன்சிடர் செய்யக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். Sir, I must congratulate the Hon. Minister for Education and his officers for taking very efficient steps to improve the plus–2 courses. ஆனால், அந்த பிளஸ் 2 கோர்ஸ் ஹைஸ்கூலில் நடத்தப்படுவது மிகுந்த கஷ்டமாக இருக்கும் என்று நினைக்கிறேன். அங்கே மாணவர்கள் கஷ்டப்படாமல் இருக்க அவர்கள் சுமுகமாக படிக்க எப்படிப்பட்ட வசதிகள் வேண்டுமோ அதற்கு வேண்டிய எல்லா விதமான ஏற்பாடுகளையும் தீவிரமாக அரசாங்கம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சில ரூரல் ஏரியாவில் இருக்கிற ஹைஸ்கூல்கள் சரிவர நடக்கவில்லை என்று சொன்னார்கள். அதை நான் ஒப்புக்கொள்கிறேன். எனக்குத் தெரிந்த ஒரு வில்லேஜில் 20 வருஷங்களுக்கு முன்னால் ஒரு ஹைஸ்கூல் ஆரம்பிக்கப்பட்டது. அதுவும் பண்டிட் ஜவகர்லால் நேரு பெயரில் ஆரம்பிக்கப்பட்டது. இப்போதுகூட அது கூரை போட்ட கட்டிடத்தில்தான் நடந்துகொண்டிருக்கிறது. அது என்னுடைய சொந்த கிராமம். நான்தான் அதை ஆரம்பித்தேன். அப்போது பள்ளிக்கூடம் ஆரம்பிப்பதற்கு என்ன தொகை அரசாங்கத்திற்குக் கட்ட வேண்டுமோ அதைக் கட்டி ஆரம்பித்தேன். எவ்வளவோ கரஸ்பான்டன்ஸ் எல்லாம் ஆரம்பித்தும் எந்தவிதமான நடவடிக்கையும் இல்லை. தீவிரமாக அதைக் கவனித்து, அப்படிப்பட்ட பள்ளிக்கூடங்களுக்கு நல்ல கட்டிடம் கட்டிக்கொடுத்து, நல்லமுறையிலே செயல்படுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை முதலிலே செய்ய வேண்டும். பள்ளிகள் நல்ல கட்டிடத்தில் இருந்தால் நன்றாகப் படிக்க ஊக்கம் ஏற்படும். ஆகவே, நல்ல கட்டிடங்கள் இல்லாத பள்ளிகளுக்கு, கூரைக் கட்டிடங்களை மாற்றி, நல்ல கட்டிடங்களைக் கட்டிக் கொடுத்து படிப்பதற்கு ஊக்கமளிக்க வேண்டும். பிள்ளைகள் நல்ல அட்மாஸ்பியர் உள்ள கட்டிடத்தில் படித்தால்தான் அவர்களுக்கு ஊக்கம் ஏற்படும் ; படிக்கும் வசதியும் இருக்கும். அப்படியில்லாமல் ஒரு '' கிராம்ப்டு '' கட்டிடத்தில், வசதி இல்லாத கட்டிடத்தில் படித்தால் மிகவும் கஷ்டமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ''ஸ்கவுட்ஸ் அன்ட் கைட்ஸ்''—சாரணர்கள், சாரணீயர்கள்—போத் பாய்ஸ் அன்ட் கேர்ல்ஸ் இன்டன்சிவ் ட்ரெயினிங் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதை கம்பல்சரியாக வைத்தால்கூடப் பரவாயில்லை; அதற்கு அரசாங்கம் ஊக்கமளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம் இளமையிலேயே அப்பேர்ப்பட்ட ஒரு பயிற்சியைப் பரந்த நோக்கத்தோடு எடுத்துக்கொண்டால் அவர்கள் வாழ்க்கையில் அது மிகவும் துணையாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அப்படி ஸ்கவுட்ஸ் அன்ட் கைட்ஸ் இன்டென்சிங் டிரெயினிங் பெறுபவர்களுக்கு டிப்ளமோ காலேஜ்களிலும் மற்ற இடங்களிலும் மிகுதியாக சலுகை அளிக்கப்பட வேண்டும் என்று அரசாங்கம் தீர்மானம் கொண்டுவர வேண்டும். பல டெக்னிகல் இன்ஸ்டிடியூஷன்கள் மாநிலங்களில் இருந்து வருகின்றன. ஐ.டி.ஐ. போன்றவைகள் இருந்து வருகின்றன. நல்ல முறையில் அவை நடந்து வருகின்றன. அதிலே மிகவும் தேர்ச்சி பெற்றவர்கள் வெளி தேசங்களில் பெரிய தொண்டு செய்கிறார்கள். ஆகவே, அம்மாதிரி இன்ஸ்டிடியூஷன்கள் பலவற்றை நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த மாதிரி இன்ஸ்டிட்யூஷன்களில் படித்தவர்களுக்கு எல்லாம் நிறைய டிமாண்ட் இருக்கின்றது. நம்முடைய மாநிலத்திலும் டிமாண்ட் இருக்கின்றது. வெளி மாநிலத்திலும் டிமாண்ட் இருக்கின்றது. ஆகவே, அம்மாதிரி இன்ஸ்ட்டிடியூஷன்கள் ஏற்பட்டால் அதிலே படிக்கின்றவர்கள், இளைஞர்கள் பலர் அதிலே தேர்ச்சி பெற்று நம் மாநிலத்திற்கு நல்ல பணிபுரிவார்கள் என்று சொல்லிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

*திரு. கோவைத்தம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வித்துறை அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்தக் கல்வி மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய ஒரு சில கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்வதற்கு வாய்ப்பு கிடைத்தமைக்காக என்னுடைய நன்றியை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன். நடந்து முடிந்த தேர்தலுக்குப் பிறகு வருகின்ற ஒரு மானியக் கோரிக்கையில் கல்வி மானியக் கோரிக்கை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை எங்களைப் போன்ற புதுமுகங்கள் உணர்ந்திருக்கிறோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தக் கல்வி மானியக்கோரிக்கையை மையமாக வைத்துத் தான் தமிழகத்தின் தலையெழுத்து எழுதப்படுகின்றது என்ற காரணத்தால் இந்த மானியத்திற்காகத் தயவு செய்து நேரத்தைக் கொஞ்சம் அதிகமாக ஆக்கி ஒரு நாள் அல்லது இரண்டு





நாட்கள் முழுவதுமாக விவாதம் நடத்துவதற்கு வாய்ப்பளிக்க வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களை நான் மிகவும் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். ஆகவே கல்வித்துறையின் மீது கொண்டுவரப்பட்டிருக்கின்ற மானியக் கோரிக்கையைப் பாராட்டி நான் கருத்து தெரிவிக்கின்றபோது, மாண்புமிகு கல்வித்துறை அமைச்சரவர்கள் புதிய தமிழகத்தை உருவாக்குவதற்காகவும், புதிய இந்தியாவை ஒற்றுமைப் படுத்துவதற்காகவும் எடுத்த பெருமுயற்சி இது என்பதையும், இந்த முயற்சியைப் பொறுத்தவரையில் டாக்டர் கோத்தாரி அவர்கள் சொன்ன கருத்தையும், டாக்டர் ஏ. எல். முதலியார் அவர்கள் சொன்ன கருத்தையும், மகாத்மா காந்தி அவர்கள் சொன்ன கருத்தையும் மையமாக வைத்து இந்தக் கல்வி மானியம் அமைக்கப்பட்டிருக்கின்றது என்பதையும் நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, தனிப்பட்ட கருத்துக்கள் என்ற அடிப்படையில் வளர்ந்து வருகின்ற சமுதாய மாற்றத்தின் மத்தியில் சீரழிந்து கொண்டிருக்கின்ற இன உணர்வுகளை, சீரழிந்துகொண்டிருக்கின்ற பண்பாட்டை, சீரழிந்து கொண்டிருக்கின்ற கலாச்சாரத்தை, சீரழிந்துகொண்டிருக்கின்ற தமிழ் உணர்வுகளை, சீரழிந்து கொண்டிருக்கின்ற தமிழ் மொழியைக் காப்பதற்குரிய வழிவகைகளை எதிர்காலத்தில் நம்முடைய கல்வி மானியக் கோரிக்கைகளில் திட்டமிட்டுச் செயலாற்றவேண்டும் என்ற நிலையினை அரசியல் கண்ணோட்டம் இல்லாமல் தெரிவித்துக் கொள்கிறேன்.

தனி மனிதனைப் பற்றி எழாத ஒரு பிரச்சினை அவனோடு வேறொரு மனிதன் சேர்ந்துவிட்டாலே எழுந்துவிடுகிறது. அந்த இருவரையும் நடத்திச் செல்லும் பொது முறை எது என்பதுதான் பிரச்சனை. அந்தப் பொது முறை எதுவோ அதுதான் அரசியல், அந்த அரசியலுக்கு அப்பாற்பட்ட முறையில் இன்று வளர்ந்து வருகின்ற இந்தியாவில் பல மாநிலங்களில் பதவி வகித்துக்கொண்டிருக்கின்றவர்கள் அல்லது மைய அரசை நடத்திக்கொண்டிருக்கின்றவர்கள் தமிழகத்து மக்களின் உள்ளங்களில் பீறிட்டுக் கிளம்பிய அந்த மொழி உணர்வை, பீறிட்டுக் கிளம்பிய அந்த இன உணர்வை, பீறிட்டுக் கிளம்பிய அந்தக் கலாசார உணர்வுகளை மாறுபட்ட கோணங்களில் நின்றுகொண்டு விமர்சிப்பார்களேயானால் அந்த மொழி உணர்வுக்கும் அந்தப் பண்பாட்டு உணர்வுக்கும் குந்தகம் விளைவிக்கின்ற வகையில் பிரிவினையைத் தூண்டிவிடுகிறார்கள் என்பதைத்தான் இந்த நேரத்தில் நான் பயங்கரமான குற்றச்சாட்டாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மொழி உணர்வு இருப்பதாலேயே, அல்லது மொழி உணர்வுகளைப் பற்றி மக்கள் மன்றத்திலே பேசுவதாலேயே என்னுடைய மொழி தலைநிமிர்ந்து இருக்கவேண்டுமென்று விரும்புவதாலேயே ஒரு இனமோ, ஒரு மொழியைப் பேசுகின்றவர்களோ நாட்டின்

ஒற்றுமையைக் குலைக்கிறார்கள் என்று சொல்வது மிகவும் மோசமான அரசியல் தந்திரம் என்பதை இந்த நேரத்தில் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். இந்த இந்தியா ஒன்று படுத்தப்பட்ட இந்தியா. இந்த இந்தியாவை உருவாக்குதற்கு, இந்த இந்தியாவைப் பலப்படுத்துவதற்குப் பல முயற்சிகளைச் செய்கின்ற காலகட்டத்தில் இன்று நாம் பலமான மொழிக் கொள்கையை, பலமான பண்பாட்டுக்கொள்கையை, கலாசாரத்தைக் காப்பாற்றுகின்ற தன்மையில் வளர்ந்து ஆளாகிக்கொண்டிருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

[பிற்பகல் 12-20]

இன்று இந்த மாமன்றத்தில் பேசுகிற வாய்ப்பை நாம் பெற்றிருக்கிறோம் என்று சொன்னால், பல தியாகிகள் சிந்திய ரத்தத்தால் எழுதப்பட்டிருக்கிற வரலாற்றில் பல தியாகிகள் சிந்திய ரத்தத்தை எண்ணெயாகக் கொண்டு ஏற்றப்பட்டிருக்கிற விளக்கை வைத்துக் கொண்டு, அது தரும் வெளிச்சத்தில் நின்று கொண்டுதான் இன்று இங்கே வந்திருக்கிறோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவரின் வாயிலாக மத்திய அரசுக்கு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏற்றியிருக்கிற விளக்கில் இருக்கிற எண்ணெய், தியாக தீபங்களாக ஏற்றி வைக்கப்பட்டிருக்கிற, வீரன் சின்னச்சாமி, ஈரோடு முத்து, சத்தியமங்கலம் அரங்கநாதன், செத்துப்போன ராஜேந்திரன் ஆகியவர்களின் உணர்வுகளில் வளர்க்கப்பட்டு வார்க்கப்பட்டிருக்கிற ரத்தத்திலிருந்து எடுக்கப்பட்ட எண்ணெயாகத்தான் இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதைப் போல '' விளக்கு வெளிச்சத்தில் இருந்து கொண்டு நீ திருக்குறளும் படிக்கலாம், திருட்டுக் கணக்கையும் எழுதலாம் '' என்று சொன்னதைப் போல, நாங்கள் அந்தத் தியாகிகள் சிந்திய ரத்தத்தினின்றும் எடுக்கப்பட்ட எண்ணெயை ஊற்றிய விளக்கின் வெளிச்சத்திலிருந்து கொண்டு, தேசிய ஒற்றுமைக்குக் குந்தகம் இல்லாமல் மொழி உணர்வை, பண்பாட்டைக் காக்கின்ற தன்மையை, இன உணர்வை வளர்க்கின்ற நிலையில் நல்ல பாடங்களைத்தான் திருக்குறளாகப் படித்துக் கொண்டிருக்கிறோம் என்பதையும், அதைப் பலவீனப்படுத்துகிற முயற்சியில் ஈடுபட்டு, அதிகாரம் தங்கள் கையிலே இருக்கிறது என்ற எண்ணத்தில் இந்தியா என்ற வீட்டுக்குள் இருக்கும் அந்த விளக்கை அணைத்து விட முயற்சி செய்து எட்டி உதைப்பார்களேயானால், சிம்னி உடைந்து, விளக்கு உடைந்து, அந்த விளக்கிலிருக்கிற எண்ணெய் சிதறி, எங்கேயாவது என்றாவது ஒரு நாள் அந்தத்



திரியிலிருந்து தீப் பற்றிக் கொண்டு, இந்தியாவே எரிந்து விடக் கூடாது என்ற காரணத்திற்காகத்தான், இந்த மொழி உணர்வைக் காப்பாற்றுகின்ற தன்மையை, அதன் உணர்வுகளை நாம் வெளிப்படுத்திக் கொள்கிறோம் என்று இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒரு கருத்தை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக் கொண்டு நான் விடைபெற்றுக் கொள்கிறேன். இந்த அரசு, இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் தீ குளித்து எழுந்த தியாகச் செம்மல்களுக்கு நினைவாலயம் அமைக்க வேண்டும். தமிழக வரலாற்றை எழுத விரும்புகிற இந்த அரசு, பேரறிஞர் அண்ணா அவர்களின் ஆட்சிக் காலம் தொட்டு இன்றைய ஆட்சி வரை, ஆட்சிக் கட்டிலில் தமிழ் உணர்வுகளைக் கட்டிக் காத்தவர்களை, தமிழ் மொழியைக் காப்பாற்றியவர்களை, தமிழ் இனத்திற்காகத் தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்களை, தமிழ் வரலாற்றிலே இடம் பெறுகிற வகையில் எப்படி இந்திய அரசு காலப் பெட்டகத்தை புதைத்ததோ, அது போல், தமிழக அரசு ஒரு காலப் பெட்டகத்தை, உலகத் தமிழ் மாநாடு நடைபெறுகிற நேரத்தில் நிறுவவேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

காங்கிரஸின் போராட்டங்களை, இந்திய சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட தியாகிகளின் வரலாற்றை, மூல பாட நூலாக அல்லது துணைப் பாட நூலாக வைத்து மாணவர்களுக்குப் போதிக்க வைப்பது போல், தமிழ் உணர்வை வளர்க்க தமிழ்ப் பண்பாட்டை மேன்மையடையச் செய்ய, தமிழைக் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணத்திற்காகத் தீக் குளித்தவர்களைப் பற்றியெல்லாம் தமிழ் பொது நூல் அல்லது துணைப் பாட நூலாக வரலாற்றில் இடம்பெறச் செய்து எழுத வேண்டுமென்று நான் மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு பக்கம் அறிவியலை வளர்க்கிறீர்கள். ஒரு பக்கம் பொறியியலை வளர்க்கிறீர்கள். ஆனால் ஒரு பக்கம் கேளிக்கை என்ற பெயரால் மித மிஞ்சிப் போன ஆபாசங்களால் அந்த அறிவியல் பொறியியலால் காப்பாற்ற முடியாமல் போகக்கூடிய தன்மையில் இளைஞர்களை, இளவட்டங்களை இழுத்துச் செல்லக்கூடிய ஒரு இழி நிலை இருக்கிறது என்பதையும் அப்படிப்பட்ட தணிக்கை போர்டுகளில், தணிக்கை ஸ்தாபனங்களில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு முன்பு விரும்பியது போல், நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களில் ஒரு பெண் உறுப்பினர் அல்லது ஆண் உறுப்பினர் அல்லது முதிர்ந்த கல்லூரிகளை நடத்துகிற பெரியவர்கள் அல்லது கல்வி அதிகாரிகளில் உயர்ந்த அதிகாரி ஒருவர் அங்கம் வகிக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. கோவைத்தம்பி] [1980 ஜூலை 12

அதைவிட முக்கியமான கருத்து ஒன்றை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொண்டு விடைபெற்றுக்கொள்ளலாம் என்று கருதுகிறேன். அண்ணாவின் பெயரால் காலப் பெட்டகம் அமைக்கின்ற முயற்சியை இந்த அரசு முழு முயற்சியுடன் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும், அந்தக் கால பெட்டகம்தான் எதிர்காலத்தில் நம்மிடையே இருந்த தமிழ் உணர்வை, நம்மிடையே இருந்த தமிழ்ப் பண்பாட்டை, நம்மிடையே இருந்த தமிழ்க் கலாசாரத்தைக் காப்பாற்றுகின்ற நிலையில் நாம் எப்படி இருந்தோம் என்று எதிர்காலத்தில் விளங்கும் என்ற கருத்தைச் சொல்லிக் கொள்கிறேன்.

பேரறிஞர் அண்ணாவின் பெயரால் அமைக்கப்பட்டிருக்கிற இந்த அண்ணா அரசு இந்தக் காரியங்களையெல்லாம் நிறைவேற்ற வேண்டும் என்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு புதிய இந்தியாவை உருவாக்கத் தமிழகம் வழிகாட்டியாக இருக்கவேண்டும் என்று சொல்லி, இந்தக் கல்வி மானியத்தை வரவேற்று அமர்கிறேன், வணக்கம்.

* திருமதி தா. இராசாம்பாள் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கல்வி மானியத்தின்மீது சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

'' ஒரு வயிற் பிறந்த பல்லோருள்ளும் மூத்தோன் வருக வென்னாது, அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும் '' என்பது போல், ஒரு வீட்டிற்கு அந்தக் கட்டடத்தின் அடிக்கால், கடைக்கால் எவ்வளவு அவசியமோ அது போல் நாட்டிற்கு, சமூகத்திற்குக் கல்வி அறிவு மிகவும் அவசியமாகும். அதன் முக்கியத்துவத்தை நாம் நன்றாக உணர்ந்திருக்க வேண்டும். கல்வி என்பது விவசாயத்திலிருந்து தொழில் அதிபர்கள் வரையில் மிக அவசியமான ஒன்று. அதை யாரும் மறுக்க முடியாது.

எனக்கு ஒதுக்கப்பட்டுள்ள நேரம் மிகக் குறைவாக இருப்பதன் காரணமாக நான் கூற வேண்டும் என்று நினைப்பதைக் கூற இயலாத நிலையில் இருக்கிறேன். என்றாலும் ஒரு சில கருத்துக்களைக் கூறி விடைபெறுகிறேன்.

நமது அனுபவத்தின்மூலம் நம் எதிர்கால வாழ்வின் உறுதிப்பாட்டிற்கு பாசனம், கல்வி, சுகாதாரம் ஆகிய மூன்றும் தன்னிறைவு பெற்றேயாக வேண்டும். இந்த வகையில் இந்த அரசு கல்விக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை சிறிது பெரிது என்று கூறுவதை விட செலவிடும் பாங்கு அறிவு பூர்வமானதாக இருக்க வேண்டும். அது முறையாகவும் சரியாகவும் செலவிடப்பட்டு மிகுந்த பயனைத் தரத்தக்கதாக இருக்க வேண்டும். அப்படி அமைய வேண்டும்.



1980 ஜூலை 12] [திருமதி தா. இராசாம்பாள்]

ஆரம்பக் கல்வி அடிப்படையானது. இது கைக்குழந்தையைப்போலவும் இளம் பயிர் போலவும் பேணிக் காக்கப்பட வேண்டியதாகும். ஆனால் 50 சதவீதம் பள்ளிகளுக்கு வகுப்பறைக் கட்டடங்கள் கிடையாது. பல சிற்றூர்களில் பிரிந்த கூரைகளை வேய்வது கூட இல்லை. அந்தப் பள்ளி மாணவர்கள் சமூகத்தில் நாலாந்தர மாணவர்களாக நடத்தப்படுவது நமக்கு தலைக் குனிவாகும். தீப்பிடிக்காத கட்டடங்கள் அனைத்துப் பள்ளிகளுக்கும் கட்டப்பட வேண்டும்.

உயர் நிலைப் பள்ளிகள் கட்டட வசதி இன்றி சாலையோர நிழலில் வகுப்புகள் நடத்தப்படுகின்றன. ஆகவே இப்போது ஒதுக்கப்பட்டுள்ள தொகை போதாது என்று நான் கூறுவதோடு, குறைந்தது உயர்நிலைப் பள்ளிக் கட்டிடங்களுக்காக 12 கோடி ரூபாயாவது செலவிடப்பட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதியில் உள்ள ஆறகளூர், வீரகனூர் ஆகிய உயர்நிலைப் பள்ளிகளுக்கும், தலைவாசல், தம்மப்பட்டி/ மேல்நிலைப் பள்ளிகளுக்கும் புதிய வகுப்பறைக் கட்டடங்கள் கட்ட நிதி ஒதுக்கம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிள்ளைகள் பள்ளிக்குச் சென்று விட்டு வீடு திரும்புவார்களா இல்லையா என்று பழுதடைந்துள்ள பள்ளிக் கட்டிடங்களை எண்ணிப் பார்க்கும் தாய்மார்கள் அச்சுறும் நிலை இருக்கிறது. உழைப்புக்கு உணவுத் திட்டம் ஒரு நல்ல திட்டம். ஊராட்சிப் பள்ளிக் கட்டிடங்கள் சில இதில் கட்டப்படுகின்றன. உயர்நிலைப் பள்ளிகளில் சுற்றுச் சுவர் கட்டவும், கழிப்பறைகள் அமைக்கவும், வகுப்பறைகள் கட்டவும் இந்த உழைப்புக்கு உணவுத் திட்டத்தைச் செயல்படுத்த, அதை விரிவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வறட்சியாலும் தொழில் வளம் பெருகாமலும் இருக்கக்கூடிய பின்தங்கிய பகுதிகளில் உள்ள பள்ளிகளுக்குக் கட்டடங்கள் கட்டிக் கொடுப்பதில் முன் உரிமை அளிக்க வேண்டும்.

பாடபோதனையில் அறிவியல் பாடத்திற்கு சாதனங்கள் அவசியம். பல பள்ளிகளில் இது மாணவர்களின் கண்களில் காட்டப்படுவதே இல்லை. நடமாடும் அறிவியல் ஆய்வுக் கூடத்தை எந்தப் பள்ளியும் சரிவரப் பயன்படுத்துவதாகத் தெரியவில்லை. பி.யு.சி. கல்லூரிகளில் இருந்தால் எல்லா வசதிகளையும் ஆய்வுக் கூடங்களையும் மாணவர்கள் அனுபவித்திருக்கமுடியும்.

கல்விக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறோமோ அதைவிடக் கண்டிப்பாக உடல் பயிற்சிக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். உடல் கட்டோடு இருந்தால்தான், பிள்ளைகள் சுகாதாரமான முறையில் வளர்க்கப்பட்டால் தான் அவர்கள் அறிவுபூர்வமாகப் படித்து முன்னேறி அறிவு பெற முடியும்.

குறைகள் எங்கே, எப்படி என்பதையெல்லாம் பேரவை உறுப்பினர்கள் அறிந்து வைத்திருக்கக் கூடும். ஆகவே கண்காணிப்பில் கண்டிப்பும் தணிக்கையில் அக்கறையும் அதிகாரிகளிடம் இருந்தால்தான் பள்ளிகளின் செயல்பாட்டில் திருத்தம் காண முடியும்.

தான் பணியாற்றுகிற பள்ளி நன்றாக இல்லை என்று வேறு நல்ல பள்ளிகளில் தமது பிள்ளைகளைப் படிக்க வைக்கும் ஆசிரியர்களும் இருக்கிறார்கள். தான் பிறந்த ஊரில் உள்ள பள்ளிகளில் இருக்கும் அவலங்களைப் போக்க மனமின்றி கான்வென்ட்களைத் தேடி அலைகிற தலைவர்களும் வசதி படைத்தவர்களும் ஏராளம். இதற்கெல்லாம் அரசாங்கம்தான் கவனமாக இயங்க ஒழுங்கு செய்ய வேண்டும்.

ஆசிரியர்கள் நியமனம் முதல் மாற்றுவது வரை விருப்பு வெறுப்பு இருக்கிறது. எனது தொகுதில் 1975-ல் பி.டி. ஆசிரியராக நியமனம் செய்யப்பட்ட ஒருவர் ஐந்தாண்டுகள் பணி புரிந்த பிறகு— அவர் எல்லாத் தகுதிகளும் பெற்று சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு பள்ளியில் பணியில் சேர்க்கப்பட்டிருந்தாலும் — இப்போது எவ்வித க் காரணமும் முன் தகவலும் இன்றி இப்போது பணியிலிருந்து நீக்கப்பட்டு அந்த இடத்தில் வேறு ஒருவரை நியமித்து விட்டார்கள். அவர் தற்போது கோர்ட்டுக்குச் செல்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கோர்ட்டில் இருப்பதைப் பற்றி இங்கே சொல்லக்கூடாது.

திருமதி தா. இராசாம்பாள் : நான் கோர்ட்டுக்குப் போக இருக்கிறார்கள் என்று தான் சொன்னேன். ஆகவே, ஆசிரியர்களுக்குள்ள எல்லாச் சலுகைகளும் வழங்கப்படவேண்டும். அவர்களுக்கு எந்தவிதமான தொல்லையும் கொடுக்காமல் பாதுகாப்பு அளித்து, கல்வி ஒன்றுக்கே அவர்களைப் பயன்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

[பிற்பகல் 12–30.]

* திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு எடுத்துக் கொண்டிருக்கின்ற கல்வி மானியத்திலே ஏறத்தாழ 224 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதிலே, மெடிகல், என்ஜினியரிங், தொழிற் கல்வி மற்ற பயிற்சிகளுக்கெல்லாம் சேர்த்து ரூ. 290 கோடி நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது நமது பட்ஜெட்டில் கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பங்காகும். எனவே, இதற்குரிய விவாத நேரத்தினையும் அதற்குத் தக்கபடி நீங்கள் அதிகப்படுத்தியிருந்தால், எல்லா உறுப்பினர்களும் தங்கள்



கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு வசதியாக இருந்திருக்கும். இருந்தாலும், இந்தக் குறுகிய காலத்தை எடுத்துக்கொண்டு, எனது கருத்தினை இந்த அவையிலே வைக்க விரும்புகின்றேன்.

மொத்தம் பள்ளிகளிலே படிக்கின்ற மாணவர்கள் 88.79 லட்சமாகவும், அதற்குமேல் கல்லூரிகளிலே படிக்கின்ற மாணவர்கள் 1,36 லட்சமாகவும் ஆக 90 லட்சம் மாணவர்களுக்கு மேல் படிக்கின்றார்கள். இது ஒரு பெரிய சாதனை என்பதை நான் மறுப்பதற்கு இல்லை. ஆனால், அதே நேரத்திலே 1-ஆம் வகுப்பிலிருந்து 5-ஆம் வகுப்பு வரை செல்லுகின்ற 6 வயது முதல் 11 வயதுவரை இருக்கக்கூடிய மாணவர்கள் எத்தனை சதவிகிதம் என்று பார்த்தால், 94.64 சதவீதமாகும். 6-ஆம் வகுப்பிலிருந்து 8-ஆம் வகுப்பு வரை அதாவது 11 வயதிலிருந்து 14-ஆம் வயது வரை படிக்கின்ற மாணவர்களின் சதவிகிதம் 59.68 சதவிகிதமாகவும், 9ஆம் வகுப்பிலிருந்து 10ஆம் வகுப்பு வரை அதாவது 14 வயது முதல் 16 வயது வரை படிக்கின்ற மாணவர்களின் சதவிகிதம் 38.44 சதவிகிதமாகவும், ஆக மாணவர்கள் ஆரம்பப் பள்ளிகளிலே படிக்கின்றபோது ஓரளவுக்கு வரவேற்கத் தக்கதாகவும், பின்னர் டிராப் அவுட் என்று சொல்லும்போது மாணவர்களின் எண்ணிக்கை குறைந்துகொண்டே வருவதையும் பார்க்க முடிகிறது. சென்ற ஆண்டு டிராப் அவுட் 51 சதவிகிதம் ஆக இருந்தது, இப்போது 33 சதவிகிதம் ஆகக் குறைந்திருப்பதாக அமைச்சர் அவர்கள் அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. இதற்கு என்ன காரணம் என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். திரு. குமரி அனந்தன் பேசும்போது, இதைப் பற்றி ஓரிடத்திலே சுட்டிக்காட்டினார்கள். ஏழைத் தொழிலாளர்கள் அல்லது சமுதாயத்தின் அடித்தளத்திலே இருக்கின்ற ஏழை எளிய மக்கள் அவர்களுடைய பிள்ளைகளைப் பள்ளிகளுக்கு அனுப்ப முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது, வீட்டிலே வைத்திருக்கக்கூடிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். ஆகவே, அவர்கள் 1 அல்லது 2 அல்லது 5ஆம் வகுப்புக்குப் பிறகு படிப்பை விட்டுவிட்டுச் செல்லக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதைக் குறைப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்துக்கொள்ளவேண்டுமென்று நான் பணிவோடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போலவே, கல்லூரிகளைப் பற்றிச் சொல்லும்போது, இப்போது சென்னைப் பல்கலைக் கழகத்தில் 110 கல்லூரிகளும், மதுரை பல்கலைக் கழகத்தில் 77 கல்லூரிகளும், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் ஒரு ரெசிடென்டியல் யூனிவர்சிடியாக மொத்தமாக ஒரு பல்கலைக் கழகமாக இருக்கின்றது. அதிகமான எண்ணிக்கையில் கல்லூரிகள் இருக்கின்ற காரணத்தினால், நிர்வாகத்தை சீர்பட நடத்த முடியவில்லை என்ற கஜேந்திர கட்கர் பரிந்துரைப் படி 30, 40 கல்லூரிகளுக்கு மேல் ஒரு பல்கலைக் கழகத்தில் இருக்கக்கூடாது என்ற பரிந்துரையை இந்த அரசு ஏற்றுக்கொண்டிருப்பதைக் கண்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

அரசு அறிவித்திருக்கின்றபடி திருச்சி, கோவை. காரைக்குடி பல்கலைக் கழகங்களை எவ்வளவு விரைவிலே ஆரம்பிக்க முடியுமோ, அவ்வளவு விரைவாக ஆரம்பித்து இந்தச் சுமையைக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்திலே, சென்னை, மதுரை, திருச்சி போன்ற பெரிய நகரங்களிலே இருக்கக்கூடிய கல்லூரிகளிலே இட நெருக்கடி இருக்கிறது. எல்லோரும் அங்கே கொண்டுபோய் தான் தங்களுடைய பிள்ளைகளைச் சேர்க்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். ஆனால், கிராமப்புறங்களிலே இருக்கின்ற கல்லூரிகளிலே இடங்கள் காலியாக இருக்கக்கூடிய சூழ்நிலை வருந்தத்தக்கது. அதிலேயும், அதிர்ச்சி தரக்கூடிய குறிப்பு என்னவென்றால், 1979–80-ஆம் ஆண்டில் ஏறத்தாழ 11,000-க்கு மேற்பட்ட இடங்கள் இந்தக் கல்லூரிகளிலே சும்மா இருந்திருக்கின்றது. அதற்கு மாணவர்கள் வரவில்லை என்று அமைச்சர் அவர்கள் இந்த அறிக்கைகளிலே குறிப்பிட்டிருப்பது ரொம்பவும் வருந்தத்தக்க நிலையாகும்.

ஏனென்றால் நம்முடைய மக்களின் மனோபாவம், அதிலும் எல்லோரும் தங்களுடைய பிள்ளைகளை நகரங்களில் இருக்கக் கூடிய கல்லூரிகளில் சேர்க்கவேண்டுமென்று விரும்புகிறார்கள். அரசாங்கம் மிகத் தீவிரமான கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் குறிப்பிட்டுக் கொள்ள விரும்புகிறேன். இனிமேல் எந்த நகரத்திலும் புதிதாகக் கல்லூரி ஆரம்பிக்கக்கூடாது. இனிமேல் ஆரம்பிக்கக் கூடிய கல்லூரிகளைக் கிராமப் புறங்களில்தான் ஆரம்பிக்க வேண்டும். அதே நேரத்தில் கிராமப் புறங்களில் ஒரு குறிப்பிட்ட தாலுகாவில் கல்லூரி இருக்கிறது என்றால் அந்த தாலுகாவைச் சேர்ந்த மாணவர்கள் அந்தக் கல்லூரியிலே தான் சேரவேண்டுமென்று அரசாங்கம் வற்புறுத்த வேண்டும்.

கிராமப் புறங்களில் கல்லூரி வைத்தால் பலவிதமான சவுகரியங்கள் உள்ளன. அமைதியான சூழ்நிலையில் மாணவர்கள் அமைதியாகக் கல்வியைக் கற்க வசதி ஏற்படும். அதையும் அமைச்சர் அவர்கள் உற்று நோக்கவேண்டுமென்று குறிப்பிட விரும்புகிறேன்.

பல்கலைக் கழகங்களிலே நடைபெறுகிற பல்வேறு தவறான செயல்களைப் பற்றி இங்கே உறுப்பினர்கள் சுட்டிக் காட்டினார்கள். எல்லோரும் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அவை முன்னவர் அவர்களும், எதிர் வரிசையில் வீற்றிருக்கும் மதிப்புக்குரிய பேராசிரியர் அவர்களும், அருமை நண்பர் அனந்தன் அவர்களும், அமைச்சர்கள் எஸ்.டி.எஸ்., பண்ருட்டி இராமச்சந்திரன் ஆகியவர்களும், என்னைப் போன்றவர்களும் அங்கே படித்தோம். ஆனால் அன்றைக்கு இருந்த நிலைமை வேறு, இன்று இருக்கக் கூடிய நிலைமை வேறு.





அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இன்றைக்கு ஆசிரியர்களும் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுகிறார்கள், மாணவர்களும் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுகிறார்கள். இதுபோன்ற ஒரு வருந்தத்தக்க நிலைமை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் சில ஆண்டுகளாக உருவாகி வந்திருக்கின்றன. இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும். எந்த நோக்கத்திற்காக அந்தப் பல்கலைக் கழகம் அமைக்கப்பட்டதோ அந்த நோக்கம் முற்றிலும் நிறைவேறாத வகையில் கொஞ்சம் கொஞ்சமாகச் சீரழிந்து கொண்டிருக்கிறது.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இந்த நிலைமை ஏற்படுவதற்கு ஒரு முக்கியமான காரணத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். சென்னைப் பல்கலைக் கழகமும், மதுரைப் பல்கலைக் கழகமும் நேரடியாக மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கின்றன. சென்னைப் பல்கலைக் கழகத்தில் 1,298 மாணவர்கள், ஆசிரியர்கள் 325 ; மதுரைப் பல்கலைக் கழகத்தில் 578 மாணவர்கள், ஆசிரியர்கள் எண்ணிக்கை 124 ; ஆனால் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் சிறிய பல்கலைக் கழகம் 6984 மாணவர்கள், ஆசிரியர்கள் எண்ணிக்கை 356. இந்த மாதிரி அதிகமான மாணவர்களைச் சேர்ப்பதன் விளைவாக, ஆசிரியர்கள் எண்ணிக்கை குறைவாக இருப்பதன் விளைவாக அடிக்கடிப் அமைதி இல்லாத நிலைமை ஏற்படுவதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் ஏற்படுத்தப்பட்ட நேரத்தில் தென்னாற்காடு மாவட்டத்தில் வேறு எந்தக் கல்லூரியும் இல்லை. அங்கேதான் இண்டர்மீடியட் வகுப்பு, பட்டப் படிப்பு அண்டை மாவட்டங்களிலிருந்தும் அங்கேதான் செல்ல வேண்டும். இன்றைக்குத் தென்னாற்காடு மாவட்டத்தில் அநேகமாக எல்லாத் தாலுகா தலைநகரங்களிலும் கல்லூரிகள் வந்திருக்கின்றன. கடலூர், விழுப்புரம் விருத்தாசலம், திண்டிவனம் ஆகிய பகுதிகளில் எல்லாம் கல்லூரிகள் இருக்கின்றன. ஆகவே, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் போஸ்ட்கிராஜுவேட் ஸ்டடி, பட்ட மேற்படிப்பு, ஆராய்ச்சி மட்டும் வைத்துக் கொண்டால் போதும். மற்றவற்றை, பி.ஏ. பி.எஸ்சி., போன்ற பட்டப் படிப்புகளை அறவே நீக்கி அந்த ஆசிரியர்களை மற்ற அரசினர் கல்லூரிகளில் எடுத்துக் கொள்ளும் அளவுக்கு மாணவர்களைப் பிரித்து அனுப்புவது மூலம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அமைதி நிலவச் செய்ய முடியும். குறிப்பிட்ட எந்த நோக்கத்திற்காக அது ஆரம்பிக்கப் பட்டதோ தமிழ் வளர்ச்சி, ஆராய்ச்சி, விஞ்ஞான ஆராய்ச்சி போன்ற நோக்கங்கள் நிறைவேறும் வகையில் அமைதியாகச் செயலாற்ற முடியும். அமைச்சர் அவர்கள் இந்த யோசனையைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

மதுரைப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்தவரையிலும் கூட அங்கிருக்கக்கூடிய ஆசிரியர்கள் அண்மையில் வேலை நிறுத்தம் செய்யப் போவதாக அறிவித்திருக்கிறார்கள். அந்தப் பல்கலைக்

கழகத்தின் நிலைமையும் சீராக இல்லை. ஒரே ஒரு உதா ரணத்தை மட்டும் நான் உங்களுக்குச் சுட்டிக் காட்ட விரும்பு கிறேன். பல்கலைக் கழகங்களிலே, சிண்டிகேட் என்று சொல்லப் படுகிற ஆட்சிக் குழுவிலே இருப்பவர்கள் தங்களுடைய புத்தகங் களை பல்கலைக் கழகப் பாடமாக வைப்பதற்கு சிபாரிசு செய்வ தில்லை என்ற மரபு இருக்கிறது. அது ஒன்றும் சட்டமல்ல, மரபு. சென்ற ஆண்டு பத்திரிகையில் ஒரு விளம்பரம் வந்தது. 1980–81ம் ஆண்டுக்கு பி.ஏ., பி.எஸ்.சி. போன்ற வகுப்புகளுக்கு தமிழ்ப்பாட நூல்களை வைப்பதற்கு புத்தகங்களை அனுப்புங்கள் என்று விளம்பரம் வந்தது. இருநூறுக்கு மேற்பட்டவர்கள் தங்கள் புத்தகங்களை அனுப்பியும் அவற்றையெல்லாம் ஒதுக்கி விட்டு பல்கலைக் கழகத்தில் மிகப் பெரிய பதவியில் இருப்பவர் கள் இரண்டு பேருடைய புத்தகங்களைப் பாடப் புத்தகமாக வைத்திருக்கிறார்கள்.

[பிற்பகல் 12-40]

இது ஒரு முறைகேட்டிற்கு வழி வகுக்கிறது. அந்தப் புத்த கங்களுக்கு, பாடப் புத்தகமாக வைப்பதற்கான தகுதி இல்லை என்று நான் சொல்லவில்லை. ஆனால் அந்தப் பல்கலைக் கழகத்தின் உயர்ந்த பதவியிலே இருப்பவர்களே தங்கள் புத்தகங் களை அந்தப் பல்கலைக் கழகத்திலே பாடமாக வைப்பார்களா னால் மற்றவர்களுக்குச் சந்தேகம் ஏற்படுகிறது, சீசரின் மனைவி சந்தேகத்திற்கு அப்பாற்பட்டவளாக இருக்க வேண்டுமென்று பழமொழி உண்டு. ஆகவே அமைச்சர் அவர்கள் இதை உற்றுக் கவனித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

அந்தப் பல்கலைக் கழகத்திற்குச் சொந்தமான அச்சகம் இருக்கிறது. அந்த அச்சகத்திலே அந்தப் பல்கலைக் கழகத்தி னுடைய வேலைகளைக்கூட அதிலே அச்சடிக்கமுடியாதபடி வெளியே கொடுத்து அச்சடிக்கிறார்கள். ஆனால் அந்தப் பல் கலைக் கழகத்தின் வேலைகளைக்கூட அச்சடிக்க முடியாதபடி அங்கே என்ன வேலை நடக்கிறது என்றால் அந்த இரண்டு பேர் களுடைய புத்தகங்களை அச்சடிக்கிற நிலைமைதான் இருக் கிறது, இதை அமைச்சர் அவர்கள் விசாரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்னைப் பல்கலைக் கழகத்தைப்பற்றி எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லிவிட்ட காரணத்தினாலே நான் அதைப்பற்றி எடுத்துச் சொல்ல விரும்பவில்லை. அமைச் சர் அவர்கள் தந்த குறிப்பிலே தமிழ்ப் பல்கலைக் கழகம் ஒன்று அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அது 'வேக்' ஆக இருக்கிறது. தமிழ்ப பல்கலைக் கழகம் என்றால் எந்த அடிப்படையிலே அதை அமைக்க இருக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்கள் என்று நான் எதிர் பார்க்கிறேன்.





தமிழ்நாட்டிலே எல்லாப் பல்கலைக் கழகங்களிலே சிறந்த 17 ஓரியண்டல் காலேஜ்கள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் இணைத்து ஒரு பல்கலைக் கழகம் அமைக்கப்பட இருக்கிறதா அல்லது தமிழ் ஆராய்ச்சிக்காக அதை ஒரு ரிசர்ச் இன்ஸ்டிட் யூட்டாக அமைக்கப் போகிறீர்களா என்று விளக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஆராய்ச்சித் துறையைப் பொறுத்தவரையில் இந்த அரசு பொறுப்பை ஏற்றுக் கொண்ட தற்குப் பிறகு அண்ணாமலை, சென்னை, மதுரை ஆகிய பல்கலைக் கழகங்களிலே தமிழ் மொழியிலே ஆராய்ச்சி செய்வதிலே முன் னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. அதை யாரும் மறுப்பதற்கில்லை. இன்றைக்கு ஆயிரக்கணக்கிலே பி.எச்.டி., எம்.லிட்., படித்தவர்கள் தயாரித்திருக்கின்ற கட்டுரைகள் அச்சேறாமல் இருக்கின்றன. வசதி படைத்தவர் மாணவர்கள், ஆசிரியர்கள் அவைகளை அச்சிட்டு வெளியிடுகிற நிலைமை இருக்கிறது. ஆனால் இரவு பகலாகப் பாடுபட்டுத் தயாரித்தவற்றை வெளிக்கொணர முடியாமல் அவைகள் எல்லாம் இருட்டறையிலே கிடைக்கின்றன. அவற்றை வெளிக்கொண்டுவருகின்ற முறையிலே அரசாங்கமே அவைகளை வெளியிட ஏற்பாடு செய்ய முன்வரவேண்டும் அல்லது அவர்களுக்கு உதவித் தொகைகள் கொடுத்து அவற்றை வெளியிடுவதற்கான ஏற் பாடுகளைச் செய்ய முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, திருக்குறள் ஆராய்ச்சியைப் பொறுத்தவரையில் சென்னை, அண்ணாமலை, மதுரைப் பல்கலைக்கழகங்களிலே நடத் தப்பட்டு வருகிறது. சென்னையிலே வள்ளுவர் கோட்டத்தை மதிப்பிற்குரிய கலைஞர் அவர்கள், அவர்களுடைய ஆட்சியிலே அமைத்தார்கள். அதை நான் பாராட்டுகிறேன். அது ஒரு காட்சிப் பொருளாக, வருகிறவர்கள் வேடிக்கை பார்ப்பதற்காக இருக்கின்ற ஒன்றாக இல்லாமல் இந்த மூன்று பல்கலைக் கழகங் களில் உள்ள திருக்குறள் பகுதிகளை இணைத்து மத்திய திருக்குறள் ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்தி அதை வள்ளுவர் கோட்டத்திலே அமைத்து திருக்குறள் ஆராய்ச்சியை நடத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நேரம் அதிகமாக இல்லாததால் முக்கியமான ஒன்றை மட்டும் நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். பச்சையப்பன் கல்லூரியைப் பற்றிய விஷயம். பச்சையப்பன் கல்லூரி டிரஸ் ட்க்கு ஏறத்தாழ 10 கோடிக்கு மேலான சொத்து உள்ளது. வருட வருமானம் 12 லட்சம்தான் வருகிறது. ஏராளமான சொத்துக் கள் அதற்கு இருக்கின்றன. சென்னை நகரத்திலேயே பல சொத்துக்கள் இருக்கின்றன. ஆயிரக்கணக்கான ரூபாய் வாடகை வரக்கூடிய சொத்துக்களிலிருந்து 200, 300 ரூபாய் வாடகையை நிர்ணயித்து மற்றவற்றை மோசடி செய்யக் கூடிய நிலைமை இருப்பதாக எனக்குத் தகவல் வந்திருக்கின் கின்றது. இந்த டிரஸ்டு அமைப்பு உயர்நீதி மன்றத்தின் திட்ட மாகும். 12–2–1909 ஏறத்தாழ 71 ஆண்டுகளுக்கு முன்னால் அமைக்கப்பட்ட திட்டம். அதற்குப் பின்னால் 1920 ஆம் ஆண்டிலே அது திருத்தப்பட்டிருக்கிறது.

[திரு. ப. நெடுமாறன்] [1980 ஜூலை 12

அதிலே அன்றைக்கு அட்வகேட் ஜெனரலாக இருந்த, மிகப் பெரிய வழக்கறிஞர்களான சங்கரன் நாயர் அவர்களும், பி. எஸ். சிவசாமி ஐயர் போன்றவர்களும் திட்டம் வகுத்து நிறைவேற்றியிருக்கிறார்கள். அரை நூற்றாண்டாகியும் அந்தத் திட்டம் இன்னும் மாற்றப்படாமல் அப்படியே இருக்கிறது. அதை அரசாங்கம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆண்கள் கல்லூரி மூன்று, பெண்கள் கல்லூரி மூன்று, உயர்நிலைப்பள்ளிகள், மத்திய தரப் பள்ளிகள் பலவற்றை பச்சையப்பன் டிரஸ்ட் ஏற்று நடத்திக்கொண்டிருக்கிறது. * *

பச்சையப்பன் கல்லூரி, பச்சையப்பன் டிரஸ்ட் நிர்வாகத்தை அரசாங்கம் எடுத்துக்கொள்வதற்கான அதிகாரம் இருக்கிறது. பச்சையப்பன் டிரஸ்டிலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால்,

Reservation of rights to Board of Revenue.

பச்சையப்பன் கல்லூரி நிர்வாகத்திலே தலையிட்டு, அதைச் சீர்படுத்துவதற்கு போர்டு ஆஃப் ரெவின்யூவிற்கு அதிகாரம் இருப்பதை அந்த ஸ்கீமே ஒப்புக்கொண்டிருக்கிறது. அதைப் பயன்படுத்தி ரெவின்யூ போர்டு அதிலே தலையிட்டு ஆவன செய்ய வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பச்சையப்பன் கல்லூரி நிர்வாகம் தனியார் டிரஸ்டின் கீழே இருக்கிறது. பதில் சொல்வதற்கு அவர்கள் யாரும் இங்கே இல்லை. சர்க்காருடைய மறைமுக ஆதரவோ, ஒத்துழைப்போ இருக்க முடியுமே தவிர,* குற்றச்சாட்டுகள் மாதிரி சொல்லியிருக்கிறீர்கள். *நடக்கிறது என்ற ஒரு வார்த்தை வந்திருப்பதாலே அவையின் குறிப்பிலே ஏறாமல் இருப்பது நல்லது. தனியார் துறையிலே இருக்கிற டிரஸ்ட், அதைப்பற்றி* நடக்கிறது என்று சொல்வது சரியாகத் தெரியவில்லை. *நடக்கிறதா, ஆராயுமா என்று கேட்கலாமே தவிர, நடக்கிறது என்று முற்றுப்புள்ளி வைத்த மாதிரிப் பேசுவது சரியாக வராது.

திரு. என். சங்கரய்யா: எந்தத் தனிப்பட்ட நபரையும் குறிப்பிட்டு அவர் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டிரஸ்டிலே இருக்கிறவர்கள் தனி நபர்கள்தான். கல்வி நிறுவனங்களில் இருக்கின்ற தவறு திருத்தப்பட வேண்டுமென்று சொல்வது வேறு ; நடக்கிறது என்று சொல்வது வேறு.

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1980 ஜூலை 12]

திரு. என். சங்கரய்யா : அரசாங்கம் பொறுப்பு ஏற்றுக் கொண்டிருக்கின்ற கல்வி என்ற துறையிலே வரக்கூடியது இது. கல்வியைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறோம். எந்த ஒரு கல்லூரியைப் பற்றியோ........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கல்லூரியைப் பற்றி வரவில்லை. டிரஸ்ட் போர்டைப்பற்றி வருகிறது. பல்கலைக் கழகத்தைப் பற்றியெல்லாம் சொன்னதிலே குற்றச்சாட்டுகள் வரவில்லை. இதில் * என்ற வார்த்தை சேர்ந்து வந்திருப்பதால் சொல்கிறேன்.

திரு. என். சங்கரய்யா : தனியார் கல்லூரியில் நடந்ததைப் பற்றி, இருக்கக்கூடிய * பற்றி, ஆசிரியர்களுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய அநீதிகளைப்பற்றிப் பேசியிருக்கிறோம்; நிவாரணம் அடைந்திருக்கிறோம். எனவே, அவர் டிரஸ்டைப்பற்றிப் பேசியதில் தவறு கிடையாது. இந்த மன்றத்திலேயே பேசியிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் சொல்வதைப் புரிந்து கொண்டால் பரவாயில்லை. *நடந்திருக்கிறது என்று சொல்வது நடந்து விட்டதாகப் பொருள். ஆகவே, நடந்திருந்தால் ஆராய்ச்சி செய்வதில் ஆட்சேபணை இல்லை. ஆராய்ச்சி செய்வது வேறு, நடந்திருப்பதாக முற்றுப்புள்ளி வைத்துப் பேசுவது வேறு. அதற்காகத்தான் சொல்கிறேன். அது ஒரு குற்றச்சாட்டாக வருகிறது ; அவர் பேசுவதில் வந்தது. அவர் பேசுகிற பொழுது கவனித்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன்.

திரு. என். சங்கரய்யா : இதேபோல் எத்தனையோ தனியார் நிறுவனங்களைப்பற்றி, அவை சம்பந்தப்பட்ட துறைகளின் மானியங்கள் வருகின்ற பொழுது பேசித்தான் ஆக வேண்டியிருக்கிறது. உதாரணமாக, நிலச்சீர்திருத்தம் என்று வந்தால் பிரைவேட் டிரஸ்ட், பப்ளிக் டிரஸ்ட் என்று இருக்கிறது. அதைப் பற்றிப் பேச வேண்டியிருக்கிறது. எப்படி, அரசாங்கத்திற்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை என்று சொல்ல முடியும்? நாம் புகார்களைச் சொன்னால்தான் மாண்புமிகு கல்வித்துறை அமைச்சரவர்கள் அதைப்பற்றி ஆராய்வதற்கும், அதைப்பற்றி முடிவுக்கு வருவதற்கும் நல்லதாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆராயுங்கள் என்று சொல்லலாம் என்று நான் சொன்னேன். அதில் ஒன்றும் தவறு இல்லை. ஆனால், நடந்துகொண்டிருக்கிறது, நடந்து விட்டது என்ற மாதிரி வேண்டாம் என்பதை மட்டும்தான் சொன்னேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1980 ஜூலை 12

திரு. ப. நெடுமாறன் : மதிப்பிற்குரிய பேரவைத் தலைவரவர்களே, பச்சையப்பன் கல்லூரி நிர்வாகத்தைச் சீர்படுத்த வேண்டுமென்பதுதான் என்னுடைய நோக்கமே தவிர, தனிப்பட்ட யாரையும் நான் குற்றஞ்சாட்டவில்லை. ஆனால், அந்த நிர்வாகத்தைச் சீர்படுத்தாவிட்டால் வள்ளல் பச்சையப்பன் அவர்கள் என்ன நோக்கத்திற்காக அவருடைய சொத்துக்களை எழுதி வைத்தார்களோ அந்த நோக்கம் நிறைவேற முடியாமல் போய்விடும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமையிலே ஒன்பது டிரஸ்டிகள் இருக்க வேண்டும் ; ஆனால் மூன்றே டிரஸ்டிகள்தான் இருக்கிறார்கள் ; ஆறு டிரஸ்டிகள் போட முடியாத சூழ்நிலை, ஹைகோர்ட்டிலே வழக்கு, மற்ற விவகாரங்களெல்லாம் இருந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, 1920-ஆம் ஆண்டு வகுக்கப்பட்ட ஹைகோர்ட் ஸ்கிமை மாற்றுவதற்கு நம்முடைய அட்வகேட்-ஜெனரல் மூலமாக அரசாங்கம் ஒரு புதிய திட்டத்தை வகுத்து, இன்றைக்கு நவீன காலத்திற்கேற்றவகையில் டிரஸ்டிகளையும் மற்றும் நிர்வாக அமைப்புகளையும் ஏற்படுத்த அரசாங்கம் ஹைகோர்ட்டிலே, அட்வகேட்-ஜெனரல் மூலம் உரிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று அமைச்சரவர்களை நான் வேண்டிக்கொள்கிறேன்.

இப்பொழுது உடனடியாக நம்முடைய ரெவின்யூ போர்டுக்கே அதிகாரம் இருக்கிறது, அதிலே தலையிட்டுச் சீர்படுத்துவதற்கு. ஆகவே, ரெவின்யூ போர்டின் மூலம் பச்சையப்பன் நிர்வாகத்தை உடனடியாக எடுத்துக் கொண்டு அதற்கான காரியங்களைச் செய்வதற்கு அமைச்சரவர்கள் உத்தரவு இட வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் குறிப்பிட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

[பிற்பகல் 12-50]

*திரு. க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 3 ஆண்டுக்காலமாகக் கல்வி மானியத்தின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்கிற வாய்ப்பைப் பெற்றிருக்கிற நான் ஏற்கெனவே தெரிவித்த கருத்துக்களோடு தொடர்புடைய எண்ணங்களிலேதான் இன்றையதினம் என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டியவனாக இருக்கின்றேன்.

கல்வி மானியத்திற்காக ரூபாய் 224 கோடி ஒதுக்கப்படுவதும், அதோடு தொடர்புடைய கல்விப் பணிகளுக்காக, கட்டிடங்கள் முதலான காரியங்களுக்காக, மருத்துவக் கல்வி, வேளாண்மைத் துறைக் கல்வி முதலான கல்விக்காக, இவைகளுக்கெல்லாம் சேர்த்து ரூபாய் 290 கோடி ஒதுக்கப்படுவதும் மிகப் பெரிய தொகையாக நம்முடைய கண்ணுக்குத் தெரிந்தாலும் கூட, கல்வி



1980 ஜூலை 12] [திரு. க. அன்பழகன்]

நாட்டு மக்களுக்கு எந்த அளவு தேவைப்படுகிறதோ, அந்த அளவோடு ஒப்பிட்டு நோக்குகிறபோதோ, இந்தத் துறையை நல்ல முறையிலே, செம்மையாக நடத்துவதற்கும், இதற்கு இடையூறாக இருக்கிற குறைகளையெல்லாம் நீக்குவதற்கும் இந்த ரூபாய் 290 கோடியே கூட போதுமானதல்ல என்ற கருத்தை நான் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

மாநில அரசினுடைய நிதி வளம் பெருகுமானால், அல்லது கல்விக்காக ஒதுக்கக்கூடிய நிதிஅதிகமானால்தான் அதன் மூலமாக, நிச்சயமாகத் தமிழ்நாட்டு மக்களை முன்னேற்றுவதற்கான வாய்ப்பு வளரும். அந்த வாய்ப்பைத் தொடர்ந்து உருவாக்க வேண்டிய ஒரு கடமை கல்வித்துறைக்கு இருக்கிறது.

இன்றைய தினம் கல்வித் துறையிலே செலவிடப்படுகிற நிதிக்கு, அந்த நிதி முழுவதற்கும் ஈடான அளவிற்குப் பலன் கிடைக்கிறதா என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டிய ஒரு கடமை இருக்கிறது. செலவிடப்படுகிற நிதி, செலவிடப்பட்டுத் திர வேண்டுமென்பதிலே எனக்கு மாறுபாடில்லை. ஆனால், 'யுட்டிலிட்டி' இருக்கிறதா ? அதற்கான முழுப் பயன் கிடைக்கிறதா ? அந்தப் பயன் குறையுமானால், என்னென்ன வகையிலே அந்தப் பயன் குறைகிறது ; எது, எது இடையூறாக இருக்கிறது என்பதை ஆராய வேண்டிய ஒரு அவசியத்திலே இருக்கிறோம்.

கல்வி என்பது தொடர்ந்து புதிய பரிசோதனைக் கூடத்திலே வைக்கப்பட்ட ஒரு பொருளாக இருக்கிறதே தவிர, பரிசோதனைகளுக்கு அப்பாற்பட்ட, ஒரு ஒழுங்கு முறைக்கு உட்பட்ட, நிலையாக நடைமுறைப்படுத்தக் கூடிய ஒன்றாக, இன்னும் உருவாகவில்லை என்பது நாம் எந்த அளவு பின் தங்கியிருக்கிறோம் என்பதற்குச் சான்று. அது அகில இந்திய நிலைமையாகக் கூட இருக்கலாம் ; அதற்குப் பின்னணி வேறு எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம். நாம் கல்வித் துறையிலே இதுதான் நம்முடைய சரியான பாதை என்று எண்ணி செயல்பட முடியாத ஒரு கட்டத்திலேதான் இன்றைக்கும் கூட இருக்கிறோம்.

இன்றைக்கும் நாம் ஏற்றுக் கொண்டிருக்கிற கல்வி முறை சீர்திருத்தங்கள் செம்மையாக நிறைவேற்றப்பட வில்லையென்ற ஒரு கருத்தும், ஏற்கப்பட வேண்டிய சீர்திருத்தங்கள் இன்னும் பல இருக்கின்றன என்ற ஒரு எண்ணமும், கல்வியினுடைய குறிக்கோள் வெற்றி பெறவில்லை என்ற ஒரு ஏக்கமும், இந்தக் கல்வியினுடைய குறிக்கோள் இது என்று தீர்மானிக்கப்படுவதிலேயே குழப்பம் இருக்கிறது என்ற ஒரு எண்ணமும் இன்றைக்கும் கூட கல்வியாளர்களிடையே மிகப் பெரிய அளவுக்கு இடம் பெற்றிருக்கிறது.

[திரு. க. அன்பழகன்] [1980 ஜூலை 12

மாணவர்களை, அதிக அளவிலே கல்வியிலே ஈடுபடச் செய்வது என்ற ஒரு முயற்சி ; 14-வயது வரையிலே உள்ள குழந்தைகள், பள்ளிச் செல்வது ஏறத்தாழ கட்டாயமாகக் கருதப்பட வேண்டிய நிலையில் அவை நிறைவேற வேண்டுமென்ற ஒரு முயற்சி ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு முயற்சியாக இருக்கிறது. 5-லேயிருந்து 10 வயது, 11 வயது வரையிலே, ஏறத்தாழ 96 விழுக்காடு பிள்ளைகள் பள்ளிக்கூடத்திலே சேர்ந்து விட்டார்களென்று அறிக்கையிலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த 95 விழுக்காடு என்று தெரிவிப்பதிலே அமைச்சருக்கு மகிழ்ச்சி ஏற்படக் கூடும். ஏற்கனவே, அது 88 ஆக இருந்தது, 95 ஆக ஆக்கியிருக்கிறோம் என்று.

முதல் வகுப்பிலே 95 விழுக்காடு அளவுக்கு, 96 விழுக்காடு அளவுக்குப் பிள்ளைகள் பள்ளிகளில் சேர்ந்தாலும் கூட, 4-வது வகுப்புக்கு வருகிறபொழுது, அந்த விழுக்காடு குறையத்தான் செய்யும். ஆனால், அரசாங்கத்திலே பள்ளியிலே சேர்ந்த மாணவர்கள், இடையிலே விட்டுவிட்டுப் போகாமல் இருப்பதற்காக, அவர்களைப் பிணைத்து வைப்பதற்காக ஒரு நல்ல முறையை மேற்கொண்டிருக்கிறார்கள். மூன்றாவது வகுப்பு வரையிலே யாருக்கும் எந்தக் காரணத்தைக் கொண்டும், படிக்கிற பிள்ளைகள், தேர்வு பெறவில்லை என்ற செய்தி வரக் கூடாது. அவன் பள்ளிக்கூடம் வந்தாலும் சரி, சுவர் ஓரத்திலே நின்றுவிட்டுப் போய் விட்டாலும் சரி, ஆசிரியர்களே பள்ளிக்கூடம் வந்தாலும் சரி, வராவிட்டாலும் சரி, அந்தப் பிள்ளைகள் 3-ம் வகுப்பு வரையிலே ஆண்டுதோறும் தேறி விட்டார்களென்று அடுத்த வகுப்புக்கு அனுப்பப்படவேண்டுமென்ற முறை வைக்கப்பட்டிருக்கிறது.

எனக்கு அதிலே அதிக மாறுபாடு கிடையாது. படித்தவனுக்கும் படிக்காதவனுக்கும் சில நேரத்திலே வித்தியாசம் தெரியாத பொழுது, இந்த 3-வது வகுப்பிலே அவன் எழுதுகிற தேர்வை வைத்துக் கொண்டு அவனை நிறுத்த வேண்டுமென்று நான் கட்டாயமாகச் சொல்ல விரும்பவில்லை.

அதன் காரணமாகத்தான் 100-க்கு 95 என்ற எண்ணிக்கையை நீங்கள் எட்டி இருக்கிறீர்களே தவிர, அது முதல் வகுப்பிலே தேர்வு உண்டு என்ற நிலைமை வருமானால், இரண்டாவது வகுப்பிலே வருமானால், மூன்றாவது வகுப்புக்கு வருமானால், அப்பொழுது 100-க்கு 65 ஆகத்தான் அந்த எண்ணிக்கை தேறுமே தவிர, அதற்கு மேல் தேறுவது என்பது கடினம். அதற்குக் காரணம் அமைச்சரவை அல்ல. கல்வித் துறை அல்ல. நாட்டின் நிலை, நாட்டின் நிலைமைக்கு உட்பட்டுத்தான் அது நடைபெற முடியும்.

இந்தப் பிள்ளைகளுக்குத் தேர்வு வைக்கவில்லை என்பதை ஒரு கோணத்திலே நான் வரவேற்கிறேன், என்றாலும் கூட இன்னொரு கோணத்திலே தேர்வு வைப்பதுதான் நல்லது என்ற



1980 ஜூலை 12] [திரு. க. அன்பழகன்]

எண்ணம் எனக்கு உண்டு. காரணம் படிப்பதிலே ஏற்படுகிற அக்கரையை பிள்ளைகளுக்கு சிறு வயதிலே ஏற்படுத்தினால் தவிர, படிக்கிற உணர்வு குறைந்து போய்விட நேரலாம். இன்னும் ஒரு மூன்றாண்டு கழித்து அன்றைக்கு 5-ம் வகுப்பு மாணவர்கள் எல்லாம் சேர்ந்து, கிளர்ச்சி நடத்துவார்கள்.

மூன்றாம் வகுப்பு வரையிலே எங்களுக்குத் தேர்வே வைக்கவில்லை. தேர்வு வைத்தாலும் எங்களுக்கு வெற்றி தோல்வி அறிவிக்கவில்லை என்று. அதனால் 5-வது வகுப்புக்குத் தேர்வு ஏன் என்று, போராட்டம் ஆரம்பமாகி, அப்புறம் 8-வது வகுப்பிலே 4 ஆண்டு கழித்து மறுபடியும் ஆரம்பமாகி, கடைசியிலே எஸ்.எஸ்.எல்.சி. தேர்வுக்கு எதிர்ப்புப் போராட்டம் வருகிற அளவுக்கு ஒரு சூழ்நிலை மனப்பான்மையை வளர்ப்பதற்கு இது காரணமாக ஆகிவிடுமோ என்பதை நமது கல்வித் துறை அமைச்சர் அவர்களும், மற்றவர்களும் ஆழ்ந்து எண்ணிப் பார்க்க வேண்டும்.

தேர்வுகளிலே 100-க்கு 5 பேர்கள், 10 பேர்களுக்கு மேல் தோல்வியுற்றதாக அறிவிக்கப்பட்டு மாணவனுடைய கல்வி முயற்சி அவநம்பிக்கைக்கு ஆட்படுத்தப்பட்டு விடக் கூடாது என்று சொல்வதைக் கூட நான் வரவேற்கிறேன். தேர்வுக்கு ஒரு மதிப்பு இருக்க வேண்டும். ஏதோ ஒரு வகையிலே அது கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து நான் சொல்ல விரும்புவது, கல்வி வளர வேண்டுமானால் பள்ளிக்கூடம் அமைகிற சூழ்நிலையைப் பொறுத்துத் தான் கல்வி வளர்ச்சிக்கு ஒரு அடிப்படையை வகுக்க முடியும். இங்கே குறிப்பிட்டிருக்கிற பலருடைய வெட்டுத் தீர்மானங்களைப் படித்துப் பார்க்கிறபோது, பல பேர் தங்கள் ஊருக்கு உயர்நிலைப் பள்ளி தேவை, மேல் நிலைப் பள்ளி தேவை என்றும், பள்ளிக்குக் கட்டிடம் தேவை என்றும் கேட்டிருக்கிறார்கள். குறிப்பாக 3, 4 வெட்டுத் தீர்மானங்களைப் பார்க்கிற போது, '' அருமனை எல். எம். நடுநிலைப் பள்ளியில் கூரை வேயாததன் காரணமாக..குலசேகரம் மேல் நிலைப் பள்ளி கூரை வேயாததின் காரணமாக..விளவம்கோடு தொகுதியில் உள்ள ஒரு பள்ளி, இன்னும் ஒரு பள்ளி விளவங்கோடு தொகுதியில் உள்ள களியக்காவிளை அரசு ஆரம்பப் பள்ளியில் கூரை வேயாததின் காரணமாக..'' என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆக இந்தப் பள்ளிகள் கூரை வேயாமல் நடந்து கொண்டு இருக்கின்றன. சுற்றுச் சுவர் இருக்கிறது ஆனால் மேலே கூரை இல்லை. கல்வியினுடைய நிலையும் ஏறத்தாழ இப்படித்தான் இருக்கின்றது. அந்தக் கூரை இல்லாத சுவர்களுக்கு என்ன பெயர் என்பது அமைச்சருக்குத் தெரியும். அதை நான் சொல்ல விரும்பவில்லை.

[திரு. க. அன்பழகன்] [1980 ஜூலை 12

ஏறத்தாழ எல்லா பள்ளிக்கூடங்களும் அல்ல, சில பள்ளிக் கூடங்கள் குட்டிச்சுவராகத்தான் இருக்கின்றன. சில பள்ளிக் கூடங்கள் சுவர் இல்லாது இருக்கின்றன. சில பள்ளிக்கூடங்களுக்கு அடிப்படைத் தேவையான கட்டிடங்கள் இல்லை. சில பள்ளிக் கூடங்களில், 100, 200 பேர்கள் படிக்கின்ற பள்ளிக்கூடங்களில் அவர்களுக்குச் சாதாரண கழிப்பிடங்கள் கூட இல்லை. இன்னும் சில பள்ளிக் கூடங்களில் அவர்களுக்குத் தேவையான வேறு சில வசதிகள், குடிநீர் வசதி கூட அளிக்கப்பட முடியவில்லை. ஆசிரியர்களுடைய முயற்சியில் ஒன்றிரண்டைச் செய்து கொடுக்க முடிந்தால் அதை நாம் வரவேற்கிறோம். ஆனால் அடிப்படைத் தேவைகள் ' மினிமம் நீட்ஸ் புரோகிராம் ' என்று மற்றவற்றிலே குறிப்பிடுவதைப்போல, பள்ளிக்கூடங்களுக்கு 50, 100 பேர்கள் படிக்கிற இடமாக இருந்தாலும், அதனுடைய குறைந்த பட்சத் தேவை எவையோ அதை ஓராண்டு, இரண்டாண்டு காலத்தில் நிறைவேற்றுவதற்காக ஒரு 10 கோடி ரூபாய் ஒதுக்கி அந்தக் கடமையைச் செய்வது என்பது ஒரு தகுந்த சூழ்நிலையை உருவாக்கப் பயன்படும்.

முதலமைச்சர் அவர்கள் ஏற்கனவே பேசி இருந்தார்கள். கிராமங்களில் தாய்மார்களுக்கு கழிப்பிடங்கள் கட்டித் தருகிற காரியத்தை இந்த அரசு கிராஷ் புரோகிராம் என்று ஏற்றுநடத்தும் என்று சொன்னார்கள். இப்போது ஏதோ ஒரு ஒன்றியத்திலே அது தொடங்கப்படும் என்று அறிவித்துள்ளதாக நான் அறிகிறேன் 375, 374 ஒன்றியங்களில் இது ஒன்று. அது எந்த அளவுக்கு நடைபெறுமோ, அது வேறு.

ஆனால், பள்ளிக்கூடத்திலே கழிப்பிடம் அமைப்பது, குடிநீர் வசதி செய்வது என்பதும் குறைந்த பட்ச கட்டிடத் தேவையை நிறைவேற்றுவது என்பதும், பள்ளிக்கூட படிப்புக்கு இன்றியமையாத தேவை. நான் ஏற்கனவே ஒரு முறை சொல்லியிருக்கிறேன். குறைந்த பட்சத் தேவைகளுக்கான திட்டங்களை நிறைவேற்றுவதிலே முதலில் தொடக்கப் பள்ளிகளை எடுத்து, ஒரு பள்ளிக்கு ஆயிரம் ஆகலாம், 3 ஆயிரம் ஆகலாம், 5 ஆயிரம் ஆகலாம், அதற்கு ஒரு கணக்கெடுத்து அதை நிறைவேற்றித் தரவேண்டும்.

இரண்டாவது, உயர்நிலைப் பள்ளிக் கூடத் தேவைகளிலே லேபரட்டரி மிக இன்றியமையாத தேவையாகும். இங்கே பேசிய அம்மையார் எடுத்துச் சொன்னதைப் போல சில இடங்களில் உயர்நிலைப் பள்ளிகளில் போதுமான அளவுக்கு விஞ்ஞானக் கருவிகளைப் பரிசோதித்துப் பார்க்கிற வாய்ப்பு கிடைக்கவில்லை. கல்வி மாவட்டத்திற்கு ஒரு ஊர்தியின் மூலமாக லேபரட்டரி வசதி பிள்ளைகளுக்குக் கிடைக்கச் செய்வதற்கு மேல்நிலைப் பள்ளிகளுக்கு இப்படி ஒரு ஏற்பாடு இருக்கிறது என்று சொன்னாலும் கூட, இன்னும் எத்தனையோ மேல் நிலைப் பள்ளிகளில் இந்த வசதிகள் போதுமானதாக இல்லை. மேல் நிலைப் பள்ளி



1980 ஜூலை 12] [திரு. க. அன்பழகன்]

களுக்கு இந்த வசதிகள் எந்த அளவுக்கு ஏற்படுத்தப் படவேண்டுமோ அந்த அளவுக்கு ஏற்படுத்தப்படவில்லை. இதனுடைய விளைவாக, லேபரட்டரி இல்லாமல், லைப்ரரி (நூலகம்) இல்லாமல் படிப்பதிலே ஊக்கம் ஏற்படுத்துவதற்கான ஒரு சூழ்நிலையை நம்மால் உருவாக்க முடியாது.

[பிற்பகல் 1—00]

இவைகளுக்காக அதிகம் செலவாகும், உடனடியாக முடியாது என்று பதில் சொல்லலாம். ஆனால் அரசாங்கத்திலே சில காரியங்களைச் செய்யவேண்டுமானால் 21,000 பள்ளிகளில் நிறைவேற்ற வேண்டுமானால் 2,000 பள்ளிகளில் இந்த ஆண்டு நிறைவேற்றப்படுகிறது. படிப்படியாக இதை நிறைவேற்ற இருக்கிறோம் என்று சொல்லலாம். அப்படி நிறைவேற்றுகிறோம் என்று சொன்னால் தமிழ் நாட்டில் முழுமையாக நிறைவேற்றுவதற்கு காலம் தாழ்ந்து போய்விடும். மக்களின் கல்வியை நல்ல வகையில் முன்னேற்றுவதற்கு அரசாங்கம் தனிக்கவனம் செலுத்தவேண்டும். ஆகவே இந்த வகையில் அதிகப்படியான நிதியை அதற்கு ஒதுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்போதுதான் படித்து வருகிற மாணவர்கள் அறிவில் ஆர்வம் உள்ளவர்களாக தெளிவு உடையவர்களாக இருக்க முடியும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆசிரியர்களால் மட்டும் மாணவர்களை ஊக்குவித்து விட முடியாது. இன்னும் கூட ஒரு கருத்து அண்மையில் பத்திரிகையில் வந்து இருக்கிறது. ஆசிரியர்கள் பெரும்பாலும் பாடம் நடத்துகிறபோது சொன்னதையே சொல்லி திரும்பத் திரும்ப சொல்லி ஊக்கம் அற்றவர்களாக இருப்பதால், பள்ளிகளில் மாணவர்கள் தாங்களாவே ஊக்கம் பெற்று படிக்கின்ற ஒரு முறையைக் கொண்டுவந்து இருக்கிறார்கள். அத்தகைய முறை மத்தியப் பிரதேசத்தில் ஒரு வட்டாரத்தில் சோதனையில் இருக்கிறது. ஏறத்தாள 40,000 மாணவர்கள் அங்கே பயில்கிறார்கள். அவர்களைப் பயிற்றுவிப்பதற்கும், அவர்களுக்கு பள்ளிப் பயிற்சி முறை மூலம் இல்லாமல் தாங்களாகவே ஊக்கம் பெற்று படிக்கிற முறையைக் கொண்டு வந்து இருக்கிறார்கள். இந்து பத்திரிகை இதனை எடுத்துக் காட்டித் தலையங்கம் கூட எழுதி இருக்கிறது. நான் அந்தச் செய்தியை ஏற்புடை முறை என்று வரவேற்கிற நிலையில் இல்லை.

நம்முடைய நாட்டிலே பல்வேறு பிற்படுத்தப்பட்ட மக்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் ஆசிரியர்கள் உதவியின்றித் தனியாகப் படித்துகொள்ள இயலாத நிலையில் இருக்கிறார்கள். அப்படிப் பட்டவர்களுக்கு சிறு ஊக்கம் தேவை. ஆகவே அவர்களுக்கு

[திரு. க. அன்பழகன்] [1980 ஜூலை 12

ஊக்கம் அளிக்கிற வகையில் ஆசிரியர்கள் போதுமான அளவிற்கு இருக்கவேண்டும். ஆசிரியர்கள் மாணவர்களிடையே ஒரு நல்ல உறவு இருக்கவேண்டும். அவர்கள் அறிவு பெறும் வாய்ப்பு குறைந்தவர்கள். அவர்கள் அறிவு பெறுவதற்கு அதிக அக்கரை செலுத்தவேண்டும். அதற்கேற்ப நடவடிக்கைகள் எடுக்கப்படுமானால் நிச்சயமாகச் சொல்வேன்—ஏற்கனவே இந்தக் கல்வி மானியத்தில் பேசுகிறபோது சொல்லியிருக்கிறேன்—பள்ளிகளில் கட்டிடங்கள்; ஆய்வுக் கூடங்கள் எந்த அளவிற்கு இருக்கின்றன. எந்த அளவிற்கு மேலும் தேவை; எந்த அளவிற்கு நிதி இருக்கிறது என்பதைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, எந்த அளவிற்கு வசதி இருக்கிறதோ அந்த அளவிற்கு மட்டும் செய்வது என்று இல்லாமல் ஒரு புள்ளி விவரத்தை குறிப்பாக எடுத்து, இந்த ஓரிரு ஆண்டுகளில் இத்தனை வசதிகளையும் செய்து விடவேண்டும் என்று முடிவு எடுத்து, அதற்கு நிதி ஆதாரங்களைத் திரட்டுவதற்காக பள்ளிக்கூட வளர்ச்சிக் கழகம் என்று ஒரு தனி கழகம் கார்பரேஷன் ஆரம்பிக்க முடியுமா என்று பார்க்கவேண்டும். அந்த வகையில் செய்தால், எல்.ஐ.சி. யிடமிருந்தோ அல்லது வேறு நிறுவனங்களிடமிருந்தோ நிதியைப் பெற்று அவற்றை உடனடியாகச் செய்து கொடுக்க முடியும். இந்த ஆலோசனையை அரசு பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பள்ளிக் கூடங்களைப் பொறுத்தவரையில், பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் ஏற்கனவே நடைபெற்ற அளவிற்கு நடைபெறுவது இல்லை என்கிற குறைபாடு இருக்கிறது. சென்ற ஆண்டே நான் சொல்லி இருக்கிறேன். புள்ளி விவரங்கள் தருகிறபோது இந்த ஆண்டு இவ்வளவு நடந்தது. இந்த ஆண்டு முதல் இன்றுவரை இவ்வளவு நடந்தது என்று தாருங்கள். எந்த ஆண்டில் ஆரம்பிக்கப் பட்டது என்று சொல்லாமல், 1979-ம் ஆண்டு அக்டோபர் வரை 15 கோடி மதிப்புள்ள பொருள்கள் பெறப்பட்டன, 578 மாநாடுகள் நடைபெற்றன என்று சொல்லப்பட்டு இருக்கிறது. 1977-ல் நடைபெற்றது எவ்வளவு, 1978-ல் நடைபெற்றது எவ்வளவு, 1979-ல் நடைபெற்றது எவ்வளவு என்று குறிப்பாக புள்ளி விவரங்கள் தருவதன் மூலமே உண்மை நிலையை அறிந்து கொள்ள முடியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் ஒரு 15 ஆண்டு காலத்தில், அல்லது 20 ஆண்டு காலத்தில் இவ்வளவு நடைபெற்று இருக்கின்றன என்று சொன்னால் அது உள்ளபடியே வரவேற்கத் தக்க தொன்றாக இருக்காது. அமைச்சர் அவர்கள் அறிக்கையில் கூட எந்த ஆண்டு முதல் இது தொடங்கப்பட்டது என்று குறிப்பிடப்படவில்லை. அந்த அடிப்படையான தகவலை கல்வித் துறை சொல்லாமல் விட்டது வருந்தத்தக்கது என்பதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.



1980 ஜூலை 12] [திரு. க. அன்பழகன்]

இந்த ஆட்சி வந்தற்குப் பிறகுதான் பிளஸ் 2 கல்வித் திட்டம் கொண்டு வந்ததாகவும், அதனால் மாணவர்களிடையே ஒரு நல்ல வரவேற்பு இருக்கிறது என்றும் சொல்கிறார்கள். இது வரவேற்கத்தக்க ஒன்று தான். அதிலே ஒன்றும் கருத்து வேறுபாடு இல்லை. இந்தத் திட்டத்தை வகுக்கிற போது ஏற்கனவே இருந்த புகுமுகக் கல்வியை உடனடியாக நீக்கியதனாலே அரசுக்கு எவ்வளவு இழப்பு என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பி. யூ. சி. வகுப்பை நீங்கள் எடுத்ததிலே எனக்கு மாறுபாடு இல்லை. 1977—78-ல் 89,000 மாணவர்கள் பி.யூ.சி.-யில் படித்தார்கள். 1978—79-ல் 77,000 பேர் படித்தார்கள். 1979—80-ஆம் ஆண்டில் நாம் நிறுத்தி விட்டோம். ஆனால் 77,000 மாணவர்களுக்கு இருந்த ஆசிரியர்களுக்கு வேறு இடத்தில் வேலை கொடுக்கவில்லை; கொடுக்க வழியில்லை; வேறு இடத்திற்கு அனுப்ப முடியவில்லை. வேண்டுமானால் அவர்களிலே 100-க்கு 5 பேர் அல்லது 10 பேர் கல்லூரிப் பட்டப் படிப்புக்குப் பாடம் சொல்லி கொடுத்துக் கொண்டிருக்கலாம். அப்படி இருந்தாலும் மற்ற எல்லோருக்கும் ஊதியம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அவர்களுக்கு ஊதியம் கொடுக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை. அவர்களுடைய நிலமையைப் பார்க்கும்போது இந்த ஊதியம் இல்லாமல் அவர்களால் வாழ்க்கை நடத்த முடியாது. ஆக மாணவர்களை நிறுத்திவிட்டோமே தவிர, ஆசிரியர்களுக்கு ஊதியம் கொடுத்துக் கொண்டுதான் இருக்கிறோம்.

மேல் நிலைப் பள்ளி ஆரம்பித்த பின்னால் பி.ஏ., பி.எஸ்ஸி போன்ற கல்லூரிப் படிப்புக்கு 15,000 மாணவர்கள்தான் அதிகமாகச் சேர்ந்திருக்கிறார்கள். ஆனால் 90,000 மாணவர்கள் படிப்பதற்கு காரணமாக இருந்த ஆசிரியர்களில் நூற்றுக்கு 5 அல்லது 10 பேர்களுக்குத்தான் கல்லூரிகளில் இடம் கொடுக்கின்ற வாய்ப்பு இருக்கிறது. மிச்சம் இருக்கிற ஆரிசியர்களை மாணவர்களுக்குப் பயன்படுத்திக் கொள்ளக் கூடிய நிலைமை இல்லை. இன்னும் சொல்லப்போனால் 1977—78-ல் 12,200 ஆசிரியர்கள் இருந்தார்கள். 1979—80-ல் 12,190 ஆரியர்கள் இருந்தார்கள். அவர்களுடைய அந்த எண்ணிக்கை குறையவில்லை; குறைக்க முடியவில்லை. அவர்களை மேல்நிலைப் பள்ளிக்கு அனுப்பவும் நாம் ஏற்பாடு செய்யவில்லை. ஆனால் பி.யு.சி. படிப்பை எடுக்கும்போது ஒரு 'பேஸ்ட் ப்ரோகிராம்' என்ற அடிப்படையில் 1977—78-ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து படிப்படியாக குறைத்துக் கொண்டு வந்திருந்தால் ஆண்டுக்கு 5 கோடி, 4 கோடி செலவு செய்கின்ற தொகை 5 ஆண்டு காலத்தில் 'கிராஜுவல்' ஆக குறைந்துகொண்டு வந்திருக்கும். படிப்படியாக இந்தக் கல்லூரி ஆசிரியர்களையும் அல்லது பட்டப்படிப்பில் பணியாற்ற எடுத்துக்கொண்டு, அந்த நிதியைப் பயன்படுத்தியிருக்கலாம். வேலையில்லாமல் ஆசிரியர்களுக்கு ஊதியம் கொடுக்கும் நிலை ஏற்பட்டிருக்காது.

[திரு. க. அன்பழகன்] [1980 ஜூலை 12

மாணவர்கள் இல்லாமல் இருந்தபோதிலும் அந்த ஆசிரியர்களுக்கு ஊதியம் தருகிறார்கள்; அதை நான் பாராட்டுகிறேன். இருந்தாலும் ஒரேயடியாக மாணவர்களை நிறுத்தாமல் படிப்படியாகச் செய்திருந்தால், முதலாண்டு 5 கோடி, இரண்டாவது ஆண்டு 4 கோடி, மூன்றாவது ஆண்டு 3 கோடி என்று பயன்படுத்தியிருக்கலாம். இப்போது மேல்நிலைப் பள்ளி என்று உருவாக்கப்பட்டிருக்கிற அந்த பள்ளியிலும்கூட நாம் இன்று அவர்களுக்குச் செலவிடுகிற பணம் போதுமானதா என்றால் நிச்சயமாக இல்லை. எல்லா இடங்களிலும் கட்டிடம் இல்லை. தொழில் பயிற்சி என்ற அடிப்படையில்தான் மேல்நிலைக் பள்ளிகளை ஏற்படுத்துகிறோம் என்று சொல்லப்பட்டது. ஏற்கனவே சொல்லப்பட்ட வாதம்,

Plus 2 is not a course to transfer pupil from High School to College.

பிளஸ் 2 என்பது உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் தங்களுடைய படிப்பை ஓர் அளவில் முடித்துவிட்டு, வாழ்க்கையில் ஒருதொழிலில் ஈடுபாடு கொள்ள, குறைந்தபட்சம் ஒரு தொழில் நடத்த அவர்களுக்கு ஊக்கத்தை, அதற்கான தைரியத்தை ஏற்படுத்துவது என்று சொல்லப்பட்டது. ஆனால் இன்றைக்கு பி. யூ. சி.-யில் என்ன நடைபெற்றதோ அதே காரியம்தான் பிளஸ் 2-விலும் நடக்கிறது. அதைத் தவிர அடிப்படையில் பி.யூ.சி.-யில் இருந்து பிளஸ் 2 என்ன வேறுபாடு கொண்டிருக்கிறது ? ஒன்றும் இல்லை. வேண்டுமானால் மாண்புமிகு அமைச்சரவர்கள் ஒரு கருத்தைச் சொல்வார்கள். மாணவர்கள் நகரங்களுக்கு வந்து பி.யூ.சி. படித்ததை நாங்கள் கிராமங்களுக்கே கொண்டு வந்திருக்கிறோம்; நகரங்களுக்கு வந்து படித்ததை கிராமங்களிலேயே மாணவர்கள் படிக்கலாம் என்று சொல்லாம். பிளஸ் 2 மாணவர்களுக்கு அங்கே என்ன செய்யப்பட்டிருக்கிறது என்று பேரவைத் தலைவரவர்கள் மூலமாக அந்தத் துறையின் இயக்குநர்களை கேட்டுக்கொள்கிறேன். இந்த பிளஸ் 2 கூடாது என்று நான் சொல்லவில்லை. அதைக் கொண்டுவரும்போது ‘செல்ஃப் சஃபிஷியன்ட் கோர்ஸ்’ ஆக இருக்க வேண்டும். அரசாங்கத்தை எதிர்பார்த்து வேலைத்தேடி அலையத் தேவையில்லை என்ற எண்ணத்தை ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு கொண்டுவரப்பட்டதாகக் கூறப்பட்டது இந்த படிப்பு.

இன்றைக்கு ஏறத்தாழ 1,20,000 பேர் படித்திருப்பதாக நான் அறிகிறேன். அதில் எவ்வளவுபேர் தொழில் படிப்பு படித்திருப்பார்கள்; 5,000 பேர் அல்லது 6,000 பேர் ஏதோ ஒரு வகையில் தொழில் படிப்பு பெற்றிருப்பார்கள். 1,17,000 பேர்கள் படித்தார்கள். அவர்களில் 69,946 பேர்கள்



1980 ஜூலை 12] [திரு. க. அன்பழகன்]

வெற்றிபெற்றிருக்கிறார்கள்; ஏறத்தாழ 59 சதவீதம் வெற்றி பெற்றிருக்கிறார்கள். இந்த 69,000 பேர்களில் எவ்வளவு பேர் கல்லூரிக்குச் செல்லத் தேவையில்லை என்ற கருத்தில் இருப்பார்கள்?

அதுதான் இந்த படிப்பின் உண்மையான நோக்கம். அதை நிறைவேற்றுவதற்காகத்தான் 15 கோடி ரூபாய் 4 ஆண்டுகளில் ஆசிரியர்களுக்கு வேலையில்லாமலே அளித்து உள்ளோம். புதிய குறிக்கோளை நிறைவேற்ற முடியாதபோது என்ன பலனை இதில் நாம் கண்டிருக்கிறோம்?

[பிற்பகல் 1-10]

வேண்டுமானால் 10 விழுக்காடு, 15 விழுக்காடு பலன் இருக்கலாம்.

There may be a small proportionate utility for this course இப்படி 10 விழுக்காடு, 15 விழுக்காடு இருக்கின்றது என்பதற்காக எவ்வளவு பெரிய இழப்பை நாம் ஏற்றுக்கொண்டு இருக்கிறோம். அதனால்தான் சொல்கிறேன். பி.யு.சி. வைக்க வேண்டும் என்பதற்காக நான் வாதாடவில்லை. அந்த ஆசிரியர்களுடைய வேலையைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலைமைக்கு அரசு தன்னை ஆளாக்கிக்கொண்டு வேறு விதமான ஒரு படிப்பை ஏற்படுத்தி அதனால் முழு நிறைவான பலனை ஏற்படுத்தத் தவறிவிட்டது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, இன்றைக்கு இந்த மேல்நிலைப் படிப்பு என்று சொல்லப்படுகின்ற இந்த இரண்டாண்டுப் படிப்பு முன்பிருந்த இன்டர்மீடியட் கோர்ஸ் என்ற படிப்போடு வைத்துச் சமமாகக் கருதப்பட்ட ஒன்று. மேலும் இதிலே இந்த ஆண்டு முதலாண்டுத் தேர்வு நடத்தி பல மேல்நிலை பள்ளிகளில் பயிலுகின்ற மாணவர்களுக்கு வெற்றி தோல்வி வழங்கி இருக்கிறார்கள். அந்த முறை தவறானது என்ற கருத்து பத்திரிகையில் எழுதப்பட்டிருக்கின்றது. ஃபர்ஸ்ட் இயர் இண்டர்மீடியட்டிலே ஃபெயில் போடுவது என்பது ஏற்கெனவே அந்த வகுப்பில் இருந்த முறையல்ல. அதிலே எதாவது மார்க் குறையுமேயானால் அவர்களை வேண்டுமானால் சிறப்பாகப் பயிற்றுவிப்பதற்கு முயற்சி எடுத்துக்கொள்ளப்படக் கூடும். அந்த முறையில் இந்தப்படிப்பை எடுத்துக்கொண்டு இரண்டாண்டிலே அதை முடிப்பதற்குரிய ஒரு தொடர் படிப்பாகத்தான் அது கருதப்படவேண்டுமே தவிர, முதலாண்டிலேயே அவர்களிலே சில பேருக்குத் தோல்வி அளிக்கக்கூடிய முறையிலே தேர்வு நடத்துவது என்பது இந்தப் படிப்புத் திட்டத்தினுடைய நோக்கத்துக்கு மாறானதாகும்.

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம்: பேரவைத் தலைவர் அவர்களே, பழைய இன்டர்மீடியட் கோர்ஸ் என்பது இரண்டாண்டுக்காலம் படித்தபடிப்பில் இரண்டாண்டுக் காலமும் பரீட்சை வைப்பது. ஆனால், இப்போது இருக்கின்ற ஹையர் செகண்டரியைப் பொறுத்த வரையில் இரண்டாவது ஆண்டிலே அதாவது 12-வது வகுப்பிலேதான் கேள்வித்தாள் தயார் செய்து பரீட்சை வைக்கிறோமே தவிர, முதலாண்டிலே அதாவது 11-வது ஆண்டு படிக்கின்ற வகுப்பிலே கேள்வித் தாள் தயாரித்து நாம் பரீட்சை வைப்பதில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, நான் அமைச்சரவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். பத்திரிகைகளிலே கடிதங்கள் எழுதி இருக்கிறார்கள். முதலாண்டு இறுதியிலே சில மாணவர்கள் தோல்வி என்று அறிவிக்கப்பட்டு அடுத்த ஆண்டுப் படிப்புக்கு அவர்கள் வருவதற்குத் தடை இருக்கிறது என்றும் அதனாலே அவர்களுடைய பெற்றோர்கள் அவர்களை மீண்டும் ஓராண்டு படிக்கவைக்க வேண்டியதிருக்கிறது என்றும் அப்படி ஓர் ஆண்டு இழப்பு ஏற்படுகிறது என்றும் தெரிவித்திருக்கிறார்கள். அப்படி தெரிவிக்கப்பட்டிருக்குமேயானால் அந்த முறை தவறானது என்பதை எடுத்துக்காட்டி அரசு நடவடிக்கை எடுத்தாகவேண்டும்.

அதைப்போல இன்னும் ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். ஏற்கெனவே இந்த அவையிலே விவாதிக்கப்பட்டபடி பி. யூ. சி. படிப்புக்கும், ஹையர் செகண்டரி கோர்ஸுக்கும் இடையிலே படிப்புத் தகுதியிலே சிறு வேற்றுமைகள் இருந்தாலும் கூட பல்கலைக் கழகத்திலேயோ, மருத்துவக் கல்லூரியிலேயோ, பொறியியல் கல்லூரியிலேயோ சேருவதற்கு எந்த வேறுபாடும் காட்டப்பட மாட்டாது என்ற கருத்துத்தான் இடம் பெற்றிருந்தது. ஆனால், வந்திருக்கின்ற ஒரு செய்தி என்னவென்றால், ஏதோ பி.யூ.சி. படித்தவர்கள் மருத்துவக் கல்லூரியிலே சேருவார்களேயானால் அவர்கள் அதற்காக ஓராண்டுக் காலம் அதிகமாகப் படிக்கவேண்டும் என்றும், ஹையர் செகண்டரி படித்தவர்கள் அந்த ஓராண்டுக்காலம் அதிகம் படிக்கத்தேவையில்லை என்றும் ஒரு வேற்றுமையான விதி பல்கலைக் கழகத்தாலே வகுக்கப்பட்டிருப்பதாக ஒரு கருத்து தெரிவிக்கப்பட்டு இருப்பதாகவும், அதற்குப் பெற்றோர்கள் எதிர்ப்பும் தெரிவித்து இருக்கிறார்கள். ஆனால் என்னைப் பொறுத்தவரையில் பி.யூ.சி. யாக இருந்தாலும் சரி, ஹையர் செகண்டரியாக இருந்தாலும் சரி, சென்ட்ரல் ஸ்கூலிலே போர்டுகள் நடத்துகிற தேர்வுகளின் மூலமாக வெற்றிபெற்று வருபவர்களாக இருந்தாலும் சரி, ஒரே நிலையிலேயே வைத்துக் கருதப்படவேண்டும். அவர்கள்





ஏதாவது ஒரு பாடம் படிக்கவில்லை, ஆகவே அவர்கள் தகுதி குறைகிறது என்று சொன்னால், எந்தக் கல்லூரியில் சேர்ந்தாலும் அவர்களுக்கு அந்தக் கல்லூரியிலே அந்தப்பாடத்திற்கு ஒரு 6 மாத காலம் ஸ்பெஷல் கோச்சிங் சிறப்புப் பயிற்சி தரலாமே தவிர ஓராண்டு காலப் படிப்பை அதிகப்படுத்துவது அதிலும் பி.யு.சி. மாணவர்களுக்கு அவர்கள் தகுதியை வெட்டுவது என்பது ஏற்கெனவே இருந்த கல்வியில் புதிதாக ஒரு குறையை ஏற்படுத்துகிறோம் என்ற நிலைமையைத்தான் ஏற்படுத்தும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மருத்துவக் கல்லூரிப் படிப்பைப் பொறுத்த வரையில் இன்டியன் மெடிக்கல் அசோசியேஷன் என்ற ஒரு நிறுவனம் இருக்கின்றது. அவர்கள் பி. யு. சி. படிப்பை ப்ளஸ் 2-க்கு ஈக்குவல்-ஆக கருதவில்லை. ஆகவே, இன்டியன் மெடிக்கல் அசோஷியேஷன்-இடத்திலே நாம் ஒப்புதல் பெறவேண்டியிருக்கிறது. அப்படிப் பெற்றுத்தான் இதைச் செய்யவேண்டும். அதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறோம் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. அன்பழகன்: மாணவர்கள் ஏறத்தாழ ஒத்த வயதினர் ஒரே நிலையிலேயே படித்தவர்கள், நம்முடைய படிப்பு முறையிலே நாம்தான் மாற்றம் கொண்டு வந்தோமே தவிர, அது பிள்ளைகளினுடைய பொறுப்பல்ல. ஆகவே, அவர்களுக்கு ஓராண்டு வீணாகாமல் இருப்பதற்குத் தொடர்ந்து இந்த அரசு முயற்சிக்க வேண்டும் என்று உள்ளபடியே விரும்புகிறேன்.

அடுத்து, நண்பகல் உணவுத்திட்டம் என்பது நம்முடைய தமிழ்நாட்டிலே நீண்டகாலமாக நடைபெற்று வருகின்றது. ஆனாலும், அதிலே ஏற்படுகிற குறைகளை களைவதற்கான வல்லமை நமது அரசுக்கு ஏனோ இல்லை. அதிலே மிக முக்கியமான குறை அதை நடைமுறைப்படுத்துவதிலே இருக்கின்றது என்பது. அதிலே 100 நாட்களுக்கு இலவசமாக உணவு தருகிறார்களா, எத்தனை நாட்களுக்கு உணவு தருகிறார்கள் என்று இதையெல்லாம் எண்ணிப்பார்க்க முடியாது. பள்ளிச் சிறார்களுக்கு இந்த 200 நாட்களுக்குத் தேவையான உணவு தானியங்கள் கேர் நிறுவனத்திலே இருந்து கிடைக்கவில்லை.

100 நாட்களுக்குத் தேவையான உணவு தானியமும், 200 நாட்களுக்குத் தேவையான எண்ணெயும்தான் அவர்கள் தருகிறார்கள். மீதி 100 நாட்களுக்கு தேவையான உணவு தானியங்களும், பிற பொருட்களும், விறகும், மற்றும் சமையலுக்குத் தேவையான பிற பொருட்களும் இவை எல்லாம் வாங்குவதற்கு ஒரு மாணவனுக்கு 15 காசு வீதம் தரப்படுகிறது.

15 காசு என்பது நிச்சயமாக குறைபாட்டை உண்டாக்கத்தான் செய்யும். எனவே 15 காசு என்கிறபோது நிச்சயமாக இதை நடைமுறைப்படுத்த முடியாது. ஆகவே, நான் அதற்காக அதிகச் செலவை ஏற்றுக் கொள்ளுங்கள், நிதி கொடுங்கள் என்று கேட்டுக் கொள்வதை விட, அந்த மிச்சம் 100 நாட்களுக்கான உணவு தானியத்தை தருகிற பொறுப்பை அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

கேர் நிறுவனம் 100 நாட்களுக்கு உணவு தானியம் தருகிறது. 200 நாட்களுக்கு எண்ணெய் தருகிறது. மிச்சம் இருக்கிற 100 நாட்களுக்கான உணவு தானியத்தை அரசு தருமேயானால் அடிப்படை நிலையிலே உள்ள மாணவர்களுடைய, அந்தச் சின்னக் குழந்தைகளுடைய உடல் நலத்தைப் பாதுகாந்து கல்வியிலே அவர்களை ஈடுபடச் செய்யவும் அது அடிப்படையாக இருக்கும் என்கிற காரணத்தினால், இதனால் அரசுக்கு 1 ஆண்டுக்கு 5 கோடி ரூபாய் செலவானாலும் கூட, அது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய ஒன்று. அந்த வகையில் அரசு எண்ணிப் பார்க்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

அடுத்து, நான் சொல்ல விரும்புவது சிறு பிள்ளைகளுக்கு, ஆரம்ப பள்ளிக்கூடத்து மாணவர்களுக்கு 'சிவிக்ஸ்' போன்ற பாடங்கள் நடத்தப்பெற வேண்டும். ஆனால், யூனிசெப் உதவியுடன், இயற்கை சுற்றுச் சூழல பாதுகாக்கின்ற ஒரு கடமையை நிறைவேற்றுவதற்கு பரங்கிமலை ஒன்றியத்திலுள்ள 50 ஊர்கள் தேர்ந்தெடுக்கப்பெற்று, தொடக்கப் பள்ளி மாணவர்களை வைத்து நடத்தப்போவதாக ஒரு திட்டம் இருப்பதாக அறிந்தேன் ஆனால், இது ஒரு பரிசோதனை திட்டம் என்ற முறையிலே இதிலே எனக்கு மாறுபாடு இல்லை. என்றாலும் இந்த பரிசோதனை திட்டம் இந்தச் சிறுபிள்ளைகளை 5 வயதிலிருந்து 10, 11 வயது வரை உள்ள பிள்ளைகளை வைத்துக் கொண்டு நடைபெறுமானால் அது நிச்சயமாக அவ்வளவு உறுதுணையாக அவர்களுக்கு இருக்காது என்றும், சுற்றுப்புற சூழ்நிலையைப் பற்றிய அறிவைத் தரக்கூடிய அந்தப் பயிற்சி 50 கிராமங்களிலே உள்ள தொடக்கப்பள்ளிகளில் இருக்க வேண்டுமென்று நான் கருதவில்லை. என்னுடைய கருத்துப்படி உயர்நிலைப் பள்ளிகளில் படிக்கின்ற மாணவர்களை வைத்துக் கொண்டு இந்த ஆய்வுகள் நடத்தப்படுமேயானால் அது அதிகப் பலன்கள் அளிக்கும் என்று நான் கருதுகிறேன்.

பொதுவாக, இன்றைய தினம் சமூகத்திற்கும் கல்வி பயில்கிற மாணவர்களுக்கும் இடையே ஒரு உறவை உண்டாக்க, பெற்றோர்கள் குழு, அல்லது பள்ளிச் சீர்திருத்தக் குழு அல்லது நலக் குழு என்று குழுக்கள் அமைப்பது ஒரு பக்கம் இருந்தாலும் கூட, இவைகளை விட முக்கியமாக மாணவர்களுடைய உள்ளத்திலே சமூகத்தோடு தொடர்பு உண்டாக்கக் கூடிய பாடங்கள் அவர்





களுக்கு நடத்தப்பெற வேண்டும். சோஷியல் சைன்ஸ் என்று சொல்லப்படக்கூடிய உயர்தரமான அந்தக் கல்வியை சாதாரண இளம் பிள்ளைகளுக்கு நாம் தரமுடியாது போனாலும், அவர்கள் சமூகத்திலே எப்படி இடம் பெற்றிருக்கிறார்கள் என்ற உணர்வு அவர்களுடைய மனத்திலே ஏற்படத் தக்க வகையில் ஒரு 10 வயதிற்குட்பட்ட பிள்ளைகளுக்கு சமூக சூழ்நிலையைப் பற்றிய அறிவினை வளர்க்க 'சிவிக்ஸ்' போன்ற பாடத்தின் மூலம் பயிற்சி தரப்பட வேண்டும்.

அதேபோல் உயர்நிலைப் பள்ளிக் கூடத்திலே படித்து முடிப்பதற்குள் விபத்து தடுப்பதற்கான முன் எச்சரிக்கை அறிவு, விபத்துக்களை தடுப்பது எப்படி என்றும், தீ பிடித்தால் எப்படி நடந்துக் கொள்வது, தீயை எப்படி அணைப்பது, ரோடு சென்ஸ் என்று சொல்கிற முறையில் பாதையில் எப்படி நடந்து கொள்வது, ஒரு சில கிராமங்களிலே நடக்கக் கூடிய விபத்துக்களை எப்படி தடுப்பது, சில வகை கிணற்றிலே இறங்கினால் அங்கே இருக்கக்கூடிய நச்சுக்காற்றினால் உயிர் போய்விடக்கூடிய சூழ்நிலை இருப்பது போன்றவைகளை எல்லாம் ஏறத்தாழ 10 வயதிலிருந்து 15, 16 வயதிற்குள்ளான பிள்ளைகளுக்கு அறிவிக்க ஏற்பாடு செய்யப் பெற வேண்டும்.

இன்னொன்றையும் சொல்வேன். பத்தாவது படிக்கின்ற மாணவர்கள் சமூகத்திற்கு ஏற்ற குடிமக்களாக ஆக வேண்டும் என்று சொன்னால், பள்ளிக்கூட பாடத்திட்டங்களுக்கு அவைகளை பயிற்றுவிப்பதற்கான பாடவரைமுறைகள் வைத்திருப்பதைப் போல, சமத்துவம், சுயமரியாதை, சுதந்திரம், சகோதரத்துவம் போன்ற அடிப்படையான கருத்துக்கள் அந்தப் பிள்ளைகளிடையே ஏற்படுவதற்கு, அவைகளைப் பற்றி அவர்கள் அறிந்து கொள்வதற்கு ஏற்ற முறையில் பாடத் திட்டங்கள் கொண்டுவரப்பட வேண்டும்.

இதை 30, 40 வயதுடையவர்களாக இருப்பவர்களிடம் உரை நிகழ்த்தி அவர்களைச் சீர்திருத்தம் செய்வது என்பது முடியாது. அதனால் இளம் வயதிலேயே அந்த இளம் ரத்தத்திலேயே அந்தக் கருத்துக்கள் ஊறிவிடத்தக்க அளவுக்கு, சமத்துவ உணர்வு, சுய மரியாதை உணர்வு, சுதந்திர உணர்வு, சகோதரத்துவம், உடன் பிறப்புரிமை அல்லது தோழமை இப்படிப்பட்ட கருத்துக்கள் உள்ளத்திலே பதியும் படியும், ஜாதி சமய வேற்றுமையின்றி இருக்கும் உணர்வினை ஆழமாக உள்ளத்திலே பதிய வைக்கும் வகையிலும், தீண்டாமை ஒழிப்பு எண்ணங்கள் பிள்ளைகளின் உள்ளத்திலே இடம் பிடிக்கத் தக்க வகையிலும் பாடத் திட்டத்தை இயற்றுகிறவர்கள், தங்களுடைய சப்ஜெக்ட் என்ற முறையிலே மட்டுமல்லாமல் இந்தக் கருத்துக்கள் உள்ளடக்கிய பாடங்களை இடம் பெறச் செய்ய வேண்டும்.

அது தமிழ் பாடமாக இருந்தாலும் சரி, ஒழுக்கப்பாடம் என்ற பெயரில் வேண்டுமானாலும் அமைத்து இவைகளை இடம் பெறச் செய்ய வேண்டும். அப்படி இடம்பெறச் செய்யவில்லை என்று சொன்னால், பின்னர் அவர்கள் வயது உயர்ந்து வெளியே வருகிறபோது எம்.ஏ. படித்திருந்தாலும், பி.ஏ. படித்திருந்தாலும், சூழ்நிலைக்காக தங்களுடைய எண்ணத்தை கொஞ்சம் மாற்றிக் கொள்வார்களே தவிர, தங்களுடைய உள்ளத்திலே தேவையான உறுதியான கொள்கையோடு எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓர் இனம், எல்லோரும் இந்நாட்டு மக்கள் என்று எண்ணுகிற உணர்வோடு செயல்படுகிற மனப்பான்மை அவர்களிடையே உருவாகி நிலைக்காது.

அதேபோல் இந்த அரசாங்கம் மதுவிலக்கிற்காக எவ்வளவோ இழப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறது. அதேபோல் பிள்ளைகள் மனத்திலே பள்ளிக் கூடத்திலேயே மதுவிலக்குப் பற்றியும், போதைப் பொருள்களால் வரக்கூடிய கெடுதல்கள் பற்றியும் அந்தப் பிள்ளைகளுக்குப் பயிற்றுவிக்க வேண்டும். ஒழுக்கப்பாடம் என்ற பெயரால் கொண்டு வந்தாலும் சரி, அவர்கள் உள்ளத்தில் இது பதிய வேண்டும்.

(மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் தலைமை.)

ஒரு பிள்ளை படித்து முடித்த பிறகு அவனது எழுத்தாற்றலில் எவ்வளவு முன்னேற்றம், நினைவாற்றலில் எவ்வளவு முன்னேற்றம் என்று கணித்துப் பார்ப்பதைப் போல், சமுதாயத்திற்கு தேவையான எண்ணங்களிலே எந்த அளவிற்கு பயிற்சி பெற்றிருக்கிறான் என்று பார்க்கக்கூடிய அளவிற்குப் பாடங்கள் துணையாகுமாறு வகுக்க வேண்டும்.

நான் இப்படிச் சொல்வது இந்த நாட்டினுடைய நிலைமையைக் கருதி பெரியவர்களிடத்திலே சொல்லி பலன் இல்லை என்ற காரணத்தினால், பிள்ளைகளுடைய மனத்திலே அந்த எண்ணம் அழுத்தமாக இடம் பெற்று விட்டால், போதைப் பொருள்களின் மீது அவர்களுக்கு வெறுப்பு உண்டாகும் அளவிலே அவற்றினால் வரும் தீமைகள் ஆகியவற்றைப் பற்றிப் பிள்ளைகளுக்குச் சொன்னால் தான் அவர்கள் 15, 20 வயதிலே, கெடுவதற்கான மனப்பான்மையிலிருந்து அவர்கள் தங்களைக் காத்துத் தடுத்துக் கொள்ள முடியும் என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 1–20.)

ஒருவேளை நீங்கள் இதற்கெல்லாம் வள்ளுவர் வழி என்று பெயர் வைத்தாவது இதை வலியுறுத்த வழி காண வேண்டும். பிள்ளைகளைத் தயாரிப்பதில்தான் எதிர்காலம் இருக்கிறது.





பிள்ளைகளைத் தயாரிக்க முதல் வகுப்பிலிருந்து 5-வது வகுப்பிற்குள் இருக்கிற பிள்ளைகளுக்கு உத்தமர் காந்தி அடிகள் பற்றி, பெரியார் அவர்களைப் பற்றி, ஜவஹர்லால் நேரு அவர்களைப் பற்றி, பேரறிஞர் அண்ணா அவர்களைப் பற்றி, அம்பேத்கார் அவர்களைப் பற்றி, இனி அதற்கு மேற்பட்ட வகுப்புகளில் லெனினைப் பற்றி, லிங்கனைப் பற்றி, சாக்ரடீஸ் பற்றியும், இலக்கியத்தைப் பற்றிய வகுப்பில் பாரதி பற்றி, பாரதிதாசன் பற்றி, திரு. வி. க. பற்றி அவர்கள் மூலமாக உண்டாக்கப்பட்ட உள்ளுணர்வுகளுக்காக, உருவான கருத்துக்களுக்காகப் பயிற்றுவிக்க வேண்டும். பெரியாரைப் பற்றிச் சொன்னால் நாத்திகத்தைப் பற்றிச் சொல்ல வேண்டும் என்று நான் சொல்லவில்லை, ஜாதியைக் கண்டித்து தீண்டாமையைக் கண்டித்து அவர்கள் சொன்ன கருத்துக்களை, அதற்காக அவர்கள் வையகத்தில் போராடியதைப் பற்றியெல்லாம் ஏழாவது எட்டாவது வகுப்பு பிள்ளைகளுக்குப் பாடமாக நடத்தினால், அவர்கள் மனதில் ஜாதி வேறுபாட்டின்கேடு நிச்சயமாக இடம் பெறச் செய்யும்.

ஏழாவது அல்லது எட்டாவது வகுப்பு மாணவனுக்கு பத்து நிமிடங்கள், பதினைந்து நிமிடங்கள் இதைப்பற்றிப் பாடம் நடத்தி அவர்கள் படித்தால் அவர்களுடைய மனத்தில் பொதுவுடைமை, சமதர்ம நோக்கங்களுக்கான அடிப்படை ஏற்படத் தான் செய்யும். ஆகவே அப்படி வகுப்புகளுக்கேற்ப, வயதிற்கேற்ப, சொல்லித் தருகிற பாடங்களோடு அப்பாடங்களையொட்டி இவைகள் அத்தனையையும் 15 வயதுக்குள்ளே திட்டவட்டமாகத் தெரிந்து கொள்ளக் கூடிய நிலை உயர்நிலைப் பள்ளிகளில் ஏற்படுமானால் நாம் எதிர்காலத்தில் எந்தவிதமான சமுதாயத்தை உருவாக்க நினைக்கிறோமோ அதை உருவாக்கத் துணையாக இருக்கும் என்று நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல் இந்த ஆண்டு வந்திருக்கின்ற கல்வி அறிக்கையைப் பற்றி குறை (சொல்வதற்காக) சொல்வதாக எண்ணிக் கொள்ளக் கூடாது. ஆனால் நினைவில் வைத்துக்கொள்வதற்காகவும், ஒரு வேளை இப்படியும் நினைக்க முடியும் என்பதற்காகவும் இதைச் சொல்கிறேன்.

83–வது பக்கத்தில் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் பற்றி தொடர்ந்து சொல்லுமிடத்து, தமிழிலிருந்து பிற மொழிகளிலும், பிற மொழிகளிலிருந்து தமிழிலும் மொழி பெயர்க்கப்பட்ட இலக்கியங்களின் பட்டியலை இந் நிறுவனம் வெளியிட்டுள்ளது என்று கூறி, ''உலகத் தமிழ் எழுத்தாளர்'' என்கிற தொகுப்பு நூலை வெளியிட முயற்சிக்கின்றது என்கிறார்கள். ஆங்கிலத்தில் வருகிறபோது உலகம் முழுதுமுள்ள தமிழ் எழுத்தாளர்களைப் பற்றி தொகுப்பு நூல் என்றுதான் நாம் கருத வேண்டும்,

[திரு. க. அன்பழகன்] [1980 ஜூலை 12

ஆங்கிலத்தில் '' who is who '' என்று தொடர் வருகிறது. தமிழில் அந்த '' who is who '' என்பது விடப்பட்டிருக்கிறது. யார், எவர்? என்றுவருகிற போதுதான் அந்த நூலுக்குப் பொருத்தமாக இருக்கும். தொகுப்பு நூல் என்பதைவிட அட்டவணைபோல் தயாரிக்கப்படுவதுதான் இது.

அதே பக்கத்தில் "தஞ்சை மாவட்டத் தொல் பொருளியல் நாட்டுப் படம்" என்றிருக்கிறது. அட்லாஸ் என்பதை நாட்டுப் படம் என்று மொழிபெயர்த்திருக்கிறார்கள். இந்த அட்லாஸ் என்பது நாட்டுப்படம் அல்ல. இந்த அட்லாசைப் பொறுத்தவரையில் இது தஞ்சை மாவட்ட அளவில்தான் வருகிறது. ஆகவே அது ''தஞ்சை மாவட்டத் தொல் பொருள் இயல் நில வரைபடம்.'' என்றிருப்பது தான் பொருத்தமாக இருக்கும். அதே போல் 74 வது பக்கத்தில் கன்னியாரா பொது நூலகத்தோடு சேர்ந்து நாகர்கோவில் மாவட்டத்தில் இருக்கிற கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை நூலகமும் இரண்டாவது நூலகமாக அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது என்ற கருத்து வருகிறது, அதைத் தமிழில் இங்கு எழுதுகிறபோது 1977ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 17ம் நாள் முதல் இத்துறையின் கீழ் வந்த கவிமணி நிலைய நூலகம் நாகர்கோவில் ஆகும் இது என்றிருக்கிறது. நாகர்கோவில் கவிமணி நிலைய நூலகம் 1977-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 17ம் நாள் முதல் இத்துறையின் கீழ் வந்துள்ளது — என்று அத்தொடர் அமைய வேண்டும். ஆங்கிலத்தில் வருகிற தொடர் அப்படியே மொழி பெயர்க்கப்பட்டு இவ்வாறு வந்திருக்கிறது.

அதேபோல் இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். ஆசிரியர்களுக்கு பல்வேறு விதமான பயிற்சிகள், சிறப்புப் பயிற்சிகள், அவர்களை மறுபடியும் தெளிவடையச் செய்கிற பயிற்சிகள் எல்லாம் வழங்குவது பற்றி வரும்போது Ref esher course 'என்பதற்கு மீள்பார்வை வகுப்புகள்' என்றிருக்கிறது. எப்படியும் மொழி பெயர்க்கலாம் போலும். ஆனால் அது நாம் நினைக்கிற எண்ணவோட்டத்தைத் தராது. அது ''மறு சிந்தனை வகுப்புகள்'' என்று வந்தால் ரெப்ரெஷர் கோர்ஸ் என்பதற்குப் பொறுத்தமாக இருக்கும். இதைவிடப் பொருத்தமாக ஒரு சொல் வேண்டுமென்றால் அதைத் தேடித்தான் பார்க்க வேண்டும்.

அடுத்து, inservice training என்பதற்கு, வேலைக்கு ன் இடைக்காலத்தில் பெறுகிற பயிற்சிக்கு ''பணியிருப்புப் பயிற்சி'' என்று சொல்லும் போது அந்தக் கருத்து பொருத்த முடைய கருத்தாக இராது. ''பணி வீடு'' என்றால் பொருத்தமாக இருக்கும். பணி இடையில் பயிற்சி பெறுவது என்ற பொருள்பட பணி இடைப்பயிற்சி என்றும் கூறலாம்.



1980 ஜூலை 12] [திரு. க. அன்பழகன்]

அதே போல் ப்ளஸ் 2 பாடத்திட்டங்களில் காமர்ஸ் அன்ட் பிஸினஸ் என்று வருகிற போது 'வணிகம்' என்று மட்டும் குறிக்கப் படுகிறது. அதைவணிகம் என்றும் மொழிபெயர்க்கலாம், வாணிகம் என்றும் மொழி பெயர்க்கலாம். வணிகம், வாணிகம் இரண்டும் ஒன்றுதான். காமர்ஸ் அன்ட் பிஸினஸ் என்பதை ஒரே சொல்லாக மொழிபெயர்ப்பதைவிட இரண்டு சொற்களாக இருக்கலாம். அப்படி வரும்போது பிஸினஸ் என்பதற்கு வணிகம் என்றும் காமர்ஸ் என்பதற்கு வாணிகம் என்றும்கொண்டு வணிக வாணிகம் என்று பயன்படுத்துவது நன்றாக இருக்கும் என்று கருதுகிறேன்

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அடுத்து, பள்ளிசாராக் கல்வி பற்றி மிகுந்த அக்கறை காட்டினாலும் கூட, அது ஒரு ஆண்டிற்கு எல்லாம் 2 இலட்சம், 3 இலட்சம் பேருக்கு 8 மாதம் அல்லது 10 மாதம் பயிற்சி தருகிறோம். இந்த 2 இலட்சம் பேர்கள், 3 இலட்சம் பேர்களுக்கு பயிற்சி அளிப்பது என்கிறபோது நம்முடைய குறிக்கோள் எவ்வளவாக இருக்கவேண்டுமென்றால் மொத்தம் 150 இலட்சம் பேர்களுக்கு பயிற்சி அளித்தாக வேண்டும். இப்பயிற்சி பெற வேண்டியவர் 175 இலட்சம் பேர்கள் இருப்பார்கள். ஆண்டுக்கு 2 இலட்சம் 3 இலட்சம் பேர்களுக்குப் பயிற்சி தருகின்றபோது, இன்னும் ஒரு 20 ஆண்டுக்காலம் ஆனாலும் கூட, நாம் இதை எட்டிப் பிடிக்க முடியாது. எனவே இதில் நான் குறிப்பிட விரும்புவது எல்லா தொடக்க நிலைப் பள்ளிகளிலேயும் கூட மாலை நேரங்களில் 1 மணி அல்லது 2 மணி நேரம் அதற்காகப் பயன்படுத்தமுடியுமா என்றும், அதற்காக அந்த ஆசிரியர்களுக்கு 25, 30 ரூபாய் அதிகமாகக் கொடுத்து பரவலாகச் செய்ய முடிந்தால், ஒரு ஆண்டிற்கு 10 இலட்சம் பேர்களுக்குப் பயிற்ச்சி கொடுப்பது என்றிருக்குமானால், ஓரளவு வெற்றி காணலாம். இதற்கு மத்திய அரசு கொடுக்கும் உதவி போதுமானதாக இல்லை என்றாலும் இந்தப் பள்ளிசாராக் கல்வியைப் பரவலாக ஆக்குவதற்கு முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். இன்னும் பல பிரச்சினைகள் இருந்தாலும்கூட, சுருக்கமாகச் சொல்கிறேன். பி. ஏ., எம். ஏ., தமிழ் இலக்கியம் படித்தவர்கள் பொதுப்பணி போட்டித் தேர்வுகளிலே ஈடுபடுவதற்கு செல்கிறபோது, அவர்கள் படித்த பல்வேறு பாடங்களான தென்னாட்டு வரலாறு, தமிழ்ப் பண்பாட்டு வரலாறு, தமிழ் இலக்கியம் அல்லது இப்படிப்பட்ட தொடர்புடைய பாடங்களையொட்டி 3, 4 தேர்வுப் பகுதிகளிலே எழுதக் கூடிய வாய்ப்பு முன்னர் அவர்களுக்கு இருந்தது. இப்போது தமிழ்நாடு பொதுப்பணித் தேர்விலே அந்தப் பாடத் திட்டத்தை மாற்றியமைத்ததன் காரணமாக, பி.ஏ., எம்.ஏ., (தமிழ்) படித்தவர்கள் இந்தப் பொதுப்பணித் தேர்வுக்குச்செல்ல அஞ்சுகின்றனர். எழுத இயலாத நிலை என்கின்றனர். அதற்குக் காரணம், அப்படி எழுதக்கூடிய அத்தனை பாடங்களும் ஒரே

பிரிவில் சேர்க்கப்பட்டு, இன்னொரு பிரிவிலே அவர்கள் பயிலாத அவர்களுக்குத் தொடர்பில்லாத பாடங்களே அமைக்கப்பட்டிருக்கின்றன. தமிழுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்க வேண்டுமென்பதிலே இந்த அரசுக்கு அக்கறை இருக்குமானால், பொதுப்பணித் தேர்வுக் குழுவுக்கு அந்த நிலைமையை மாற்ற வேண்டும் என்று எழுதி, அதன் மூலம் நேரிலே தமிழ் இலக்கியம் படித்து வருகின்ற எம். ஏ., பி. ஏ., மாணவர்களும் அவர்கள் படித்த பாடங்களிலே போட்டித் தேர்வை எழுதக்கூடிய வாய்ப்பை உருவாக்கித்தர வேண்டும். அதற்கு இந்த அரசு முயற்சி எடுக்க வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

ஒரு தமிழ் பல்கலைக் கழகம் அமைக்கின்றபோது, அந்தத் தமிழ்ப் பல்கலைக் கழகம் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் ஏற்படுத்தி இருக்கிறோமே, அதை விரிவாக்குவது போன்று அமைந்தால் பயன் தராது. ஒரு வேளை அது தமிழ் அகாடமியாக இருக்க வேண்டுமானால் பிரஞ்சு அகாடமிபோல் அமைக்கக்கூடிய வாய்ப்பு இருக்குமானால், அதுதான் அதிகப்பயன்தரக் கூடியதாக இருக்கும். இன்றைக்கு உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்திலே பல நல்ல காரியங்கள் நடைபெறுகின்றன என்று சொன்னாலுங்கூட அந்த அமைப்புக் கேற்ற கடமையைச் செய்யக்கூடிய நிலைக்கு அது வளரவில்லை. அதைச் சீர்திருத்தி, இன்னும் பரவலாக பல்வேறு நாடுகளுடன் தொடர்பு கொள்ளக்கூடிய ஒரு அமைப்பாக அதை உருவாக்க வேண்டும். இந்த அடிப்படையிலே பிரஞ்சு அகாடமி போன்று இந்த அமைப்பை உருவாக்கினால் தமிழ்ப் பல்கலைக் கழகம் பயனுள்ளதாக இருக்கும் என்ற கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னும் தொடர்ந்து பேசத்தான் போகிறோம். ஆகவே, இன்றைக்கு மேலும் பேசி நேரத்தை எடுத்துக் கொள்ள விரும்பவில்லை. எனவே ஒரே ஒரு முக்கியமான கருத்தைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன். தொழிற் கல்விக்காக நீங்கள் ஒதுக்கியிருக்கிற நிதி 9 கோடி எனக் கருதுகிறேன். அதிகமாகப் போனால் 10 அல்லது 11 கோடி இருக்கும். இனி எதிர்காலத்திலே, கல்வியிலே தொழிற்கல்வி, அது பாலி டெக்னிக்காக இருக்கலாம்; எஞ்சினியரிங்காக இருக்கலாம் அல்லது ஐ. டி. ஐ. யாக இருக்கலாம். அல்லது வேறு வகையிலும் இருக்கலாம். அது அதிக வளர்ச்சி பெற வேண்டும். 224 கோடி ரூபாய் கல்விக்காகச் செலவிடுகின்றபோது, நான் நிச்சயமாக ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஆண்டுக்கு 10 கோடி ரூபாய் என்கிற அளவுக்கு தொழிற் கல்வி வளர்ச்சிக்கு தொகையை அதிகப்படுத்திக்கொண்டே போனால் தான் இளைஞர்களுக்கு பயன் கிடைக்கும். படித்துவிட்ட பட்டதாரிகளுக்கு மாதம் 50 ரூபாய் கொடுக்கப்போகிறோம் என்று சொன்னாலும் கூட, வேலைக்குச் செல்வதற்கு ஆர்வம் இருந்தாலும், வாய்ப்பில்லை என்று சொல்லுகிறவர்களுடைய எண்ணிக்கையை வளர்ப்பதைவிட, தொழிற்



கல்வியில் அது பாலி டெக்னிக்கோ அல்லது எஞ்சினியரிங்கோ அல்லது சாதாரண தொழிற் பள்ளிக் கூடத்திலே மாணவர்கள் அதிக அளவில் படிப்பதற்கு ஏதுவாகப் பெரும் நிதி ஒதுக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். Emphasis cn technical Education என்கின்ற முறையிலே, எதிர்காலத்திலே தொழிற் கல்விக்காக பெருமளவு நிதி ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியோடு அலுவல் நேரத்தை நீட்டிக்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் கல்வி மானியத்தின் மீது பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த பலரும் தங்களுடைய கருத்துக்களையும், யோசனைகளையும் இங்கே எடுத்து வைத்திருக்கிறார்கள். கல்வித் துறை நிர்வாகத்திற்கு அவர்களுடைய யோசனைகள் பெரிதும் பயன்படும் என்ற நம்பிக்கையில் அத்தனை பேர்களுக்கும் என்னுடைய நன்றியை முதலிலே தெரிவித்துக் கொள்கிறேன். பல்வேறு குறைபாடுகளையும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். எதிர்காலத்தில் அந்தக் குறைபாடுகளை நீக்குவதற்கு கல்வித் துறை நல்ல முறையில் அவற்றை எடுத்துக் கொள்ளும் என்ற உறுதியை நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-30)

கல்வியைப் பற்றிப் பேசுகிற போது அது தொடர்பாக பல்வேறு கருத்துக்களைச் சொல்லுகிற போது அடிப்படையில் இருக்கிற ஒரு மிகப் பெரிய கோளாறை நான் உங்களுக்கு எடுத்துச் சொல்லுவது எனக்குக் கடமையாக இருக்கிறது. இன்றைக்கு ஆயிரக் கணக்கில், லட்சக் கணக்கில் மாணவர்கள் பள்ளிக் கூடத்திற்கு வரலாம், போகலாம், நாமும் குழந்தைகளை பள்ளிக் கூடத்திற்கு ஆசையோடு அனுப்பிக்கொண்டிருக்கலாம்; அல்லது ஆசிரியப்பெருமக்கள் அந்தக் குழந்தைகளுக்கு கல்வியை தந்து கொண்டிருக்கலாம். மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் சுட்டிக் காட்டியது போல் இத்தனையும் எந்த நோக்கத்தோடு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்று பரிசீலிக்க வேண்டிய கட்டத்தில் இன்றைக்கு நாம் இருந்து கொண்டிருக்கிறோம்.

அந்தக் குழந்தைகள் எதற்காகப் படிக்கப் போய்க் கொண்டிருக்கின்றன ? அந்தக் குழந்தைகளை எதற்காகப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்புகிறார்கள் ? எந்த நோக்கத்தோடு ஆசிரியப் பெருமக்கள் கல்வியைத் தந்து கொண்டிருக்கிறார்கள்? அதைப் பார்க்கும் போது ஆயிரக் கணக்கான கோளாறுகளுக்கு அடிப்படைக் கோளாறு ஒன்று இருக்கிறது என்பதை நாம் உணர

முடியும். இத்தனையும் எதை நோக்கி நடைபெறுகிறது ? எப்படியாவது நம்முடைய பையன் படித்து பாஸ் செய்து ஒரு வேலைக்குப் போக மாட்டானா என்ற எண்ணத்தில் தான் இத்தனையும் ஒன்றையொன்று முந்திக் கொண்டிருக்கின்றன. அந்த நோக்கத்தோடு நாம் குழந்தைகளைப் படிக்க அனுப்புகிறோம். அந்த நோக்கத்தோடு குழந்தைகள் படிக்கச் செல்லுகின்றன. அந்த நோக்கத்தோடேயே ஆசிரியர்களும் தங்கள் பணியைச் செய்யக் கூடிய நிலைமை உருவாகியிருக்கிறது. வேலைக்குச் செல்ல வேண்டுமென்றால் பட்டம் தேவை ; பட்டம் பெற பாசாக வேண்டும். பாஸ் செய்ய 35 மார்க் வாங்கினால் போதும். அந்த 35 மார்க்கை வாங்கச் செய்வது எப்படி என்பதுதான் ஆசிரியர்களின் மிகப் பெரிய சாமர்த்தியமாகக் கருதப்படுகிறது. ஆகவே, நாம் படிக்க வேண்டுமென்று சொல்லுகிற ஒரு புத்தகம் 100 பக்கம் இருந்தாலும் 100 பக்கத்தையும் சொல்லித் தரும் நிலைமை ஆசிரியர்களுக்கு இருக்கிறதா என்றால் இல்லை. பரீட்சையில் பாஸ் செய்ய எத்தனை கேள்விகளைப் படிக்க வேண்டும் என்று பார்த்து, எட்டு கேள்விகளுக்கான பதில்கள் சொல்லித் தரப்படுகின்றன. இந்த அளவோடுதான் இன்று கல்வி நடை பெற்றுக் கொண்டிருக்கிறது. பெருமளவு இப்படித்தான் நடைபெறுகிறது. இப்படிப் படித்து பாஸ் செய்து மறுபடியும் அந்த மாணவர்கள் ஆசிரியர்களாக வருவார்களானால் அவர்கள் சொல்லித்தரும்படியான நிலைமை எப்படி இருக்கும்? இந்தத் தவறான நிலைமைக்கு நம்மை இழுத்துச் சென்று கொண்டிருக்கிறது என்பதை தான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

நாட்டில் ஒரு அடிமைச் சமுதாயத்தை உருவாக்கும் சூழ்நிலைக்கு பல்லாண்டு காலமாக, பழக்கத்தின் காரணமாக சூழ்நிலை காரணமாக உருவாக்கிக் கொண்டு விட்டோம். இன்றைய தினம் அதை முறியடித்தாக வேண்டும். நாம் ஒரு அடிமைச் சமுதாயத்தை உருவாக்கிக் கொண்டிருக்கவில்லை ; சுதந்திரமாக வாழ்கின்ற நல்ல குடிமக்களை உருவாக்க வேண்டுமென்ற அடிப்படையில் கல்வி வந்தாக வேண்டும். நம்முடைய நோக்கம் வேலைக்குப் போனால் போதும் என்பதல்ல. நம்முடைய நோக்கம் கல்வி பெறுவது என்பது ; அறிவு வளர்ச்சிக்காகத் தானே தவிர வேறு அல்ல ; ஆற்றல் வளர்ச்சிக்காகத்தானே தவிர வேறு அல்ல என்ற நிலையில் நம்முடைய முயற்சிகளை மேற் கொள்வோமானால் அறிவும் வளரும், ஆற்றலும் பெருகும். அதே நேரத்தில் வேலை அல்ல, நல்ல வேலையும் கிடைக்கும். ஆகவே, இந்த நோக்கத்தை நாம் முன்னிறுத்தியாக வேண்டும்.

செய்தித் தாளில் ஒரு செய்தியைப் படித்திருப்பீர்கள். தமிழ் நாட்டைச் சேர்ந்த மாணவன் ஐ.ஏ.எஸ். தேர்வில் முதலிடம் பெற்றிருக்கிறான். அதைப் பார்த்தவுடன் நமக்குப் பெரு மகிழ்ச்சி ; தமிழ் நாட்டைச் சேர்ந்தவன் முதலிடம் பெற்றிருக்



கிறான் ; அந்த மாணவன் எந்த பல்கலைக் கழகத்தில் படித்திருக்கிறான். அவன் படித்தது டில்லிப் பல்கலைக் கழகத்தில். சென்னைப் பல்கலைக் கழகத்தில் அல்லது மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்தில் அல்லது அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் படித்து அவன் முதலிடம் பெற்றுத் தேறியிருந்தால் நாம் பெரு மகிழ்ச்சி அடையலாம். ஆனால் அதற்கு மாறாக இப்படி ஒரு நிலைமை வந்திருக்கிறது.

இதையெல்லாம் அடிப்படையாக வைத்துத்தான் பல்கலைக் கல்வியாக இருந்தாலும், ஆரம்பக் கல்வியாக இருந்தாலும் நாம் பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம், நம்முடைய நோக்கம் எல்லாம், தமிழகத்தில் படிக்கிற மாணவன் யாருக்கும் சளைத்தவன் அல்ல ; தாழ்ந்தவன் அல்ல ; லண்டனில் படிக்கும் மாணவன் பி.ஏ. படித்துத் தேறினால் அதற்கு இணையாக தமிழ் மாநிலத்தில் படித்து பி.ஏ. தேறிய மாணவன் இருக்கிறான் என்ற நிலைமையை உருவாக்க வேண்டும். அப்போதுதான் தமிழ் மாநிலத்தின் உண்மையான முன்னேற்றத்தைப் பார்க்க முடியும்.

அந்த அடிப்படையில் தான் மூன்று ஆண்டுக் கல்வி என்பதை இரண்டு ஆண்டு கல்வியாக்கினால் நம்முடைய மாணவர்களுக்கு மலிவாக இருக்கும், எளிதாக இருக்கும் என்ற கருத்து வந்த நேரத்தில் எதிர்த்தேன். அது கூடாது, தவறானது என்று சொன்னேன். அது மலிவு, அது எளிது என்று பார்ப்பதை விட, எப்படிப் படித்தால் மற்ற மாநில மாணவர்களுக்கு ஈடாக, மற்ற நாட்டு மாணவர்களுக்கு ஈடாக வர முடியும் என்ற அடிப்படையில் கல்வியினைப் பார்க்க வேண்டுமென்று கூறினேன். எது மலிவு என்று பார்ப்பது மோசமான நிலைமைக்குப் போகத் தான் வழி செய்யும். அந்தச் சூழ்நிலையில் தான் மேல் நிலைக் கல்வி வருகிறது. 15 கோடிரூபாய் நட்டம் என்று பேராசிரியர் அவர்கள்சொன்னார்கள். நான் தாழ்மையோடு சொல்லிக் கொள்கிறேன். பி.யு.சி. வகுப்பு கல்லூரியிலே நடந்து கொண்டிருந்த நேரத்திலே அன்றைக்கு ஓரளவுக்குப் பரவாயில்லை என்று சொன்னாலும் எத்தனை நாட்கள் அந்தக் கல்லூரிகள் பணியாற்றின, அந்தக் கல்லூரிகளிலே எத்தனை நாட்கள் அந்த மாணவர்கள் படித்தார்கள், எத்தனை நாட்கள் அவர்களுக்கு அங்கே பாடம் சொல்லித் தந்தார்கள், எத்தனை நாட்கள் மாணவர்கள் அங்கே அறிவு வளர்ச்சி பெற்றார்கள் என்பதையெல்லாம் பார்க்கிற போது 15 கோடி நட்டமல்ல, நாம் இன்றைக்கு மாணவர்கள் சமுதாயத்தை அறிவு வளர்ச்சியை பெரு முயற்சியோடு பல விதமான எதிர்ப்புக்களையும் பொருட்படுத்தாமல் காப்பாற்றி இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய தினம் மேல் நிலைப் பள்ளிகள் எத்தனை நாட்கள் வேலை செய்து இருக்கின்றன என்று பார்த்தால் பெரும்பாலான பள்ளிகளில் குறைந்த பட்ச நாட்களைவிட 10, 15 நாட்கள்

அதிகமாக வேலை செய்து இருக்கிறார்கள். மிக அதிகமான அக்கறையோடு அந்தப் பாடங்கள் நடை பெறுகின்றன. இன்றைக்கு 59 சதவித மாணவர்கள் தேறியிருக்கிறார்கள் என்றால் அது சாதாரண காரியமல்ல. பி.யு.சி. தேர்வு நடை பெற்ற நேரத்திலே 40 சதவீதத்திற்கு மேல் பாஸ் செய்ததில்லை. நான் பல இடங்களிலே செல்லியிருக்கிறேன். நான் எந்தக் கிராமத்திற்குப் போனாலும் ஒரு இளைஞரைச் சந்தித்து என்ன படித்திருக்கிறாய் என்று கேட்டால் பி.யு.சி. பெயிலாகியிருக்கிறேன் என்று தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டுதான் சொல்கிற நிலைமை இருந்தது. பி.யு.சி. படிக்காமல் இருந்தால் அவன் எஸ்.எஸ்.எல்.சி. படித்திருக்கிறேன் என்றோ எஸ்.எஸ்.எல்.சி. பாஸ் செய்து இருக்கிறேன் என்றோ தான் பெருமையோடு சொல்லியிருப்பான்.

பி.யு.சி. நம்முடைய தமிழ்ச் சமுதாயத்தில் ஆயிரக்கணக் கணக்கான லட்சக்கணக்கான மாணவர்களைப் பலிகொடுத்த ஒரு படிப்பு என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அது மட்டுமல்ல, இன்னொரு தவறான கருத்து இருக்கிறது. 12வது வகுப்பு பி.யு.சி. க்கு சமமானது என்று. அது தவறான கருத்து. இன்றைய தினம் தரத்தை நாம் உயர்த்தியிருக்கிறோம். நாம் 11 ஆண்டுக் காலம் படித்த எஸ்.எஸ்.எல்.சி. படிப்பை 10 ஆண்டு ஆக்கியிருக்கிறோம். 11 வது என்பது பி.யு.சி., 12வது என்பது இப்போது இருக்கிற பட்டப் படிப்பில் முதல் ஆண்டுப் படிப்பு. ஆகவே இன்றைய தினம் 12 ஆண்டு படித்து விட்டு கல்லூரிக்கு வருகிறவர்களுக்கு தரம் உயர்ந்த பட்டப் படிப்பு தரப்படுகிறது. சென்ற ஆண்டு படித்தவர்கள் இரண்டாவது ஆண்டு படித்த படிப்பை இந்த ஆண்டு 12 வது வகுப்புக்குப் போகிறவர்கள் முதல் ஆண்டுக் கல்வியாகப் படிக்க இருக்கிறார்கள். அதற்கு அடுத்து 3 வது ஆண்டை இரண்டாவது ஆண்டிலே படிப்பார்கள். அவர்கள் மூன்றாவது ஆண்டு வருகிற போது எம்.ஏ. படிப்பில் முதலாவது ஆண்டில் அவர்களைக் கொண்டு வந்து சேர்க்கலாம். இது ஒரு புறம் இருக்க, இன்னொரு புறம் 3 ஆண்டுக் காலத்தையும் இன்னும் வேறு முறையிலே ரீ ஸ்டரக்ச்சர் செய்து புதிய திட்டத்தைத் தரமுடியுமா என்று பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே பட்டப் படிப்புக்குப் போகும் போது அதனுடைய சாதகத்தை பலனை அனுபவிப்பார்கள். எஞ்சினியரிங் கல்லூரிக்குப் போனாலும் அனுபவிப்பார்கள். மெடிக்கல் கல்லூரிக்குப் போனாலும் அனுபவிப்பார்கள். பி.யு.சி., 12 வது படிப்புக்குச் சமமானது அல்ல என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் அறிந்து கொள்ள வேண்டும். அந்த அடிப்படையிலே பார்க்கிற போது முக்கியமான பொறுப்புடன் கடமையை அறிந்து மாணவர்களுடைய நலனையும் தகுதியையும் அறிந்து தரத்தையும் உணர்ந்து நாம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்திருக்கிறோம் என்பதை நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.





திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, 12 ஆண்டுக் காலப் படிப்பும் பி.யு.சி. படிப்பும் இரண்டையும் ஒப்பிட்டு பி.யு.சி. படிப்பை விட 12 ஆண்டுக்காலப் படிப்பு அதிகத் தரமுள்ளது என்று அவர்கள் குறிப்பிடுகிறார்கள். தரத்தைப் பொறுத்து அப்படி ஒரு கருத்து இருப்பதற்கு இடம் இருக்க முடியும். நான் அதை மறுக்கவில்லை. ஆனால் அந்த பி.யு.சி. யையும் சேர்த்து 12 ஆண்டுக் கால படிப்பை மாணவர்கள் படித்ததற்கும் நாம் தான் பொறுப்பு. இந்த பிளஸ் 2 இரண்டு ஆண்டுக்காலமும் 10 ஆண்டுக் காலமும் மாணவர்கள் படித்ததற்கும் நாம் தான் பொறுப்பு. ஆகவே அரசாங்கம் ஏற்றுக் கொண்ட வகுப்பு முறைகள் மாறுபடுவதன் காரணமாக அதே 12 ஆண்டுக் காலம் படித்த மாணவர்களிலே சிறு ஏற்றத்தாழ்வு இருக்கலாம் என்றாலும், ஒரு வேளை பி.யு.சி. மாணவர் இதே தகுதியைப் பெற முடியாத நிலைமைக்கு ஆளாகி விட்டார்கள் என்று அமைச்சர் சொன்னாலும் கூட அவர்கள் படித்த அந்த 12 ஆண்டுக் காலத்திற்கு தர வேண்டிய முக்கியத்துவம் ஏறத் தாழ இந்தப் 12 ஆண்டுக் காலப் படிப்பிற்கும் இருக்க முடியும் என்பதை கல்வியமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பி.யூ.சி.-க்குச் சமமானது 12 ஆண்டுப் படிப்பல்ல என்ற கருத்தைத்தான் நான் வலியுறுத்திக்கொண்டு இருக்கின்றேன். அந்தக் கருத்து பேராசிரியருக்கு இருப்பதாக நான் சொல்லவில்லை. பொதுவாக அந்தக் கருத்து இருக்கிறது. 10 பிளஸ் 1 என்றும் 11 பிளஸ் 1 என்றும் சுட்டிக்காட்டிப் பார்க்கின்றார்கள். கூட்டிப் பார்க்கிற கல்வி அல்ல. காரணம் அறிவு வளர்ந்து வருகிறது. அதற்கேற்ப நாமும் நம் சிலபஸை மாற்றிக் கொண்டு வருகிறோம். நாம் 11 ஆண்டு படித்ததை இப்போது மாணவன் படித்துக் கொண்டு இருக்கிறான். எஸ். எஸ். எல். சி. பாஸ் செய்து கொள்கிறான், நாமே 11 ஆண்டு படித்ததை இப்போது 10 ஆண்டில் படித்துக் கொண்டிருக்கிறான் என்பதைத் தெரிந்துக் கொண்டால் அதற்கு மேல் ஏற்பட்ட மாற்றங்களை நாம் புரிந்து கொள்வதில் அவ்வளவு கடினம் இருக்காது என்று நம்புகிறேன்.

அறிவு வளர வளர நாம் சிலபஸை மாற்றிக் கொண்டுதான் இருக்கவேண்டும். அதை மாற்ற முடியாது என்று நாம் சொல்வோமானால் நாம் ஒரு ஜெயிலிலே, ஒரு சிறையிலே இருப்பதைப் போல இந்தச் சமுதாயத்தை மாற்ற வேண்டிய நிலைமை வருகிறதே தவிர விடுதலை தந்தவர்களாக ஆகமாட்டோம்.

(பிற்பகல் 1-40)

ஆகவே சிலபஸ் மாறும். இன்னும் எதிர்காலத்திலே அதிகம் படிக்கின்ற நிலைமை வந்தாலும் வரும். நாம் அந்தக் காலத்திலே பெருக்கலை, வாய்ப்பாடு படித்துக்கொண்டு, பெருக்கிக்கொண்டு

இருந்தோம். இன்றைக்கு கால்குலேட்டர் வந்து விட்டது. நாம் அன்றைக்கு லாக்ரதம் வேறு பல முறைகளிலே செய்து கொண்டு இருந்தோம். இன்றைக்கு லாக்ரதத்திற்குக் கால்குலேட்டர் வந்து விட்டது. ஆகவே, விஞ்ஞானம் முன்னேறிக்கொண்டு இருக்கிறது; அறிவும் வளர்ந்து கொண்டு இருக்கிறது. அந்த அறிவுக்கேற்ப கல்வித் திட்டங்களிலே மாறுதலை நாம் தர வேண்டும். அதை மறுப்போமேயானால் நாம் என்ன கதிக்கு ஆளாவோம்? அதையும் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அது மட்டுமல்ல, சர்க்கார் மாற்றியது, சர்க்கார் மாற்றியது என்று சொல்வதேகூட தவறு என்று நான் சொல்கிறேன். இதற்கென பல குழுக்கள் இருக்கின்றன; இதற்கென ஆராய்ச்சி நிபுணர்கள் இருக்கின்றார்கள்; இதற்கென கமிட்டி போடப்பட்டு அவர்கள் ஆராய்ந்து அவர்கள் சிபாரிசு செய்கிறார்கள். அவர்கள் சிபார்சு செய்ததை முழுமையாக ஏற்றுக் கொண்டு அமல் நடத்திய ஒரே மாநிலம் தமிழ் மாநிலம். அதை வேண்டுமானால் நான் இங்கே தைரியமாகச் சொல்ல முடியும். அதை மாற்றி நிர்வாகச் சிக்கலின் காரணமாக அல்லது நிதிப் பற்றாக்குறையின் காரணமாக அல்லது அரசியல் ரீதியாக அல்லது அரசியல் கட்சியினுடைய ரீதியாக சர்க்கார் என்ற நினைப்போடு அந்தத் திட்டத்தை மற்ற மாநிலங்கள் மாற்றியிருக்க முடியுமே தவிர, அந்த நிபுணர்கள் சொன்னதை அப்படியே ஏற்றுக் கொண்டு அமல் நடத்திய ஒரே மாநிலம் தமிழ் மாநிலம் என்பதை நான் இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன். ஆகவே, மேல்நிலைக் கல்வியில் தமிழ் நாடு மற்ற மாநிலங்களுக்கு வழி காட்டுகிறது என்று வடக்கே இருக்கின்றவர்கள், டெல்லியிலே இருக்கின்றவர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள். இதிலே வெற்றி பெற வேண்டுமென்ற அக்கறையோடு மேலும் பல காரியங்களைச் செய்ய வேண்டுமென்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால், எடுத்த நடவடிக்கை சரியானது என்பதை நான் இங்கே வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

சமூகக் கல்வியைப்பற்றி மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் சொன்னார்கள். நாம் இதை நல்ல முறையில் உணர்ந்துதான் மேல்நிலைக் கல்வியைக் கொண்டு வருகின்றபொழுதே—இது வரையிலும் பள்ளிக்கூடத்தில் ''மாரல் எஜுகேஷன்'' மட்டும் கற்றுத் தந்து கொண்டிருந்தார்கள்; நீதியை ஒழுக்கக் கல்வி என்ற பெயரால் கற்றுத் தந்து கொண்டிருந்தார்கள். நாம் மாணவனுக்கு ஒழுக்கத்தை மட்டும் சொல்லிக் கொண்டிருப்பதாலே என்ன பலனைக் கண்டோம் என்பதைச் சிந்தித்துப் பார்க்கின்றபொழுது அந்த அளவிற்குப் பலனைப் பெறவில்லை என்றுதான் நாம் கருதி, ஒவ்வொருவருக்கும் இந்தச் சமுதாயக் கடமையை, சமுதாயப் பண்பை உணர்த்த வேண்டுமென்று கருதி, சோஷ்யல் எஜுகேஷன் அவர்களுக்குச் சொல்லித்தர



வேண்டுமென்று கருதி இன்றையதினம் 11-வதிலேயும், 12-வதிலேயும் ''மாரல் அண்ட் சோஷ்யல் எஜுகேஷன்'' தரப்பட்டு வருகிறது. அது சரியாக தரப்படுகிறதா என்கின்ற பிரச்சினை வேண்டுமானால் இருக்கலாமே தவிர, நாம் தரவில்லை என்ற நிலைமை இன்றைக்கு இல்லை என்பதை நான் குறிப்பிட்டுக் கூற விரும்புகின்றேன்.

வேறு பல கருத்துக்களை இங்கே முன் வைத்தார்கள். நர்சரி பள்ளிகளைப்பற்றி ஒன்றைச் சொல்லியாக வேண்டும். இன்றைய தினம் எங்கு பார்த்தாலும் ஆரம்பிக்கிறார்கள். ஆரம்பிக்கிறார்கள் என்றால் மக்கள் அதை விரும்புகிறார்கள், ஆகவே ஆரம்பிக்கிறார்கள். ஆரம்பிக்கின்றவர்கள் நிறையப் பணத்தைக் கேட்கிறார்கள். முடிந்தவர்கள் தருகிறார்கள். ஆகவே, பல பேர் அதிலே சம்பாதித்துக்கொண்டு இருக்கிறார்கள்; பலபேர் அதிலே சம்பாதிக்க முடியாமலேயும் இருக்கலாம். பலபேர் கஷ்டத்திலேகூட அந்தப் பள்ளிகளை நடத்திக் கொண்டு இருக்கிறார்கள்.

ஆனால், நர்சரி பள்ளிகள் என்பதிலே இரண்டு விதமான குறைபாடுகள் இன்றைய தினம் இருந்து கொண்டிருக்கின்றன. பணம் வாங்குகிறார்கள் என்ற குறைபாடு; ஆங்கிலத்திலே நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்ற குறைபாடு. அந்தப் பள்ளிகளிலே ஆங்கிலத்திலே நடைபெறுகின்ற காரணத்தினால் உயர்நிலைப் பள்ளியிலே வருகின்றபொழுது எங்களுக்கு ஆங்கில மீடியம் வேண்டுமென்று கேட்கின்ற நிலைமை உருவாகிக் கொண்டிருக்கின்றது. ஆகவே, இதைப் போக்க வேண்டுமேயானால் அரசாங்கம் நர்சரிப் பள்ளிகளை ஒழுங்குபடுத்துவதோடு, அரசாங்கப் பள்ளிகள் அல்லது அரசாங்கத்தினுடைய மானியம் பெறும் பள்ளிகள் தமிழ் நர்சரி பள்ளிகளைத் துவக்குகின்ற ஒரு முயற்சியை மேற்கொண்டாக வேண்டும். ஆகவே, நாட்டிலே பெருவாரியாகத் தமிழில் நர்சரிப் பள்ளிகள் துவங்கப்பட வேண்டும். இது தேவையா என்றால் தேவை என்று இந்த அரசு நன்கு உணர்கிறது. காரணம், இன்றைய தினம் ஒரு ஜாதியிலே பிறந்தவர்களுக்கும், இன்னொரு ஜாதியிலே பிறந்தவர்களுக்கும் படிப்பிலே வித்தியாசம் இருக்கிறது என்று நாம் பார்க்கின்றபொழுது, பிறந்த ஜாதியைக் குறைத்துச் சொல்கின்ற பழக்கத்தை மிகச் சாதாரணமாக நாம் பேசிக் கொண்டு வருகிறோம். அது ஒரு பக்கம் உண்மையாக இருந்தாலும் கூட, அடிப்படை உண்மை எது என்று பார்க்கின்றபொழுது இன்றைக்கு இந்த நர்சரிப் பள்ளி ஒரு காரணமாக வருகிறது.

அவன் எல். கே. ஜி. படித்து, யு கே. ஜி. படித்து விடுகிறான். வசதியான குடும்பத்திலே பிறந்தவர்கள்; நகரத்திலே இருக்கின்றவர்கள்; அல்லது படித்த குடும்பத்திலே சார்ந்தவர்கள்; அவன் எல். கே. ஜி. யு. கே. ஜி. படித்து விட்டு ஒன்றாவதுக்கு வருகிறான். இவன் எதையும் படிக்காமல் ஒன்றாவதுக்கு

[திரு. செ. அரங்கநாயகம்] [1980 ஜூலை 12

வருகிறான். அப்பொழுது ஏற்படுகின்ற அந்த வித்தியாசம் தொடர்ந்து கடைசி வரைக்கும் இருந்து, அந்த மாணவர்களுக்கு வாய்ப்புக்கள் கிடைப்பதைத் தவிர்த்துக் கொண்டிருக்கின்றன.

அதுமட்டுமல்ல, மூன்று வயதிலிருந்து ஐந்து வயது வரைக்கும் ஒரு குழந்தைக்கு அறிவு வளர்ச்சி மிக வேகமாக ஏற்படுகிறது என்று அந்த நிபுணர்கள் கூறிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மிக வேகமாக அறிவு வளர்ச்சி ஏற்படுகிற ஒரு கட்டத்தில் சில குழந்தைகள் அந்த வாய்ப்பைப் பெறுவதும், பெரும்பாலான குழந்தைகள், அவர்கள் பலகீனமான பகுதியைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம்; பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம்; சேரியைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம்; கிராமங்களைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம்; ஏழைகளாக இருக்கலாம்; அந்தக் குழந்தைகளுக்கு அந்த வாய்ப்பு கிடைக்காத நிலைமைகள் இருக்கின்ற காரணத்தினால் எதிர்காலத்தில் அவர்கள் பல்வேறு இடங்களுக்குச் செல்கின்ற பொழுது அந்தக் குழந்தைகளோடு போட்டி போட முடியவில்லை என்ற நிலைமை இன்றைக்கு இருக்கின்றது. அந்தத் தவறை அல்லது குறைபாட்டைப் போக்குவதற்காக அரசு ஒரு நடவடிக்கை எடுப்பதற்கான நிலைமையில் தீவிரமாகச் சிந்தித்துக் கொண்டு இருக்கிறது என்பதையும் நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன்.

ஆகவே, நர்சரி பள்ளிகள் பணம் வசூலிக்கின்றன. அவைகளை, எப்படி நாம் ரெகுலேட் செய்வது, எப்படி ஒழுங்கு படுத்துவது என்பதோடு மட்டுமல்லாமல், இப்படி ஒரு அடிப்படை தேவை அதிலே இருக்கிற காரணத்தால்—இல்லையென்றால் நர்சரி பள்ளிகளை, 'பான்' செய்து விடலாம், அல்லது கூடாது என்று சொல்லலாம், அல்லது தடுக்கலாம். ஆனால், இன்றைக்கு அது தேவை என்கின்ற நிலைமைதான் இருக்கிறதே தவிர, தடுக்கின்ற நிலைமை இல்லை. ஆகவே, அவற்றை ரெகுலேட் செய்வது என்பதோடு, இத்தகைய பலஹீனமான பகுதி மக்களுக்கு அந்த வசதி ஒருசேர கிடைக்கின்ற வாய்ப்பை ஒருசேர நாம் ஏற்படுத்த வேண்டுமென்ற ஆசை இருக்கிறது, என்பதை மட்டும் நான் இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

அதற்கடுத்து, மதுரை காமராஜ் பல்கலைக் கழகங்கள் பகுதியிலே உள்ள ஆசிரியர் போராட்டங்களைப் பற்றி சொன்னார்கள். அந்தப் போராட்டங்களிலே மையமான கருத்து ஒன்று இருக்கிறது. அனைத்து ஆசிரியர்களையும் அரசு ஊழியர்களாக ஆக்குகிற அந்தப் பிரச்சினையில் நாம் முழுமையாகக் கொண்டு வராமல் இருப்பதற்கும் அதுதான் காரணம். இன்றைய தினம் நாம் பஞ்சாயத்து யூனியன் பள்ளி ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக ஆக்குகிறோம். இன்றைக்கோ, நாளைக்கோ, முனி



1980 ஜூலை 12] [திரு. செ. அரங்கநாயகம்]

சிப்பல் நகராட்சிப் பள்ளி ஆசிரியர்களையும் அரசு ஊழியர்
களாக ஆக்கலாம். ஆனால், தனியார் பள்ளிகள் என்று வரும்
போது, பெரும்பான்மை சமுதாயமான இந்து சமுதாயத்
தைச் சேர்ந்தவர்களும் பள்ளிகளை நடத்துகிறார்கள். சிறு
பான்மைச் சமுதாயத்தைச் சேர்ந்த கிறிஸ்தவர்களும், முஸ்
லிம்களும், மற்றவர்களும் பள்ளிகளை நடத்துகிறார்கள். ஆனால்,
நாம் ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக ஆக்குவது என்று வரு
கின்றபொழுது, நமக்கிருக்கிற பெரிய உரிமை எல்லாம் பெரும்
பான்மை சமுதாயத்தினர் நடத்திக் கொண்டிருக்கின்ற அந்தப்
பள்ளிகளைக் கட்டுப்படுத்துகின்ற உரிமைதான். ஆனால்,
சிறுபான்மைச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுடைய பள்ளி
களிலே நாம் எந்தவிதமான கட்டுப்பாட்டையும் செய்ய முடி
யாத நிலைமை இன்றைக்கும் இருந்து கொண்டிருக்கிறது.
ஆகவே, இன்றைக்கு நாம் நடவடிக்கை எடுப்பது என்பது ஒரு
சாதாரணமான காரியம். இந்து சமுதாயத்தைச் சேர்ந்தவர்
களுடைய பள்ளிகளை அரசுடமையே கூட ஆக்கலாம் அல்லது,
ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக ஆக்கலாம். அவர்களைக்
கட்டுப்படுத்தலாம். ஆனால், அப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்
படும் என்றால் ஒரு நாட்டில் பெரும்பான்மைச் சமுதாயத்
தினருக்கு இல்லாத உரிமை சிறுபான்மைச் சமுதாயத்தினருக்கு
இருக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கும். இது சமுதாயத்திலே
மிகப் பெரிய அநீதியாக வளரக் கூடிய நிலைமை இருக்கிறது.
ஆகவே, நாம் ஒரு காரியத்தைச் செய்கின்றபொழுது, அப்படிப்
பட்ட அநீதி இல்லாமல், அப்படிப்பட்ட ஒரு பேதாபேதம்
இல்லாமல், ஒரு சமத்துவமான நிலைமையில் ஒரு காரியத்தைச்
செய்ய வேண்டுமென்று விரும்புகிறோம். அதற்கு ஒரு சூழ்
நிலை வரும் என்று நாம் எதிர் பார்க்கிறோம். அந்தச் சூழ்
நிலை வர வேண்டுமென்றபோராட்டம் தான் மதுரை காம
ராஜர் பல்கலைக் கழக ஆசிரியர்களுடைய போராட்டம்.

அவர்கள் விரும்புவதெல்லாம் இன்றைக்கு நமக்கு குறுக்கே
நிற்பது உயர்நீதிமன்ற, உச்ச நீதிமன்ற தீர்ப்புகளாக இருக்க
லாம். சிறுபான்மை மக்களுக்கு இருக்கிற அந்த உரிமைகள்—
அவர்கள் நடத்துகின்ற பள்ளிகளிலே அரசுக்கு அந்த அளவுக்கு
உரிமைகள் இல்லை என்கிற நிலைமைகள் காரணமாக இருக்க
லாம். ஆனால் அவர்கள் விரும்புவதெல்லாம்—அரசியல் சட்
டத்தை மாற்றம் செய்வதன்மூலம், திருத்தம் செய்வதன்மூலம்
அரசுக்கு ஆசிரியர்களைப் பொறுத்தமட்டில், ஆசிரியர்களுடைய
பணிப் பாதுகாப்பைப் பொறுத்த மட்டில், அரசுக்கு ஒரு உரி
மையைத் தரவேண்டுமென்ற திருத்தத்தைக் கொண்டு வர
வேண்டுமென்று அவர்கள் வலியுறுத்துகிறார்கள். அது தொடர்
பான போராட்டம்தான் அவர்கள் இன்றைக்கு அறிவித்திருக்
கிற போராட்டம். அந்தப் போராட்டத்திற்கு நான் நல்
வாழ்த்து கூறுகின்றேன். உங்களுடைய ஆதரவு இருக்கும்
என்று கருதுகிறேன். எல்லா கட்சியைச் சேர்ந்தவர்களும்

அதிலே அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டும். சிறுபான்மை சமுதாயத்தினருடைய கல்விப் பணியிலே நாம் குறுக்கிட விரும்பவில்லை. அங்கே ஆசிரியர்களாக இருக்கின்றவர்களைப் பாதுகாக்கின்ற பொறுப்பு அரசுக்கு இருக்க வேண்டும்.

முஸ்லீம் சமுதாயத்தினரது கல்லூரியிலே ஸ்டிரைக் நடக்கிறது என்றால், அங்கே பாதிக்கப்படுபவர்கள் பெரும்பாலும் முஸ்லீம்களாகத்தான் இருப்பார்கள். கிறிஸ்தவப் பள்ளியிலே ஒரு ஆசிரியர் வெளியேற்றப்பட்டார் என்றால், அங்கே போய் பார்த்தால் அவர் கிறிஸ்தவராகத் தான் இருக்கிறார். ஆசிரியர் என்ற முறையிலே நாம் அவரைக் காப்பாற்ற முடியவில்லை. சாதாரணமாக, மில்லிலே ஒரு காவலாளியை நாம் காப்பாற்ற முடியும். ஒரு கடையிலே ஒரு பையனை நாம் காப்பாற்ற முடியும். ஆனால், மிகப் பெரிய படிப்பு படித்த பேராசிரியரை கூட நம்மால் காப்பாற்ற முடியவில்லையென்ற இழி நிலை தான் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. அந்த இழி நிலை விரைவிலே போகும் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. அந்த முறையிலே நடைபெறுகிற அல்லது திரட்டப் படுகிற போராட்டங்கள் அல்லது கருத்துக்கள் வெற்றி பெற வேண்டுமென்றுதான் நான் விரும்புகிறேன், நாமும் விரும்ப வேண்டும்.

அதற்கடுத்து அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைப் பற்றிப் பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். பல்வேறு உணர்வுகளை நீங்கள் வைத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்பதை இந்த அரசு உணருகிறது. அதற்குத் தேவையான நடவடிக்கையை இந்த அரசு நிச்சயம் எடுக்கும் என்கிற உறுதியை நான் இங்கே கூறவிரும்புகிறேன்.

அது மட்டுமல்ல, மற்ற பல்கலைக் கழகங்களும் சீராக நடைபெற வேண்டுமென்பதிலே எனக்கு ஆசை இருக்கிறது. இருப்பதைவிட இன்னும் நல்லமுறையிலே நடைபெற வேண்டுமென்ற ஆசையிருக்கிறது. ஆனால், அவை எடுக்கின்ற முடிவு இருப்பதை விட, மோசமான நிலைமைக்கும் கொண்டு போகக் கூடாது ; கொண்டு போய் விடக் கூடாது என்ற அச்சமும் நமக்கு இருக்கிறது.

பொதுவாக, பல்கலைக் கழகம் என்பது இங்கே, மதிப்பிற்குரிய நெடுமாறன் அவர்கள் சொன்னதைப் போல், அங்கே பெரும் அளவிற்கு ஆராய்ச்சி மனப்பான்மை இருக்கவேண்டும், ஆராய்ச்சி நடைபெறுகிறது என்ற நிலைமை இருக்கவேண்டும், ஆராய்ச்சியிலே ஆர்வம் இருக்க வேண்டும். கல்லூரியிலே படிக்கிறார்கள், தேர்வு வைக்கிறோம், அதற்கேற்ப படிக்கிறார்கள், பாஸ் செய்கிறார்கள். என்ற நிலைமை இருக்கலாம்.



ஆனால், பல்கலைக் கழகம் என்பது ஒரு கல்லூரி அல்ல; பல்கலைக் கழகம் என்பது கல்லூரியை விட உயர்வான இடம்: பல்கலைக் கழகத்திலே ஆராய்ச்சி நிலைமைகள் இருக்கின்றன. அங்கே நடைபெறுகின்ற ஆராய்ச்சி பல்வேறு பல்கலைக்கழகங்களிலே நடைபெறுகிற ஆராய்ச்சிக்குச் சமமாக நடைபெறுகிறது. அங்கே பல்வேறு பல்கலைக் கழகங்களிலிருந்தும் அறிஞர் பெருமக்கள் வருகிறார்கள். அந்த ஆராய்ச்சியிலே பங்கு கொள்கிறார்கள் ; தமிழ்நாட்டிலேயிருக்கிற ஒவ்வொரு பல்கலைக் கழகமும் ஏதேனும் ஓரிரு துறைகளிலாவது உலகத்தினுடைய கவனத்தைக் கவர்ந்திருக்கிறது என்கிற நிலைமையை நம்முடைய பல்கலைக் கழகம் பெறவேண்டும்.

[பிற்பகல் 1—50]

இதுதான் நம்முடைய ஆசை. அதற்கேற்ப நாம் தேவையான மாறுதலை செய்ய வேண்டும் என்று விரும்புகிறோம் ஆகவே அவ்வப்போது அந்த மாறுதல் வரும். அப்படி வரும் போது உங்களுடைய ஆதரவை நான் கேட்க விரும்புகிறேன்.

அதற்கடுத்து ஆசிரியர்களைப் பொறுத்த மட்டில் இன்னொன்றையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். கல்லூரி ஆசிரியர்களைப் பொறுத்த மட்டில், தனியார் கல்வி நிறுவனங்களில் இருக்கின்றவர்கள் அடிமைகளைப் போல இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அது ஓரளவுக்கு உண்மையாக இருக்கலாம். ஆனால் இந்த 2 1/2 ஆண்டு காலத்திலே அரசு எடுத்த நடவடிக்கையின் காரணமாக இன்றைக்கு அந்த அடிமை நிலை மாற்றப்பட்டிருக்கிறது. யாரும் நிர்வாகிகளைப் பார்த்து பயப்பட வேண்டிய நிலைமை இல்லை என்ற நிலமையை நாம் உருவாக்கி இருக்கிறோம். நாம் அந்த ஆசிரியர்களுக்குத் தந்திருக்கிற பாதுகாப்பு இந்தியாவிலே உள்ள வேறு எந்த ஆசிரியருக்கும் கிடையாது என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அந்த அளவுக்கு நாம் அக்கறை எடுத்துக் கொள்கிறோம். அந்த அளவுக்கு பாதுகாப்பு எடுத்துக் கொள்ளுகிறோம்.

கல்லூரி ஆசிரியர்களுக்கு இப்போது நேரடியாக சம்பளம் தந்துகொண்டு இருக்கிறோம். அந்த நிலைமையைப் பரிசீலித்து அது ஓரளவுக்கு சிறப்பாக நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. மற்ற ஆசிரியர்களுக்கும் தொடக்க பள்ளி ஆசிரியர்களுக்கும் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கும், மேல் நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கும் தரவேண்டும் என்று விரும்புகிறோம். அது மட்டுமல்ல. அரசு ஆசிரியர்களுக்கும் தர விரும்புகிறோம். அரசு பள்ளிகளில் இருக்கிற ஆசிரியர்களுக்கும் அத்தகைய நேரடி ஊதியத்தை நாம் தர விரும்புகிறோம். காரணம் என்னிடத்திலே வருகிற புகார்கள் எல்லாம், தலைமை ஆசிரியர் செக் வாங்கப்போகும் போது

அவருக்குப் பணம் தரவேண்டும் என்று கேட்கிறார்.
அந்த செக்கை மாற்றுவதற்காகப் போகும்போதும் அவருக்கும்
பணம் கொடுக்க வேண்டும் என்ற நிலை இருக்கிறது. அந்த
நிலையை மாற்றவேண்டுமானால் நேரடியாக ஊதியத்தைக்
கொடுத்தால் சிறப்பாக இருக்கும். நாம் செக்கை பாங்குக்கு
அனுப்பி விடுகிறோம். அந்தச் செக் அவர்கணக்கிலெ வரவு
வைக்கப்படுகிறது. அவர்களுக்குத் தேவைப்படும்போது அவர்
கள் பாங்குக்குப் போய் பணம் வாங்க வேண்டுமே தவிர,
சம்பளம் வாங்குவதற்காக ஒருவர் முன்னாலே நிற்க வேண்டிய
அவசியம் இல்லை. அது இன்றைக்கு ஒழிக்கப்படுகிறது
நேரடி ஊதியத்தின் மூலம். இது தற்போது கல்லூரிக்கு
மட்டும் இருக்கிறது. அதை எல்லோருக்கும் விரிவு படுத்த
ஆசை என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள
விரும்புகிறேன்.

அதற்கடுத்து தமிழக அரசு இரு மொழிக் கொள்கையை
அழுத்தந்திருத்தமாக கடைபிடித்து வருகிறது என்று சொல்லு
கிற அந்த நேரத்தில் National Policy on Education
என்று ஒவ்வொரு ஆண்டும் அனுப்புகிறார்கள். சென்ற
ஆண்டு அனுப்பிய ரிப்போர்ட் என்னுடைய கையிலே இருக்கிறது
அதிலே கூட மும்மொழிக் கொள்கையை வலியுறுத்திச் சொல்லி
யிருக்கிறார்கள். அதைப் பொறுத்த மட்டில் தமிழக அரசு
அதை ஏற்றுக் கொள்ளவில்லை. நாங்கள் இரண்டு மொழிகள்
போதும் என்று சொல்லி இருக்கிறோம் அதுதான் இந்திய
ஒற்றுமையைக் காப்பாற்றும் என்றும் நாங்கள் சொல்லியிருக்
கிறோம். அந்த அடிப்படையிலே நாங்கள் அதை வலிறுத்
திக் கூறுகிற நேரத்தில், 1980 ஆம் ஆண்டு பாராளுமன்றத்
தேர்தலுக்கு முன்னாலே வெளியிட்ட அனைத்துக் கட்சிகளினு
டைய தேர்தல் அறிக்கையை நான் பார்க்கின்றபோது
எந்தக் கட்சியும் மும்மொழி கொள்கைக்கு ஆதரவு தரவில்லை.
நாங்கள் வந்தால் இந்தியை நுழைக்கமாட்டோம் என்பதை வலி
யுறுத்துவதன் மூலமாக அனைத்து கட்சிகளும் கூட மும்மொழித்
திட்டத்திலே நம்பிக்கை போய்விட்டது என்று கூறுகின்ற
அளவுக்குத்தான் தேர்தல் அறிக்கை இருந்திருக்கிறது. அப்
படிப் பார்க்கிறபோது இருமொழிக் கொள்கை வெற்றி
பெறுகிறது என்று நான் சொல்ல முடியுமே தவிர, அதையும்
பெருமையோடு சொல்ல முடியுமே தவிர, மும்மொழிக் கொள்கை
தோற்றுக் கொண்டிருக்கிறது என்பதையும் நான் கூறிக்கொள்ள
விரும்புகிறேன். அதைப் பொறுத்த மட்டில் யாருக்கும்
சந்தேகம் இருக்கத் தேவையில்லை. 1967 லே பேரறிஞர்
அண்ணா அவர்கள் கொண்டு வந்த அந்தக் கொள்கை நல்ல
முறையிலே பின்பற்றப்படும் என்ற உறுதியை நான் கூற
விரும்புகிறேன்.

கட்டடங்களைப் பற்றிச் சொன்னார்கள். கட்டடங்
களுக்குத் தனியாக ஒதுக்கி இருக்கிறோம். 17 கோடி
ரூபாய் ஆரம்பப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், மேல்



நிலைப் பள்ளிகள், தொழிற்பயிற்சிபள்ளி நிறுவனங்கள் ஆகியவை
களுக்கு ஒதுக்கி இருக்கிறோம். இதிலே ஒரு விவரத்தை
நான் உங்களுக்கு கூற விரும்புகிறேன். 1977–78, 1978–79
1979–80 ஆகிய 3 ஆண்டுகளிலும் பள்ளிக் கட்டடங்களுக்காக
நாம் ஒதுக்கிய தொகை 16 கோடி ரூபாய். நாங்கள்
வந்ததற்குப் பிறகு கட்டடங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகை
16 கோடி ரூபாய்கள். ஆனால் இந்த ஆண்டு மட்டும்,
9·44 கோடி என்று நான் சொல்லுகிறபோது மாண்புமிகு
உறுப்பினர்களின் உணர்வோடு நாங்களும் ஒத்து, அரசு
தேவையான அளவு அக்கறை எடுத்துக் கொண்டு இருக்கிறது
என்பதை இந்தப் புள்ளி விவரம் காட்டும் என்று கருது
கிறேன்.

அதற்கு அடுத்து, இடையில் நின்று விடுகிறவர்கள் தொகை
நாம் பாராட்டுகின்ற அளவிற்குக் குறைந்து இருக்கிறது. 1955–
56-ம் ஆண்டில் 72 சதவிதம் இருந்தது. அதாவது 1-வது
வகுப்பிலே சேருவார்கள். 5–வது வகுப்பு வந்து பார்க்கிற
போது, 100- பேர் சேர்ந்து இருந்தார்கள் என்று சொன்னால்
72-பேர்கள் கூட இருக்கமாட்டார்கள். 1973–74-ம் ஆண்டில்
அது 51 சதவிதம் என்று இருந்தது. 1978–79-ல் 38 சத
வீதம் என்று இருந்தது. 1979–80-ல் 33 சதவீதம் என்கிற
அளவிற்கு இருக்கிறது. ஆகவே, நாளாக நாளாக நாம் எடுத்து
வருகிற பல்வேறு நடவடிக்கைகள் காரணமாக குறைகிறது.
இது வரவேற்கத்தக்க ஒன்று என்று நான் கூறிக்கொள்ள
விரும்புகிறேன்.

அடுத்து, மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் மொழி
பயிற்சி தொடர்பாக In-service training Refresher
Course பற்றி சொன்னார்கள். பணி இருப்புப் பயிற்
சியா அல்லது பணி ஊடு பயிற்சியா என்று சொல்லிக் கொண்டு
வந்தார்கள். பணியிடைப் பயிற்சி என்றும் சொல்கிறார்
கள். அந்தப் பயிற்சிக்காக மேல்நிலை பள்ளிகளில் பணி
யாற்றும் ஆசிரியர்களுக்கு இந்த ஆண்டு மேல்நிலை வகுப்பு
களுக்குச் செல்ல இருக்கும் ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிப்ப
தற்காக ரூ. 10 லட்சம் ஒதுக்கி இருக்கிறோம். அந்தப்
பணியிடைப் பயிற்சி சென்ற ஆண்டைப் போல இந்த ஆண்டும்
சிறப்பாக நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1980–81 ஆம் ஆண்டில் பின்வரும் கூடுதல் ஆசிரியர் பதவி
கள் ஏற்படுத்தப்பட்டு இருக்கின்றன. வேலை இல்லாமல்
கஷ்டப்படுகின்ற பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் நலத்தைக் கருத்
தில் கொண்டு இந்தக் காரியத்தைச் செய்து இருக்கிறோம்.
1 முதல் 8 ஆம் வகுப்புகளுக்கு 1,000 இடை நிலை (செகண்
டரி கிரேடு) ஆசிரியர் பதவிகள்; உயர் தொடக்கப்பள்ளி
களுக்கும் உயர்நிலைப் பள்ளிகளுக்கும் 200 உடற் பயிற்சி

[திரு. செ. அரங்கநாயகம்] [1980 ஜூலை 12

ஆசிரியர் பதவிகள்; உயர் தொடக்கப்பள்ளிகளுக்கு 200 பி.டி. தர தலைமையாசிரியர் பதவிகள்; உயர்நிலைப் பள்ளிகளுக்கு 200 பி.டி. ஆசிரியர் பதவிகள், மேல்நிலைப் பள்ளிகளுக்கு 2,100 மேல் நிலைப் பள்ளி ஆசிரியர் பதவி கள், மற்றும் 200 உடற் பயிற்சி இயக்குநர் பதவிகள் ஆக மொத்தம் 3,900 ஆசிரியர் பதவிகள் புதியதாக ஏற்படுத்தப்படும். மேலும் தற்போது தொடக்கப்பள்ளி களிலுள்ள பகுதி நேர கைத்தொழில் ஆசிரியர் பதவிகள் 200 முழு நேரப் பதவிகளாக உயர்த்தப்படும். ஆக, 3,900 ஆசிரியர் பதவிகள் புதிதாக இந்த ஆண்டு ஏற்படுத்தப்படும்.

கல்வித் துறை நிர்வாகத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் 1980–81-ல் புதியதாக புதுக்கோட்டை மாவட்டத்திற்கு ஒரு முதன்மைக் கல்வி அலுவலர் பதவியும், அறந்தாங்கியில் ஒரு மாவட்டக் கல்வி அலுவலர் பதவியும், மற்றும் மூன்று மகளிர் பள்ளி ஆய்வாளர் பதவிகளும் ஏற்படுத்தப்படும். மேலும் நீலகிரி மாவட்டத்திற்கு புதியதாக ஒரு முதன்மை கல்வி அலுவலர் பதவி ஏற்படுத்தப்படும். ஆக, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு முதன்மைக் கல்வி அலுவலர் இருப்பார்.

தொடக்கப்பள்ளி மதிய உணவுத் திட்டத்திற்காக தமிழ் நாட்டிற்கு கேர் நிறுவனம் ஆண்டுதோறும் தரும் சுமார் 20,000 டன் உணவை முறையாகச் சேமித்து வழங்கி வர இதுவரையில் மையக் கிடங்கு ஒன்றும் வட்டாரக் கிடங்குகள் 9-ம் கட்டப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கான கிடங்கு வசதிகளை முழுமையாக்க, மொத்தம் சுமார் ரூ. 35 லட்சம் செலவில் மேலும் ஒரு மையக் கிடங்கும், இரண்டு வட்டாரக் கிடங்குகளும் கட்டப்பட இருக்கின்றன. செலவில் 45 விழுக்காடான ரூ. 15.75 லட்சத்தை கேர் ஏற்றுக்கொள்ள இசைந்துள்ளது. இம் மூன்று கிடங்குகளைக் கட்டும் வேலை இவ்வாண்டு தொடங் கும்.

தமிழகத்தில் 1980–81 முதல் மேல்நிலைப் பள்ளி மாண வர்களுக்கும் தேசியப் பணித் திட்டம் விரிவாக்கப்பட இருக்கிறது. (என். எஸ். எஸ்.) மேல்நிலைப் பள்ளிகளில் இத்திட்டத்தின் கீழ் பயன்பெறும் மாணவர்களின் எண்ணிக்கை 10,000 என்றும் சிறப்பு முகாம்களில் பங்குபெறுவோர் எண்ணிக்கை 5,000 என்றும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மாவட்டங்களிலுள்ள முக்கிய ஊர்களில் கிளை நூலகங் களுக்காக ரூ. 50,000-க்குக் குறையாத மதிப்புள்ள கட்டிடங்கள் கட்டி அளித்தால் நன்கொடையாளர் குறிப்பிடும் மறைந்த நபர் களின் பெயரை அக்கட்டிடங்களுக்கு வைப்பதற்கு அனுமதியளிக் கப்படும் தனியாரால் பொதுமக்களின் நலனுக்காக நடத் தப்படும் பொது நூலகங்களுக்கு உதவி அளிக்க அரசு ஒரு



1980 ஜூலை 12] [திரு. செ. அரங்கநாயகம்]

திட்டத்தை வகுக்கும். கன்னியாகுமரி மாவட்டத்திற்கு தமிழ் நாடு பொதுநூலகச் சட்டத்தை விரிவாக்கி பொது நூலக ஆணைக் குழு அமைக்க அரசு நடவடிக்கை எடுக்கும். புதுக்கோட்டை மாவட்டத்தில் புதிய நூலக ஆணைக்குழு விரைவில் அமைக்கப் படும்.

தற்பொழுது சென்னை, புதுக்கோட்டை, சேலம் ஆகிய இடங் களில் மட்டுமே அரசு அருங்காட்சியகங்கள் உள்ளன. ஒவ் வொரு மாவட்டத் தலை நகரங்களிலும் அப்பகுதி மக்களின் கலை, பண்பாடு, இயற்கை வளம் போன்றவைகளைக் கொண்டு அருங்காட்சியகங்கள் அமைக்கும் திட்டத்தின்படி இவ்வாண்டு மதுரையில் ரூ. 1·73 லட்சத்தில் ஒரு அருங்காட்சி யகம் அமைக்கப்பட இருக்கின்றது.

மதுரை நகரிலுள்ள கோவலன்பொட்டல் என்னுமிடத்தில் அகழ்வாராய்ச்சியில் 2,000 ஆண்டுகளுக்கு முன் புதைக்கப்பட்ட முதுமக்கள் தாழிகளும், புதைக்குழிகளும் வெளிப்பட் டுள்ளன. இந்த இடத்தில்தான் கோவலன் புதைக்கப்பட்டதாக மக்கள் மரபு குறிக்கிறது. இதனை புராதன முக்கியத்துவம் பெற்ற இடமாக அறிவித்து பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப் படும்.

[முற்பகல் 2–00]

இவ்வாண்டு கங்கைகொண்ட சோழபுரம், தொண்டி ஆகிய இடங்களில் அகழ்வாராய்ச்சி செய்யப்பட்டது. தமிழகத்தில் வரலாற்றிலேயே சிறப்புடன் வாழ்ந்த மாமன்னன் ராஜேந்திர சோழனின் அரண்மனையினை முதன்முதலாக கங்கைகொண்ட சோழபுரத்தில் அகழ்வாராய்ச்சியில் மாநில தொல்பொருள் துறை வெளிக்கொணர்ந்துள்ளது. இவ்விடத்தில் கிடைக்கக் கூடிய பொருள்களைக் கொண்டு அவ்விடத்திலேயே ஒரு நிலை யான வரலாற்றுக் காட்சியகம் (சைட் மியூசியம்) வைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து மத்திய அரசின் உதவியுடன் பூம்பு காரில் ஆழ்கடல் அகழ்வாராய்ச்சி செய்து, மறைந்த கடல் கொண்ட காவிரிப்பூம்பட்டினச் சிறப்பினை வெளிக்கொணர உத்தேசிக்கப்பட்டுள்ளது. மறைந்து போன இந்த இடத்தை வெளியே கொண்டுவந்து, தமிழகத்து மக்களுக்கு மட்டுமல்லா மல் உலகிலுள்ள அனைத்து மக்களுக்கும் அந்த பூம்புகாரைக் காட்ட அந்த அகழ்வாராய்ச்சியை நாங்கள் மேற்கொள்ள இருக்கிறோம். இது கடல் நீருக்கு அடியிலுள்ள ஆராய்ச்சி. மத்திய அரசும் இதற்கு உதவ இருக்கிறது. இது மிக முக்கிய மான ஒரு ஆராய்ச்சி என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

புலித் தேவர், மருது சகோதரர்கள் ஆகியோரின் நினைவுச் சின்னங்களை புராதனச் சின்னங்களாக பாதுகாக்க தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரைப் பற்றியும் மற்றும் சைவ சித்தாந்தத்தைப் பற்றியும் ஆராய்ச்சிப் பணியிடங்கள் (செயர்ஸ்) சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஏற்படுத்த அரசு தேவைப்படும் மானியம் வழங்க இருக்கிறது.

இவ்வாண்டு விளையாட்டுக்களை ஊக்குவித்து சிறந்த விளையாட்டு வீரர்களை உருவாக்கும் நோக்குடன் தமிழ்நாட்டில் சென்னை, கோவை மற்றும் அண்ணாமலை நகர் ஆகிய மூன்று இடங்களில் சுமார் ரூ. 7·25 லட்சம் பொருட் செலவில் மூன்று விளையாட்டுப் பள்ளிகளை அரசு துவங்க இருக்கிறது. இது போல் விளையாட்டு வீரர்கள் தங்கிப் படிக்க உதவும் வகையில் தமிழ்நாட்டில் மூன்று விளையாட்டு விடுதிகளை திருநெல்வேலி, மதுரை, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் ரூ. 3·67 லட்சம் பொருட்செலவில் ஏற்படுத்தவிருக்கிறது.

தமிழ்நாட்டில் நீச்சல் கலையில் பயிற்சி கொடுத்து சிறந்த வீரர்களை உருவாக்கும் நோக்குடன் ஒவ்வொரு மாவட்டத் தலைநகரத்திலும் நீச்சல் குளங்களைக் கட்டும் திட்டம் உள்ளது. முதற்கட்டமாக மாவட்ட தலைமையிடம் ஒன்றில் நீச்சல் குளம் அமைக்க ரூ. 2 லட்சம் இணை மானியமாக வழங்கப்படும்.

சென்னையில் மாநகராட்சி வசம் இருந்த (ஷெனாய் நகர்) நீச்சல் குளத்தை மாநில விளையாட்டு மன்றம் எடுத்து சிறந்த முறையில் பராமரித்து சிறந்த நீச்சல் வீரர்களை உருவாக்க நடவடிக்கை எடுத்துவருகிறது.

அரசு அலுவலர் விளையாட்டு வசதிகளின் மேம்பாட்டை கருத்திற் கொண்டு முதற்கண் சென்னையில் 1.75 லட்சம் ரூபாய் செலவில் விளையாட்டு அரங்கமும், சுற்றுப்புறச் சுவர்களும் அமைக்கப்பட உள்ளன.

மேலும் தற்போது விளையாட்டு அரங்கங்கள் இல்லாத மாவட்டங்களில் விளையாட்டு அரங்கங்கள் கட்டுவதற்காக மானியம் தர 1980–81-ல் 4 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

1980–81-ல் தஞ்சாவூரிலும் பெரியநாய்யக்கன் பாளையத்திலும் இரண்டு தனியார் பெண்கள் பாலிடெக்னிக்குகளும் குமாரபாளையத்தில் ஒரு தனியார் பாலிடெக்னிக்கும் தொடங்க அனுமதியளிக்கப்பட்டுள்ளது. மேலும் இராமநாதபுரம்



கிழக்கரையிலும், ஈரோட்டிலும் தனியார் பாலிடெக்னிக்குகள் நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது. இந்த இரண்டு பாலிடெக்னிக்குகளையும் ஆரம்பித்தால், பாலிடெக்னிக்குகளில் ஆண்டுதோறும் புதியதாகச் சேர்க்கக் கூடிய மாணவர்கள் எண்ணிக்கை மேலும் 240 அதிகரிக்கும். இது தவிர செட்டிநாட்டிலுள்ள அண்ணாமலைப் பாலிடெக்னிக்கில் நெசவுத் தொழில் நுட்பப் பாடப் பிரிவு ஒன்றும் தொடங்கப்படவிருக்கிறது.

சென்னையில் பெரியார் பெயரில் அறிவியல் அருங்காட்சியகம் ஒன்றை ஆரம்பிப்பதற்கான முன்னோடி வேலைகள் நடைபெற்று வருகின்றன. இதற்காக பத்து ஏக்கர் நிலம் அடையாறு பாலிடெக்னிக் வளைவில் ஒதுக்கப்பட்டு அது தொடர்புடைய அலுவல்களை கவனிக்க ஒரு தனி அலுவலரும் நியமிக்கப்பட்டுள்ளார்.

இத்தகைய பல்வேறு நடவடிக்கைகளை அரசு இந்த ஆண்டு எடுத்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்து, பல்வேறு கருத்துக்களையும் யோசனைகளையும் தெரிவித்ததற்காகவும், குறைபாடுகளை எடுத்துச் சொன்னதற்காகவும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மீண்டும் நன்றி தெரிவித்து, இங்கே உங்கள் முன்னால் வைக்கப்பட்டிருக்கிற கல்வி மானியக் கோரிக்கைக்கு உறுப்பினர்கள் கொடுத்திருக்கிற வெட்டுத்தீர்மானங்களை வாபஸ் பெற்று, இந்த மானியத்தை ஏகமனதாக நிறைவேற்றித் தரவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

## கோரிக்கை எண். 17.

திருவாளர்கள் த. வேணுகோபால், கே.எம். தங்கமணி கவுண்டர், ரா. கிருஷ்ணன், பொ. உத்திராபதி, பொ. விஜயராகவன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெற்றுக்கொள்ளப்பெற்றன.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> பேரவை முன்னுள்ள கேள்வி "மானியக் கோரிக்கை எண் 17—கல்வி என்ற தலைப் பின்கீழ் ரூ. 2,24,41,53,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, திங்கட்கிழமை (14—7—1980) காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-05 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

[1980 ஜுலை 12

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

43. வருவாய்த் துறையில் 15—2—1965-ஆம் தேதியன்று வெளியாகி, 17—2—1965-ஆம் தேதியிடப்பெற்ற தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் பாகம்-II, பிரிவு-I பக்கங்கள் 287—290-ல் (ஆங்கிலத்தில்) வெளியான II-I, 725, ஆம் என் அறிவிப்பில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள்- அறக் கட்டளைகள் துறையின் 13—3—1980 ஆம் தேதியிடப்பெற்ற 226-ஆம் என் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [(தமிழ்நாடு) 1963-ஆம் ஆண்டு இனாம் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 26/1963) 73 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

44. சென்னை மாநகரில் இயங்குகிற ஆட்டோரிக்ஷாக்கள், வாடகை மோட்டார் வண்டிகள் ஆகியவை இயங்கும் எல்லைப் பகுதியை வண்ண எழுத்துக்களில் வண்டிகளில் எழுதி வைப்பது தொடர்பாக, தமிழ்நாடு 1940-ஆம் ஆண்டு மோட்டார் வண்டி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள் துறையின் 23—4—1980-ஆம் தேதியிடப்பெற்ற 126-ஆம் என் அரசாணையில் வெளியான அறிவிப்பு, [1939-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

45. தமிழ்நாடு 1970-ஆம் ஆண்டு நகராட்சி மருத்துவப் பணி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து, ஊர் வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் 28—1—1980-ஆம் தேதியிடப்பெற்ற 149-ஆம் என் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1920-ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304 (1) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

### ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

*30. 1980—81-ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 29, 33 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள் (தமிழ், ஆங்கிலம்).

31. 1980—81-ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள். 18, 19 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள் (தமிழ், ஆங்கிலம்).



1980 ஜுலை 12]

*32. 1980—81-ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள். 24, 26, 27, 49 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள் (தமிழ், ஆங்கிலம்).

**33. கோரிக்கை என். 17—கல்வி—1980—81-ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் கல்வி வளர்ச்சி பற்றிய குறிப்பு (தமிழ், ஆங்கிலம்).

**34. 1979—80-ஆம் ஆண்டின் உள் (மதுவிலக்கு-ஆயத் தீர்வை) துறையின் நடவடிக்கைகள் குறித்த ஆய்வு அறிக்கை (தமிழ், ஆங்கிலம்).

## இணைப்பு

[....26...................ம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பைக் காண்க.]

### I. தோற்றுவாய்.

### கல்விச் செலவும் மாநில வரவு-செலவுத் திட்டமும்.

மாநில நிதி நிலை அறிக்கையில் மிகப் பெருமளவு நிதி ஒதுக்கத்தை கல்வியே தொடர்ந்து பெற்று வருகிறது. கல்விக்காக 1980—81 ஆம் ஆண்டில் ரூ. 224 கோடி ('' மானியக் கோரிக்கை 17—கல்வி ''ன் கீழ்) ஒதுக்கப்பட்டுள்ளது. இத் தொகை 1980—81-ல் வருவாய்க் கணக்கில் ஆகும் மொத்தச் செலவான ரூ. 967 கோடியில் 23 விழுக்காடாகும். வரவு-செலவுத் திட்டத்தில் மற்றெல்லாத் துறைகளைக் காட்டிலும் கல்வித்துறைக்கே அதிகத் தொகை அளிக்கப்பட்டுள்ளது. கல்வி மானியத்தின் கீழ் 1975—76-ல் ரூ.123 கோடியும், 1976—77-ல் ரூ. 143 கோடியும், 1977—78-ல் ரூ. 164 கோடியும், 1978—79-ல் ரூ. 186 கோடியும் செலவாயின. 1979—80-க்கான திருத்த மதிப்பீடு ரூ. 212 கோடியாகும். கல்விச் செலவு தொடர்ந்து உயர்ந்து கொண்டே வருவதை இது காட்டும்.

---

* 11—7—1980 அன்று பேரவை முன் வைக்கப்பெற்றது.

**10—7—1980 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப் பெற்றன.

[1980 ஜூலை 12

2. கல்வி மானியக் கோரிக்கையின் கீழ் 1980–81 வரவு-செலவு மதிப்பீட்டில் பல்வேறு நிலைக் கல்விப் பணிகளுக்கும் செய்துள்ள நிதி ஒதுக்க விவரங்கள் பின்வருமாறு :—

| | 1980–81 வரவு-செலவு மதிப்பீடு. | | |
|---|---|---|---|
| | திட்ட மல்லாத செலவினம். | திட்டச் செலவினம். | மொத்தம். |
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 259 அரசுப் பள்ளிகள் கல்லூரிகள் முதலிய வற்றின் கட்டட பராமரிப்பு செலவு. | 42 | .. | 42 |
| 277 கல்வி— | | | |
| 1 தொடக்கக் கல்வி | 1,04,06 | 1,53 | 1,05,59 |
| 2 உயர்நிலைப் பள்ளிக் கல்வி. | 59,48 | 1,02 | 60,50 |
| 3 மேல்நிலைப் பள்ளிக் கல்வி. | 10,36 | 6,94 | 17,30 |
| 4 கல்லூரிக் கல்வி ... | 22,58 | 69 | 23,27 |
| 5 சிறப்புக் கல்வி—முதியோர் கல்வி, தமிழ் வளர்ச்சி முதலியவை. | 1,45 | 1,73 | 3,18 |
| 6 தேசிய மாணவர் படை, விளையாட்டு மற்றும் இளைஞர் நலன். | 1,96 | 78 | 2,74 |
| 7 பிற இனங்கள் .. | 1 | 1 | 2 |
| 8 தொழில் நுட்பக் கல்வி. | 7,65 | 92 | 8,57 |
| மொத்தம்—''277 கல்வி'' | 2,07,55 | 13,62 | 2,21,17 |



1980 ஜூலை 12]

| | 1980–81 வரவு-செலவு மதிப்பீடு. | | |
|---|---|---|---|
| | திட்ட மல்லாத செலவினம். | திட்டச் செலவினம். | மொத்தம். |
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 278. கலை, பண்பாடு, | 28 | 26 | 54 |
| தொல் பொருள் ஆராய்ச்சி. | 14 | 6 | 20 |
| ஆவணக் காப்பகமும் அருங்காட்சியகங்களும். | 36 | 5 | 41 |
| பொது நூலகங்கள் | 1,45 | 5 | 1,50 |
| | 2,23 | 42 | 2,65 |
| 288. சமூகப் பாதுகாப்பும் நலனும். | 15 | .. | 15 |
| பலவகை .. .. | 2 | .. | 2 |
| மொத்தம்—மானியக் கோரிக்கை 17—கல்வி | 2,10,37 | 14,04 | 2,24,41 அல்லது 2,24,42 |

3. மேற்கண்ட நிதி ஒதுக்கங்கள் தவிர பள்ளி, கல்லூரிக் கட்டிடங்கள், கடன்கள் முதலியவற்றிற்காக பிற மானியக் கோரிக்கைகளின் கீழ் 1980–81-ல் செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கம் வருமாறு—

| | திட்டத்தின் கீழ் வராத செலவு. | திட்டச் செலவு. | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| பொதுக் கல்வி.— | | | |
| (அ) வருவாய் கணக்கில் செலவு— | | | |
| '' மானியக் கோரிக்கை 28'' சமுதாய வளர்ச்சிப் பணிகள்—ஊராட்சி ஒன்றியப் பள்ளிக் கட்டிடங்கள். | .. | 5,50 | 5,50 |
| சமூகக் கல்வி .. | | | |

| | திட்டத்தின் கீழ்வராத செலவு. | திட்டச் செலவு. | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| கோரிக்கை 37—பொதுப் பணி—அரசுப் பள்ளிக் கட்டிடங்கள். | 3 | 5 | 8 |
| 266. தனியார் மற்றும் உள்ளாட்சி மன்ற ஆசிரியர்களுக்கு ஓய்வூதியம். | 7,57 | .. | 7,57 |
| (ஆ) வருவாய்க் கணக்கின் கீழ் வராத செலவு. | | | |
| 459. அலுவலக கட்டடங்கள். | .. | 1 | 1 |
| 477. கல்வி, கலைகள், பண்பாடு ஆகியவற்றிற்கான மூலதனச் செலவு—அரசுப் பள்ளிகள், கல்லூரிகளுக்குக் கட்டிடங்கள். | 1 | 3,19 | 3,20 |
| 767. கடன்கள்—தனியார் பள்ளி ஆசிரியர்களுக்குத் திருமணக் கடன். | 1 | .. | 1 |
| 677. தேசிய கடன் படிப்புதவித் தொகைகள். | .. | 40 | 40 |
| மொத்தம்—பொதுக்கல்வி | 7,62 | 9,23 | 16,85 |



தொழில் நுட்பக் கல்வி.

| | | | |
|---|---|---|---|
| 477. அரசுத் தொழில் நுட்பக் கல்வி நிலையக் கட்டிடங்களுக்கான மூலதனச் செலவு. | 4 | 41 | 45 |
| 677. தொழில் நுட்பக் கல்வி மாணவர்களுக்குக் கடன்கள். | 7 | .. | .. |
| தொழில் நுட்பக் கல்வி நிலையங்களுக்குக் கடன். | .. | 4 | 4 |
| மொத்தம்—தொழிற் கல்வி | 11 | 45 | 56 |
| மொத்தம்—பொதுக் கல்வியும் தொழிற் கல்வியும். | 7,73 | 9,68 | 17,41 |

மேற்சொன்ன நிதி ஒதுக்கங்களை கணக்கில் கொண்டால் 1980–81-ல் கல்விக்காகச் செலவிடப்படும் தொகை ரூ. 241 கோடியாகும்.

4 (1) தாழ்த்தப்பட்டோர் மற்றும் பின்தங்கிய வகுப்பினர் நலப் பள்ளிகள், விடுதிகள், தாழ்த்தப்பட்டோர் பழங்குடி வகுப்பினர் பின்தங்கிய வகுப்பினரைச் சேர்ந்த மாணவர்களுக்குப் படிப்பு உதவித் தொகைகள்; முதலியவற்றிற்கான செலவும் சீர்திருத்தப் பள்ளிகள், தொழிற் பயிற்சி நிறுவனங்கள் போன்றவற்றிற்கான செலவுகளும், மேற்படி செலவினங்களின் கீழ் வாரா. இந்த இனங்களின் மொத்தச் செலவு சுமார் ரூ. 35 கோடியாகும்.

(2) மருத்துவக் கல்வி, வேளாண்மைக் கல்வி, கால்நடை மருத்துவக் கல்வி ஆகியவற்றிற்கு, அந்தந்தத் துறைகளின் கீழ் தனித்தனியாக ஒதுக்கியுள்ள நிதி மொத்தம் சுமார் ரூ. 14 கோடி. மேற்கண்ட இரு இனங்களுக்கு ஆகும் செலவையும் (ரூ. 35 கோடியும் ரூ. 14 கோடியும்) கணக்கில் கொண்டால், 1980–81 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் கல்வி வளர்ச்சிக்கான மொத்தச் செலவு சுமார் ரூ. 290 கோடியாக இருக்கும்.

5. எல்லாத் தலைப்புகளின் கீழும் (277, கல்வி, 477 கல்வி மூலதனச் செலவு. 677 கடன் முதலியன) கல்விக்கான 1980–81 ஆம் ஆண்டில் திட்டப் பணிகளின் செலவு விவரம் வருமாறு:—(கூட்டல் குறிக்குப் பின்னர் உள்ள இலக்கங்கள் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களுக்கான செலவினைக் குறிக்கும்.)

(ரூபாய் இலட்சத்தில்.)

| | 1980–81ல் புதிய செலவினம். | பொறுப்பேற்றதாக ஒப்பளிப்பு வழங்கும் செலவினங்கள். | மொத்தம் |
|---|---|---|---|
| பொதுக்கல்வி | | | |
| 1. பள்ளிக் கல்வி .. | 7,02<br>+01 | 1,43<br>.. | 8,45<br>+01 |
| 2. மேல்நிலைப்பள்ளிக் கல்வி. | 2,47 | 4,47 | 6,94 |
| பொதுக்கல்வி— | | | |
| 3. கல்லூரிக் கல்வி .. | 74<br>+43 | 52<br>.. | 1,22<br>+43 |
| 4. முதியோர் கல்வி .. | 70<br>+72 | 20<br>.. | 96<br>+73 |
| 5. விளையாட்டு, இளைஞர் நலன். | 23<br>+23 | 48<br>.. | 71<br>+23 |
| 6. கட்டட வகையில் பொதுப் பணித் துறைச் செலவு. | 58 | .. | 58 |
| | 11,74<br>1,39 | 7,10<br>.. | 18,84<br>1,39 |
| தொழில் நுட்பக்கல்வி | 97<br>+7 | 44<br>.. | 1,41<br>+7 |
| கலைப்ப[illegible] . | 6 | 43 | 49 |
| பொது மொத்தம் ... | 12,77<br>+1,46 | 7,97<br>.. | 20,7<br>+1,45 |





## கல்வி வளர்ச்சிக்குச் செய்துள்ள பணிகளும் செய்ய இருப்பவையும்

6. 10+2+3 கல்வி முறையில் +2 நிலையை பள்ளிகளோடு சேர்த்திட இவ்வரசு செய்த முடிவின் புரட்சிகரமான விளைவாகத் தற்பொழுது எஸ்.எஸ்.எல்.சி-க்கு மேலான உயர் கல்வி வசதி முதல் முதலாக ஆயிரத்துக்கு மேற்பட்ட இடங்களில், அதுவும் பெரும்பாலானவை கிராமப்புறங்களில், எளிதில் கிடைக்கிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் கல்வித் துறையின் பிற சாதனைகளில் முதன்மை வாய்ந்தவை:—எ.எஸ்.எல்.சி. தேர்வை பாடம், பாடமாகத் தேற வகை செய்தது 1 3 வகுப்புகளில் யாரும் தோல்வியுறச் செய்யக் கூடாது என்ற ஏற்பாடு; கல்விநிலையங்களில் மாணவர்களைச் சேர்க்கும்பொழுது பிற்பட்டவர்களுக்கான இட ஒதுக்கீட்டை 31 விழுக்காட்டிலிருந்து 50 விழுக்காடாக உயர்த்தியது; பள்ளி கல்லூரி ஆசிரியர் நலனுக்காக பல்வேறு நடவடிக்கைகள்; இது வரைக் கண்டிராத பெரும் அளவில் முதியோர் கல்வித்திட்டத்தை செயல்படுத்தியமை; பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக்கழகத்தை தொடங்கியது விளையாட்டு இளைஞர் நலனுக்காக தனித்துறை ஒன்று அமைத்து கலை வளர்ச்சிக்கும் தமிழ் வளர்ச்சிக்கும் எண்ணிறந்த திட்டங்களைத் தொடங்கியது ஆகியவையாகும்.

7. 1980–81-லும் (பின் ஆண்டுகளிலும்) நமக்குள்ள கல்விப் பணிகளில் முக்கியமானவை:—பள்ளிகளின் மாணவர் சேரும் எண்ணிக்கையை அதிகரித்தல், சேருபவர்கள் இடையில் நின்று விடாதவாறு பார்த்துக் கொள்ளுதல், அனைத்து நிலைகளிலும் கல்வித்தர உயர்வு ஆகியவற்றுக்கான தொடரும் திட்டங்கள்: ஊராட்சி ஒன்றியப் பள்ளி ஆசிரியர்கள் 95,000 பேர்களை அரசு ஊழியர்களாக்குதல்; ஏற்கனவே அறிவித்துள்ளபடி தமிழ்நாட்டில் மேலும் புதிய பல்கலைக் கழகங்களைத் தொடங்குதல்; விளையாட்டு, உடற்பயிற்சிக்கான பல்வேறு புதிய திட்டங்களைச் செயல் படுத்துதல்; ஐந்தாவது உலக தமிழ் நாட்டை சிறந்த முறையில் நடத்துதல் போன்றவையாகும்.

8. "மாநில கல்வி ஆலோசனைக் குழுவை" அரசு மீண்டும் புதுப்பிக்க இருக்கிறது. சட்டமன்றப் பேரவை மேலவை உறுப்பினர்களின் அக்குழுவில் இருப்பர். கல்விக்கொள்கைப் பற்றிய முதன்மை வாய்ந்த அனைத்து விஷயங்களைப் பற்றியும் அரசு அக்குழுவின் ஆலோசனையைப் பெறும்.

## II. பள்ளிக்கல்வி

### (i) பொது.

1. கல்விக்காக அரசு ஒதுக்கும் தொகையில் பெரும் பகுதி பள்ளிக் கல்விக்குத்தான் ஆகிறது. 1980-81 ஆம் ஆண்டில் கல்வி மானியத்திற்கான ரூ. 224 கோடியில், பள்ளிக் கல்விக்கு

(மேல் நிலைப் பள்ளிக் கல்வி உட்பட) ஒதுக்கியுள்ள தொகை சுமார் ரூ. 183 கோடியாகும். 1—8—1979 அன்றைய நிலவரப் படி தமிழ்நாட்டில் மொத்தம் 36,573 பள்ளிகள் இருந்தன அவற்றில் தொடக்கப் பள்ளிகள் 27,662 நடுநிலைப் பள்ளிகள் 5,685 உயர்நிலைப்பள்ளிகள் 3,226. உயர்நிலைப் பள்ளிகள் 3,226 என்ற எண்ணிக்கையில் 1,087 மேல்நிலைப்பள்ளிகளும் மைய அரசின் உயர்நிலைப் பள்ளிக் கல்வி வாரியம் போன்றவற்றோடு இணைந்து 117 பள்ளிகள் ஆகியவையும் அடங்கும். அனைத்துப் பள்ளிகளிலும் பணி செய்து வந்த ஆசிரியர்கள் எண்ணிக்கை 2·58 இலட்சம், பயின்று வந்த மாணவர் எண்ணிக்கை 88.79. இலட்சம் (மேல் நிலைப் பள்ளி வகுப்புகள் இரண்டிலும் பயின்று வந்த 2·50 இலட்சம் மாணவர் உட்பட). இந்த 36,573 பள்ளிகள் மற்றும் வேறு சிறப்புப் பள்ளிகள் ஆகியவற்றின் நிருவாக வாரி விவரங்கள் ஆசிரியர் மாணவர் எண்ணிக்கை ஆகியவற்றை இணைப்பில் காணலாம்.

2. 1979–80-ல் 6—11 வயதுத் தொகுதிச் சிறுவர் சிறுமியருள் 94.64 சதவீதத்தினரும் 11—14 வயதினருள் 59.8 சதவீதத்தினரும், 14—16 வயதினருள் 38.44 சதவீதத்தினரும் பள்ளிகள் சேர்க்கப்பட்டு இருந்தனர். இவ் வயதுத் தொகுதிகள் முறையே 1—5 வகுப்புகள். 6—8 வகுப்புகள், 9—10 வகுப்புகள் ஆகியவற்றுக்கு இணையானவை. மூன் ஆண்டுகளிலிருந்து மாணவர் சேர்க்கை விழுக்காடு வளர்ந்து வந்துள்ளது. பற்றிய விவரங்கள் இணைப்பில் காணலாம்.

3. 1980–81 ஆம் ஆண்டில் (6—11 மற்றும் 11—14 வயதுத் தொகுதிகளுக்காக) 1,000 இடைநிலை (செகண்டரி கிரேடு) ஆசிரியர் பதவிகளும் (உயர் தொடக்கப் பள்ளிகளுக்கும் உயர் நிலைப் பள்ளிகளுக்கும் சேர்த்து) 200 உடற்பயிற்சி ஆசிரியர் பதவிகளும், உயர் தொடக்கப்பள்ளிகளுக்கு 200 பி.எட் தர தலைமை ஆசிரியர் பதவிகளும், உயர்நிலைப்பள்ளிகளுக்கு 200 பி.எட். தரப்பதவிகளும் ஏற்படுத்தப்படும். உயர் தொடக்கப்பள்ளிகளில் உள்ள பகுதி நேரக் கைத்தொழில் ஆசிரியர் பதவிகளில் 200 முழு நேரப் பதவிகளாக உயர்த்தப்படும். மேல்நிலைப் பள்ளிகளுக்கு ஏற்படுத்தப்படும் கூடுதல் பதவிகளின் விவரம் பின் அத்தியாயத்தில் தரப்பட்டுள்ளது.

### பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள்.

4. பள்ளிகளில் உள்ள வசதிகளைப் பெருக்கும் நோக்குடன் மக்கள் முயற்சியையும் ஆர்வத்தையும் தூண்டும் வகையில் (1979 செப்டம்பர் முடிய) பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் 578 நடந்துள்ளன. பொது மக்களிடமிருந்து ரூ. 15.53 கோடி மதிப்புள்ள பொருள்கள் பெறப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் இப்பொழுது அறிவியல், நூல் நிலைய மேம்பாட்டிற்கான





வசதிகளைப் பெறுவதில் நாட்டம் செலுத்தப்பட்டு வருகிறது. பொது மக்களின் நன்கொடையைக் கொண்டு 1979 செப்டம்பர் வரை ரூ. 3.10 கோடி செலவில் சுமார் 41 இலட்சம் மாணவர்களுக்கு இலவசமாகச் சீருடை வழங்கப்பட்டுள்ளது.

### கல்வித்துறை நிருவாகம்:

5. தற்பொழுது தலைமைக் கல்வி அலுவலர்கள் 14; மாவட்டக்கல்வி அலுவலர்கள் 50; பெண்கள் பள்ளி ஆய்வாளர்கள் 7; பள்ளித் துணை ஆய்வாளர்கள் 458 ஆகியோர் உள்ளனர். கல்வித்துறை நிருவாகத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் 1980–81 ஆம் ஆண்டில் மேலும் ஒரு தலைமைக் கல்வி அலுவலர் பதவி (புதுக்கோட்டை மாவட்டத்துக்கு); மேலும் ஒரு மாவட்டக் கல்வி அலுவலர் பதவி (அறந்தாங்கிக்கு); மேலும் 3 பெண்கள் பள்ளி ஆய்வாளர் பதவிகள் ஆகியவை புதிதாக ஏற்படுத்தப்படும்.

## II. தொடக்கக் கல்வி.

### மாணவர் சேர்க்கை :

1. 6—11 வயதுத் தொகுதிச் சிறுவர்களில் 94.64 விழுக்காட்டினரும், 11—14 வயதுத் தொகுதிச் சிறுவர்களில் 59.68 விழுக்காட்டினரும், இதுவரைப் பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவ்விரு வயதுத் தொகுதிகளின் கீழ் 1978–79 ஆம் ஆண்டில் 1.93 இலட்சம் மாணவ மாணவியரும் 1979–80 ஆம் ஆண்டில் 1.72 இலட்சம் பேரும் கூடுதலாகச் சேர்க்கப்பட்டனர். 1979–80 ஆம் ஆண்டில் இருந்த 33,347 தொடக்கப்பள்ளிகளில்—தொடக்கப்பள்ளிகள் (1—5 வகுப்புகள்) 27,662; நடுநிலைப் பள்ளிகள் (1—8 அல்லது 6—8 வகுப்புகள்) 5,685—படித்த மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 68.35 இலட்சமாகும். வேலை பார்த்த ஆசிரியர்களின் எண்ணிக்கை 1,79,103 ஆகும். ஒட்டு மொத்தமான ஆசிரியர்-மாணவர் விகிதம் 1:38 ஆகும்.

2. தொடக்கப் பள்ளியில் சேரும் (6—11 வயது) மாணவ மாணவியர் தொடர்ந்து 5-வது வரையில் படிக்காமல் இடையிலேயே பள்ளியிலிருந்து நின்றுவிடும் நிலைமை அண்மை ஆண்டுகளில் சீர்பட்டு வந்துள்ளது மகிழ்ச்சிக்குரியது. அவ்வாறு நின்றுவிடுவோர் விழுக்காடு 1973–74 ஆம் ஆண்டில் 51 சதவீதமாக இருந்தது. 1979–80-ல் 33 சதவீதமாகக் குறைந்துள்ளது. தொடக்கப்பள்ளி நண்பகல் உணவுத் திட்டம், இலவசமாகப் புத்தகங்கள், கற்பலகைகள் வழங்கும் திட்டம் போன்றவை மாணவ மாணவியர் பள்ளியை விட்டு இடையில் நின்றுவிடாமல் தொடர்ந்து படிக்கச் செய்ய வேண்டுமென்பதையும் நோக்கமாகக் கொண்டவை. இவற்றோடு 1977–78 முதல் இம் மாநிலத்தில் 1—3 வகுப்புகளில் மாணவர்கள் அனைவரையும் மேல் வகுப்பிற்கனுப்பும் முறை செயல்படுத்தப்படுகிறது.

## நன்பகல் உணவுத் திட்டம் :

3. தொடக்கப்பள்ளி நன்பகல் உணவுத் திட்டம், பள்ளிகளில் மாணவர் சேர்க்கையை உயர்த்துவதிலும் மாணவர் தொடர்ந்து பள்ளிக்கு வரும்படி செய்வதிலும் சிறந்த இடத்தைப் பெறுகிறது. தொடக்க—உயர் தொடக்கப் பள்ளிகளில் 1—8 வகுப்புகளில் பயிலும் ஏறத்தாழ 20.25 இலட்சம் மாணவர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் நன்பகல் உணவு வழங்கப்படுகிறது. அரிசன நலத்துறையும் பிற்பட்டோர் நலத்துறையும் நடத்தி வரும் பள்ளிகளில் பயிலும் சுமார் 1.65 இலட்சம் மாணவரும் இவ்வெண்ணிக்கையில் அடங்குவர். 1980—81 ஆம் ஆண்டில் நன்பகல் உணவுத் திட்டத்திற்காக ஏறத்தாழ ரூ. 5.29 கோடி செலவிடப்படும்.

4. மைய சமையற் கூடங்கள் இல்லாத பகுதிகளைப் பொறுத்த வரையில் மதிய உணவு மானியம் அந்தந்தத் தொடக்கப்பள்ளிக்கே நேரடியாகக் கொடுக்கப்படுகிறது. இவ்வாறு மாநில அரசு ஒரு மாணவனுக்கு நாளைக்கு 10 காசு வீதம் ஆண்டுக்கு 200 நாட்களுக்கு மானியம் அளிக்கிறது. உள்ளாட்சி மன்றங்கள் ஒரு மாணவனுக்கு நாளைக்கு 5 காசு வீதம் ஆண்டுக்கு 200 நாட்களுக்கு உதவித் தொகை அளிக்க வேண்டும் என்று உள்ளது. எனினும் பெரும்பாலான உள்ளாட்சி மன்றங்கள் தங்கள் பங்குத் தொகையை, அதுவும் குறிப்பாக உள்ளாட்சி மன்றப் பள்ளிகள் அல்லாத பிற பள்ளிகளுக்கு ஒழுங்காகக் கொடுத்து வரவில்லை. அவை ஒழுங்காகக் கொடுத்து வருவதற்கு இப்பொழுது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 1—10—1979 முதல் அந்த 5 காசு பங்குத் தொகையை உள்ளாட்சி மன்றங்கள் கட்டாயம் உள்ளாட்சிமன்றப் பள்ளிகள் அல்லாத பிற பள்ளிகளுக்கும் கொடுத்தாக வேண்டும் என்றும் இதற்காக ஆகும் செலவை ஏற்பளிக்கப்பட்டதாகக் கருதி தொடக்கப்பள்ளிக் கல்விக்கான அரசு மானியம் பெறும்பொழுது கணக்கில் எடுத்துக் கொள்ளலாம் என்றும் ஆணையிடப்பட்டு உள்ளது. இவ்வாறு பெறும் 15 காசு மானியத்தோடு கேர் நிறுவனத்திலிருந்து இலவசமாக ஆண்டுதோறும் கிட்டும் சுமார் 20,000 டன் உணவையும் தொடக்கப்பள்ளி நன்பகல் உணவுத் திட்டம் பயன்படுத்துகிறது. ஓர் ஆண்டுக்கு மதிய உணவு அளிக்கப்படும் 200 நாட்களில், 100 நாட்களுக்குத் தேவைப்படும் தானியமும் 200 நாட்களுக்குமே தேவைப்படும் எண்ணையும் கேர் இலவச உணவு மூலம் பெறப்படுகிறது. மீதி 100 நாட்களுக்கான தானியச் செலவுக்கும் 200 நாட்களுக்கு ஆகும் மசாலா சாமான்கள், விறகுச் செலவு முதலியவற்றுக்கும் அரசு மானியமாகவும் உள்ளாட்சிமன்றப் பங்குத் தொகையாகவும் பெறப்படும் ஒரு நாளைக்கு ஒரு மாணவனுக்கு 15 காசு என்ற தொகை பயன்படுத்தப்படுகிறது.



5. மைய சமையற்கூடத் திட்டம் செங்கற்பட்டு, தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு ஆகிய மூன்று மாவட்டங்களில் செயல்பட்டு வருகிறது. அங்கு நவீன அடுப்புகளில் சுகாதார முறைப்படி சமைக்கப்பெற்ற உணவு சுற்றுப்புறங்களிலுள்ள பள்ளிகளுக்கு மூடப்பட்ட வண்டிகளில் எடுத்துச் சென்று வழங்கப்படுகிறது. இம்மாவட்டங்களில் இயங்கிவரும் 97 சமையற் கூடங்களும் கேர் நிறுவனத்தாரின் 2 கோடி ரூபாய் நிதியுதவியுடன் நிறுவப்பட்டவையாகும். அவையும் பிற பகுதிகளைப் போல கேர் இலவச உணவு பெறுகின்றன. இம்மாவட்டங்களில் சுமார் இலட்சம் மாணவர்கட்கு அவை பகல் உணவு வழங்கி வருகின்றன. மைய சமையற் கூடங்களுக்கான முழுச் செலவும் நேரடியாக அரசுப் பணத்திலிருந்து செலவாவதால் இம்மாவட்டங்களில் 5 காசு உள்ளாட்சி மன்றப் பங்குத் தொகை அரசுக் கருவூலத்தில் செலுத்தப்படுகிறது.

6. மைய சமையற்கூடங்களைப் பற்றி 1979 ஜூன் — அக்டோபர் மாதங்களில் ஓர் ஆய்வு செய்தபொழுது அவற்றில் சமைத்த உணவை வட்டாரப் பள்ளிகளுக்கு உந்து வண்டிகளில் கொண்டு செல்வதால் பெட்ரோல் முதலிய வகையில் பெருமளவில் வீண் செலவு ஆவதால் உந்து வண்டிகளுக்குப் பதிலாக அப்பணிக்கு மாட்டு வண்டிகள், சைக்கிள்கள் போன்றவற்றைத் தக்க முறையில் பயன்படுத்துதல் ; நெடுந்தொலைவு காரணமாக கண்டிப்பாக உந்து வண்டிகளைப் பயன்படுத்தித்திர வேண்டிய இடங்களிலும் இன்றியமையாத் தேவை அளவில் உந்து வண்டியைப் பயன்படுத்துதல் ஆகிய நடவடிக்கைகளால் சிக்கனம் ஏற்படுவதோடு செயல்திறனும் உயரும் என்று தெரிய வந்தது. இந்த ஆய்வினைச் செய்த குழுவின் கருத்தை அரசு ஏற்று அதன் பரிந்துரைகளைச் செயல்படுத்த 2—4—1980 அன்று ஆணையிட்டுள்ளது. மைய சமையற் கூடங்களிலிருந்த 193 உந்து வண்டிகளில் 93 திரும்பப்பெற ஆணையிடப்பட்டுள்ளது. இதனால் மைய சமையற் கூடங்களில் உணவல்லாத பிற இனங்களுக்காக ஆகும் செலவில் பெருமளவு சிக்கனம் ஏற்படும்.

7. மைய சமையற் கூடங்கள் தமக்குத் தேவையான அரிசியை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் ஒழுங்காகப் பெறுவதற்குரிய சீரான திட்டம் ஒன்றை அரசு வகுத்து உள்ளது.

8. மொத்தம் ரூ. 1.44 லட்சம் செலவில் தருமபுரி மாவட்டத்தில் (90,000 மாணவர்களுக்குப் பயனளிக்கத்தக்க) 16 மைய சமையற் கூடங்களும், இராமநாதபுரம் மாவட்டத்தில் (1,76,000 மாணவர்களுக்குப் பயனளிக்கத்தக்க) 32 மைய சமையற் கூடங்களும் ஏற்படுத்துவதற்காக அச்செலவில் 45 சதவிதத்தை கேர் நிறுவனத்திடமிருந்து நிதி உதவியாகப் பெற அனுமதி கோரி 1979 80-ல் மைய அரசின் சமுதாய நலத்

துறைக்கு எழுதப்பட்டது. எனினும் 1979–80-ல், 5 சமையற்கூடங்களுக்கு மட்டுமே கேர் உதவி பெற மைய அரசு அனுமதித்தது. அந்த 5 சமையற்கூடங்களையும் இராமநாதபுரம் மாவட்டத்தில் கட்ட அரசு ஏற்பளித்துள்ளது. 1980–81-ம் ஆண்டிலாவது அவ்விரண்டு மாவட்டங்களுக்கும் மேலும் தேவைப்படும் 43 சமையற் கூடங்களுக்கும் கேர் நிதி உதவியையும் இம்மாநிலத்திற்கு ஒதுக்கிடுமாறு இவ்வரசு மைய அரசை வேண்டி உள்ளது.

## இலவசப் புத்தகங்கள் வழங்குதல்.

9. 1—3 வகுப்புகளில் பயில்வோரும், நண்பகல் உணவுபெறுவோருமான ஏழை மாணவர்களுக்கு முதல் வகுப்பில் பாடப் புத்தகங்களும், சிலேட்டும், இரண்டு, மூன்று வகுப்புகளில் பாடப் புத்தகங்களும் இலவசமாக வழங்கப்படுகின்றன. ஆண்டு தோறும் 13 இலட்சத்திற்கும் அதிகமான மாணவர்கள் இதனால் பயனடைந்து வருகின்றனர். 1972–73ஆம் ஆண்டிலிருந்து பாட நூல்கள் தருவதற்கு ஆகும் செலவினைத் தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனமே தனது நிதியிலிருந்து ஏற்று வருகிறது. இதற்காக அந்நிறுவனம் ஆண்டு தோறும் ரூ. 25 இலட்சம் செலவிடுகிறது. முதல் வகுப்பு மாணவர்கட்கு சிலேட்டுகள் இலவசமாக வழங்கும் வகையில் ஆண்டு தோறும் அரசு சுமார் ரூ. 5 இலட்சம் செலவிடுகிறது.

10. தொடக்கப்பள்ளிகளில், அறிவியல் போதனையை மேம்படுத்தும் பொருட்டு பாடத்திட்டம் திருத்தியமைக்கப்பட்டு உள்ளது. அறிவியல் சாதனங்கள் வாங்குவதற்பொருட்டு ஒவ்வொரு தொடக்கப் பள்ளிக்கும் முன்னூறு ரூபாயும் ஒவ்வொரு உயர் தொடக்கப் பள்ளிக்கும் ஆயிரம் ரூபாயும் உதவித்தொகையாக வழங்கப்படுகின்றன. இதுவரை இதன் மூலம் 12,620 தொடக்கப் பள்ளிகளும், 4,000 உயர் தொடக்கப் பள்ளிகளும் பயனடைந்துள்ளன. 1980–81-ல் மேலும் 200 நடுநிலைப் பள்ளிகள் பயனடையும். கோயம்புத்தூரிலுள்ள அவனாசிலிங்கம் மனையியற் கல்லூரி மூலம் செயல்படுத்தி வரும் ஒரு முன்னோடித் திட்டத்தின்கீழ், கடந்த சில ஆண்டுகளில் கோயம்புத்தூர், நீலகிரி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் மொத்தம் தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் 5,700 பேருக்கு சத்துணவு மற்றும் உடல்நலம் பற்றி புத்துணர்வுப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

11. தொடக்கப்பள்ளி மாணவர்களிடையே உடல் நலக் கல்வி புகட்டுவதற்காக கேர் நிறுவன உதவியுடன் திருநெல்வேலி மாவட்டத்தில் ஒரு திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. அம் மாவட்டத் தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு இது குறித்து



பயிற்சி அளித்து, பின் அவர்கள் மூலம் அப்பள்ளிகளில் பயிலும் சுமார் 5 இலட்சம் சிறுவர் –சிறுமியரும் இளமையிலிருந்தே உடல் நலம் பேணுவதில் நாட்டமுள்ளவர்களாக வளரச் செய்ய வேண்டும் என்பது இத்திட்டத்தின் நோக்கம். இதற்காகும் மொத்தச் செலவான ரூபாய் 4 இலட்சத்தில் 1·80 இலட்சத்தை கேர் நிறுவனம் ஏற்கும்.

## தொடக்கப்பள்ளிக் கட்டிடங்கள்:

12. பள்ளிக் கட்டிடங்கள் கட்டுதற் பொருட்டு உள்ளாட்சி நிறுவனங்கட்கும் தனியார் நிறுவனப் பள்ளிகட்கும் மானியம் வழங்கப்படுகிறது. 1974–75லிருந்து தொடக்கப் பள்ளி கட்டிட மானியம் ரூ. 10,000/17,000 ஆக உயர்த்தப்பட்டு உள்ளது. நிருவாகத்தினர் தர வேண்டிய குறைந்த பட்ச பங்குத் தொகையும் ரூ. 5,000/8,000 ஆக உயர்த்தப்பட்டு உள்ளது. 1980–81-ல் நகராட்சி மற்றும் தனியார் தொடக்கப் பள்ளிகளுக்கு கட்டட மானியம் தர ரூ. 24 இலட்சமும் அரசுத் தொடக்கப்பள்ளிக் கட்டிடங்களுக்காக ரூ 15 இலட்சமும் (முன் ஆண்டுகளில் ஏற்பளித்த கட்டட வேலைகளை முடித்திட ரூ. 3 இலட்சமும் புதிய வேலைகளுக்கு ரூ. 12 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளன. 1980–81-ல் ஊராட்சி ஒன்றியப் பள்ளிக் கட்டிடங்களுக்காக ரூ. 5·5 கோடி சமுதாய வளர்ச்சித் துறையின் வரவு செலவுத் திட்டத்தின் கீழ் செலவிடப்படும். ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் சரியான கட்டட வசதி இல்லாத 4,000-க்கு மேற்பட்ட தொடக்கப்பள்ளிகளுக்கு வரும் மூன்றாண்டுகளுக்குள் கட்டடம் கட்டித் தருவதற்காக வகுத்துள்ள சிறப்புத் திட்டத்தின் கீழ் இந்த நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

## உள்ளாட்சி மன்றப் பள்ளிகள்:

13. தமிழ்நாட்டிலுள்ள 33,347 தொடக்கப்பள்ளிகளுள் ஏறத்தாழ 29,000 பள்ளிகள் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் அமைந்துள்ளன. அந்த 29,000 பள்ளிகளில் 23,266 பள்ளிகளை (சுமார் 20,193 தொடக்கப்பள்ளிகளும், 3,073 நடுநிலைப் பள்ளிகளும்) ஊராட்சி ஒன்றியங்கள் நடத்தி வருகின்றன. தொடக்கக் கல்விக்காக ஊராட்சி ஒன்றியங்கட்கு மானியம் வழங்குவதற்கான திருத்திய முறைப்படி (ஒரு ரூபாய் நில வரிக்கு 45 காசு என்று வசூலிக்கப்படும்) உள்ளூர் வரியில் 4/9 பாகம் தொடர்ந்து ஊராட்சி ஒன்றியக் கல்வி நிதிக்கு வழங்கப்படுகிறது. 1971 ஆம் ஆண்டு மக்கள் தொகை அடிப்படையில் ஒவ்வொரு வட்டாரத்திலுமுள்ள மக்கள் தொகைக்கு தலைக்கு ரூ. 6 வீதம் கணக்கிட்டு வழங்கும் மானியமும், ஊராட்சி ஒன்றியக் கல்வி நிதிக்குச் செல்கின்றது. தொடக்கக் கல்விக்காக ஆகும் செலவில் எஞ்சியதை வட்டார வகைப்பாட்டிற்கு ஏற்ப அரசும், ஊராட்சி ஒன்றியங்களும் பகிர்ந்து ஏற்கின்றன.

14. தொடக்கப் பள்ளிகள் 1,494ஐ (சுமார் 1,090தொடக்கப் பள்ளிகளும், சுமார் 400 நடுநிலைப் பள்ளிகளும்) நகராட்சிகளும், சென்னை, மதுரை மாநகராட்சிகளும் நடத்தி வருகின்றன. நகராட்சிகள் கல்வி வரி வசூலிப்பதுடன் அவ்வாறு வசூலாகும் தொகையில் 50 விழுக்காட்டுக்கு ஈடான தொகையை அரசு மானியமாகவும் பெறுகின்றன. அத்துடன் நகராட்சிகள், மதுரை மாநகராட்சி ஆகியவற்றின் தொடக்கக் கல்விக் கணக்கில் துண்டுவிழும் முழுத் தொகையினையும் அரசே ஈடு செய்து வருகின்றது.

(iii) உயர்நிலைப் பள்ளிக் கல்வி

1. 1979-80-ல் தமிழ்நாட்டில் 14-16 வயதுத் தொகுதியினர் 16·51 இலட்சம் பேர்கள் இருந்தனர். இவர்களுள் 38·44 விழுக்காடாகிய 6·34 இலட்சம் பேர் உயர்நிலைப் பள்ளிகளில் 9-10 வகுப்புகளில் பயின்று வந்தனர். 1979-80-ல் மொத்தம் இருந்த உயர்நிலைப் பள்ளிகள் 3,109. அவற்றில் 1,087 பள்ளிகளில் மேல் நிலைப் பள்ளி வகுப்புகளும் இருந்தன. இந்த 3,109 பள்ளிகளுக்கு மேலாக மைய அரசின் உயர்நிலைப் பள்ளிக் கல்வி வாரியத்தோடு இணைந்த 117 பள்ளிகளும் (மேல்நிலை வகுப்புகள் இருந்த 52 பள்ளிகள் உட்பட) இருந்தன. அப்பள்ளிகளில் மேல்நிலைப் பள்ளிகளில் 12·69 இலட்சம் பேரும், உயர்நிலைப் பள்ளிகளில் 7·75 லட்சம் பேரும் ஆக மொத்தம் 20·44 இலட்சம் பேர்கள் பயின்று வந்தனர். அந்த 20·44 இலட்சம் பேர்களுள் 8-ம் வகுப்பிலும், கீழ்வகுப்புகளிலும் பயின்று வந்தவர்கள் 11·60 இலட்சம் பேர்; 9—10 வகுப்புகளில் பயின்றவர்கள் 6·34 இலட்சம் பேர்; மேல்நிலைப் பள்ளி இரண்டாண்டு வகுப்புகளிலும் பயின்றவர்கள் 2·50 இலட்சம் பேர்.

2. 1980-81 இல் இதுவரை 62 உயர்நிலைப் பள்ளிகள் (அரசுப் பள்ளிகள் 42, தனியார் பள்ளிகள் 20) புதிதாகத் திறக்க அனுமதிக்கப்பட்டுள்ளன.

3. அறிவியல் ஆய்வுக் கூடங்களை அமைப்பதற்கான திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு அரசு உயர்நிலைப் பள்ளிக்கும் ரூ. 55,000 செலவிடப்படுகிறது. (ஆய்வுக்கூட கட்டிடத்திற்காக ரூபாய் 37,000-மும், கருவிகளுக்காக ரூ. 18,000-மும்.) தனியார் மற்றும் நகராட்சி உயர்நிலைப் பள்ளிகள் ஒவ்வொன்றும் பெறும் மானியம் ரூ. 40,200 ஆகும். இதில் ரூ. 18,000 கருவிகளுக்காகும். இவற்றைப் பள்ளிக் கல்வி இயக்குநரே வாங்கி வழங்குகிறார். எஞ்சிய ரூ. 22,200 ஆய்வுக்கூட கட்டிடத்திற்காகும். கட்டிடத்திற்கான செலவில் 60 சதவிகிதம் அல்லது ரூ. 22,200 இதில் எது குறைவோ அது, என்ற அடிப்படையில் ஆய்வுக்கூடக் கட்டிட மானியம் வழங்கப்படுகிறது. 1979-80 முடிய 993 உயர்நிலைப் பள்ளிகள் ஆய்வுக்கூட நிதியுதவி பெற்றிருந்தன. (கடந்த மூன்று ஆண்டுகளில் பயன் பெற்ற 100 பள்ளிகள் உட்பட.) 1980-81-ல் மேலும் 25 உயர்நிலைப் பள்ளிகளுக்கு ஆய்வுக்கூடம் அமைக்கப்படும்.



4. இதுவரையில் அறிவியல் ஆய்வுக்கூட வசதியினைப் பெறாத கிராமப்புற உயர்நிலைப் பள்ளிகளில் அறிவியல் கற்பிப்பதற்கு உதவும் வண்ணம் தற்போது 50 கல்வி மாவட்டங்களில் 42-ல், ஒவ்வொன்றிலும் ஒரு நடமாடும் அறிவியல் ஆய்வுக்கூட வண்டி உள்ளது. 1980-81-ல் மேலும் நான்கு வண்டிகள் வாங்கப்படும்.

5. மாணவர்களின் அறிவியல் ஆர்வத்தை வளர்ப்பதற்காக மாநில அறிவியல் கண்காட்சிகள் ஆண்டுதோறும் நடத்தப்படுகின்றன.

6. உயர்நிலைப் பள்ளிகளில் நூலக வசதியை மேம்படுத்தும் நோக்கத்துடன் பொருத்தமான நூலக புத்தகங்கள் வாங்கப்பட்டு பள்ளிகளுக்கு வழங்கப்படுகின்றன. கடந்த மூன்று ஆண்டுகளில் ரூ. 9 இலட்சம் இதற்குச் செலவிடப்பட்டது. 1980—81-ல் இப்பணிக்கு ரூ. 2 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஒலி-ஒளிக் கல்வி.

7. பெரும்பாலான பள்ளிகள் சுய முயற்சியின் மூலம் அல்லது வட்டார மக்களின் முயற்சியின் மூலம் வானொலிப் பெட்டிகளைப் பெற்றுள்ளதனால் அவை வானொலியின் கல்வி ஒலிபரப்பின் மூலம் பயன்பெறுகின்றன. மீதியுள்ள பள்ளிகளுக்கும் வானொலிப் பெட்டிகள் வழங்கிட இயலும் வகையில் 4,000 வானொலிப் பெட்டிகளை இலவசமாகத் தர யூனிசெப் இசைந்துள்ளது. 700 உயர்நிலைப் பள்ளிகளில் 16 மி.மீ. திரைப்படம் காட்டும் கருவிகளும், 1,250 பள்ளிகளில் துண்டுப்படம் காட்டும் கருவிகளும் உள்ளன. அந்தந்தப் பள்ளிகள் ஒலி—ஒளிக் கல்விக்கென மாணவர்களிடம் வசூலிக்கும் சிறப்புக் கட்டணத் தொகையைக் கொண்டு ஒலி—ஒளிக் கருவிகள் வாங்கலாம். விலை உயர்ந்தவும், மிகப் பயனுள்ளவையுமான திரைப்படங்களை அத்தொகையிலிருந்து வாங்க இயலாதாகையால் பள்ளிக் கல்வி இயக்குநரகத்தில் உள்ள 'மாநில திரைப்படச் சுருள் சேமிப்பகம்' பள்ளிகளுக்கு திரைப்படங்களையும் துண்டுப் படங்களையும் கட்டணமாக வழங்கி வருகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளில் அந்தச் சேமிப்பு நிலையத்தை வலுப்படுத்த கல்வித் திரைப்படங்களும் துண்டுப்படங்களும் ரூ. 1·25 இலட்சம் செலவில் வாங்கப்பட்டன. 1980—81 இல் இவ்வகையில் மேலும் ரூ. 25,000 செலவிடப்படும்.

8. தொலைக் காட்சி கல்விப்பணிக்கு மிகவும் பயன்படும் ஒரு நவீன கருவியாகும். சென்னையிலும் அதன் அண்மையிலும் உள்ள பள்ளிகள் சென்னைத் தொலைக்காட்சி நிலையத்தின் கல்வி ஒளிபரப்பின் மூலம் பயனடைகின்றன. பள்ளிக் கல்வி இயக்குநரகத்தில் உள்ள 'தொழில் நுட்ப வளர்ச்சியைக் கல்விப் பணிக்குப் பயன்படுத்துவதற்கான அமைப்பு' பள்ளிகள் தொலைக் காட்சி கல்வி ஒளிபரப்பின் மூலம் நற்பயனை அடைய உதவி வருகிறது சென்னை நிலைய ஒளிப்பரப்புப் பகுதியில் உள்ள பள்ளிகள் தம் மாணவர்கள் ஒவ்வொருவரிடமும் ஆண்டுக்கு ரூ. 2 வசூலித்து தொலைக் காட்சிப் பெட்டிகள் வாங்கவும் பராமரிக்கவும் பயன்படுத்திக்கொள்ள அரசு ஏற்கனவே அனுமதித்துள்ளது. கிராமப்புறங்களிலுள்ள பள்ளிகள் 15-க்குத் தொலைக் காட்சிப் பெட்டிகளை அரசே வாங்கி அளிக்க 1979–80 இல் ரூ. 75,000 ஒதுக்கப்பட்டது. அப்பள்ளிகள் வசூலிக்கும் தொலைக் காட்சிக் கட்டணத் தொகையைக் கொண்டு அப் பெட்டிகளின் விலை தவணை முறையில் அரசுக்கு திரும்பச் செலுத்தப்படும். இப் பணிக்காக 1980–81–லும் ரூ. 75,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

9. பள்ளிகளில் கல்வித் தர உயர்வுக்குப் பாடுபடவும் விளையாட்டுகள், பண்பாடு, இளைஞர் நலப் பணி ஆகியவற்றைப் பேணி வளர்க்கவும் ஒவ்வொரு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளியிலும் கல்விக் குழு, விளையாட்டுக் குழு, பண்பாட்டுக் குழு, இளைஞர் நலப் பணிக் குழு என்ற நான்கு குழுக்களை அமைத்துச் செயல்பட அரசு ஆணையிட்டுள்ளது.

10. நகராட்சி மற்றும் தனியார் உயர்நிலைப் பள்ளிகளுக்குக் கட்டிட மானியம் தர 1980–81–ல் ரூ. 9 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. அரசு உயர்நிலைப் பள்ளிகளின் கட்டிடப் பணிகளுக்காக 1980–81–ல் ரூ. 42 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது—(முன் ஆண்டுகளில் ஏற்பளித்த பணிகளுக்கு 1980–81 இல் ஆகும் செலவுக்காக ரூ. 25 இலட்சமும், புதிய கட்டிட வேலைகளுக்காக ரூ. 17 இலட்சமும்.) கட்டிட வசதிகள் மிகக் குறைவாக உள்ள பள்ளிகளின் தேவைகளை வரும் ஆண்டுகளில் படிப்படியாக நிறைவு செய்யும் நோக்கத்துடன் அரசுப் பள்ளிகளில் உள்ள கட்டட வசதிகளைக் கணக்கெடுக்க அரசு ஏற்பாடு செய்துள்ளது.

## படிப்பு உதவித் தொகைகள்:

11. தமிழ்நாட்டில் பள்ளிக் கல்வி எல்லா நிலைகளிலும் இலவசமாகும். கிராமப்புறத்தைச் சேர்ந்தவர்களும் கல்வியில் சிறந்து விளங்குகிறவர்களுமான மாணவர்களுக்கு, 1971–72 முதல் படிப்பு உதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன. இத் திட்டத்தின் கீழ் 374 ஊராட்சி ஒன்றியங்களில் ஒவ்வொன்றிலும் புதியதாக நான்கு மாணவர்களுக்கு ஆண்டுதோறும் உதவித்தொகை





வழங்கப்படுகிறது. ஒரு முறை உதவித் தொகை பெற்ற மாணவர் பள்ளிக் கல்வியை முடித்து வெளிவரும் வரை இவ்வுதவித் தொகையைப் பெறுவார் இத்திட்டத்திற்கென ஏற்கப்பட்ட பள்ளிகளில் மாணவர் படிப்பதாய் இருந்தால், உணவு விடுதியில் தங்கிப் படிக்கின்ற மாணவர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1,000–ம் விடுதியில் தங்காமல் பள்ளிக்கு வந்து சென்று படிக்கின்ற மாணவருக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 500–ம் உதவித் தொகை வழங்கப்படும். இவ்வுதவித் தொகை பெறும் மாணவர்களுள் தம் விருப்பப்படி சாதாரணப் பள்ளிகளில் சேர்ந்து படிப்பவர்களுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.150 மட்டும் வழங்கப்படுகிறது. இந்த உதவித் தொகையைப் பெறும் மாணவர் எண்ணிக்கை 1980–81–ல் (புதியதாகப் பெறுவோர் உட்பட) சுமார் 3,000 ஆக இருக்கும். (1978–79–லிருந்து ஒவ்வொரு ஒன்றியத்திலும் இப்படிப்புதவித் தொகையைப் புதிதாகப் பெறும் மாணவர் எண்ணிக்கை இரட்டிக்கப்பட்டது—அதாவது 2—லிருந்து 4 ஆக உயர்த்தப்பட்டது).

12. இது தவிர, பர்மா, இலங்கை, அகதிகள், முன்னாள் இராணுவத்தினர், தாழ்த்தப்பட்ட வகுப்பினர், பழங்குடியினர் அரசியல் தியாகிகள் ஆகியோரது குழந்தைகளுக்கும் தாராளமாகக் கல்விச் சலுகைகள் தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகின்றன.

## நடமாடும் மருத்துவ வண்டிகள்.

13. சென்னை தவிர மற்ற எல்லா மாவட்டங்களிலும் உயர்நிலைப் பள்ளி மாணவர்களின் மருத்துவ சோதனைக்கென நடமாடும் மருத்துவ வண்டிகள் இயங்கி வருகின்றன.

## மெட்ரிக்குலேசன் பள்ளிகள்.

14. தமிழ்நாட்டில் 33 மெட்ரிக்குலேசன் பள்ளிகள் உள்ளன. அவற்றில் பயில்வோர் 30,000 மாணவர்கள். இவை மாணவர்களிடம் கட்டணம் வசூலிக்கின்றன. பாடமொழி ஆங்கிலமாகும். இவை அரசு மானியம் பெறுவதில்லை. இவை முன்னர் சென்னை, மதுரைப் பல்கலைக்கழகங்களுடன் இணைந்திருந்தன. 1976 டிசம்பரிலிருந்து இவை பள்ளிக் கல்வி இயக்குநரின் கட்டுப்பாட்டிற்கு மாற்றப்பட்டுள்ளன. மெட்ரிக்குலேசன் பள்ளிகளுக்காகத் தனி ஆயம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளதுடன் தனி ஆய்வாளர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார்.

[1980 ஜூலை 12

ஆங்கிலோ இந்திய பள்ளிகள்—

15. ஆங்கிலோ இந்தியப் பள்ளிகளில் பயிலும் ஆங்கிலோ இந்திய மாணவர்களிடம் 1978–79-ம் ஆண்டிலிருந்து கற்பிப்புக் கட்டணம் எதுவும் வசூலிக்கப்படுவதில்லை. அம்மாணவர்களின் பெற்றோர்களுடைய வருமானம் எவ்வளவாக இருந்தாலும் இச் சலுகை உண்டு. (அப்பள்ளிகளில் பயிலும் ஆங்கிலோ இந்திய ரல்லாத பிற மாணவர்கள் அக்கட்டணம் செலுத்த வேண்டும்) இச்சலுகையால் ஆங்கிலோ இந்தியப் பள்ளி நிருவாகங்களுக்கு ஏற்படும் இழப்பை ஈடுகட்ட மானியம் தரப்படுகிறது.

(iv) பள்ளிப்பாடங்கள், பாடத்திட்டம், பள்ளிப் பாடநூல்கள் பாடத்திட்ட திருத்தம்.

1972–73-லிருந்து 1976–77-க்குள் படிப்படியாக 10 ஆண்டுப் பள்ளிப் படிப்புக்கான புதிய பாடத் திட்டம் நடைமுறைக்கு வந்தது. கல்வி வல்லுநர்களைக் கலந்து பல்வேறு பாடங் களில் அப்புதிய பாடத் திட்டத்தின் கீழ் உள்ள அதிகப்படிசுமை 1978–79 முதல் அனைத்து வகுப்புக்களிலும் குறைக்கப்பட்டுள் ளது. கணிதத்தைப் பொறுத்தவரை 1978–79 முதல் அதிகப் படி சுமை குறைக்கப்பட்டதோடு கூட, கணிதப் பாடத்துக்கு 1—10 வகுப்புகளுக்கு முற்றிலும் திருத்திய பாடத் திட்டம் ஒன்றை அப்பாட வல்லுநர் குழு தயாரித்துத் தந்தது. அத் திருத்திய கணித பாடத் திட்டத்தை ஏற்று பின்வரும் கால அட்டவணைப்படி பள்ளிகளில் செயல்படுத்த ஆணையிடப்பட் டுள்ளது.

| ஆண்டு. | வகுப்புகள். |
|---|---|
| 1979–80 .. .. .. .. | 1–2 |
| 1980–81 .. .. .. .. | 3, 6 |
| 1981–82 .. .. .. .. | 4, 7, 9 |
| 1982–83 .. .. .. .. | 5, 8, 10 |

பள்ளிப்பாட நூல்கள்—

2. பள்ளிகளுக்கான அரசுப் பாட நூல்களை வெளியிட்டு வழங்கும் பொறுப்பு 1970-ல் நிறுவப்பட்ட தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனத்துடையதாகும். 1980–81-ல் பயன்படுத்துவதற் காக அந்நிறுவனம் ரூ. 5·39 கோடி விலையுள்ள சுமார் 2·30 கோடி எண்ணிக்கை பாட நூல் படிகளை அச்சிட்டது.



1980 ஜூலை 12]

3. இந்நிறுவன புத்தகங்கள் 50 மொத்த விற்பனையாளர் (கூட்டுறவுச் சங்கங்கள்) மூலமாகவும், பதிவு செய்யப்பட்ட 2,200 சில்லறை வியாபாரிகள் மூலமாகவும் மாநில முழுவதும் விற்கப் படுகின்றன. பாட நூல்கள் உரிய காலத்தில் குறிப்பிட்ட விலை யில் மாணவர்கட்குக் கிடைக்க இந்நிறுவனம் வகை செய்துள்ளது. தமிழ்நாட்டுக்கு மைய அரசு ஒதுக்கும் மலிவு விலைத் தாளைக் கொண்டு நோட்டுப் புத்தகங்களைத் தயாரித்து விநியோகிக்கும் வேலையைத் தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனத்திடம் இவ்வரசு 1979 செப்டம்பரில் ஒப்படைத்தது. நோட்டுப் புத்தகங்கள் வகை யில் இம்மாநிலத்துக்கு ஓராண்டுக்கு 8,000 டன் தாள் தேவை. மலிவு விலைத்தாள் வழங்குவதற்கான மைய அரசு திட்டத்தின் வரம்பு களின் கீழ் இத்தேவை முழுவதையும் நிறைவு செய்யும் அளவுக்கு மலிவு விலைத்தாள் பெற இயலாது. 1979 ஜூலை முதல் 1980 ஜுன் முடிய ஓராண்டுக்கு இம்மாநிலத்துக்கு 6,000 டன் மலிவு விலைத் தாள் ஒதுக்கப்பட்டது, எனினும் அதில் பாதி அளவு தாளே நோட்டுப் புத்தக உற்பத்திக்குக் கிடைத்தது. இதுவரை சுமார் ரூ. 2 கோடி மதிப்புள்ள நோட்டுப் புத்தகங்கள் விற்கப் பட்டுள்ளன. ஆலைகளிலிருந்து உரிய நேரத்தில் போதிய அளவு மலிவு விலைத் தாள் கிடைக்காத காரணத்தால் இவ்வாண்டு சில பற்றாக்குறைகள் ஏற்பட்டுள்ளன. ஆலைகளிலிருந்து மேலும் பேப்பர் வர, வர, நோட்டுப் புத்தகத் தயாரிப்பைத் தொடர்ந்து செய்து மேலும் நோட்டுப் புத்தகங்களை பாட நூல் நிறுவனம் விற்பனைக்கு அனுப்பி வரும்.

(V) ஆசிரியர் பயிற்சி.

இடை நிலை (செகண்டரி கிரேடு) ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளித்திட, இம் மாநிலத்தில் தற்போது 79 ஆசிரியர் பயிற்சி நிலையங்கள் உள்ளன. (இளஞ்சிறார் பள்ளி ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் நான்கு, ஆங்கிலோ-இந்திய ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ஒன்று, லேடி வில்லிங்டன் மற்றும் புனித கிறிஸ்டோபர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் கல்லூரிக்கு ஒன்றாக உள்ள செகண்டரி கிரேடு பயிற்சி வகுப்புகள் இரண்டு ஆகியவை உட்பட) கடந்த பல ஆண்டுகளாக பயிற்சி பெற்ற ஆசிரியர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் பெருமளவில் நிலவி வருவதால் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் ஒரு ஆண்டு விட்டு மறு ஆண்டு தான் மாணவர்கள் அதுவும் குறைந்த எண்ணிக்கையில் சேர்த்துக் கொள்ளப்படுகி றார்கள். கடைசியாக 1979–80-ல் மாணவர்கள் சேர்க்கப்பட் டார்கள். 1980–81-ல் சேர்க்கப்படமாட்டார்கள்.

2. தற்போது இம்மாநிலத்தில் ஆசிரியர்களுக்கு ஆங்கில மொழி கற்பிப்பதில் பயிற்சி அளிக்கும் நிலையங்கள் ஒன்பது செயல் பட்டு வருகின்றன. சென்னை, கோயம்புத்தூர், திருச்சி ராப்பள்ளி ஆகிய மூன்று இடங்களிலும் உள்ள மையங்கள் ஆண்டுதோறும் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் 1,350 பேருக்கு

(30 தொகுதியினர்; மூன்று வாரப்பயிற்சி) ஆங்கிலம் பயிற்றுவிப்பதில் மறு பயிற்சி அளிக்கின்றன. கடலூர், தஞ்சாவூர், சேலம், திருநெல்வேலி, வேலூர், மேலூர் ஆகிய ஆறு இடங்களிலும் உள்ள மையங்கள் ஆண்டுதோறும் உயர் தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் 2,700 பேருக்கு (60 தொகுதியினர்; நான்கு வாரப் பயிற்சி) ஆங்கிலம் பயிற்றுவிப்பதில் மறு பயிற்சி அளிக்கின்றன. 1980–81-ம் ஆண்டில் மேலும் ஒரு மையம் தொடங்கப்படும். இம்மையங்களின் ஆசிரியர்கள் தொடக்கப்பள்ளிகளில் ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் மறுபயிற்சி முகாம்கள் நடத்துகின்றனர்.

## (VI) தமிழ்நாடு கல்வியாராய்ச்சி—பயிற்சி நிறுவனம்.

தமிழ்நாடு கல்வி நிறுவனம், தமிழ்நாடு அறிவியல் கல்வி நிறுவனம், மாணவர் கல்வித் தர மதிப்பீட்டிற்கான மாநிலப் பிரிவு ஆகிய மூன்றையும் இணைத்து 1975-ல் தமிழ்நாடு கல்வியாராய்ச்சி பயிற்சி நிறுவனம் உருவாக்கப்பட்டது. அது மேல் நிலைப் பள்ளிக் கல்வி நிலைவரை ஆராய்ச்சி, பயிற்சி ஆகியவற்றைக் கவனித்து வருகிறது. இது பல ஆய்வுக் கருத்தரங்குகளையும், பயிற்சி வகுப்புகளையும், பணிப் பயிற்சிகளையும் நடத்தி வருகிறது. பள்ளிக் கல்வி இயக்குநரே இதற்கும் இயக்குநர் ஆவார்.

2. யுனிசெப் உதவியுடன் இக்குழு பின்வரும் சோதனைத் திட்டங்களை நடத்தி வருகின்றது.(1) ''தொடக்கக் கல்விப்பாடத் திட்டத்தைப் புதுப்பிக்கும் திட்டம்''. இதன்கீழ் கிராமப் புறங்களுக்கிசைந்த புதிய பாடத் திட்டம் ஒன்று ஆடுதுறை, இராணிப் பேட்டை, கரூர், ஆகிய இடங்களைச் சூழ்ந்த மொத்தம் 30 தொடக்கப் பள்ளிகளில் 1—5 வகுப்புகளில் செயல்படுகிறது. 1980–81 முதல் இத்திட்டம் மேலும் 100 பள்ளிகளுக்கு விரிவாக்கப்படும்.

(2) ''சமுதாய வளர்ச்சியோடு இணைந்த கல்வி வளர்சி'' சமுதாய மாற்றத்திற்கு பள்ளிக்கூடம் ஓர் தூண்டுகோலாக இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் அனைத்து வயதினரின் கல்வி, சமுதாயத் தேவைகளை நிறைவு செய்யக்கூடிய வகையில் கல்வி அளிப்பது இத்திட்டத்தின் நோக்கம். இது இப்பொழுது திரூரில் ஒன்றும், அம்மூரில் ஒன்றும், ஆக இரண்டு மையங்களில் செயல்படுகிறது. 1980–81--ல் மேலும் இரண்டு மையங்கள் தொடங்கப்படும்.

(3) (அனைவருக்கும் தொடக்கக்கல்வி அளிக்கும் திட்டத்தின் கீழ்) ''தொடக்கக்கல்வி வாய்ப்புகளை பரவலாக்குதல்''. பள்ளிகளில் சேராமல் இருக்கும் சிறுவர்களைக் குறிப்பாகக் கவனித்து அவர்கள் வாழ்க்கையை மேம்படுத்தவென்றே தனிவகையான தொடக்கக் கல்வி அளிப்பதற்கான பாடத் திட்டம், பாட நூல்கள் முதலியவற்றை தயாரிப்பது இத்திட்டத்தின் நோக்கம்.



3. யுனிசெப் உதவியுடன் ''இயற்கைச் சுற்றுச் சூழலைப் பாதுகாத்தல்'' பற்றிய பயிற்சி முகாம் ஒன்றை நடத்தி அதில் தயாரித்த திட்டங்களை இந்நிறுவனம் பரங்கிமலை ஊராட்சி ஒன்றியத்தில் 50 ஊர்களிலுள்ள தொடக்கப்பள்ளிகளின் மூலம் செயல்படுத்திப் பார்த்து வருகிறது.

4. பிரிட்டிஷ் கவுன்சிலின் உதவியுடன் சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் இந்நிறுவனம் நடத்திவரும் ஆசிரியர் நிலையங்களில் ஆசிரியர்கள் கல்விப் பிரச்சினைகள் குறித்து ஒன்றாகக் கூடி விவாதித்து தங்கள் திறனை வளர்த்துக் கொள்கின்றனர். பரிமாற்றம் செய்து கொள்கின்றனர்.

5. தொடக்கப்பள்ளிகளுக்கான அறிவியல் சோதனைக் கருவிகள் அடங்கிய தொகுப்புகளை எவ்வாறு பயன்படுத்துவது என்பது பற்றி தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு இந்நிறுவனம் யுனிசெப்பின் உதவியுடன் பயிற்சி அளித்து வந்துள்ளது. இதுவரை அப்படிப்பட்ட பயிற்சிகள் 40 நடந்துள்ளன.

6. சென்னை, மதுரை, காரைக்குடி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் உள்ள ஆசிரியர்களுக்கான ''தொடர் கல்வி மையங்கள்'' நன்கு நடைபெறுகின்றன. ஆசிரியர்களுக்கு ஆலோசனை தருகின்றன. ஆண்டுக்கு 4,800 ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இவற்றை நடத்தும் செலவில் பாதியை தேசிய கல்வியாராய்ச்சி, பயிற்சி நிறுவனமும் பாதியை மாநில அரசும் ஏற்கின்றன. அனைத்து நிலை பள்ளி ஆசிரியர்களும் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ஆசிரியர்களும் ஆசிரியர்கள் என்ற முறையில் தங்கள் தகுதிகளை வளர்த்துக் கொள்ள இம்மையங்கள் உதவுகின்றன.

7. மைசூரில் உள்ள இந்திய மொழிகளுக்கான மைய அரசு நிறுவனம், சென்னையிலுள்ள அனைத்திந்திய வானொலி ஆகியவற்றோடு இணைந்து இந்நிறுவனம் 1979–80-ல் 8-ம் வகுப்புத் தமிழ் ஆசிரியர்களுக்கு அஞ்சல் பாட வகுப்புகளை நடத்தியது. ஆண்டுக்கு 1,500 ஆசிரியர் அதில் பயன்பெறுவர். 1980–81-ம் ஆண்டில் இத்திட்டம் 9-ஆம் வகுப்புத் தமிழ் ஆசிரியர்களுக்கு விரிவாக்கப்பட இருக்கிறது. இவைபோக 1979–80-ல் மொத்தம் ரூ. 2·20 இலட்சம் செலவில் மொத்தம் 6,000 ஆசிரியர்களுக்கு 156 பணியிருப்புப் பயிற்சிகளை இந்நிறுவனம் நடத்தியது. 1—3 வகுப்புக்களில் பயிற்றுவிக்கும் 15,000 ஆசிரியர்களுக்கு 1980–81-ல் மொத்தம் ரூ. 3·90 இலட்சம் செலவில் 300 மறுபயிற்சி வகுப்புக்களை இந்நிறுவனம் நடத்த இருக்கிறது.

8. 1980 செப்டம்பரில் தொடக்க நிலை (ஹையர் கிரேடு) ஆசிரியர்களுக்காகத் தொடங்க இருக்கும் அஞ்சல் வழி மற்றும் நேரடித் தொடர்புப் பாடமுறைகளையும் இந்நிறுவனமே நடத்தும். அப்பாட முறையின் விவரங்களை அடுத்த பிரிவில் காணலாம்.

9. 1980–81-ல் இந்நிறுவனத்துக்கு ரூ.3·50 இலட்சம் செலவில் புதிய கட்டடம் கட்டவும் நிறுவன நூலகத்தை மேம்படுத்தவும் கருதப்பட்டுள்ளது.

### (vii) பள்ளி ஆசிரியர்கள், ஆசிரியர்களல்லாத பணியாளர்களின் நலன்.

1. தமிழ்நாட்டில் உள்ள பள்ளிகளில் பணியாற்றி வரும் இரண்டரை இலட்சம் ஆசிரியர்களின் நலனில் அரசு இடைவிடாத நாட்டம் செலுத்தி வருகிறது.

2. ஊராட்சி ஒன்றியப் பள்ளி ஆசிரியர்கள் சுமார் 95,000 பேர்களையும் அரசுப் பணியாளர்களாக ஆக்குவதென்ற மகத்தான முடிவை அரசு ஏற்கெனவே அறிவித்துள்ளது. இந்தக் கொள்கை முடிவைச் செயலாக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

3. இடைநிலை (செகண்டரி கிரேடு) ஆசிரியருக்கான தகுதி இருந்தும் தொடக்க நிலை (ஹையர் கிரேடு) ஆசிரியர்களாகத் தொடக்கப்பள்ளிகளில் பணியாற்றிவரும் ஆசிரியர்களுக்கு இதுவரை படிப்படியாக இடைநிலைப் பதவிகள் அளிக்கப்பட்டன. 1967–68 முதல் 1978–79 முடிய இவ்வாறு 42,950 தொடக்க நிலைப் பதவிகள் இடை நிலைப் பதவிகளாக உயர்த்தப்பட்டன. இனிமேல் இவ்வாறு இடைநிலைத் தகுதிபெறும் தொடக்க நிலை ஆசிரியர்களைத் தகுதி பெற்ற அடுத்த செப்டம்பர் 1-ம் தேதி முதல் உடனுக்குடன் (யாதொரு தனி ஆணையுமின்றி) இடைநிலைக்கு உயர்த்தி இடைநிலைச் சம்பளம் தரவேண்டும் என்ற நிலையான அரசாணை ஒன்று 1979 ஏப்ரலில் வெளியிடப்பட்டது.

4. மீதமுள்ள தொடக்கநிலை ஆசிரியர்களும் இடைநிலைத் தகுதிபெற்று இடைநிலைச் சம்பளம் பெற வகை செய்து தமிழ்நாட்டு கல்வியாராய்ச்சி பயிற்சி நிறுவனத்தின் மூலம் 5 மாத அஞ்சல் வழி மற்றும் நேரடித் தொடர்புப் பாடமுறை ஒன்றை நடத்த அரசு ஆணையிட்டுள்ளது. 1980 செப்டம்பர்–1981 சனவரியில் நடக்கும் முதல் தொகுதி பயிற்சியில் 2,500 ஆசிரியர் பயன் பெறுவர். 1981–82-லிருந்து ஆண்டுதோறும் ஏப்ரல்–ஆகஸ்டு, அக்டோபர்–பிப்ரவரி என்று இரண்டு தொகுதிகளில் 5,000 பேர் (2,500 × 2) பயன்பெறுவர். இப்பயிற்சி பெறுபவர்கள் அதன்பின் குறைந்தது 3 ஆண்டுகளாவது பணியிலிருந்தால் தான் பயன் உண்டாகையால் 54 வயதுக்குக் குறைந்த தொடக்க நிலை ஆசிரியர்களே இப்பயிற்சிக்குச் சேர்க்கப்படுவர். அந்தந்த வருவாய் மாவட்டத்திலுள்ள தொடக்க நிலை ஆசிரியர்கள் எண்ணிக்கைக்கேற்ப இப்பயிற்சியின் இடங்கள் பகிர்ந்தளிக்கப்படும்.



5. அரசுப் பள்ளிகளில் தற்காலிகமாக நியமிக்கப்பட்ட பி.டி. ஆசிரியர்கள், முதுநிலைத் தமிழ் ஆசிரியர் ஆகியோருக்காகவென்றே தனியாக ஒரு தேர்வை அரசுப்பணியாளர் தேர்வாணைக்குழு நடத்தி வருகிறது. இவ்வாசிரியர்களுள் 31—3—1977 அன்றைய நிலவரப்படி ஓராண்டு தற்காலிகப் பணி (தொடர்ந்து அல்லது விட்டு விட்டு) முடித்திருந்து அந்நாளில் பணியிலிருந்தவர்களுக்கும், அந்நாளில் பணியில் இல்லாமலிருந்தால், அவ்வாறு ஓராண்டு பணி முடித்துவிட்டு, 1—4—1974 அன்று அல்லது அதற்குப் பின் பணி நீக்கம் செய்யப்பட்டவர்களுக்கும் ஆனது அத்தேர்வு. தேர்வு முடிந்ததும் இவர்களுடைய பணியை முறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

### ஏ, பி, சி பிரிவுகள் இணைப்பு.

6. அரசுப் பள்ளிகளின் ஏ, பி பிரிவுகளை இணைத்து 2—11—1978 அன்று அரசு ஆணையிட்டுள்ளது. அவ்வாணை செல்லுபடியாகக் கூடியது என டெல்லி தலைமை நீதி மன்றமும் தெரிவித்துள்ளது.

7. அரசு ஏற்று நடத்திவரும் நகராட்சிப் பள்ளிகள் 17-ன் ஆசிரியர்கள் இதுவரை சி பிரிவு ஆக இருந்தவர்களையும் ஒருங்கிணைக்க அரசு ஆணையிட்டுள்ளது. அவர்கள் பி பிரிவு பட்டியல் இறுதியில் சேர்க்கப்பட்டு பி பிரிவு வழியாக பொதுவான ஒருங்கிணைந்த பணிமூப்புப் பட்டியலில் சேர்வார்கள்.

### தனியார் பள்ளிகள்.

8. 1973 ஆம் ஆண்டு இயற்றிய தமிழ்நாடு ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) சட்டமும், அச்சட்டத்தின்கீழ் வகுத்த விதிகளும் 1—12—1974 முதல் அமுலுக்கு வந்தன. அந்தச் சட்டத்தையும் விதிகளையும் எதிர்த்து சிறுபான்மையினர் கல்வி நிலையங்கள் பல, உயர் நீதி மன்றத்தில் ரிட் மனு தொடுத்தன. அச்சட்டத்தின் பல பிரிவுகளும் விதிகளில் பலவும் சிறுபான்மையினர் கல்வி நிலையங்களுக்கு பொருந்தமாட்டா என உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இது குறித்து டெல்லி தலைமை நீதி மன்றத்தில் இவ்வரசு முறையீடுகள் செய்துள்ளது.

9. தனியார் பள்ளி நிருவாகங்களில் சிலவற்றால் பதவி நீக்கம் செயயப்பட்ட ஆசிரியர்களை மேல்முறையீட்டில் பள்ளிக் கல்வித்துறை அதிகாரிகள் திரும்பவும் பணியில் சேர்க்க வேண்டும் என்று ஆணையிடும்பொழுது இந்நிருவாகங்கள் அவ்

வாணையை செயல்படுத்த மறுக்கும் வருந்தத்தக்க நிலை இருக்கிறது. அவ்வாறு பாதிக்கப்பட்டவர்களின் இன்னலைக் களைந்து விதிகளைக் கண்டிப்பாக அமுல்படுத்தும் நோக்கத்துடன் அப்படிப்பட்ட பள்ளிகளின் பணியாளர்களுக்கு நேரடியாக சம்பளம் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று பள்ளிக் கல்வித்துறை ஆய்வு அலுவலர்களுக்கு அரசு ஆணையிட்டுள்ளது. மேலும், அவ்வாறு பாதிக்கப்பட்ட ஆசிரியரை அல்லது பிறபணியாளரை அவர் பள்ளியிலிருந்து கூடுதல் ஆசிரியர் தேவையாக உள்ள பிற பள்ளிகளுக்கு அவர் பதவியோடு சேர்த்து மாற்றிவிடவும் ஆணையிடப்பட்டுள்ளது.

10. சிறுபான்மையினர் அல்லாத பிற தனியார் பள்ளிகள் எல்லாம் தங்கள் பணியாளர்களை வேலைவாய்ப்பகங்கள் மூலமாகத் தான் தேர்ந்தெடுத்து நியமனம் செய்ய வேண்டும் என்று ஆணையிடப்பட்டுள்ளது. அப்பள்ளிகளில் உள்ள ஆசிரியர் பதவிகளில் 18 விழுக்காடு பதவிகளை தாழ்த்தப்பட்டோர் மற்றும் மலை சாதியினருக்கு ஒதுக்க வேண்டும் என்று ஏற்கெனவே ஆணையிடப்பட்டுள்ளது. பிற்பட்ட சாதியினருக்கும் அதுபோல இட ஒதுக்கீடு செய்ய அரசு முடிவு செய்துள்ளது.

11. தனியார் பள்ளி ஆசிரியர்களும், அரசுப் பணியிலுள்ள ஆசிரியர்களுக்கு அவ்வப்போது அளிக்கப்படும் விடுப்பு நலன்கள் அனைத்தையும் பெறத் தகுதியுடையவர்களாவர்.

12. அரசுப் பணியாளர்கள் ஏற்கெனவே பெற்று வந்த பின்வரும் சலுகைகளை அரசு அண்மையில் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் விரிவாக்கியுள்ளது:

(1) கைத்தறி/காதித்துணி வாங்க அரசுப் பணத்திலிருந்து முன்பணம்;

(2) ஐந்தாண்டு பணி முடித்துள்ள முறையான பணியிலுள்ள ஆசிரியர்கள் புதிய சைக்கிள் வாங்க ரூ. 600 வரை அரசுப் பணத்திலிருந்து முன்பணம்;

(3) சி.டி. பிரிவின் கீழ் ஆசிரியர்களுள் கண்ணாடி தேவைப்படுபவர்கள் தங்கள் பணிக்காலத்தில் ஒரு முறை, கண்ணாடி வாங்கும் செலவை ரூ. 40-க்கு மேற்படாமல் அரசுப் பணத்திலிருந்து பெற்றுக் கொள்ளும் சலுகை;

13. உள்ளாட்சி மன்ற ஆசிரியர்களுக்கு சைக்கிள் முன்பணம் முதலியவை இப்பொழுது உள்ளாட்சி மன்றங்களின் நிதியிலிருந்து தரப்படுகிறது. ஊராட்சி மன்ற ஆசிரியர்கள் அரசுப் பணியாளர்கள் ஆனபின் அவர்கள் அத்தகைய முன்பணங்களை அரசுப் பணத்திலிருந்தே பெறும் நிலைமை ஏற்படும்



14. உள்ளாட்சி மன்ற ஆசிரியர்களுக்குரிய இலவச மருத்துவ வசதிகளை யாதொரு சிரமுமின்றி அவர்கள் பெறுமாறு அரசின் உள்ளாட்சி ஊர்வளர்ச்சித்துறை தக்க கட்டளைகளை வெளியிட்டுள்ளது.

15. ஆசிரியர்களுக்கான தேசீய நலநிதியின் பண வசதியையும் பயன்படுத்தி தொடக்கப்பள்ளி ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு பட்டப்படிப்பு வரை இலவசக் கல்வி வசதி தருவதற்கான திட்டம் வகுக்கப்பட்டு வருகிறது.

16. மாநில அரசுப் பணியாளர்களுக்குப் பொருந்தும் தாராள ஓய்வூதிய விதிகள் தனியார் மற்றும் உள்ளாட்சி மன்றப் பள்ளிகளில் பணியாற்றி 1—6—1970 அன்று அல்லது அதற்குப் பிறகு ஓய்வு பெறும் ஆசிரியர்களுக்கும், தனியார் பள்ளிகளிலிருந்து 1—4—1972 அன்று அல்லது அதற்குப் பிறகு ஓய்வு பெறும் ஆசிரியரல்லாத பிற பணியாளர்களுக்கும், விரிவுபடுத்தப்பட்டுள்ளன. அவர்கள் ஓய்வூதியம் பணிக்கொடை முதலியவற்றை அரசுப் பணியாளர்களையொப்ப பெறுகின்றனர். ஓய்வுபெற்ற பிறகு ஓய்வூதியம் பெறுவதற்கான இறுதி ஆணை பிறப்பிக்கப்படுவதில் ஏற்படும் காலத்தாழ்வினால் அல்லலுறாமலிருக்க தற்காலிக ஓய்வூதியமும் பணிக்கொடையும் பெறவும் (அரசு ஊழியர்களைப் போலவே இவர்களுக்கும்) வழி செய்யப்பட்டுள்ளது.

17. அரசுக் கல்வி நிலையங்களல்லாத பிற கல்வி நிலையங்களில் பணி செய்பவர்களும் (அரசுப் பணியாளர்களைப் போல) தங்கள் பணிப் பதிவேட்டின் மறுபிரதி ஒன்றை தாங்களே வைத்து அந்த மறு பிரதியில் உள்ள பதிவுகளுக்கு தங்கள் மேலதிகாரிகளின் சான்றொப்பம் பெற்றுவர அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். மூலப் பணிப்பதிவேடு தொலைய நேர்ந்தால் ஓய்வூதியத்திற்கு உரிய பணிக்காலம் கணக்கிடுதல் போன்ற காரியங்களுக்காக பணிப் பதிவேட்டை மீண்டும் எளிதில் தயாரிக்க அந்த மறுபிரதி உதவும்.

18. அரசுக் கல்வி நிலையங்களல்லாத பிற (அதாவது உள்ளாட்சி மன்றம், மற்றும் தனியார்) கல்வி நிலையங்களில் பணி செய்வோருக்கு குடும்ப ஓய்வூதியச் சலுகை முன் ஆண்டுகளில் பல்வேறு கால கட்டங்களில் விரிவாக்கப்பட்டதாகும்—அரசு நிறுவனங்களல்லாத பள்ளிகள், கல்லூரிகளின் ஆசிரியர்களைப் பொறுத்தவரை 1—4—1962-லிருந்து ; தனியார் பள்ளிகளின் ஆசிரியரல்லாத பணியாளர்களைப் பொறுத்தவரை 1—4—1972-லிருந்து என்றவாறு. அவ்வாறு அவ்வப்பிரிவினருக்கு இச்சலுகை விரிவாக்கப்பட்ட நாட்களுக்கு முன்னர் இறந்துவிட்டவர்களின் குடும்பங்களுக்கும் குடும்ப ஓய்வூதியச்

சலுகையை அளித்து அரசு 13—3—1980 அன்று ஆணையிட்டுள்ளது. அரசுப் பணியாளர்களைப் பொறுத்த வரை—அரசுக் கல்வி நிலையப்பணியாளர் உட்பட—குடும்ப ஓய்வூதியத்தைப் பொறுத்த இத்தகைய சலுகை அளிக்கும் ஆணை 1979லேயே வெளியாகியுள்ளது.

19. பணியிலிருக்கும் போது ஒருவர் இறந்து விட்டால் அவரது குடும்பத்திற்கு ரூ. 10,000 வழங்குவதற்கான "குழு ஈட்டுறுதித் திட்டம்" தனியார் மற்றும் உள்ளாட்சி மன்றப் பள்ளி ஆசிரியர்களுக்கும் பொருந்துவதாகும்.

## ஆசிரியர் நலனுக்கான தேசிய நிதி.

20. ஆசிரியர்களும் அவர்கள் குடும்பத்தினரும் வறுமை முதலியவற்றால் வாடும் பொழுது இந்நிதியிலிருந்து உதவித் தொகை அளிக்கப்படுகிறது. ஆசிரியர் நாளன்று 1979–80-ல் கொடிகள் விற்பதன் மூலம் வசூல் ஆன தொகை ரூ. 5·30 இலட்சம் ஆகும். இப்பொழுது கையிருப்பில் உள்ள தொகை ரூ. 46 இலட்சம் ஆகும். 1979–80-ல் இந் நிதிப் பணத்திலிருந்து மொத்தம் ரூ. 1 இலட்சம் ஆசிரியர்களுக்கும் அவர்கள் குடும்பத்தினருக்கும் உதவித்தொகையாக வழங்கப்பட்டது.

21. 1977-78-லிருந்து ஆசிரியர்களின பிள்ளைகளுக்கு தொழில் படிப்பு படிக்க படிப்புதவித் தொகை வழங்கப்படுகிறது. பணியிலுள்ள, ஓய்வு பெற்ற, மற்றும் இறந்துவிட்ட ஆசிரியர்களின் பிள்ளைகளுக்கு இப்படிப்புதவித் தொகைகள் கிட்டும். பொறியியல், மருத்துவம், வேளாண்மை, கால் நடை மருத்துவம் ஆகிய படிப்புகளுக்கு மொத்தம் ஆண்டுக்கு 80 படிப்புதவித் தொகைகள் புதிதாக அளிக்கப்படுகின்றன. இப்படிப்புதவித் தொகை ஆண்டுக்கு ரூ. 500 ஆகும். இதனைப் பெறும் மாணவர்களின் தாய், தந்தையரின் மொத்த வருமானம் ஆண்டுக்கு ரூ. 8,000-க்கு (வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப் படி போன்றவற்றை கணக்கிலெடுக்காமல்) மேல் போகக் கூடாது.

22. ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலும் உள்ள உயர் நிலைப் பள்ளி ஆசிரியர்கள் இருவருக்கும், தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் இருவருக்கும், மாநில அரசு விருதுகள் தொடர்ந்து வழங்கப்படுகின்றன. விருது பெறுபவர் ஒவ்வொருவருக்கும் ஒரு வெள்ளிப் பதக்கமும், ஒரு சான்றிதழும் ரொக்கப் பணம் ரூ. 200-ம் அளிக்கப்படுகின்றன.



## III. மேல்நிலைப் பள்ளிக் கல்வி.

மேல்நிலைப் பள்ளிக் கல்வி (10+2+3 ஆண்டு முறைக் கல்வியின் +2 நிலை) தமிழ்நாட்டில் 1978–79 முதல் தொடங்கப்பட்டது. இரண்டாண்டு மேல்நிலைப் பள்ளிப் படிப்பின் முதலாண்டு வகுப்பு 1978–79-ல் தொடங்கப்பட்டது. இரண்டாம் ஆண்டு வகுப்பு 1979–80-ல் தொடங்கப்பட்டது.

2. பின்வரும் விவரப்படி 1979–80-ல் 1,087 மேல்நிலைப் பள்ளிகள் செயல்பட்டு வந்தன.

| பள்ளி வகை. | மேல்நிலைப்பள்ளியாக உயர்த்தப்பட்ட ஆண்டு | | மொத்தம். |
|---|---|---|---|
| | 1978–79 | 1979–80 | |
| (1) | (2) | (3) | (4) |
| எஸ்.எஸ்.எல்.சி. .. | 870 | 152 | 1,022 |
| ஆங்கிலோ-இந்தியன் .. | 24 | 2 | 26 |
| மெட்ரிகுலேஷன் .. | 18 | 7 | 25 |
| தொழில் நுட்பப் பள்ளி | .. | 14 | 14 |
| | 912 | 175 | 1,087 |

1978–79-ல் உயர்த்தப்பட்ட 912 பள்ளிகளிலும் மேல்நிலைப் பள்ளி இரண்டாம் ஆண்டு வகுப்பு 1979–80 முதல் தொடங்கப்பட்டது.

3. 1980–81-ல் 150 மேல்நிலைப் பள்ளிகள் தொடங்க அனுமதிக்கப்பட்டுள்ளது. அத்தோடு 5 மெட்டிரிகுலேசன் பள்ளிகளும் மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்த அனுமதிக்கப்பட்டுள்ளன.

4. 1979–80-ல் மேல்நிலைப் பள்ளி வகுப்புகளில் பயின்று வந்த மாணவர்களின் எண்ணிக்கை (நூற்றுக்கு திருத்தமாக) பின்வருமாறு இருந்தது.

| | மாணவர். | மாணவியர் | மொத்தம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| முதலாண்டு வகுப்பு .. | 82,900 | 49,400 | 1,32,300 |
| இரண்டாம் ஆண்டு வகுப்பு.. | 78,100 | 39,600 | 1,17,700 |
| | | | 2,50,000 |

கூடுதல் பணியாளர்கள் :

5. 1978–79'ல் மேல்நிலைப் பள்ளிகளில் கலை, அறிவியல் பாடங்களைக் கற்றுத்தருவதற்கு ஆன ஆசிரியர் தேவையில் பெரும் பகுதி உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களை (முழுத் தகுதி பெற்றவர்களும் பெறாதவர்களும்) மேல் நிலைப் பள்ளிகளில் நியமித்து பூர்த்தி செய்யப்பட்டது. மேற்கொண்டு தேவையாயிருந்த அப்பாட ஆசிரியர்கள் தேவையைப் பூர்த்தி செய்ய அவ்வாண்டில் 1,300 கூடுதல் ஆசிரியர் பதவிகள் ஏற்படுத்தப் பட்டன. 1979–80-ல் மேல்நிலைப் பள்ளிகளுக்கான கூடுதல் ஆசிரியர் பதவிகள் 2,490 ஏற்படுத்தப்பட்டன. 1980–81-ல் கூடுதலாக மேலும் 1,000 பதவிகள் ஏற்படுத்தப்படும்.

6. உயர்நிலைப் பள்ளிகளிலும் மேல் நிலைப் பள்ளிகளிலும் உடற்பயிற்சியை கவனிக்க போதுமான ஆசிரியர்கள் இல்லாததால் 1980–81-ல் கூடுதலாக 200 உடற்பயிற்சி இயக்குநர் பதவிகள் ஏற்படுத்தப்படும்.

7. உயர்நிலை/மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் கல்வி விஷயங்களை நன்கு கவனிக்க வகை செய்து அன்றாட நிருவாக விசயங்களை பகிர்ந்து கொள்வதற்காக மாணவர் எண்ணிக்கை 750 அல்லது அதற்கு மேலுள்ள உயர்நிலை/மேல் நிலைப்பள்ளி ஒவ்வொன்றிலும் ஒரு பணி மூப்புள்ள ஆசிரியரை உதவித் தலைமையாசிரியராக நியமித்து அவருக்கு மாதம் ரூ. 25 படி தர அனுமதிக்கப்பட்டுள்ளது. ஷிப்ட் முறைப்படி செயல்படும் பள்ளிகள் இரண்டாவதாக ஒரு உதவித் தலைமை யாசிரியரையும் நியமித்துக் கொள்ளலாம்.

8. 1978–79, 1979–80 ஆண்டுகளில் மேல்நிலைப் பள்ளி அறிவியல் ஆசிரியர்களில் பட்ட மேற்படிப்பு தகுதி பெற்றிராதவர்களுக்கு மொத்தம் ரூ. 18 இலட்சம் செலவில் பணியிருப்புப் பயிற்சி அளிக்கப்பட்டது. அச்செலவை தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனம் ஏற்றுக்கொண்டது. பணியிருப்புப் பயிற்சிக்கு 1980–81-ல் அரசு நிதிநிலை அறிக்கையில் ரூ. 10 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதைக் கொண்டு முன் ஆண்டுகளில் பயிற்சி பெற்றவர்களுக்கு மீள்பார்வை வகுப்புகள் நடத்தப் படுவதோடு மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களில் பட்ட மேற் படிப்பு தகுதி பெறாத பிற ஆசிரியர்களுக்கு பணியிருப்புப் பயிற்சியும் அளிக்கப்படும்.

மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற் பாடங்கள் :

9. மொத்தம் 911 மேல்நிலைப் பள்ளிகளில் 1979–80 ஆம் ஆண்டில் தொழிற் பாடங்கள் கற்றுத்தரப்பட்டன. சில பள்ளிகளில் ஒன்றுக்கு மேற்பட்ட தொழிற்பாடங்கள் இருந்தன.



மேல்நிலைப்பள்ளி முதலாண்டு வகுப்பில் 1,296 தொழிற் பாடங்களும், இரண்டாம் ஆண்டு வகுப்பில் 1,143 தொழிற் பாடங்களும் கற்றுத் தரப்பட்டன.

10. மேல்நிலைப் பள்ளிகளில் 1979–80-ல் பயின்று வந்த 2½ இலட்சம் மாணவர்களில் 21 விழுக்காடு அதாவது, 51,855 பேர்கள் பின்வரும் விவரப்படி தொழிற் பாடங்களை பயின்று வந்தனர்;

| தொழிற் பாடம் எந்த பெரும்பிரிவை சார்ந்தது என்பது. | மேல்நிலைப் பள்ளிகளில் 1979–80-ல் பயின்ற மாணவ மாணவியர். | |
|---|---|---|
| | முதல் ஆண்டு. | இரண்டாம் ஆண்டு. |
| (1) | (2) | (3) |
| 1. வேளாண்மை .. .. .. | 2,063 | 2,930 |
| 2. மனையியல் .. .. .. | 1,845 | 1,650 |
| 3. வாணிகத் துறை .. .. .. | 13,666 | 11,928 |
| 4. பொறியியலும் தொழில் நுட்பவியலும் | 6,624 | 6,830 |
| 5. உடல்நலம் .. .. .. | 2,589 | 1,566 |
| 6. பலவகை .. .. .. | 105 | 59 |
| | 26,892 | 24,963 |

சில உயர்நிலைப் பள்ளிகளில் 1974–75-லிருந்து 8—10 வகுப்புகளில் காம்பிரஹென்சிவ் உயர்நிலைப் பள்ளிப் பாடங்கள் என்ற பெயரில் கற்றுத் தரப்பட்ட சில தொழிற் பாடங்கள் மேல்நிலைப் பள்ளி வகுப்புகளுக்கே பொருத்தமானவை என்று தெரிய வந்ததால் 1980–81 முதல் அப்பாடங்களை (அவற்றின் ஆசிரியர்களுடனும், தளவாடங்களுடனும்) மேல்நிலைப் பள்ளி வகுப்புகளுக்கு மாற்றிவிட ஆணையிடப்பட்டுள்ளது.

11. மேல்நிலைப் பள்ளித் தொழிற் பாடங்களுக்கு ஆன ஆசிரியர் தேவையில் ஒரு பகுதி, முன்னர் உயர்நிலைப் பள்ளிகளில் இருமுனைப் பாடங்களை கற்பித்து வந்த ஆசிரியர்களை மாற்றுவதன் மூலம் நிறைவேற்றப்பட்டது. மேற்கொண்டு தேவைக்கு மாதம் ரூ. 150 ஊதியத்தில் பகுதி நேர தொழிற் பாட ஆசிரியர்களை நியமிக்க ஆணையிடப்பட்டுள்ளது. இந்த பகுதி நேர ஆசிரியர்களுக்கு அவர்கள் நியமனம் ஆன முதலாண்டில் 10 மாதங்களும், இரண்டாம் ஆண்டிலிருந்து ஆண்டு தோறும் 12 மாதங்களும் ஊதியம் தரப்படும். அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் வேலை செய்பவர்களில் பொருத்தமானவர்கள் இருக்குமிடங்களில் அவர்களும், பிற இடங்களில் வெளி நபர்களும் பகுதி நேர தொழிற்பாட ஆசிரியர்களாக நியமிக்கப் படுகின்றனர்.

12. ''படிக்கும்போதே பணம் ஈட்ட வகை செய்தல்'' என்ற கொள்கை அடிப்படையில் உருவாக்கப்பட்ட ''தொழிற் பாட மாணிட்டர்கள்'' திட்டத்தின்கீழ் ஒவ்வொரு மேல் நிலைப் பள்ளியிலும் ஒவ்வொரு தொழிற் பாடத்திற்கும் முதலாண்டு வகுப்புக்கு ஒருவரும், இரண்டாவது ஆண்டு வகுப்புக்கு ஒருவரும் ஆக இருவர் நியமிக்கப்பட்டு அவர்களுக்கு ஆளுக்கு மாதம் ரூ. 20 வீதம் 10 மாதங்களுக்கு ஊதியம் தரப்படுகிறது.

13. தொழிற்பாடங்களைக் கற்றுத்தர தேவையான தளவாடங்களை வாங்க 1979–80-ல் ஒவ்வொரு அரசு/அரசு அல்லாத மேல்நிலைப் பள்ளிக்கும் ரூ. 5,000/2,500 வீதம் செலவுக்கு/ மானியத்துக்கு அரசு ஏற்பளித்தது. கூடுதலாக தேவைப்பட்ட பணத்தை பள்ளிகள் தங்கள் வசதிக் கட்டண நிதியிலிருந்தும் சிறப்புக் கட்டண நிதியிலிருந்தும் எடுத்துச் செலவு செய்து கொள்ளலாம். 1979–80-லிருந்து புதிதாக தொழிற்பாடங்களை தொடங்கிய 152 மேல் நிலைப் பள்ளிகளுக்கு இதுபோன்று தளவாடச் செலவு/மானியத்திற்கு வகை செய்து 1980–81-ல் ரூ. 5.60 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

14. மேல்நிலைப் பள்ளியில் தொழிற்பாடங்களை எடுத்து தேறி வெளி வருபவர்கள் அவர்கள் பயின்ற பாடங்களின் தன்மைக்கேற்ப பட்ட வகுப்புகளிலும், பொறியியல் மற்றும் மருத்துவம் போன்ற வகுப்புகளிலும் சேர அனுமதிக்கப்படுவர்.

கட்டடங்களும் தளவாடங்களும் :

15. 1978–79-ல் தொடங்கிய 407 அரசு மேல்நிலைப் பள்ளிகள் ஒவ்வொன்றுக்கும் ஒரு வகுப்பறையும் ஒரு ஆய்வுக்கூடமும் கட்ட மொத்தத்தில் பெருந்தொகையாகிய ரூ. 6.40 கோடிக்கு அரசு ஏற்பளித்தது. 350 கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு



விட்டன. மற்றவையும் விரைவில் கட்டி முடிக்கப்படும். 1979–80-ல் தொடங்கிய 70 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு இவ்வாறு கட்டடம் கட்டித்தர 1980–81-ல் ரூ. 1.10 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

16. மேற்சொன்ன 407 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கும் தேவையான ஆய்வுக்கூட தளவாடங்களுக்காக மொத்தம் ரூ. 3.86 கோடி செலவுக்கு அரசு ஏற்பு அளித்துள்ளது. 1979–80-ல் புதிதாக தொடங்கிய 70 பள்ளிகளுக்கும் தளவாடங்கள் வழங்க 1980–81-ல் ரூ. 70 இலட்சம் ஏற்பளிக்கப்படும். சிறு தொழில்களை ஊக்குவிக்கும் தமிழ்நாடு அரசு நிறுவனமான ''தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம்'' (சிப்காட்) மூலமாகவே இந்தத் தளவாடங்கள் வாங்கப்படுகின்றன.

17. அரசு அல்லாத (தனியார் மற்றும் உள்ளாட்சி மன்ற) மேல் நிலைப் பள்ளிகள் கட்டடங்கள் கட்டவும், தளவாடங்கள் வாங்கவும் ஆகும் செலவில் 40 விழுக்காட்டை, பள்ளிக்கு ஒரு இலட்சம் ரூபாய் என்ற வரம்புக்குட்பட்டு, மானியமாகத் தரும் திட்டத்துக்கு அரசு ஏற்பளித்துள்ளது. இதுவரை இத்திட்டத்தின்கீழ் மானிய உதவிக்கு சுமார் 300 அரசல்லாத மேல்நிலைப் பள்ளிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. 1980–81-ல் இத் திட்டத்திற்கு ரூ. 1.57 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

18. அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு பெஞ்சு நாற்காலி போன்ற மரச் சாமான்கள் வாங்க 40 விழுக்காடு இணை மானியம் கொடுப்பதற்காக 1980–81-ல் ரூ. 24 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் போன்ற வகைகளில் பொது மக்களிடமிருந்து மீதி 60 விழுக்காடு தொகையை பெற்றுக் கொள்ள வேண்டும்.

19. கல்லூரிகளிலும், பாலிடெக்னிக்குகளிலும் உள்ள ஆய்வுக்கூட வசதிகளை மேல்நிலைப் பள்ளி மாணவர்களும் பயன்படுத்திக் கொள்ள வகை செய்து ''கல்லூரி இணையங்களும்'' ''பாலிடெக்னிக் இணையங்களும்'' அமைக்க அரசு ஏற்பாடு செய்துள்ளது.

நூலக வசதிகள் :

20. மேல்நிலைப் பள்ளிகளில் நூலக வசதியைப் பெருக்க 1979–80-ல் மொத்தம் ரூ. 37 இலட்சம் செலவுக்கு ஏற்பளிக்கப்பட்டது. அரசு மேல்நிலைப் பள்ளி ஒவ்வொன்றுக்கும் ரூ. 6,000 செலவுக்கும் அரசல்லாத மேல்நிலைப் பள்ளி ஒவ்வொன்றுக்கும் (ரூ. 2,400 என்னும் வரம்புக்குட்பட்டு) இணை மானியத்துக்கும் ஏற்பளிக்கப்பட்டது. பள்ளிகள் தரமான புத்தகங்களை தேர்ந்தெடுக்கவும், விரைவில் அவற்றை வாங்கவும், உதவி செய்யும் வகையில் இத்திட்டத்தின் கீழ் வாங்கக் கூடிய பொருத்தமான

புத்தகங்களின் பட்டியல் ஒன்று வல்லுநர் குழு ஒன்றைக் கொண்டு தயாரிக்கப்பட்டு பள்ளிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. 1979-80-ம் ஆண்டு மேல்நிலைப்பள்ளிகளாக உயர்த்தப்பட்ட பள்ளிகளுக்கு நூலக புத்தகங்கள் வாங்க 1980-81ல் ரூபாய் 5·92 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## IV. அரசுத் தேர்வுகள்

அரசுத் தேர்வுத் துறை 1975 பிப்ரவரியில் ஒரு தனித் துறையாக அமைக்கப்பட்டது. அத்துறையின் வேலை அதிகரிக்கவே அன்மை ஆண்டுகளில் அது விரிவாக்கப்பட்டுள்ளது. அது ஆண்டு தோறும் சுமார் 37 பொதுத் தேர்வுகளை நடத்துகிறது. சுமார் 6 இலட்சம் பேர் அத் தேர்வுகளை எழுதுகின்றனர். உயர்நிலைப் பள்ளி இறுதித் தேர்வு (எஸ்.எஸ்.எல்.சி.) ஓரியண்டல் பள்ளி இறுதித் தேர்வு (ஓ.எஸ்.எல்.சி.), ஆங்கிலோ இந்திய பள்ளி இறுதித் தேர்வு (ஏ.ஐ.எஸ்.எல்.சி.), ஆசிரியர் பயிற்சி டிப்ளமோ போன்ற முக்கியமான தேர்வுகள் ஆண்டுக்கு இருமுறை நடைபெறுகின்றன. 1979-80-லிருந்து மேல் நிலை இறுதித் தேர்வையும் எட்டாம் வகுப்புத் தேர்வையும் நடத்தும் பொறுப்பும் இத்துறைக்கு தரப்பட்டுள்ளதால் அதன் பணி மேலும் விரிவாகியுள்ளது.

2. மேற்கண்ட தேர்வுகளோடு மைய அரசு தேர்வாணைக் குழு மைய அரசுப் பணிக்கு நபர்களை தேர்ந்தெடுப்பதற்காக நடத்தும் தேர்வுகளில் சென்னை மையத்தில் நடத்தும் தேர்வுகளையும் இத்துறையே நடத்திட உதவி வருகிறது.

மேல் நிலைப் பள்ளித் தேர்வு :—

3. மேல்நிலைப் பள்ளி இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்கான பொதுத் தேர்வை முதல் முறையாக இத்துறை 1980 ஏப்ரல்—மே மாதங்களில் நடத்த வேண்டி இருந்ததால் இவ்வாண்டு இத்துறைக்கு ஒரு முக்கியமான ஆண்டாக இருந்தது. அத் தேர்வை நல்ல முறையில் நடத்த எல்லா மட்டங்களிலும் மிகுந்த எச்சரிக்கையும் கவனமான யோசனையும் தேவைப்பட்டன.

4. மேல்நிலைப் பள்ளித்தேர்வு முறை பற்றி இயக்குநருக்கு மேல்நிலைப் பள்ளி தேர்வு வாரியம் அறிவுரை கூறுகிறது. கலை, அறிவியல் பாடங்களுக்கும், தொழிற் பாடங்களுக்கும் மாதிரி கேள்வித் தாள்களை தயாரிக்கவும் தேர்வு நடத்துவதற்கான வழிமுறைகளை வகுக்கவும், வல்லுநர் குழுக்கள் பல அமைக்கப்பட்டன. அறிவியல் பாடங்களுக்கும் தொழிற் பாடங்களுக்கும் தேர்வுத் திட்டத்தின்படி பரிசோதனைகள்



கட்டாயமாக மாணவர்கள் செய்ய வேண்டியவையாகும். அந்தந்தப் பள்ளிகளில் இருந்த ஆய்வுக் கூடத் தளவாடங்கள், பிற வசதிகள் ஆகியவற்றை மனதில் கொண்டு அந்தந்த பள்ளிக்கு ஏற்ற வகையில் அகமதிப்பீட்டு முறையில் இந்த பரிசோதனைகளுக்கான மதிப்பெண்கள் போடப்பட்டன. எழுத்துத்தேர்வுகள்—1980 ஏப்ரல்—மே மாதங்களில் நடந்தன. எஸ்.எஸ்.எல்.சி. தேர்வைப் போல விடைத் தாள்கள் பொது மையங்களில் மதிப்பிடப்பட்டன. மதிப்பெண்கள் மின் கணிப்பு (கம்ப்யூட்டர்) மூலம் பட்டியலிட்டு பதிவு செய்யப்பட்டு 30—6—1980 அன்று மேல்நிலைப் பள்ளித் தேர்வு முடிவுகள் வெளியாயின.

5. 1980 ஏப்ரலில் மேல்நிலைப் பள்ளித் தேர்வு எழுதியவர்கள், 1,17,013 பேர்களாவர். (தொழிற்பாட மாணவர்கள் 24,827 பேர் உட்பட). அவர்களுள் 59 விழுக்காட்டினரான 69,946 பேர்கள் தேறினர்.

6. 1980 மார்ச்-ஏப்ரலில் பத்தாண்டு எஸ்.எஸ்.எல்.சி தேர்வு எழுதிய 2,36,606 பேர்களுள் தேறியோர் எண்ணிக்கை 1,36,276, சதவீதம் 57;ஆகும். பழைய பதினோராண்டு எஸ்.எஸ்.எல்.சி. தேர்வை (முன் ஆண்டுகளில் எழுதிவெற்றி பெறாதவர்கள்) 1980 மார்ச்-ஏப்ரலில் எழுதியவர்கள் 14,740 பேர்களாவர்.

7. எஸ்.எஸ்.எல்.சி. தேர்வை பாடம் பாடமாக எழுதித் தேர்ச்சி பெறலாம் என்ற பகுதி முறைத் தேர்வு அமுலுக்கு வந்துள்ளது, ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு பயன் அளிக்கிறது. 16 வயது அடைந்தவர்களும் எட்டாவது தேர்ச்சி பெற்றவர்களும் தனியாக எஸ்.எஸ்.எல்.சி. எழுத அனுமதிக்கப்படுகின்றனர். அரசுத் தேர்வுத் துறை நடத்தும் தொழில் தேர்வுகளுக்கு 10 ஆண்டு எஸ்.எஸ்.எல்.சி தேறியவர்கள் அனுமதிக்கப்படுகின்றனர்.

பிற தேர்வுகள்.

8. இத்துறை நடத்தி வரும் பிற தேர்வுகளில் முக்கியமானவை ஆங்கிலோ-இந்திய பள்ளி இறுதித் தேர்வு (1976 ஏப்ரலில் இருந்து), மெட்ரிகுலேஷன் தேர்வு (1979 மார்ச்சில் இருந்து), ஆசிரியர் பயிற்சிப் பட்டயப்படிப்பு (டிப்ளமா), மரவேலை, நெசவு, தையல் வேலை போனற தொழில் நுட்ப தேர்வுகள் ஆகியவையாகும்.

இ.எஸ்.எல்.சி தேர்வு.

9. 14 வயது முடிந்தவர்கள் தனிப்பட்ட முறையில் கலந்து கொள்ளும் வகையில் தொடக்கப்பள்ளி இறுதி பொதுத் தேர்வு (இ.எஸ்.எல்.சி.) மீண்டும் நடத்தப்படுகிறது. 1980

[1980 ஜூலை 12

பிப்ரவரியில் நடந்த இத்தேர்வில் சுமார் 2,600 பேர் கலந்து கொண்டனர். பள்ளிகளை விட்டு இடையில் நின்று விட்டவர்கள் தாமாகப் படித்தோ, தனிப் பயிற்சி பெற்றோ தங்கள் கல்வித் தகுதியை வளர்த்துக் கொள்ள இத்திட்டம் உதவும்.

## முதியோர் கல்வியும் பள்ளி சாராக் கல்வியும்

முதியோர் கல்விக்கும் பள்ளி சாராக் கல்விக்கும் 1980—81 நிதி நிலை அறிக்கையில் கூடுதல் நிதி ஒதுக்கம் அதாவது ரூ 164 இலட்சம் செய்யப்பட்டுள்ளது.

2. 1971 ஆம் ஆண்டு மக்கட் தொகை கணக்கின்படி தமிழ்நாட்டில் 39.39 விழுக்காட்டினர் (ஆண்களில் 51.68 விழுக்காட்டினரும் பெண்களில் 26.83 விழுக்காட்டினரும்) எழுதபடிக்கத் தெரிந்து இருந்தனர். அக்கணக்கின்படி அனைத்திந்தியாவிலும் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் விழுக்காடு 29.34 ஆகும் (ஆண்கள் 39.51 விழுக்காடு, பெண்கள் 18.44 விழுக்காடு) தமிழ்நாட்டில் 1971 ஆம் ஆண்டு மக்கட் தொகை கணக்கின்படி இருந்த 4.12 கோடி மக்களுள் 1.63 கோடி பேரே எழுதப் படிக்கத் தெரிந்து இருந்தனர்.

3. மொத்த மக்கள் தொகையில் இருந்து 5 வயதுக்கு குறைந்த குழந்தைகள் எண்ணிக்கையை நீக்கிவிட்டு திருத்திய எழுத்தறிவு விகிதம் கணக்கிடப்படுகிறது. அப்படி கணக்கிட்டால் 1971 மக்கள் தொகை கணக்கின்படி தமிழ்நாட்டில் எழுத்தறிவு பெற்றவர்கள் விழுக்காடு 45.40 சதவிகிதம் (ஆண்களில் 59.54 சதவிகிதம், பெண்களில் 3.92 சதவிகிதம் அனைத்திந்தியாவிலும் 34.55 சதவிகிதம் (ஆண்களில் 45.95 சதவிகிதம்) பெண்களில் 21·97 சதவிகிதம்) ஆகும்.

4. முதியோர் கல்வி முயற்சிகள் இதற்கு முன் எப்போதும் இராத அளவுக்கு மும்முரமாக இப்போது இம்மாநிலத்தில் நடைபெற்று வருகின்றன. பின்வரும் பலவகைத் திட்டங்களின் கீழ் மொத்தம் 13.000 மையங்களில் 4 இலட்சம் பேர்களுக்கு முதியோர் கல்வி அளிக்கப்படுகிறது.

### (1) கிராமப்புர (தொழிற்சார்ந்த) எழுத்தறிவுப் பணி

தேசிய முதியோர் கல்வித் திட்டத்தின் கீழ் இத்திட்டத்திற்கு மைய அரசு முழுப்பண உதவி அளிக்கிறது. இம் மாநிலத்தில் இத்திட்டத்தின் கீழ் 3.600 மையங்கள் செயல்படுகின்றன. சென்னை, கோயம்புத்தூர், கன்னியாகுமரி, நீலகிரி தவிரப் பிற மாவட்டங்களில் மாவட்டத்திற்கு 300



1980 ஜூலை 12]

மையங்கள் வீதம் இம்மையங்களில் பயன்பெறும் முதியோர் சுமார் 1,07,000 ஆவர். ஒரு மாவட்டத்துக்கு ஆண்டுக்கு ரூ. 5.9 இலட்சம் வீதம் மைய அரசு மானியம் தருகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் கிராமப்புற பகுதிகளில் அருகருகே உள்ள மூன்று அல்லது (அபூர்வமாக) நான்கு ஊராட்சி ஒன்றியங்களுக்குள்ளாக இந்த 300 மையங்களும் செயல்படுகின்றன. 30 மையங்களுக்கு ஒரு மேற்பார்வையாளர் உள்ளார். அந்தந்த வட்டாரத்திலுள்ள வேலைவாய்ப் பற்ற பட்டதாரி ஆசியர்கள் அல்லது பட்டதாரிகளிடையே யிருந்து மேற்பார்வையாளர்கள் நியமிக்கப்படுகின்றனர். ஒவ்வொரு மையத்திலும் முதியோருக்கு கல்வி புகட்டுபவர்கள் அங்கு பகல் நேரத்தில் முறையான பள்ளி ஆசிரியர்களாக செயல்படுபவர்கள். வகுப்புகள் 10 மாதம் நடக்கின்றன. அந்தந்த இடத்துக்கு வசதியான நேரங்களில் இம்முதியோர் கல்வி வகுப்புகள் நடக்கின்றன.

### (2) மாநில அரசுத் திட்டம்.

இம்மாநிலத்தில் தன்நிறைவுத் திட்டத்தின் கீழ், தேர்ந்தெடுக்கப்பட்ட 61 ஊராட்சி ஒன்றியங்களிலும் 1980. சனவரி, பிப்ரவரி முதல் இவ்வரசு தன் பணத்திலிருந்து ஒரு முதியோர் கல்வித் திட்டத்தை அமுலாக்கி வருகிறது. ஒரு ஒன்றியத்திற்கு 100 மையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. நிருவாகம், மேற்பார்வைக்கு தனிப் பணியாளர் நியமிக்கப்பட்டுள்ளனர். பயிற்சிபெற்று வேலைவாய்ப்பின்றியுள்ள ஆசிரியர்கள், எஸ்.எஸ்.எல்.சி. தேறி வேலைவாய்ப்பின்றியுள்ள இளைஞர்கள், பால்வாடி ஆசிரியர்கள், சிவில் இராணுவ பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்கள் மகளிர் மன்ற உறுப்பினர்கள், முறையான பள்ளி ஆசிரியர்கள் ஆகியோரிலிருந்து நியமிக்கப்படுபவர்கள் இந்த 6,100 மையங்களிலும் முதியோருக்கு கல்வி புகட்டுகின்றனர். இம்மையங்களில் சுமார் 55 விழுக்காடு பெண்களுக்காகவென்றே தொடங்கப்பட்டுள்ளன. வேறு பலவற்றில் ஆண்களும் பெண்களும் பொதுவாக பயில்கின்றனர். இத்திட்டத்திற்கு ஒரு ஒன்றியத்துக்கு ரூ. 1.64 லட்சம் செலவாகிறது. 61 ஒன்றியங்களுக்கும் சேர்த்து ரூ. 1.24 கோடி செலவாகும். மொத்தம் 2 இலட்சம் முதியோர் இதனால் பயன்பெறுவர்.

### (3) தனியார் அமைப்புகள்.

தமிழ்நாட்டில் தனியார் அமைப்புக்கள் 32 முதியோர் கல்விப் பணிக்காக மைய அரசினால் அனுமதிக்கப்பட்டுள்ளன. அவை சுமார் 67,500 பேர் பயிலும் சுமார் 1,710 மையங்களை நடத்தி வருகின்றன. முதியோர் கல்வி புகட்டுவதற்கு என்று

[1980 ஜூலை 12

ஆகும் செலவு முழுவதையும் நிருவாகச் செலவில் 75 விழுக்காட்டையும் மைய அரசு ஏற்க இசைந்துள்ளது. இதுவரை இந்தத் தனியார் அமைப்புகளுக்கு மைய அரசு ரூ. 31 இலட்சம் மானியம் தந்துள்ளது.

(4) பிற திட்டங்கள்.

பிற திட்டங்களின்கீழ் நடக்கும் முதியோர் கல்விப் பணி பற்றிய தோராயமான விவரங்கள் வருமாறு:—

| திட்டம். | முதியோர் கல்வி மையங்கள். |
|---|---|
| கல்லூரி மாணவர்கள் .. .. | 1,220 |
| நேரு இளைஞர் நிலையங்கள் .. .. | 280 |
| குழந்தை நல நிலையங்கள் .. .. | 299 |

5. மைய அரசின் முழுப்பண உதவியோடு முதியோர் கல்விக்காக மாநில அளவிலும் மாவட்ட அளவிலும் கூடுதலாக பணியாளர்கள் நியமிக்கப்பட்டு முதியோர் கல்விப் பணி நிருவாகம் செம்மைப்படுத்தப்பட்டுள்ளது. மாவட்டங்களில் மாவட்டக் கல்வி அலுவலர் தரத்தில் மாவட்ட முதியோர் கல்வி அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். மாநில அளவில் இணை இயக்குநர் ஒருவர், துணை இயக்குநர் ஒருவர் உதவி இயக்குநர் ஒருவர், அலுவலகப் பணியாளர்கள் ஆகியோர் பதவிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

1980—81-ல் செயல்படுத்தவிருக்கும் பிற திட்டங்கள்.

6. பல்வேறு எழுத்தறிவிப்புத் திட்டங்களின்கீழ் பலர் அண்மையில் எழுத்தறிவு பெற்றுள்ளனர். அவர்களுக்கு பயன்படத்தக்க எளிய நடையுள்ள வெளியீடுகளை தயாரித்து வெளியிடுவது அவசியம். இப்பணியில் தேர்ந்தவர்களைக் கொண்டு வேளாண்மை, சிறு தொழில்கள், உடல் நலம் போன்ற பிறதுறை வல்லுநர்களுடைய ஒத்துழைப்பையும் பெற்று வெளியீடுகளை பள்ளிசாராக் கல்வி இயக்குநர் தயாரித்து வெளியிடுவார். இதற்காக ரூ. 3 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. முதியோர் கல்வி மையங்கள் பயன்படுத்தத் தக்க பயிற்றும் கருவிகள், செயல்முறை விளக்க சாதனங்கள் போன்றவற்றை தயாரிக்க ஆசிரியர்களுக்குப்



1980 ஜூலை 12]

பயிற்சி முகாம்களும் கருத்தரங்குகளும் நடத்த கருதப்பட்டுள்ளது. இதற்காக 1980—81-ல் ரூ. 2.63 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

7. 1980—81-ல் 600 உயர்நிலைப் மேல்நிலைப் பள்ளிகளில் முதியோர் கல்வி/பள்ளிசாராக் கல்வி மையங்களை தொடங்க ஒரு திட்டம் உள்ளது. ஒவ்வொரு பள்ளிக்கும் ரூ. 500 அரசு மானியம் தரப்படும். அந்தந்தப் பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் கழகம் ரூ. 500 தர வேண்டும். பள்ளிகளில் உள்ள இட வசதிகளையும் பிறவசதிகளையும் பயன்படுத்திக் கொண்டு முதியோர் கல்வி/பள்ளிசாராக் கல்வி வழங்கப்படும்.

பள்ளிசாராக் கல்வி.

8. பள்ளிசாராக் கல்வி மையங்கள் 1976—77-ல் 374 ஊராட்சி ஒன்றியங்களிலும், ஒன்றியத்திற்கு 1 வீதம் தொடங்கப்பட்டன. அவற்றின் எண்ணிக்கை 1977—78 முதல் 2 ஆகவும், 1978—79-ல் 4 ஆகவும் உயர்த்தப்பட்டது. இம்மையம் ஒவ்வொன்றும் 3 ஆண்டு வேலை செய்யும். 10 மாத வகுப்புகள் மூன்றை நடத்தும். —ஒவ்வொன்றும் ஒரு புதிய தொகுதி மாணவர்களுக்காக, இத்திட்டத்தின்கீழ் 1976-77-ல்—தொடங்கிய மையம் 3 ஆண்டு பணி செய்து முடித்துவிட்டது. இம்மையங்கள் அனைத்திலும் இப்பொழுது பயில்வோர் சுமார் 49,488 பேர்கள் ஆவர். ஊராட்சி ஒன்றியப் பள்ளிக் கட்டடங்களில் இவ்வகுப்புகள் நடக்கின்றன. பள்ளி ஆசிரியர்களே பள்ளிசாராக் கல்வி வகுப்புகளை மாலையில் இரண்டு மணி நேரம் நடத்துகின்றனர். இதற்கு திங்கள் ஒன்றுக்கு ரூ. 50 மதிப்பூதியம் பெறுகின்றனர். (அரசு நடத்தும் மேற்சொன்ன பள்ளிசாராக் கல்வி மையங்களோடு ஊராட்சி ஒன்றியங்களும் தங்கள் பணத்திலிருந்து சுமார் 992 பள்ளிசாராக் கல்வி மையங்களை நடத்தி வருகின்றன).

9. 1980—81-ல் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் புதிதாக இரண்டு பள்ளிசாராக் கல்வி மையங்கள் தொடங்கப்படும்.

10. நகர்ப்புறங்களில் பள்ளிசாராக் கல்வி திட்டங்கள் இன்னும் நல்ல முறையில் தொடங்கவில்லை. எனவே 1980—81-ல் மொத்தம் ரூ. 3 இலட்சம் செலவில் நகராட்சிப்பகுதிகளில் சுமார் 200 பள்ளிசாராக் கல்வி மையங்கள், தொடக்க முயற்சியாக துவங்கப்படவிருக்கின்றன.

## V கல்லூரிக் கல்வி.

தமிழ்நாட்டில் கலை, அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரிகளின் எண்ணிக்கை 1947-ஆம் ஆண்டில் 24 ஆக இருந்தது தற்பொழுது 187 ஆக உயர்ந்துள்ளது. கல்லூரிகளில் படித்த மாணவர்களின் எண்ணிக்கை 1947-ல் 17,000 என இருந்தது. 1979–80-ல் 1,36,000 ஆக இருந்தது. 1978–79-ல் கல்லூரி மாணவர் எண்ணிக்கை 2 இலட்சம் ஆக இருந்தது. புகுமுக வகுப்பு நீங்கியதால் 1979–80 முதல் அவ்வெண்ணிக்கை 80,000 அளவுக்குக் குறைந்திருக்க வேண்டுமெனினும், கல்லூரிகளில் புதியதாகப் பல பட்டப்படிப்புகள் தொடங்கப்பட்டு கூடுதலாக மாணவர்கள் பட்ட வகுப்புகளில் சேர்ந்ததால் 197!–80ல் கல்லூரி மாணவர் எண்ணிக்கை முன் ஆண்டைவிட 65,000 அளவுக்கே குறைந்தது. பிறவகைக் கல்லூரிகள் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் 23-ம் வேறு கல்லூரிகள் 23-ம் உள்ளன. கல்லூரிகளில் படித்து வந்த மாணவர்கள், பணியாற்றிய ஆசிரியர்கள் எண்ணிக்கை ஆகியவை இணைப்பில் தரப்பட்டுள்ளன.

### புதிய பல்கலைக் கழகங்கள்.

2. தற்போது 187 கலை, அறிவியல் கல்லூரிகளில் 110 கல்லூரிகள் சென்னைப்பல்கலைக்கழகத்துடனும், 77 மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்துடனும், இணைந்தவை. அண்ணாமலைப் பல்கலைக் கழகம் ஒற்றை வகையைச் சார்ந்தது. பல்கலைக்கழகம் ஒன்றுடன் 30 அல்லது 40-க்கு மேற்பட்ட கல்லூரிகள் இணைக்கப் பெற்றிருத்தல் கூடாது என பல்கலைக் கழகங்கள் பற்றிய கசேந்திர கட்கர் குழு பரிந்துரை செய்துள்ளது. எனவே இம்மாநிலத்தில் மேலும் சில பல்கலைக் கழகங்களை நிறுவுவது இன்றியமையாதது என்பது தெளிவாகும்.

3. திருச்சிராப்பள்ளியில் ஒன்றும் கோயம்புத்தூரில் ஒன்றுமாக இரண்டு புதிய பல்கலைக் கழகங்களை நிறுவ பல்கலைக் கழக மானியக் குழு இசைவு அளித்துள்ளது. இப்புதிய பல்கலைக் கழகங்களை அமைப்பதற்கான சட்ட வரைவு விரைவில் கொண்டு வரப்படும்.

4 இப்புதிய பல்கலைக் கழகங்கள் அமைவதன் மூலம் கல்லூரிக் கல்வியின் தரம் உயர்வதோடு பல்வேறு ஆராய்ச்சிப் பணிகளும் ஊக்குவிக்கப்படும், இப்பல்கலைக் கழகங்களுக்கான தொடக்க நிதி ஒதுக்கமாக 1980–81ல் பல்கலைகழகத்துக்கு ரூபாய் 1 இலட்சம் வீதம் ஒதுக்கப்பட்டுள்ளது.



5. ஏற்கனவே அறிவித்துள்ளபடி காரைக்குடியில் ஒரு பல்கலைக் கழகம் நிறுவ இவ்வரசு பல்கலைக்கழக மானியக் குழுவின் ஒப்புதலைக் கோரும்.

6. அரசு முடிவு செய்துள்ளவாறு தமிழ்ப் பல்கலைக்கழகம் அமைப்பது பற்றி அரசுக்கு ஆலோசனை கூற வல்லுநர் குழு ஒன்று அமைக்கப்படும்.

### தன்னுரிமையுள்ள கல்லூரிகள்.

7. கல்லூரிகளுக்கு சுய ஆட்சி உரிமை தரப்பட்டுள்ள முதல் மாநிலம் தமிழ்நாடுதான். சென்னைப் பல்கலைக் கழகத்தின் கீழுள்ள 6 கல்லூரிகளும், மதுரை காமராஜ் பல்கலைக்கழகத்தின் கீழுள்ள 4 கல்லூரிகளும் ஆக மொத்தம் 10 கல்லூரிகளுக்கு இவ்வுரிமை தரப்பட்டு அதன் மூலம் கல்வித்தரம் உயர வகை செய்யப்பட்டுள்ளது. அக்கல்லூரிகளுக்கு தன்னுரிமை தர வகைசெய்து சென்னை மற்றும் மதுரை காமராஜ் பல்கலைகழகச் சட்டங்கள் திருத்தப்பட்டுள்ளன. அக்கல்லூரிகள், தாமே பாடத் திட்டங்களை வகுக்கவும், தேர்வு நடத்தவும் உரிமை பெற்றவை. எனினும் பட்டங்களை அந்தந்தப் பல்கலைக் கழகங்களே வழங்கும். உத்தரப் பிரதேச அரசுக் கல்வித்துறை அதிகாரிகள் நால்வரைக் கொண்ட குழு ஒன்று இவ்வாண்டு இங்கு வந்து இம்மாநிலத்தில் தன்னுரிமையுள்ள கல்லூரிகள் செயல்படும் முறையைக் கண்டறிந்து திரும்பியுள்ளனர்.

### தொடர் கல்வி.

8. பகல் நேர வகுப்புகளைத் தவிர 30 கல்லூரிகளில் மாலை நேர வகுப்புகளும் நடத்தப்பட்டு வருகின்றன. இம்மாலை நேர வகுப்புகளில் பயில்வோர்கள் சுமார் 6,000 பேராவர். மாலை நேரக் கல்லூரிகளில் பட்ட மேற்படிப்பு வகுப்புகளுட்பட பல்வகைப் படிப்புகளும் கற்றுத்தரப்படுகின்றன. பட்ட மேற்படிப்பு வகுப்புகளுள்ள மூன்று அரசுக் கல்லூரிகளில் 1978–79லும், மேலும் ஒரு கல்லூரியில் 1980–81 லும் எம்.எஸ்.சி. செயல் முறை வகுப்புகளை மாலையில் நடத்த வசதி செய்யப்பட்டுள்ளது. இவ்வசதியைப் பயன்படுத்தி உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் தனிப்பட்ட முறையில் எம்.எஸ்.சி. தேர்வு எழுத தகுதி பெற்றுக் கொள்ளலாம். 1979–80 லிருந்து மார்க்சிய சிந்தனையில் ஒன்றும், பகுத்தறிவு சிந்தனையில் ஒன்றுமாக இரண்டு சான்றிதழ்ப் படிப்புகளை மதுரை காமராஜ் பல்கலைக்கழகம் தொடங்கியுள்ளது.

9. மதுரை காமராஜ் பல்கலைக்கழகம் புகுமுக வகுப்பு, பி.ஏ. பி. காம்., பி.ஜி.எல். பிஎட்., எம்.ஏ., எம்.காம்., வகுப்புகளுக்கு அஞ்சல் வழிப்பாட முறைகளை நடத்தி வருகிறது. இந்த அஞ்சல்முறை வகுப்புகளைப் பலரும் விரும்பிப் படிக்கின்றனர். இவற்றை நடத்தி வரும் இப்பல்கலைக் கழகத் துறையைத் தொடங்கி எட்டு ஆண்டுகள் ஆகின்றன. 1979–80-ல் 45,633 பேர்கள் இவ் வகுப்புகளில் படித்து வந்தனர்.

10. மதுரை காமராஜ் பல்கலைக் கழகம் ''அனைவரும் படிக்கத்தக்க பல்கலைக் கழக வகுப்புகளையும்'' தொடங்கியுள்ளது. இந்தியக் குடிமக்களுள் தமிழ்நாட்டிலும் பாண்டிச்சேரியிலும் வசிப்பவர்களும் 21 வயதுக்கு மேற்பட்டவர்களுமான எவர் வேண்டுமானாலும் இந்த வகுப்பில் சேரலாம். இவ்வகுப்பு தொடங்கி மூன்றாவது ஆண்டான 1979–80-ல் 9,685 பேர்கள் பயின்றனர்.

11. அண்ணாமலைப் பல்கலைக்கழகமும் 1979–80-ல் பி.எட்., பி.காம்., சட்டப்படிப்பு ஆகிய அஞ்சல் முறைப் பாடங்களைத் தொடங்கியுள்ளது. அவ்வாண்டு அப்படிப்பில் சேர்ந்தவர்கள் 6,847 பேர்களாவர். 1980–81 லிருந்து வேறு பல வகுப்புகளுக்கும் அப்பல்கலைக்கழகம் அஞ்சல் முறை வகுப்புகளைத் தொடங்கியுள்ளது.

12. இம்மாநிலத்தில் கலை, அறிவியல் கல்லூரிகளின் தேவைக்கு இப்பொழுது உள்ள 187 கல்லூரிகள் போதுமானவையாகும். சில குறிப்பிட்ட நகர்ப்புற கல்லூரிகளில் சேருவதற்கே மாணவர்கள் நெருக்கி முன்வருகின்றனர். ஆனால் கிராமப் புறப் பகுதிகளிலுள்ள கல்லூரிகளில் இப்பொழுது பல இடங்கள் காலியாக இருந்து வருகின்றன. 1979–80-ம் ஆண்டில் இம்மாநிலத்தில் உள்ள கல்லூரிகளில் 11,297 இடங்கள் (ஆங்கிலப் பாட மொழி-8,524, தமிழ்ப்பாடமொழி—2,773) காலியாக இருந்தன. எனவே மிகச் சிறப்பான காரணங்கள் இருந்தாலொழிய புதிய கல்லூரிகளைத் தொடங்க அனுமதிப்பதைவிட தற்போதுள்ள கல்லூரிகளில் உள்ள இடங்கள் அனைத்தையும் பயன்படுத்த வகை செய்வதே ஏற்புடைத்தாகும்.

## கல்வித் தரம் மேம்பாடு.

13. கடந்த சில ஆண்டுகளாக அரசுக் கல்லூரிகளில் கல்வித் தர மேம்பாட்டுக்கே முதன்மை அளிக்கப்படுகிறது. அரசுக் கல்லூரிகளில் பட்ட, மற்றும் பட்ட மேற்படிப்பு வகுப்புகளில் கூடுதலாக 18 புதிய படிப்புகளைத் தொடங்க 1978–79-லும் 51 புதிய படிப்புகளை (46 பட்டப்படிப்புகளும் 5 பட்ட மேற்படிப்பு வகுப்புகளும்) தொடங்க 1979–80-லும் ஏற்பளிக்கப்



பட்டது. 1980–81-ல் புதிய பட்ட வகுப்புகளைத் துவக்க ரூ. 7 லட்சமும், புதிய பட்ட மேற்படிப்பு வகுப்புகளைத் துவக்க ரூ. 3 லட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளன. சென்னையில் உள்ள மாநிலக் கல்லூரி ஒரு பட்ட மேற்படிப்பு ஆராய்ச்சி நிலையமாக உயர்த்தப்படும்.

14. அறிவியல் கல்வியை வளர்த்திட அரசுக் கல்லூரிகளில் ஆய்வுக்கூட வசதிகள் பெருக்கப்படுகின்றன. இதற்காக 1977–78-ம் ஆண்டில் ரூ. 5 லட்சமும், 1978–79-ல் ரூ. 6 லட்சமும் ஒதுக்கப்பட்டன. 1980–81-ல் ரூ. 10 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. அரசுக் கல்லூரிகளில் மாணவர்கள் பண்படுத்திட பாட புத்தகங்களைக் கொண்ட புத்தக நூலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

15. கல்லூரி மாணவர்கள் வசதிக்காக உணவருந்தும் இடம், சிற்றுண்டிச்சாலை, மிதி வண்டி நிறுத்துமிடம் ஆகியவை படிப்படியாக அமைக்கப்படுகின்றன. கடந்த மூன்று ஆண்டுகளில் இவ்வகையில் அரசுக் கல்லூரிகளுக்கு ரூ. 13 லட்சமும், தனியார் கல்லூரிகளுக்கு ரூ. 5 லட்சமும் செலவிட ஏற்பளிக்கப்பட்டது. அரசுக்கல்லூரிகளில் விளையாட்டுத் திடல்களை மேம்படுத்தவும் விளையாட்டுக்கருவிகள் வாங்கவும் 1979–80-ல் ரூ. 2 லட்சம் ஏற்பளிக்கப்பட்டது.

16. அரசுக் கல்லூரிக் கட்டடங்கள், மாணவர் விடுதி கட்டடங்கள் ஆகியவற்றுக்காக 1980–81-ல் ரூ. 32 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. (புதிய வேலைகளுக்கான ரூ. 25 லட்சமும், முன் ஆண்டுகளில் ஏற்பளிக்கப்பட்டு முடிவு பெறாமல் உள்ள கட்டட வேலைகளுக்கு 1980–81-ல் ஆகும் செலவுக்காக ரூ. 7 லட்சமும்). அரசுக் கல்லூரிகளில் ஆசிரியைகளுக்கு குடியிருப்புகள் கட்டித்தர 1979–80-ல் ரூ. 2 லட்சம் ஏற்பளிக்கப்பட்டது.

17. கல்லூரிகளில் வசதிகளைப் பெருக்கிட ஆகும் செலவில் ஒரு பகுதியை கல்லூரி நிருவாகம் ஏற்குமானால் மற்றப் பகுதியை ஈடுகட்ட பல்கலைக் கழக மானியக் குழு நிதி உதவி செய்கிறது. கட்டடச் செலவானால் 50 விழுக்காட்டையும், புத்தகம், தளவாடம், விளையாட்டுத் திடல் மேம்பாடு ஆகிய இனங்களானால் 25 விழுக்காட்டையும் நிருவாகம் ஏற்கவேண்டும். இத்திட்டத்தின்கீழ் பல்கலைக்கழக மானியக் குழுவிடமிருந்து 43 அரசுக் கல்லூரிகள் பண உதவி பெற வகை செய்து அதற்கான மாநில அரசுப் பங்குத் தொகைக்கு அரசு ஏற்பளித்துள்ளது.

18. கல்லூரி ஆசிரியர் கல்வித்தர உயர்வுக்கான பல்கலைக் கழக மானியக் குழுவின் திட்டத்திற்கு இவ்வரசு ஏற்பளித்துள்ளது. இத் திட்டத்தின் கீழ் ஆராய்ச்சிப் படிப்புக்குச் செல்லும் ஆசிரியர்களின் சம்பளச் செலவை மாநில அரசும், அவர்களுக்குப் பதிலாக நியமிக்கப்படுபவர்களுடைய சம்பளச் செலவை பல்கலைக் கழக மானியக் குழுவும் ஏற்கின்றன.

[1980 ஜுலை 12

19. இது தவிர மாநில அரசே செயல்படுத்தும் தர உயர்வுத்
திட்டம் ஒன்றும் உள்ளது. கல்லூரிகளிலிருந்து புகுமுக வகுப்பு
நீங்கி விட்டதால் உபரியான ஆசிரியர்களுள் தெரிந்தெடுக்கப்
பட்டவர்கள் எம்.பில், படிப்புக்கு அனுப்பப்படுகின்றனர்.
அவர்களுக்கு அரசு சம்பளம் தருகிறது. 1979–80-ல் 494
ஆசிரியர்கள் இவ்வாறு எம்.பில். படிப்புக்கு அனுப்பப்பட்டனர்.

20. பல்வேறு துறைகளில் ஆராய்ச்சி செய்து டாக்டர்
(பிஎச்.டி.) பட்டம் பெறுவதற்காக அரசுக் கல்லூரிப் பேராசிரி
யர்கள் முகாமையில் அனுப்பப்பட்டு வருகின்றனர். 1973–74
முதல் இத்திட்டத்தின் கீழ் 29 பேர் டாக்டர் நிலை ஆராய்ச்சி
காக அனுப்பப்பட்டுள்ளனர்—1979–80-ல் அனுப்பிய எழுவர்
உட்பட. கருத்தரங்குகளிலும் மறு பயிற்சி வகுப்புகளிலும்
கலந்துகொள்ள ஆசிரியர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர்.

21. கல்லூரி ஆசிரியர்களுள் சிறந்த பணியாற்றுபவர்களை
போற்றுவதற்காக 1979–80 முதல் கல்லூரி ஆசிரியர்களுக்கும்
மாநில அரசு விருதளிக்கும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.
இத்திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் கல்லூரி ஆசிரியர்கள்
10 பேருக்கு விருதளிக்கப்படும். ஆளுக்கு ரூ. 1,000 ரொக்கப்
பரிசு, வெள்ளிப் பதக்கம், சான்றிதழ் ஆகியவை அளிக்கப்படும்.

## படிப்புதவித் தொகையும் பயிற்சி உதவிப் பணமும்

22. படிப்புதவித் தொகைத் திட்டங்களுள் மிக முக்கிய
மானவை வருமாறு.—

| திட்டம். | 1979–80-ம் ஆண்டில் புதிதாக தந்த படிப்புதவித் தொகைகள் எண்ணிக்கை. | 1979–80-ம் ஆண்டில் (புதியவை மற்றும் புதுப்பிக்கப் பட்டவை) மொத்த எண்ணிக்கை. | 1980–81-ம் ஆண்டில் வரவு—செலவு மதிப்பீட்டில் ஒதுக்கியுள்ள பணம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | | (ரூபாய் லட்சத்தில்) |
| தேசிய படிப்புதவித் தொகைத் திட்டம். | 1,524 | 3,880 | 32 |
| தேசிய கடன் படிப்புதவித் தொகைத் திட்டம். | 1,445 | 6,719 | 40 |
| பள்ளி ஆசிரியர்களது பிள்ளைகளுக்குரிய தேசிய படிப்புதவித் தொகை. | 70 | 202 | 2 |



980 ஜுலை 12]

978–79 முதல் தமிழ்நாட்டில் மேல்நிலைப் பள்ளிக் கல்வி
முதலாண்டு வகுப்பு தொடங்கப்பட்டுள்ளதால் அவ்வாண்டு
முதல் மேற்கண்ட திட்டங்கள் மேல்நிலைப் பள்ளி வகுப்பு
களுக்கும் விரிவாக்கப்பட்டுள்ளன.

23. 1978–79-ம் ஆண்டின் இறுதியில் தேசியப் படிப்புதவித்
தொகை, பள்ளி ஆசிரியர்களுடைய குழந்தைகளுக்கு வழங்கப்
படும் தேசிய படிப்புதவித் தொகை ஆகிய இரண்டு திட்டங்களின்
கீழ் என்ன அளவுக்குச் செலவாகி வந்ததோ அந்த அளவு செலவை
மாநில அரசே 1979–80 முதல் ஏற்று வருகிறது. அந்த
அளவுக்கு மேல் கூடுதலாக ஆகும் செலவை மட்டுமே 1979–80-
லிருந்து மைய அரசு ஏற்று வருகிறது. தேசிய கடன் படிப்
புதவித் தொகையின் செலவு முழுவதையும் அவ்வரசு ஏற்று
வருகிறது. விடுதலைப் போர் வீரர்கள் குழந்தைகள், பணி
யிலிருக்கும் பொழுது இறந்துவிடும் அரசுப் பணியாளர் குழந்
தைகள், மற்றும் பர்மா, இலங்கை, வியட்நாம், உகண்டா,
ஜாயிரே அகதிகளின் குழந்தைகள், போன்றவர்களுக்கான படிப்
புதவித் தொகைத் திட்டங்களும் உள்ளன. தாழ்த்தப்பட்ட
சாதியினர், பழங்குடிகள் மற்றும் பின்தங்கிய வகுப்புகளைச்
சார்ந்த மாணவர்கள் அரிசன நலத்துறை, பிற்பட்டோர் நலத்
துறை ஆகிய துறைகளிலிருந்து படிப்புதவித் தொகைகள்
பெற்று வருகின்றனர்.

24. ஆண்டுதோறும் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி
மாணவர்களுள் மேல் நிலை பள்ளித் தேர்வில் 60 சதவீதம்
அல்லது அதற்கு மேலாக மதிப்பெண் பெறுபவர்களுக்கு அவர்கள்
மேல் படிப்பில் சேர உதவுவதற்காக ரூ. 300 உதவிப் பணம்
வழங்கப்படுகிறது. அப்பிரிவினைச் சார்ந்த கிறித்தவர்களுக்கும்
இவ்வுதவிப் பணம் உண்டு. பெற்றோர் வருமானம் எவ்வள
வாயிருப்பினும் இவ்வுதவிப் பணம் உண்டு. தாழ்த்தப்பட்ட
சாதியினர், பழங்குடிகள் என்ற வகையில் அவர்களுக்குக் கிட்டும்
மற்றெல்லாச் சலுகைகளுக்கும் பண உதவிகளுக்கும் மேலாக
இந்த உதவி கிட்டும்.

25. 1977–78-லிருந்து பட்ட வகுப்புகளில் பயிலும் தாழ்த்தப்
பட்ட சாதியினர் பழங்குடிகள் ஆகியோருக்கு அவர்களுடைய
பெற்றோர் ஆண்டு வருமானம் எவ்வளவாயிருப்பினும் முழுச்
சம்பளச் சலுகை அளிக்கப்பட்டு வருகிறது.

## கல்லூரிகளில் தமிழ்ப்பயிற்று மொழி.

26. 1966–67 ஆம் ஆண்டிலிருந்து புகுமுக வகுப்பில் கலைப்
பாடங்களில் தமிழும் பயிற்று மொழியாக ஆனது. 1967–68-ம்
ஆண்டிலிருந்து பி. ஏ., வகுப்பிலும், 1968–69ஆம் ஆண்டிலிருந்து
புகுமுக வகுப்பில் அறிவியல் பாடங்களிலும், 1969–70ஆம்
ஆண்டிலிருந்து பி.எஸ்.சி., வகுப்பிலும் தமிழ் பாட மொழியாக

ஆனது 1979—80-லிருந்து மேலூரிலுள்ள அரசு கலைக்
கல்லூரியில் வரலாறு எம். ஏ. வகுப்பில் தமிழ் பாட மொழி
ஆக்கப்பட்டுள்ளது. தமிழ்ப் பயிற்று மொழியை ஊக்குவிக்கும்
முறையில் பி.ஏ., பி. எஸ். சி., வகுப்புகளில் பயிலும் மாணவர்
கள் ஒவ்வொருவருக்கும் ஊக்க உதவிப் பணம்/புத்தகப்படியாக
ஆண்டுக்கு ரூ. 180 தரப்பட்டு வருகிறது. புகுமுக வகுப்பு
மாணவர்களுக்கு புத்தகப்படியாக ஆண்டுக்கு ரூ. 50
தரப்பட்டு வந்தது. 1975—76 முதல் 1977—78 முடிய இந்த
உதவிப் பணம் பாடப் புத்தகங்கள், குறிப்புப் புத்தகங்கள்,
எழுது பொருட்கள் ஆகியவைகளாகவே தரப்பட்டு வந்தன.
1978—79 முதல் இதை மாற்றி மீண்டும் பணமாகவே தரப்படு
கிறது. 1979—80-ல் தமிழைப் பயிற்சி மொழியாகக் கொண்டு
பட்ட வகுப்பில் பயின்ற 16,130 பேர்களுக்கு இவ்வுதவிப்
பணவகையில் ரூ. 27 இலட்சம் செலவானது. 1980—81-ல் இப்
பணிக்கு ரூ. 28 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

27. தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனம் தமிழைப் பாட
மொழியாகக் கொண்டுள்ள கல்லூரி மாணவர்களுக்காக இது
வரை 899 பாடப் புத்தகங்களை வெளியிட்டுள்ளது. சிறப்புச்
சொற்களுக்கான தமிழ்ச் சொற்களைக் கொண்ட 13 தொகுப்பு
களையும் அது வெளியிட்டுள்ளது. 899 பாட நூல்களில்
173 மொழிபெயர்ப்பு நூல்களும் 726 மூல நூல்களும், ஆகும்.
31—3—1980 வரை இத் திட்டத்திற்கு ரூ. 1·13 கோடி
செலவாகியுள்ளது.

## கல்லூரிக்கல்வி இயக்கக வட்டார அலுவலகங்கள்.

28. தனியார் கல்லூரிகளுக்கு அரசு மானியம் தரும் முறை
1977 சூன் முதல் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. அதன்படி
அக்கல்லூரிகளுக்கு, முன் மானியங்கள் தரப்பட்டு தணிக்கை
பின்னர் செய்யப்படுகிறது. இயக்குநர் அலுவலகம் சென்னை
யிலிருந்து செயல்படும் நிலையில் மேற்கண்ட முறையை அமு
லாக்குவதில் சில சிரமங்கள் ஏற்பட்டன. முறைகளைச்
சீராக்கி, அதிகாரங்களை பரவலாக்கி அரசின் திட்டங்களைச்
செவ்வனே செயல்படுத்தும் நோக்கத்துடன் இயக்குநரகத்துக்கு
வட்டார அலுவலகங்களைத் தொடங்குவது தேவயெனத்
தெரிந்தது. அவ்வாறே 1979—80-ல் சென்னை கோயம்புத்தூர்.
திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி ஆகிய ஐந்து
ஊர்களில் அந்தந்த வட்டாரத்துக்கு ஒன்று என்ற வகையில்
கல்லூரிக் கல்வி துணை இயக்குநர் அலுவலகங்கள் 5 ஏற்படுத்தப்
பட்டன. ஒவ்வொரு வட்டார அலுவலகத்திலும் ஒரு துணை
இயக்குநர் பிற பணியாளர்களுடன் வேலை செய்து வருகிறார்.
அந்தந்த வட்டாரத்திலுள்ள அரசு மற்றும், தனியார், கல்லூரி
கள் செயற்பாட்டை வட்டார துணை இயக்குநர்கள் மேற்பார்க்
கின்றனர். தனியார் கல்லூரிப் பணியாளர்களுடைய மாதாந்திர



சம்பளப் பட்டியல்களுக்கு ஒப்புதலளித்தல், மானியத்திற்கு
கணக்கிலெடுத்துக் கொள்ளக்கூடிய ஆசிரியரல்லாத பணி
யாளர் எண்ணிக்கை போன்ற தனியார் கல்லூரிகளைப் பற்றிய
அனைத்து விஷயங்களையும் அவர்கள் கவனிக்கின்றனர். அரசு
மற்றும் தனியார் கல்லூரித் தணிக்கை, அரசுக் கல்லூரி
களைப் பொறுத்த வேறு சில விஷயங்கள், ஆகியவற்றையும்
வட்டார துணை இயக்குநர்கள் கவனிக்கின்றனர்.

## கல்லூரி மாணவர், ஆசிரியர் நலக் குழுக்கள்.

29. பல்வேறு கோரிக்கைகளுக்காக மாநிலத்திலுள்ள கல்வி
நிலையங்களில் மாணவர்கள், ஆசிரியர்கள், பிற பணியாளர்கள்
ஆகியோர் அடிக்கடி கிளர்ச்சி நடத்தி வந்துள்ளனர். அக்
கிளர்ச்சிகளால் ஏற்படும் கோளாறுகளைத் தவிர்ப்பதற்கான
அமைப்புகளை உருவாக்கி மாணவர்கள் நலனைக் காத்து
அவர்கள் குறைகளைப் போக்கவும், ஆசிரியர் மற்றும் பணி
யாளர் பற்றிய சிக்கல்களைத் தீர்க்கவும் வழிகாணும் நோக்கத்
துடன் ஒவ்வொரு கல்லூரியிலும் பின்வரும் குழுக்களை
அமைத்திட அரசு ஆணையிட்டுள்ளது.

1. ஆசிரியர் நலக் குழு.
2. ஆசிரியரல்லாத பணியாளர் நலக் குழு.
3. மாணவர் நலக் குழு.

ஒழுங்கு நடவடிக்கைகளைப் பொறுத்தவரையில் முன்
போலவே உரிய விதிகளைப் பின்பற்றிச் செயல்பட வேண்டும்.
பிற விஷயங்களைப் பற்றி எழும் பிரச்சினைகளை உரிய
குழுவின் முன் வைக்கவேண்டும். நிதிப் பிரச்சினைகளைத்
தவிர பிற பிரச்சினைகளைக் குழுக்களே இறுதியாக முடிவு
செய்யலாம். பிரச்னைகள் உடனுக்குடன் கல்லூரி முதல்வர்
வட்டார கல்லூரிக் கல்வி துணை இயக்குநருக்குத் தெரிவிப்பார்.
துணை இயக்குநர் உரிய குழுவைக் கூட்டி பிரச்னையைத்
தீர்ப்பார். நிதி பற்றிய பிரச்னைகளை மட்டும் குழு கல்லூரி
கல்வி இயக்குநருக்கு அனுப்பி வைக்கும். இயக்குநர் அவற்றை
பல்கலைக் கழகங்களுடன் கலந்து ஆலோசித்து அரசின் இறுதி
முடிவுக்கு அனுப்பி வைப்பார்.

## கல்லூரி ஆசிரியர்கள் நலன்.

30. பல்கலைக் கழக மானியக் குழு சம்பள விகிதங்கள் அரசு
மற்றும் தனியார் கலை, அறிவியல் கல்லூரிகள், சட்டக் கல்லூரிகள்,
பொறியியல் கல்லூரிகளும், பல்தொழில் பயிலகங்களும்; மற்றும்
சென்னை, மதுரை காமராஜ், அண்ணாமலைப் பல்கலைக்
கழகங்கள் ஆகிய அனைத்தின் ஆசிரியர்களுக்கும் 1—4—1974

முதல் அமுலாக்கப்பட்டன. பணப்பயன் 1—1—1977 முதல் தரப்பட்டது. சமுதாயப் பணிப் பள்ளிகள், கீழ்த்திசைப் படிப்புக் கல்லூரிகள், உடற்பயிற்சிக் கல்லூரிகள் ஆகியவற்றுக்கும் அவை விரிவாக்கப்பட்டுள்ளன. ரூ. 700—40—1,100—50—1,300—இ.பி.—50—1,600 என்ற சம்பள விகிதத்தில் ரூ. 1,100 என்ற நிலையில் பேராசிரியர்களின் தொடக்க சம்பளம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கல்லூரி முதல்வர்களுக்கு ரூ. 1,200—1,900 என்னும் சம்பள விகிதம் தரப்பட்டுள்ளது.

31. 1—12—1977 அன்று, மூன்றாண்டு அல்லது அதற்கு, மேலும் பணி செய்திருந்த விளக்குநர்கள் (டெமான்ஸ்ரேட்டர்) பயிற்றுநர்கள் (டியூட்டர்) ஆகியோருள் அவரவர் துறையில் பட்ட மேற்படிப்பு (எம்.ஏ., எம். காம்., போன்றவை) தகுதி பெற்று இருந்தவர்களுக்கெல்லாம் 1—12—1977 முதல் துணைப் பேராசிரியர்கள் பதவி அளிக்கப்பட்டு அப்பதவிக்கான பல்கலைக் கழக மானிய குழு சம்பள விகிதம் தரப்பட்டுள்ளது. இனி மேல் இந்த தகுதிகளை (3 அல்லது அதற்கும் அதிகமான ஆண்டுகள் பணியும், பட்ட மேற்படிப்பு தகுதியும்) பெறுபவர்களுக்கும் இந்தச் சலுகை அவரவர் அத்தகுதியை அடையும் நாள் முதல் கிடைத்துவிடும். 1980 சனவரி முடிய இவ்வாறு 1,697 விளக்குநர்கள்/பயிற்றுநர்கள் உதவிப் பேராசிரியர்களாக உயர்த்தப்பட்டுள்ளனர்.

32. அதுபோல உதவிப் பேராசிரியர்களில் 1—4—1980 அன்றைய நிலவரப்படி 10 ஆண்டுகள் பணி செய்து முடித்து இருந்தவர்கள் அனைவரும் ரூ. 700—40—1,100—50—1,300 இ.பி.—50—1,600 சம்பள விகிதத்தில் பேராசிரியர்களாக உயர்த்தப்பட்டுள்ளனர். 1—4—1980-க்கு முன்னரே 10 ஆண்டு அல்லது அதற்கு அதிகமான காலம் பணி செய்திருந்த உதவிப் பேராசிரியர்கள் அன்றைய தேதியில் ரூ. 1,100-க்கு குறைவாகச் சம்பளம் பெற்று வந்தார்களானால் அவர்கள் சம்பளம் அந்நாள் முதல் ரூ. 1,100 ஆக நிர்ணயிக்கப்படும்—அவர்கள் உதவிப் பேராசிரியர் பதவியில் பணி செய்த காலம் என்னவாயிலிருந்தாலும் சரி பேராசிரியர்களாக உயர்த்தப்பட்ட பின்னரும் அவர்கள் உதவிப் பேராசிரியர்களாக இருக்கும்பொழுது விரிவுரையாற்றிய மணி நேர அளவுக்கே பணி நேரம் இருக்கும். இனிமேல் 10 ஆண்டு உதவிப் பேராசிரியராகப் பணி செய்து முடித்தவர்கள் மட்டுமே பேராசிரியராகப் பதவி உயர்வு பெறுவர். உதவிப் பேராசிரியர்கள் இவ்வாறு பேராசிரியர்களாவதால் ஒரே துறையில் பல பேராசிரியர்கள் இருக்கும் நிலை ஏற்பட்டால் அவர்களுள் பணி மூப்பு மற்றும் தகுதி இரண்டின் அடிப்படையில் துறைத் தலைவர் நியமிக்கப்படுவார். மேற்கண்ட அடிப்படையில் உதவிப் பேராசிரியர்களைப் பேராசிரியர்களாக உயர்த்தும் பணி நடைபெற்று வருகிறது.



தனியார் கல்லூரிகள்.

33. தனியார் கல்லூரி ஆசிரியர்கள் முழுமையாகவும் காலத்தாழ்வின்றியும் சம்பளம் பெற்றுவர வகை செய்யும் நோக்கத்துடன் தனியார் கல்லூரிகளுக்கு மானியம் வழங்குவதில் புதிய முறையை 1—6—1977 முதல் அரசு செயல்படுத்தியுள்ளது. சம்பளம் வழங்கும் வகையில் அக்கல்லூரிகளுக்கு ஏற்படும் செலவில் நிகரப் பற்றாக்குறை முழுவதையும் அரசே ஏற்று வருகிறது. தனியார் கல்லூரி நிர்வாகங்களின் நிதிச் சிக்கல்களை இப்புதிய முறை பெருமளவுக்குத் தீர்த்துள்ளது. ஆசிரியர்களுக்கும் ஒழுங்காகக் காலத்தாழ்வின்றிச் சம்பளம் கிடைத்து வர வகை செய்யப்பட்டுள்ளது.

34. மேலும் கல்லூரிக் கல்வி இயக்கத்தின் வட்டார அலுவலகங்கள் ஐந்தின் மூலம் தனியார் கல்லூரிப் பணியாளர்களுக்கு நேரடியாகச் சம்பளம் வழங்கவும் அரசு ஆணையிட்டுள்ளது. இதன்படி ஒவ்வொரு மாதமும் தனியார் கல்லூரி முதல்வர் பணியாளர் சம்பளப் பட்டியலை தயாரித்து வட்டார துணை இயக்குநருக்கு அனுப்புவார். அவர் விவரங்களைச் சரிபார்த்து தானும் கையொப்பமிட்டு கல்லூரிச் செயலருக்கு முழுத் தொகைக்கான மானியத் தொகை பில்லை அனுப்புவார். கல்லூரியின் பணியாளர் சம்பளத் தொகைக்கணக்கு எந்த வங்கியில் வைக்கப்பட்டுள்ளதோ அந்த வங்கியின் மூலமாக கல்லூரிச் செயலர் அந்த பில்லை கருவூலத்துக்கு அனுப்பிப் பணம் பெற்றுக் கொள்வார். ஒவ்வொரு மாதமும் கடைசி வேலை நாள் அன்று (அல்லது வேறு நாளில் சம்பளம் கொடுக்க வேண்டும் என்று அரசு ஆணையிட்டால் அந்த நாளில்) அந்த வங்கி அக்கல்லூரிச் சம்பளத் தொகைக் கணக்கிலிருந்து ஒவ்வொரு பணியாளருடைய தனிப்பட்ட கணக்கிற்கும் அவரவர் அந்த மாதம் பணியிலிருந்த காலத்துக்கு சேர வேண்டிய சம்பளத் தொகையை மாற்றி அப்பணியாளர் கணக்கில் அத்தொகையை வரவு வைக்கும்.

35. மேற்கண்டவாறு சம்பளத்திற்காகத் தரும் மானியத்திற்கு மேலாக சம்பளம் அல்லாத பிற செலவினங்களில்—அதாவது பழுது பார்த்தல் சில்லரைச் செலவினம் எழுது பொருள் போன்றவற்றில்—அங்கீகரிக்கப்பட்ட செலவினங்களுக்கு 80 சத வீதம் சம்பளமல்லாத செலவின மானியமும் தனியார் கல்லூரிகளுக்குத் தரப்படுகிறது.

36. தமிழ்நாட்டிலுள்ள தனியார் கல்லூரி ஆசிரியர்கள் ஓய்வூதியம் போன்ற ஓய்வு காலப் பலன்களை 1—4—1962 முதல் பெற்று வருகின்றனர். 1—4—1976 முதல் அப்பலன்கள் ஆசிரியரல்லாத பணியாளருக்கும் விரிவாக்கப்பட்டுள்ளன. தனியார் கல்லூரிகளிலுள்ள ஆசிரியரல்லாத . பணியாளர்கள் ஓய்வு பெறும் வயது 55-லிருந்து 58 ஆக உயர்த்தப்

பட்டுள்ளது. பணியிலிருக்கும்பொழுது ஒருவர் இறந்துவிட்டால் அவர், குடும்பத்துக்கு ரூ. 10,000 தர வகை செய்யும் ''குழு ஈட்டுறுதித் திட்டம்'' (ஏற்கெனவே தனியார் மற்றும் உள்ளாட்சி மன்றப் பள்ளிகளின் பணியாளர்களுக்கு விரிவாக்கியிருந்ததைப் பின்பற்றி) தனியார் கல்லூரிப் பணியாளர் அனைவருக்கும் 21—6—1979 முதல் விரிவாக்கப்பட்டுள்ளது.

37. ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கு 1—4—1978 முதல் மூன்றாவது சம்பளக் குழுவின் சம்பள விகிதங்கள் அமுலாக்கப் பட்டுள்ளன. தனியார் கல்லூரிகளில் தேர்வு நிலைப் பதவி களை ஏற்படுத்தும் ஆணையும் வெளியாகியுள்ளது.

38. தனியார் கல்லூரி ஆசிரியர்களுக்கான விடுப்பு வசதிகளும் தாராளமாக்கப்பட்டுள்ளன. மருத்துவ விடுப்பு முன்னர் 12 மாதங்கள் என்று இருந்தது. இப்பொழுது 18 மாதங்களாக உயர்த்தப்பட்டுள்ளது. 1—1—1980 முதல் அரசுப் பணியாளர் களுக்கு உயர்த்தப் பட்டுள்ளதுபோல் தனியார் கல்லூரிகளின் பணியாளர்களுக்கும் தற்செயல் விடுப்பு 20 நாட்களாக உயர்த்தப் பட்டுள்ளது.

39. 1976 ஆம் ஆண்டு நிறைவேறிய '' தனியார் கல்லூரிகள் ஒழுங்குபடுத்துதல்) சட்டத்தில் '' செய்யவேண்டிய திருத்தங்கள் பற்றி ஆழ்ந்து பரிசீலனை செய்து அறிவிக்க ஒரு குழு அமைக்கப் பட்டுள்ளது. ஆசிரியர்கள், பிற பணியாளர்கள், நிருவாகங்கள் ஆகிய மூவகையினரின் சங்கங்களுக்கும் அக்குழுவில் பிரதிநிதித் துவம் தரப்பட்டுள்ளது.

40. தமிழ்நாடு தனியார் கல்லூரி (ஒழுங்குபடுத்துதல்) சட்டத்தின் 38 (1) பிரிவின்கீழ் 1979–80ல் தீர்ப்பாயமாக ஒரு மாவட்ட செசன்ஸ் நீதிபதி (இரண்டாம் நிலை) நியமிக்கப் பட்டுள்ளார்.

## பணிப் பாதுகாப்பு.

41. கல்லூரிகளில் 31—3—1977 அன்று பணியிலிருந்த எந்த ஆசிரியராயினும் சரி, பிற பணியாளராயினும் சரி, பின்வரும் காரணங்களினால், அதாவது—

(1) 1979–80 முதல் புகுமுக வகுப்பு நீங்கி விடுவதால் ; அல்லது

(2) கல்லூரிகளில் மாணவர் எண்ணிக்கை குறைந்து ஆசிரியர் வேலைப் பளு குறைவதால் ;

பதவியிழக்க நேராது என்று அரசு முதலிலேயே பாதுகாப்பு அளித்து இருந்தது. பாட வகுப்புகள் மூடப்படுவதாலும் புதிய கல்வித் திட்டத்தை அமுல்படுத்துவதாலும் ஏற்படக் கூடிய



வேலை நீக்கத்துக்கும் இப்பாதுகாப்பு பின்னர் விரிவாக்கப்பட்டது மேலும் அரசு மற்றும் தனியார் கல்லூரிகளில் 26—2—1979 அன்றும் அதுவரையிலும் நிரந்தரமான பணியிடங்களில் நியமிக்கப் பட்டவர்களுக்கும் அப்பாதுகாப்பு தரப்பட்டது. இப் பாதுகாப்பைச் செயல்படுத்த—பல்கலைக் கழகங்களுடன் கலந்து புதிய பாட வகுப்புகள் தொடங்குவது, மாணவர்களுக்கு சிறப்புத் தனிப் பயிற்சி வகுப்புகள், வகுப்புகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட குறைந்த பட்ச மாணவர் எண்ணிக்கை குறைப்பு, கல்லூரி மையத் திட்டம், மேற்படிப்புக்கு கல்லூரி ஆசிரியர்களை அனுப்புதல், தனியார் கல்லூரிகளில் உபரியாக உள்ள ஆசிரியர்களை அவர்கள் பணியைப் பயன்படுத்தக் கூடிய தனியார் அல்லது அரசுக் கல்லூரி களுக்கு மாற்றம் செய்தல்—போன்ற பல வழிகளிலும் அரசு நடவடிக்கை எடுத்துள்ளது, எடுத்து வருகிறது.

## சட்டக் கல்வி.

42. சென்னைச் சட்டக் கல்லூரி மாணவர் தொகை 1968–69-ல் 1,045 ஆக இருந்தது, 1979–80-ல் 2,161 ஆக (முழுநேரப் பட்டப் படிப்பு வகுப்புகளில் 1,183, மாலை நேர வகுப்புகளில் 942, எம்.எல். வகுப்புகளில் 36) உயர்ந்துள்ளது. குற்றவியல் சட்டம், ஒப்பந்தச் சட்டம், சொத்துரிமைச் சட்டம் ஆகிய பாடங்களில் எம்.எல். வகுப்புகள் நடைபெறுகின்றன. இக்கல்லூரியின் முழுநேரப்பட்டப் படிப்பின் மூன்றாண்டு வகுப்பு களிலும் ஒவ்வொரு பிரிவில் தமிழே பாடமொழியாக இருக்கிறது. அவ்வாறு 1979–80-ல் தமிழ் மூலம் சட்டம் பயின்றுவந்த மாண வர் மொத்த எண்ணிக்கை 107 ஆகும்.

43. மதுரையில் 1974–75-ல் ஒரு சட்டக் கல்லூரி தொடங் கப்பட்டது. 1979–80-ல் அக்கல்லூரியில் மொத்தம் 692 மாண வர் பயின்று வந்தனர்—முழுநேர வகுப்புகளில் 478 பேர்களும், மாலை நேர வகுப்புகளில் 214 பேர்களும், 1979–80-ல் சென்னை யில் ஒன்றும் கோயம்புத்தூரில் ஒன்றுமாக இரண்டு சட்டக் கல் லூரிகள் தொடங்கப்பட்டன. அவற்றில் அவ்வாண்டு பி.ஜி.எல். முதலாண்டு வகுப்பில் கல்லூரிக்கு 120 பேர்கள் வீதம் மாணவர் சேர்க்கப்பட்டனர். 1980–81-ல் கோயம்புத்தூர் சட்டக் கல் லூரிக்குக் கட்டடம் கட்ட ரூ. 5 லட்சமும், மதுரை சட்டக் கல்லூரி மாணவியருக்கு விடுதி கட்ட ரூ. 1.50 இலட்சமும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளன.

## VII. தொழில் நுட்பக் கல்வி.

தொழில் நுட்பக் கல்விக்காக 1980–81-ல் சுமார் ரூ. 9.60 கோடி (கட்டடங்கள், கடன்கள் ஆகியவற்றுக்கான செலவுகள் உட்பட) ஒதுக்கப்பட்டுள்ளது. இத்துறையின் கீழ் 6 பொறியியல்

கல்லூரிகளும் 40 தொழில் நுட்ப பயிலகங்களும் (மகளிர் பயிலகங்கள் மற்றும், தனித்தொழில் பட்டய—டிப்ளமா—கல்வியகங்கள் எட்டும் உள்பட). 14 (தொழிற்பாட) மேல்நிலைப் பள்ளிகளும் உள்ளன. 1979–80-க்கு முன் இந்த (தொழிற்பாட) மேல்நிலைப் பள்ளிகள் தொழில் நுட்ப உயர்நிலைப் பள்ளிகள் என்று அழைக்கப்பட்டு வந்தன.

2. 1980–81-ல் சேர்த்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ள மாணவர் எண்ணிக்கை மேற்சொன்ன ஆறு பொறியியற் கல்லூரிகளிலும் திருச்சிராப்பள்ளி வட்டார பொறியியல் கல்லூரியில் தமிழ்நாட்டுக்குரிய பங்கிலும் சேர்த்து பட்ட வகுப்புகளில் 1,350 பேர்கள், பல்தொழில் நுட்பப் பயிலகங்களில் பட்டயப் படிப்புகளில் 6,500 பேர்கள் (தொழிற்பாட) மேல் நிலைப் பள்ளிகளில் 840 பேர்கள் என்பதாகும். தொழில் நுட்பக் கல்வி இயக்குநரின்கீழ் உள்ள பொறியியற் கல்லூரிகளில் பி.ஈ. பட்டப் படிப்பு முதலாண்டு வகுப்பில் உள்ள இடங்களில் 5 இடங்கள் கலப்பு மணத் தம்பதிகள் குழந்தைகளுக்கு ஒதுக்கப்படும். பல்தொழில்நுட்பப் பயிலகங்களில் சேர பெரும் எண்ணிக்கையில் மாணவர்கள் மனுச் செய்வதைக் கருத்திற்கொண்டு 9 பல் தொழில் பயிலகங்களில் (அரசு 3, தனியார் 6) சேர்க்கப்படும் மாணவர் எண்ணிக்கை ஒவ்வொன்றிலும் 120-லிருந்து 180 ஆக உயர்த்த அரசு ஏற்பளித்துள்ளது.

பிற பட்டயப் படிப்பு நிலையங்களைப் பொறுத்த வரை எத்தனை மாணவர் சேர்க்கலாமென முன்னர் ஏற்பளித்துள்ளதோ அதற்கு மேலாக 10 விழுக்காடு சேர்த்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது. 1979–80-ஐ விட 1980–81-ல் கூடுதலாகச் சேர்க்கப்படவிருக்கும் மாணவர்கள் பட்ட வகுப்புகளில் சுமார் 130-ம் பட்டய வகுப்புகளில் சுமார் 1,600-ம் ஆகும்.

3. இம்மாநிலத்திலுள்ள பிற 7 பொறியியற் கல்லூரிகளின் விவரம் வருமாறு :—

<u>பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகம் :</u>

1. பொறியியல் கல்லூரி, கிண்டி.

2. அழகப்பச் செட்டியார் தொழில்நுட்பவியல் கல்லூரி, கிண்டி.

3. கட்டடவியல் மற்றும் நகரமைப்புப் பள்ளி.

4. சென்னை தொழில் நுட்ப கல்வியகம்'', குரோம்பேட்டை.



<u>அண்ணாமலைப் பல்கலைக்கழகம்—</u>

5. பொறியியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறை :

<u>தன்னுரிமையுள்ள நிறுவனங்கள்—</u>

6. வட்டார பொறியியல் கல்லூரி, திருச்சிராப்பள்ளி.

7. இந்தியத் தொழில் நுட்பக் கல்வியகம், கிண்டி.

<u>பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக்கழகம் :</u>

4. பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகம் 4—9—1978 அன்று நிறுவப்பட்டது. இப் பல்கலைக் கழகத்துக்கு மானியங்கள் தருவதற்காக 1980–81-ல் ரூ. 1.80 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

<u>பிற புது நிலையங்கள்.</u>

5. 1979–80-ல் புதியதாக அரசு பல்தொழில் பயிலகம் ஒன்று கிருஷ்ணகிரியில் தொடங்கப்பட்டது. புதுக்கோட்டை மாவட்டத்தில் அரசு பல்தொழில் பயிலகம் தொடங்குவதற்கான முனனோடி நடவடிக்கை 1980–81-ல் எடுக்கப்படும்.

6. 1980–81-ல் பின்வரும் புதிய பட்டயப்படிப்பு நிலையங்கள் புதிதாகத் தொடங்கப்படும் :—

(1) சேலம் குமாரபாளையத்தில் நெசவுத் தொழில் நுட்பக் கல்வியகம். அதில் பட்டயம் மற்றும் சான்றிதழ் வகுப்புகளில் மொத்தம் சுமார் 70 மாணவர் சேர்க்கப்படுவர்.

(2) பெரியார் மணியம்மை கல்வி மற்றும் அறப்பணிக் கழகம், சென்னை என்னும் நிறுவனம் தஞ்சாவூரில் தொடங்கவிருக்கும் மகளிர் பல்தொழில் பயிலகம். இதில் வாணிக நடைமுறை, கட்டடவியல் உதவியாளர் படிப்பு, மின்னணுப் பொறியியல் ஆகிய மூன்று பாடங்களில் பாடத்துக்கு 30 பெண்கள் வீதம் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

(3) கோயம்புத்தூரில் தனியார் பல்தொழில் பயிலகம். ஒன்று.

7. திருச்சிராப்பள்ளியில் உணவுத் தொழில் கல்வியகம் ஒன்றைத் தொடங்குவதென்ற மைய அரசு வேளாண்மை அமைச்சகத்தின் கோரிக்கைக்கு இவ்வரசு தன் இசைவை 1—2—1980 அன்று தெரிவித்துள்ளது. அக்கல்வியகம் தன்னுரிமையுள்ளதாக இருக்கும், அது தொடங்கி 5 ஆண்டுகளுக்கு பின்னர் இருந்து அதன் செலவை இவ்வரசு ஏற்க இசைந்துள்ளது.

கல்லூரிகளும் 40 தொழில் நுட்ப பயிலகங்களும் (மகளிர் பயில கங்கள் மற்றும், தனித்தொழில் பட்டய—டிப்ளமா—கல்வியகங்கள் எட்டும் உள்பட). 14 (தொழிற்பாட) மேல்நிலைப் பள்ளிகளும் உள்ளன. 1979–80-க்கு முன் இந்த (தொழிற்பாட) மேல்நிலைப் பள்ளிகள் தொழில் நுட்ப உயர்நிலைப் பள்ளிகள் என்று அழைக் கப்பட்டு வந்தன.

2. 1980–81-ல் சேர்த்துக் கொள்ள அனுமதிக்கப்பட் டுள்ள மாணவர் எண்ணிக்கை மேற்சொன்ன ஆறு பொறியியற் கல்லூரிகளிலும் திருச்சிராப்பள்ளி வட்டார பொறியியல் கல்லூரி யில் தமிழ்நாட்டுக்குரிய பங்கிலும் சேர்த்து பட்ட வகுப்புகளில் 1,350 பேர்கள், பல்தொழில் நுட்பப் பயிலகங்களில் பட்டயப் படிப்புகளில் 6,500 பேர்கள் (தொழிற்பாட) மேல் நிலைப் பள்ளிகளில் 840 பேர்கள் என்பதாகும். தொழில் நுட்பக் கல்வி இயக்குநரின்கீழ் உள்ள பொறியியற் கல்லூரிகளில் பி.ஈ. பட்டப் படிப்பு முதலாண்டு வகுப்பில் உள்ள இடங் களில் 5 இடங்கள் கலப்பு மணத் தம்பதிகள் குழந்தைகளுக்கு ஒதுக்கப்படும். பல்தொழில்நுட்பப் பயிலகங்களில் சேர பெரும் எண்ணிக்கையில் மாணவர்கள் மனுச் செய்வதைக் கருத்திற்கொண்டு 9 பல் தொழில் பயிலகங்களில் (அரசு 3, தனியார் 6) சேர்க்கப்படும் மாணவர் எண்ணிக்கை ஒவ்வொன்றி லும் 120-லிருந்து 180 ஆக உயர்த்த அரசு ஏற்பளித்துள்ளது.

பிற பட்டயப் படிப்பு நிலையங்களைப் பொறுத்த வரை எத்தனை மாணவர் சேர்க்கலாமென முன்னர் ஏற்பளித்துள்ளதோ அதற்கு மேலாக 10 விழுக்காடு சேர்த்துக் கொள்ள அனுமதிக்கப் பட்டுள்ளது. 1979–80-ஐ விட 1980–81-ல் கூடுதலாகச் சேர்க் கப்படவிருக்கும் மாணவர்கள் பட்ட வகுப்புகளில் சுமார் 130-ம் பட்டய வகுப்புகளில் சுமார் 1,600-ம் ஆகும்.

3. இம்மாநிலத்திலுள்ள பிற 7 பொறியியற் கல்லூரி களின் விவரம் வருமாறு :—

பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகம் :

1. பொறியியல் கல்லூரி, கிண்டி.

2. அழகப்பச் செட்டியார் தொழில்நுட்பவியல் கல் லூரி, கிண்டி.

3. கட்டடவியல் மற்றும் நகரமைப்புப் பள்ளி.

4. சென்னை தொழில் நுட்ப கல்வியகம்'', குரோம் பேட்டை.



அண்ணாமலைப் பல்கலைக்கழகம்—

5. பொறியியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறை :

தன்னுரிமையுள்ள நிறுவனங்கள்—

6. வட்டார பொறியியல் கல்லூரி, திருச்சிராப்பள்ளி.

7. இந்தியத் தொழில் நுட்பக் கல்வியகம், கிண்டி.

பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக்கழகம் :

4. பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகம் 4—9—1978 அன்று நிறுவப்பட்டது. இப் பல்கலைக் கழகத்துக்கு மானியங்கள் தருவதற்காக 1980–81-ல் ரூ. 1.80 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

பிற புது நிலையங்கள்.

5. 1979–80-ல் புதியதாக அரசு பல்தொழில் பயிலகம் ஒன்று கிருஷ்ணகிரியில் தொடங்கப்பட்டது. புதுக்கோட்டை மாவட்டத்தில் அரசு பல்தொழில் பயிலகம் தொடங்குவதற்கான முனைவோடி நடவடிக்கை 1980–81-ல் எடுக்கப்படும்.

6. 1980–81-ல் பின்வரும் புதிய பட்டயப்படிப்பு நிலையங்கள் புதிதாகத் தொடங்கப்படும் :—

(1) சேலம் குமாரபாளையத்தில் நெசவுத் தொழில் நுட்பக் கல்வியகம். அதில் பட்டயம் மற்றும் சான்றிதழ் வகுப்பு களில் மொத்தம் சுமார் 70 மாணவர் சேர்க்கப்படுவர்.

(2) பெரியார் மணியம்மை கல்வி மற்றும் அறப்பணிக் கழகம், சென்னை என்னும் நிறுவனம் தஞ்சாவூரில் தொடங்க விருக்கும் மகளிர் பல்தொழில் பயிலகம். இதில் வாணிக நடைமுறை, கட்டடவியல் உதவியாளர் படிப்பு, மின்னணுப் பொறியியல் ஆகிய மூன்று பாடங்களில் பாடத்துக்கு 30 பெண்கள் வீதம் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

(3) கோயம்புத்தூரில் தனியார் பல்தொழில் பயிலகம். ஒன்று.

7. திருச்சிராப்பள்ளியில் உணவுத் தொழில் கல்வியகம் ஒன் றைத் தொடங்குவதென்ற மைய அரசு வேளாண்மை அமைச் சகத்தின் கோரிக்கைக்கு இவ்வரசு தன் இசைவை 1—2—1980 அன்று தெரிவித்துள்ளது. அக்கல்வியகம் தன்னுரிமையுள்ளதாக இருக்கும், அது தொடங்கி 5 ஆண்டுகளுக்கு பின்னர் இருந்து அதன் செலவை இவ்வரசு ஏற்க இசைந்துள்ளது.

## பல்கலைக் பாடப் பிரிவுகளைத் தொடங்குதல்.

8. நான்காவது ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலங்களில் தொழில் நுட்பக் கல்விக்காக இருக்கும் வசதிகளை மேம்படுத்துவதிலும் தளவாடங்கள், நூலகங்கள், கட்டடங்கள் முதலிய வகைகளில் தர உயர்வு எய்துவதிலும் கவனம் செலுத்தப் பட்டது. தொழில் துறையின் தேவைகளுக்கேற்ப வேலை வாய்ப்பிற்கிசைந்த வகையில் பல்துறைப்படுத்தப்பட்ட புதிய பாடங்கள் பல தொடங்கப்பட்டுள்ளன. இப்பொழுது 17 பட்டப் படிப்புகளும் 52 பட்ட மேற்படிப்புகளும் அந்நிலையிலுள்ள பட்டயப் படிப்புகளும் உள்ளன. பல்தொழில் பயிலகங்களில் பட்டயம், பட்டய மேற்படிப்பு, சான்றிதழ் ஆகிய மூவகைப் படிப்புகளும் சேர்த்து 80 பாடமுறைகள் உள்ளன.

## புதிய திட்டங்கள்.

9. 1980–81 பின்வரும் புதிய பாடமுறைகள் தொடங்கப் படவிருக்கின்றன :—

அதாவது, நாகர்கோவிலிலுள்ள அரசு பாலிடெக்னிக்கில் மின்னணுவியல் பட்டயப் படிப்பு, மதுரையிலும் கோயம்புத்தூரிலும் உள்ள மகளிர் பாலிடெக்னிக்குகளில் நவ நாகரீக ஆடைகளை உருவாக்குதலும் தைத்தலும் பற்றிய வகுப்புகள்; கோயம்புத்தூர் அரசு பாலிடெக்னிக்கில் வார்ப்படப் பொறியியல் பட்டய மேற்படிப்பு ; சென்னை ராமகிருஷ்ணா தொழிற் பயிற்சிக் கல்வியகத்தில் நவீன விவசாயக் கருவிகள் பற்றிய பட்டயப் படிப்பு ; இராசபாளையம் பி.ஏ.சி. இராமசாமி இராஜா பாலிடெக்னிக்கில் குளிர்பதனம் மற்றும் குளுமை வசதி பட்டயப் படிப்பு ; ஆகிய புதிய பாடமுறைகள் 1980–81-ல் தொடங்கப்படவிருக்கின்றன.

10. கோயம்புத்தூரிலுள்ள அரசு தொழில் நுட்பவியல் கல்லூரியில் பவர்சிஸ்டம் மற்றும் செயல்முறை மின்னணுவியல் ஆய்வுக்கூடம், பையோ எஞ்சினியரிங் துறை, தொழில் முறை மின்னணுவியல் ஆய்வுக்கூடம், ஆகியவற்றை அமைத்தல் ; அங்குள்ள மகளிர் பாலிடெக்னிக்கில் காட்சி-கேள்வி சாதனம் மற்றும் படிபெருக்கும் தொழில் நுட்ப மையம் அமைத்தல், ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படும். மாமல்லபுரத்திலுள்ள கட்டடவியல் மற்றும் சிற்பப் பள்ளியின் உற்பத்திப் பிரிவுக்கு கூடுதல் பணியாளர் நியமிக்கப்படுவர். சீர்காழி ஸ்ரீநிவாசா சுப்பராயா பாலிடெக்னிக்கிற்கும் கும்பகோணம் கலை கைத் தொழில் கல்லூரிக்கும் கூடுதல் கட்டடங்கள் கட்டப்படும்.



## தன்னுரிமை

11. இதுவரை 4 பாலிடெக்னிக்குகளுக்கு முழுமையாகவும் 5-க்கு ஒரு சில பாடத்துறைகளிலும் தன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. மேலும் மூன்றுக்கு முழுமையாகவும் மேலும் ஒன்றுக்கு சில துறைகளைப் பொறுத்தவரையிலும் தன்னுரிமை வழங்கப் படும்.

## பயிற்சிதுறை வளர்ச்சி.

12. ஆண்டு தோறும் பொறியியற் கல்லூரிகள், மற்றும் பாலிடெக்னிக்குகளின் ஆசிரியர்களில் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் அரசின் செலவில் உயர் படிப்பு, பயிற்சி ஆகியவற்றுக்கு அனுப்பப் பட்டு வருகின்றனர்.

## வணிகவியல் பாடங்களில் தேர்வு.

13. தொழில் நுட்பக் கல்வி இயக்குநரே வணிகவியல் பாடங்களான தட்டச்சு, சுருக்கெழுத்து, வரவு-செலவுக் கணக்கியல் வணிகவியல் பயிற்சி, வங்கியியல் போன்றவற்றிற்கு ஆண்டு தோறும் சுமார் $1\frac{1}{2}$ லட்சம் பேருக்குத் தேர்வு நடத்தும் அதிகாரியுமாவார்.

## தன்னுரிமையுள்ள சில நிறுவனங்கள்.

14. தன்னுரிமையுள்ள வேறு சில நிறுவனங்களில் உள்ள தொழில் நுட்பக் கல்வி வசதிகளைப் பற்றிய விவரங்கள் வருமாறு :—

(1) வட்டாரப் பொறியியல் கல்லூரி, திருச்சிராப்பள்ளி,—இப்பொழுது இக் கலூால்ரியில் ஆண்டு தோறும் 200 மாணவர் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். இதிலுள்ள இடங்களில் பாதி இம்மாநில மாணவர்களுக்கும் பாதி பிற மாநில மாணவர்களுக்கும் தரப்படுகிறது. தொடரும் செலவை மைய அரசும் மாநில அரசும் பாதி பாதியாக ஏற்றுக்கொள்கின்றன. தொடாராச் செலவு முழுவதையும் மைய அரசே ஏற்கிறது. இக் கல்லூரியில் நடக்கும் பட்டமேற்படிப்பு வகுப்புகள் அனைத்துக்கும் சென்னைக் பல்கலைக் கழகம் தன்னுரிமை வழங்கியுள்ளது.

(2) மாநில கூட்டுறவு முறைத் தொழில் கல்வி நிலையம், திருச்சிராப்பள்ளி—இது 42 மாதங்கள் கொண்ட (27 மாதம் நிலையப் பயிற்சியும், 15 மாதம் வேலை அனுபவமும்) பாடமுறைகளை நடத்தி வருகிறது. (1) கட்டடக் கலையும் உள் அமைப்பும், (2) மின் கருவிகளும் முறைகளும், (3) நெசவும்

பாடமுறைகள்
நவீன அழகு வேலைப்பாடும் என்ற மூன்று 20 மாணவர்
அங்கு உள்ளன. ஒவ்வொரு பாடமுறைக்கும் நிறுவனத்துக்கு ஆண்டு
சேர்க்கப்படுகின்றனர். மாநில அரசு இந் நிறுவனத்துக்கு தருகிறது.
தோறும் ரூ. 2.50 இலட்சம் மானியம் தருகிறது.

(3) கணித அறிவியல் நிறுவனம்—அடையாற்றில் உள்ள
கணித அறிவியல் நிறுவனம் மாநில மைய அரசுகளின் உதவி
யோடு செயல்படுகிறது. இதற்கு இவ்வரசு ஆண்டுதோறும்
ரூ. 3.5 இலட்சம் மானியம் தருகிறது. இது அடிப்படைக்
கணிதம், மற்றும் கணிதம் சார்ந்த இயல்பியல் துறைகளில்
உள்ள ஆராய்ச்சி நடத்தி வருகிறது.

## அறிவியல் அருங்காட்சியகம்.

15. அடையாற்றில் பெரியார் பெயரில் அறிவியல் அருங்காட்
சியகம் ஒன்றை நிறுவ அரசு ஏற்பளித்துள்ளது.

## VIII. விளையாட்டு உடற்பயிற்சி மற்றும் இளைஞர் நலன்.

"277. கல்வி-ஜி. விளையாட்டும் இளைஞர் நலனும்" என்ற
தலைப்பின் கீழ் 1980-81-ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில்
பெரும் தொகையான ரூ. 2.74 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.
அதில் தேசிய மாணவர் படைக்கு ரூ. 1.40 இலட்சமும், தேசிய
பணிப் பிரிவுக்கு ரூ. 45 இலட்சமும், சாரண சாரணியருக்கு
ரூ. 2 இலட்சமும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறைக்கு
ரூ. 80 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளன. இதில் கவனத்திற்கு
கொள்ள வேண்டியது பின்வருவதாகும். அதாவது : (i) கல்வி
நிலையங்களில் உடற் பயிற்சி ஆசிரியர்கள், உடற்பயிற்சி இயக்கு
நர்கள் ஆகியோர் சம்பள வகையிலும், (ii) கல்வி நிறுவனங்கள்
தங்கள் பணத்திலிருந்தோ, அல்லது மாணவர்களிடமிருந்து வசூ
லிக்கும் விளையாட்டுக் கட்டணத்திலிருந்தோ, விளையாட்டு
உடற் பயிற்சிக்கு ஆகும் செலவு வகையிலும் கணிசமான
தொகைகள் செலவு ஆகின்றன. அந்தொகைகள் பட்ஜெட்டில்
தனியாகக் காட்டப்படாமல் பணியாளர் சம்பளம் முதலிய
பொதுத் தலைப்புகளின் கீழ் சேர்க்கப்பட்டு விடுகின்றன
வாகையால் அவை மேற்சொன்ன ரூ. 2.74 இலட்சத்தில்
அடங்கியவை அல்ல.

## விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி.

2. அனைத்துப் பள்ளிகளிலும் உடற்பயிற்சிக் கல்வி கட்
டாயமாகும். எந்தெந்த நடுநிலைப் பள்ளிகளில் உடற்பயிற்சி
ஆசிரியர்கள் உள்ளனரோ அந்தந்த நடுநிலைப் பள்ளிகளில்





6-8 வகுப்புகளிலும், அனைத்து உயர்நிலைப் பள்ளிகளிலும்,
6-9 வகுப்புகளிலும் உடற்பயிற்சிக் கல்வி தேர்வுக்கான பாடங்
களில் ஒன்றாகும். இந்தப் பள்ளிகள் அனைத்திலும் 6-9 வகுப்
புகளில் படிக்கும் மாணவர்கள் உடற்பயிற்சிக் கல்வியில் பெறும்
மதிப்பெண்கள், அடுத்த உயர் வகுப்பிற்கு அனுப்புவதற்கான
கொள்கைகளை வகுக்கும் போது கணக்கில் எடுத்துக்கொள்
ளப்படுகின்றன.

மாணவர்களுக்கு உடற் பயிற்சி அளிப்பதற்கு என உடற்
பயிற்சிக் களரிகளை சுமார் 15 பள்ளிகளில் தொடங்க ஏற்
பளிக்கப்பட்டுள்ளது.

3. 1979 செப்டம்பரில் விளையாட்டு மற்றும் இளைஞர் நல
னைக் கவனிப்பதற்காகத் தனித் துறை ஒன்று அமைக்கப்பட்
டுள்ளது. மாணவர்களிடையேயும் பிற இளைஞர்களிடையே
யும் விளையாட்டு, போட்டிப் பந்தயங்கள், இளைஞர் நலப்
பணிகள் ஆகியவற்றை ஊக்குவிக்கப் பல்வேறு நடவடிக்கைகள்
இத்துறையால் தொடங்கப்பட்டுள்ளன.

4. 1980-81-ல் இத்துறை இவ்வகையில் தொடங்கவிருக்கும்
புதிய திட்டங்கள் பலவாகும்.

## விளையாட்டுப் பள்ளிகளும், விளையாட்டில் சிறந்த மாணவர்களுக்கு தனி விடுதிகளும்.

5. சென்னை (ஒய்.எம்.சி.ஏ. உடற் பயிற்சிக் கல்லூரி),
கோயம்புத்தூர் (பெரிய நாய்க்கன் பாளையம் மாருதி உடற்
பயிற்சிக் கல்லூரி), அண்ணாமலை நகர் (இராணி சீதை ஆச்சி
மேல்நிலைப் பள்ளி) ஆகிய மூன்று இடங்களில் விளையாட்டுப்
பள்ளிகள் தொடங்கப்படும். மாணவர் அங்கு தங்கிப் படிக்க
படிப்புதவித் தொகைகள் வழங்கப்படும். விளையாட்டுக்கான
உடை, உபகரணங்களுக்கான படியும் வழங்கப்படும். சென்னைப்
பள்ளியில் 75 பேரும் மற்ற இரு பள்ளிகளில் பள்ளிக்கு 50
பேரும் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

6. திருநெல்வேலி, மதுரை, திருச்சிராப்பள்ளி, போன்ற
இடங்களில் அவ்வட்டாரத்திலுள்ள உயர்நிலைப்பள்ளி மாணவர்
களில் விளையாட்டுக்களில் வல்லவர்களாக உள்ள மாணவர்கள்
தங்க தனி விடுதிகள் அமைக்கப்படும். அவர்களுக்கு விளையாட்
டுக்கான உடை, உபகரணங்களுக்கான படியும் தரப்படும். முழு
நேர உடற்பயிற்சி இயக்குநர்/பயிற்றுனர் ஒருவரும் நியமிக்கப்
படுவார். இவ்வாறு விளையாட்டுப் பள்ளிகளையும் விளை
யாட்டு வீரர்களுக்கான விடுதிகளையும் தொடங்குவதன் மூலம்
விளையாட்டுக்களில் திறமையுள்ளவர்களை முளையிலேயே அடை
யாளம் கண்டு ஊக்குவிக்கலாம் என்று கருதப்படுகிறது.

7. பள்ளிகளில் விளையாட்டு நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்காகப் பின்வரும் திட்டங்கள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

(1) நடுநிலைப் பள்ளிகளில் விளையாட்டுக்களை ஊக்குவிப்பதற்காக 50 கல்வி மாவட்டங்கள் ஒவ்வொன்றிற்கும் நடுநிலைப்பள்ளி மாணவர்கள் கலந்துகொள்ளத்தக்க விளையாட்டுப் போட்டிகளை கல்வி மாவட்ட அளவில் நடத்துவதற்காக ரூ. 1000 தரப்படும்.

(2) ஒவ்வொரு வட்டாரத்திலுள்ள உயர்நிலைப் பள்ளிகளுக்கும் மேல்நிலைப் பள்ளிகளுக்கும் தனி விளையாட்டுப் போட்டி : ஒவ்வொரு 10 பள்ளிகளுக்கும் தனியே ஒரு விளையாட்டுப்போட்டி நடத்த இத்துறை ரூ. 1,000 பண உதவி தரும். இப்போட்டிகளின் பயனாக குடியரசு நாளன்று மாவட்ட அளவில் நடக்கும் விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்வோரின் சாதனைத் திறன் உயரும்.

## மாணவரல்லாத இளைஞர்களிடையே விளையாட்டுகளையும் இளைஞர் நலப் பணிகளையும் ஊக்குவித்தல்.

விளையாட்டு அரங்கங்கள், நீச்சல் குளம் ஆகியவை அமைக்க மானியங்கள்.—

8. தஞ்சாவூர், தருமபுரி, புதுக்கோட்டை, பெரியார் மாவட்டத் தலைநகரங்களில் தற்பொழுது விளையாட்டு அரங்கங்கள் இல்லை. அவற்றில் விளையாட்டு அரங்கங்கள் கட்ட மானியம் தருவதற்காக 1980–81-ல் ரூ. 4 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

9. ஊராட்சி ஒன்றியங்களுக்கும், நகராட்சிகளுக்கும் அந்தந்த வட்டாரத்தில் சிறு விளையாட்டரங்கங்கள் அமைக்க அரசு மானியம் தரப்படும். உள்ளாட்சி மன்றங்கள் தங்கள் நிதியிலிருந்தும் கொஞ்சம் பணம் போட்டு சிக்கனமாக விளையாட்டுத் திடல் அமைக்கும். இவ்வாறு 25 விளையாட்டரங்கங்கள் கட்ட மானியம் தருவதற்காக ரூ. 5·15 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

10. 1980-81-ல் மாவட்ட தலைமை இடம் ஒன்றில் நீச்சல் குளம் அமைக்க ரூ. 2 இலட்சம் இணை மானியமாகத் தர நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

பிற நடவடிக்கைகள்—

11. ஊராட்சி ஒன்றியங்கள் 374-ல் ஒவ்வொன்றுக்கும் கிராமப்புற (மாணவரல்லாத) இளைஞர்களுக்கான விளையாட்டுப் போட்டி நடத்த ரூ. 250 மானியம் தரப்படும். அவற்றுள் சுமார்



100 ஒன்றியங்கள் தங்கள் பகுதிகளிலுள்ள தனியார்கள் பண உதவியுடன் ஒன்றியத்துக்கு 3 விளையாட்டு வீரர் விருதுக் கோப்பைகளை நிறுவ முன்வரக்கூடும் என்று கருதப்பட்டு அவ்வாறு முன்வரும் ஒவ்வொரு ஒன்றியத்துக்கும் ரூ. 1000 கொடுத்து இரு விருதுக் கோப்பைகளை நிறுவ மொத்தம் ரூ. 2 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

12. இளைஞர் நல வளர்ச்சிக்கான பின்வரும் திட்டங்களும் 1980–81-ல் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.—

(1) கிராமப்புற இளைஞர் மன்றங்கள் 300 தொடங்க நிதியுதவி தரப்படும். சீருடை, விளையாட்டுக் கருவிகள், சுவர்ச் செய்தித்தாள் ஆகியவற்றுக்காக ஒவ்வொன்றுக்கும் சுமார் ரூ. 880 உதவி அளிக்கப்படும்.

(2) மலைப் பகுதிகளிலும் காட்டுப் பகுதிகளிலும் பயணம் செய்வது போன்ற ஊக்கமிகு நடவடிக்கைகளுக்காக இளைஞர்களுக்கு உதவி செய்யக் கருதப்பட்டுள்ளது. மலைப் பகுதிகளுள் நான்கில், ஒரு பகுதிக்கு 30 பேர் வீதம் இவ்வாறு பயணம் செய்ய நிதி உதவி தரப்படும். ஒவ்வொரு குழுவும் 10 நாள் வழிநடைப் பயணம் மேற்கொள்ளும். இதற்கு உதவிப்பணம் தரப்படும்.

(3) இரண்டு இடங்களில் இளைஞர் விடுதிகள் தொடங்க 25 விழுக்காடு அரசு மானியம், ஒரு விடுதிக்கு ரூ. ஒரு இலட்சத்திற்கு மிகாமல் தரப்படும்.

## சென்னையில் விளையாட்டுப் பயிற்றுநர்களுக்கான வட்டார மையம்.

13. சென்னையில் பெரியார் சாலை (பூந்தமல்லி நெடுஞ்சாலை) அருகில் சேத்துப்பட்டு நேரு பூங்காவை ஒட்டி ஒரு விளையாட்டுத் தலைமைக் கேந்திரத்தையும், விளையாட்டு பயிற்றுநர்களுக்கான வட்டார மையத்தையும் அமைக்க ஏற்கெனவே அரசு முடிவு செய்துள்ளது. இதற்காக 9 காணி (216 கிரவுண்டு) நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த இடத்தில் விளையாட்டு பயிற்றுநர்கள் கேந்திரம், விளையாட்டு வீரர்கள் விடுதி, விளையாட்டு இளைஞர் நல இயக்குநரகத் தலைமை அலுவலகம், ஓட்டப் பந்தய மைதானம், கால்பந்து, ஹாக்கி, கிரிக்கெட் போன்ற விளையாட்டுக்களுக்கான வசதிகள் ஆகியற்றை அமைப்பதற்காக ரூ. 15 லட்சம் 1980–81-ல் ஒதுக்கப்பட்டுள்ளது. பள்ளிகளுக்கும் இளைஞர் மன்றங்களுக்கும் இலவசமாக வழங்க ஒரு மாதாந்திர சஞ்சிகை ஒன்றை வெளியிடவும் இத்துறை கருதியுள்ளது.

<u>விளையாட்டு வீரர்களுக்கு ஒய்வூதியம்.—</u>

14. தமிழ்நாட்டைச் சேர்ந்த தலைசிறந்த விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் ஆகியோருள் முதுமைக் காலத்தில் வறுமையால் வாடுபவர்களுக்கும், அப்படிப்பட்டவர்கள் தங்கள் குடும்பங்களை வறுமையில் வாடவிட்டு மறைந்திருந்தால் அவர்கள் குடும்பங்களுக்கும், உதவிப் பணம் ஆக ஒய்வூதியம் தரும் திட்டம் ஒன்றுக்கு 1—4—1978 முதல் அரசு ஏற்பளித்துள்ளது. இந்த உதவிப் பணம் பெறத் தெரிந்தெடுப்பவர்களுக்கு அவர்கள் ஆயுட் காலம் முடிய மாதம் ரூ. 75 ஒய்வூதியம் தரப்படும். முதலில் 3 ஆண்டுகளுக்கு இவ்வுதவிப் பணம் வழங்கப்பட்டுப் பின்னர் அவ்வப்பொழுது புதுப்பிக்கப்படும். இதுவரை 25 விளையாட்டு வீரர்களுக்கு ஒய்வூதியம் வழங்கப்பட்டுள்ளது.

15. தமிழ்நாட்டில் தேசிய மாணவர் படையில் தற்பொழுது 22,000 மாணவர் மாணவியர்களைக் கொண்ட 50 முது நிலைப், பிரிவுகளும் 69,500 மாணவ-மாணவியர்களைக் கொண்ட 676 இளநிலை பிரிவுகளும் உள்ளன. இவற்றில் 4,000 மாணவியரைக் கொண்ட முதுநிலைப் பிரிவுகள் 5-ம், 5,400 மாணவியரை கொண்ட இளநிலைப் பிரிவுகள் 54-ம் அடங்கும். தேசிய மாணவர் படைக்கு இவ்வரசு 1980–81-ம் ஆண்டில் செலவிடவிருக்கும் தொகை ரூ 140 இலட்சமாகும் இத்துறையின்கீழ் பணியாற்றும் மாநில அரசுப் பணியாளர்கள் அமைச்சுப் பணியாளர்கள் ஓட்டுநர்கள், கடைநிலை ஊழியர்கள் முதலியோர் எண்ணிக்கை 1,100 ஆகும்.

16. ஆண்டுதோறும் டில்லியில் குடியரசு நாளில் வழங்கப்படும் தேசிய மாணவர் படை அனைத்திந்திய விருதை அது ஏற்படுத்தப்பட்ட 1962-ம் ஆண்டிலிருந்து இதுவரை எட்டு தடவை தமிழ்நாட்டு தேசிய மாணவர் படைப்பிரிவே பெற்றுள்ளது. 1979-ம் ஆண்டு குடியரசு தினவிழாவில் தமிழ்நாட்டு தேசிய மாணவர்படை முதுநிலையைச்சார்ந்த மாணவியே சிறந்த அனைத்திந்திய மாணவர் படை மாணவியாகத் தெரிந்தெடுக்கப்பட்டார்.

<u>தேசிய பணித் திட்டம்.</u>

17. மாணவர்களுள் விருப்பம் உள்ளவர்கள் தங்களுடைய ஓய்வு நேரத்தை நாட்டுப் பணியில், குறிப்பாக கல்விப் பணியில் செலவிட வாய்ப்பளிக்கும் நோக்கத்துடன் தேசிய பணித் திட்டம் தொடங்கப்பட்டது. இதைச் செயல் படுத்த ஒரு மாணவர்க்கு ஓராண்டுக்காகும் செலவாகிய ரூ. 60-ல் ரூ. 35-ஐ மைய அரசும் ரூ. 25-ஐ மாநில அரசும் ஏற்கின்றன. இத்திட்டத்தில் பங்கேற்ற கல்லூரி மாணவர் எண்ணிக்கை 1976–77-ல் 20,000 ஆக இருந்தது. 1979–80-ல் 40,000-ஆக உயர்ந்துள்ளது. 1980–81 முதல் மேல் நிலைப் பள்ளி வகுப்பு மாணவர்களுக்கும் இத்திட்டம் விரிவாக்கப்படுகிறது. அவ்வாறு மேல் நிலைப் பள்ளிகளில் இத்திட்டத்தின் கீழ் பயன் பெறும் மாணவர் எண்ணிக்கை 10,000 என்றும் சிறப்பு முகாம்களில் பங்குபெறுவோர் எண்ணிக்கை 5,000 என்றும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆண்டுதோறும் இத்திட்டத்தில் பங்கேற்கும் மாணவர்களில் பாதி பேர் விடுமுறைக் காலங்களில் சுமார் 10 நாள் அளவுக்கு கிராமங்களில் சிறப்பு முகாம் நடத்தி கிராமப்புற வளர்ச்சிப் பணிகளை (குறிப்பாக எழுத்தறிவிக்கும் பணியை) செய்கின்றனர். இத்திட்டத்திற்கு 1980–81 ஆம் ஆண்டில் ரூ. 45 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.



1980 ஜூலை 12]

## IX கலைப் பணிகள்.

### (1) இசை, நடனம், நாடகம், ஓவியம் முதலியவை.

<u>இயல் இசை நாடக மன்றம் :</u>

தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் அரசின் முழு நிதி உதவியுடன் இயங்கி வரும் தன்னாட்சி உரிமையுள்ள ஒரு நிறுவனமாகும். அது நடனம் நாடகம், இசை ஆகிய கலைகளைப் பேணி வருகின்றது.

2. இம் மன்றத்தின் பணிகளில் முக்கியமானவை—திறம் மிக்க சிறந்த கலைஞர்களை ஊக்குவிப்பது; சிறந்த கலைஞர்களுக்கு '' கலைமாமணி '' என்ற பட்டமளித்து சிறப்பிப்பது இம்மாநிலத்திலிருந்து பிற மாநிலங்களுக்கும், பிற மாநிலங்களிலிருந்து இம்மாநிலத்திற்கும் போய்வரும் கலைக்குழுக்களை கவனிப்பது போன்றவையாகும். 1980 ஆகஸ்டு மாதத்தில் இம்மன்றத்தின் வெள்ளி விழா கொண்டாடப்படும்.

<u>நாடகப் பள்ளி :</u>

3. இளம் மாணவர்களுக்கு நாடகக் கலையில் தனிப் பயிற்சி அளிக்கவும் அதனுடன் பொதுக் கல்வி கற்பிக்கும் வழிவகை செய்து நாடகத்தில் ஆர்வமுள்ள மாணவர்களை ஊக்குவிக்க நாடகப் பள்ளி ஒன்று தொடங்கப்பட இருக்கிறது. இப்பள்ளிக்கான பாடத்திட்டத்தை குழு ஒன்று வகுத்துத் தந்துள்ளது. அந்தப் பாடத்திட்டத்துக்கு இப்பள்ளியை அமைப்பதற்காக ஆலோசனை தர அமைந்துள்ள குழுவின் ஏற்பினைப்பெற்று பள்ளியை தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

[1980 ஜூலை 12

## அரசுக் கலைஞர்கள்

### அரசுக் கலைஞர்கள் :

4. 1979 ஆம் ஆண்டு திருவள்ளுவர் நாளன்று சிறந்த கலைஞர்கள் எட்டு பேருக்கு ''அரசுக் கலைஞர்'' என்ற விருது வழங்கப்பட்டது. அவர்கள் ஒவ்வொருவருக்கும் மாதம் ரூ. 1,000 வீதம் ஐந்தாண்டுகளுக்கு மதிப்பூதியம் வழங்கப்பெறும்.

### வறுமையால் வாடும் கலைஞர்களுக்கு ஓய்வூதியம் :

5. வறுமையால் வாடும் ஏறத்தாழ 900 கலைஞர்கள் மாதந்தோறும் இத்திட்டத்தின் கீழ் ரூ. 75 ஓய்வூதியம் பெற்றுவருகின்றனர். இத்தொகை 1—4—1980 முதல் ரூ. 150 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. ஓய்வூதியம் முதற்கண் 3 ஆண்டு காலத்திற்கு வழங்கப்படுகின்றது. ஓய்வூதியம் பெறும் கலைஞர்கள் வறுமை நிலையிலேயே தொடர்ந்திருந்தால், மீண்டும் மூன்று ஆண்டு, மூன்று ஆண்டாக புதுப்பிக்கப்படுகிறது. அவ்வாறு ஓய்வூதியம் பெறும் கலைஞர் இறந்துவிட்டால் அவரது மனைவிக்கும் அவர் நிதி நிலையை பொறுத்து, இறக்கும் வரை மூன்றாண்டுகளுக்கொருமுறை புதுப்பித்து இந்த ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. 1980–81-ல் மேலும் 100 கலைஞர்களுக்கு ஓய்வூதியம் அளிக்க நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

### ஓவியம்—நுண் கலைக் குழு :

6. ஓவியம் முதலிய நுண்கலைகளைப் பேணி வளர்க்கும் தமிழ்நாடு ஓவியம் நுண்கலைக்குழு தன்னாட்சியுரிமையுள்ள நிறுவனமாகும். அது ஆண்டு தோறும் ரூ. 2 லட்சம் மானியம் பெறுகிறது. இக்குழு ஆண்டுதோறும் கலைக் கண்காட்சிகள் நடத்தி சிறந்த ஓவியங்களுக்கும் சிற்பங்களுக்கும் ரொக்கப் பரிசு அளிக்கிறது. உதகமண்டலத்திலும் கோயம்புத்தூரிலும் அது ஓவியக்கண்காட்சிகளை நடத்தியுள்ளது. ''ஒரு நபர் ஓவியக் கண்காட்சி'' நடத்தவும் இது உதவி செய்கிறது. ஆண்டுதோறும் ஓவியர் முகாம்களையும் அது நடத்துகிறது.

7. திறம் மிக்க இளம் கலைஞர்களுக்கு 10 மாதங்களுக்கு மாதம் ரூ. 150 வீதம் உதவித் தொகை அளித்து அவர்கள் ஓவியக் கலையில் பயிற்சி பெற உதவுகிறது. சிறந்த ஓவியக் கலைஞர்களுக்கு ரொக்கப் பரிசுகள் தந்து பாராட்டவும் அது கருதியுள்ளது.



1980 ஜூலை 12]

8. திருச்சிராப்பள்ளி, வேலூர், காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் அமைந்துள்ள ஓவியப் பயிற்சி மையங்களுக்கு இக்குழு மானியம் தருகிறது. பள்ளிகளில் ஓவிய ஆசிரியர்களாகப் பணி செய்பவர்களுக்கு ஓவியத்தில் மறுபயிற்சி வகுப்புகள் நடத்தியுள்ளது.

9. நீலகிரி மாவட்டத்தில் உதகமண்டலத்தருகே நஞ்சநாட்டில் 67 ஏக்கர் நிலப் பகுதி ஒன்றில் ''ஓவியர் சிற்றூர்'' ஒன்றை நிறுவுவது ஆலோசனையிலுள்ளது.

10. டெல்லியிலுள்ள லலித கலை அகாடெமியும் இவ்வரசும் சேர்ந்து தொடங்கிய அந்த அகாடெமியின் வட்டார மையம்ஒன்று 1978 அக்டோபரிலிருந்து சென்னையில் செயல்படுகிறது. அந்த மையத்துடன் இணைந்து நுண்கலைக் குழு கண்காட்சிகளையும் வேறு திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது.

### ஜவகர்லால் நேரு பால பவன் :

11. ஜவகர்லால் நேரு பால பவன் ஒன்று சென்னையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. கலை, இசை, நடனம் முதலியவற்றில் இளஞ்சிறார்களிடம் மறைந்துள்ள திறமைகளை வளர்த்துக் கொள்ள வசதி அளிக்கும்படி, கல்வி மற்றும் மனமகிழ் மன்றமாக அது இருக்கும். 1978 டிசம்பரில் இதற்கு ஒரு தனி இயக்குநர் நியமிக்கப்பட்டுள்ளார். மற்றொரு பாலபவன் திருச்சியில் அமைக்கப்பட்டுள்ளது.

### தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரிகள் :

12. சென்னையிலுள்ள தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரியில் 1979–80-ல் 327 பேர் பயின்றனர். அதில் முழுநேர ஆசிரியர்கள் 23 பேரும், பகுதி நேர ஆசிரியர்கள் 13 பேரும் உள்ளனர். இக்கல்லூரியில் வாய்ப்பாட்டு, கருவி இசை, பரதநாட்டியம் ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்படுகின்றது. நாதஸ்வரம், தவில் பயில்வோர் மாதம் ரூ. 60 வீதம் ஆண்டுக்கு 10 மாதம் பயிற்சி உதவிப் பணம் பெறுகின்றனர். வேறு வேலை செய்பவர்களுள் இசையார்வமுள்ளோரை ஊக்குவிக்கும் வகையில் சென்னை நகரில் நான்கு மையங்களில் மாலை நேரங்களில் இசை வகுப்புகள் (வாய்ப்பாட்டு, வயலின், வீணை) நடத்தப்படுகின்றன. அவற்றில் 142 பேர்கள் பயின்று வந்தனர்.

13. 1979 ஜனவரியில் மதுரையில் தொடங்கிய இசைக் கல்லூரியும், சென்னைக் கல்லூரியிலுள்ளது போன்ற பயிற்சிகளை அளிக்கிறது. அதில் இப்பொழுது 100 பேர்கள் பயின்று வருகின்றனர்.

[1980 ஜூலை 12

## (2) ஆவணக் காப்பகமும் அருட்காட்சியகங்களும்.

1. தென் ஆசியாவில் வளமான அரசு ஆவணத் தொகுப்பைப் பெற்றுள்ளது, தமிழ்நாடு அரசு ஆவணக் காப்பகமாகும். அது ஒரு வரலாற்று ஆராய்ச்சி மையமாகத் திகழ்வதுடன் அரசு ஆவணக் காப்பகமாகவும் செயல்படுகிறது. 300 ஆண்டுகளுக்கு முற்பட்ட பல ஆவணங்கள் அதில் உள்ளன கடந்த 30 ஆண்டு களுக்கு முந்திய ஆவணங்கள் ஆராய்ச்சியாளர்களுக்கு ஆய்வுக்குத் தரப்படுகின்றன. ஆராய்ச்சியாளர் கூடத்தில் ஆராய்ச்சியாளர் களுக்கு சிறந்த வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

2. ஆவணங்களை அறிவியல் முறையில் பாதுகாத்துப் பேணி வைக்க நவீன கருவிகள் வாங்கித் தரப் பெற்றுள்ளன. 1978–79-ல் நுண் நிழற் படக் கருவி ஒன்று வாங்க ஏற்பளிக்கப் பட்டது. புகைப்பட முறையில் படிபெருக்கும் கருவி ஒன்றும் வாங்கப்பட்டுள்ளது.

3. 1973-ஆம் ஆண்டு அமைக்கப் பெற்ற "தமிழ்நாடு வரலாற்று ஆராய்ச்சிக் குழு" தென்னகத்தின் பல்வேறு வாழ்க்கை அம்சங்கள் குறித்து ஆராய்ச்சிகளை ஊக்குவிப் தற்காக இரண்டாண்டு கால ஆராய்ச்சி மாணவப் பணியிடங் களும் வழங்கி வருகிறது. ஒவ்வொரு ஆராய்ச்சி மாணவருக்கும் ரூ. 5,000 சில்லறைச் செலவினங்களுக்காக ஆண்டு தோறும் அளிக்கப்படுகின்றது.

4. ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி காலத்தைச் சேர்ந்தவை யான (17–18 ஆவது நூற்றாண்டுகளைச் சார்ந்த) முக்கியமான ஆவணங்களின் படிகள் அல்லது சுருக்கங்கள் அச்சிடப்பட்டு ஆர்வ முள்ள வரலாற்றாராய்ச்சியாளருக்குப் பெரிதும் பயன்படும் புத்தகங்களாக வெளியிடப்பட்டு மிகக் குறைந்த விலையில் ஆவணக் காப்பகத்தில் ரொக்க விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

5. மாவட்ட விவரச் சுவடிகளை திருத்தியமைத்து மீண்டும் எழுதுவதற்கான மாவட்ட விவரச் சுவடிகள் பிரிவும் ஆவணக் காப்பக மட்டும் வரலாற்று ஆராய்ச்சி ஆணையரின் கட்டுப் பாட்டின் கீழ் தான் செயல்படுகின்றது.

அருங்காட்சியகங்கள்.—

6. சென்னை, புதுக்கோட்டை, சேலம் ஆகிய இடங்களில் அரசு அருங்காட்சியகங்கள் உள்ளன. அவற்றில் சிறந்த சிற்பங்கள் மரச் செதுக்கு வேலைகள், வண்ண ஓவியங்கள் ஆகியவற்றோடு தொல் பொருளியல், மானிடவியல், இயற்கை அறிவியல் ஆகிய துறைகளைச் சார்ந்த பொருட்களும் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.



1980 ஜூலை 12]

7. மதுரையில் 1980–81-ல் வட்டார அருங்காட்சியகம் ஒன்று அமைக்கப்படும். சென்னையில் ரூ. 29 இலட்சம் செலவில் குழந்தைகள் அருங்காட்சியகம் ஒன்று அமைக்க ஏற்பளிக்கப் பட்டுள்ளது. சென்னை அருங்காட்சியகத்தைச் சார்ந்துள்ள தேசிய கலைக்கூடத்துக்கு ரூ. 16.50 இலட்சம் செலவில் புதிய கட்டிடம் ஒன்று கட்டப்பட இருக்கிறது. ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டை ஒட்டி மதுரையில் இத்துறை இலெமூரியா கண்டம் பற்றிய நிலையான காட்சி ஒன்றை அமைக்க இருக்கிறது.

## (3) பொது நூலகங்கள்.

1. இந்தியாவிலேயே பொது நூலகங்களுக்காக முதன் முதலாக (1948லேயே) சட்டம் ஒன்று இயற்றிய மாநிலம் தமிழ்நாடுதான். அது தொடர்ந்து நூலகப் பணி வளர்ச்சிக்கு உதவி வருகிறது.

2. கன்னிமரா பொது நூலகம் மாநிலத்தின் மைய நூலக மாகும். அதில் 3.09 இலட்சம் புத்தகங்கள் உள்ளன. உறுப் பினர்கள் 12,300 பேராவர். இது தவிர அரசு நூலகம், மற் றொன்றும் இத்துறையின் கீழுள்ளது. 1977-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 17-ம் நாள் முதல் இத்துறையின் கீழ் வந்த கவிமணி நிலைய நூலகம், நாகர்கோயில் ஆகும் அது.

3. புதுக்கோட்டை கன்னியாகுமரி மாவட்டங்கள் தவிர பிற மாவட்டங்களில் மாவட்டத்திற்கு ஒரு நூலக ஆணைக் குழு உள்ளது. மாவட்டத்திற்கு ஒரு நூலகம் வீதம் தற்போது 13 மாவட்ட மைய நூலகங்களும் 1,434 கிளை நூலகங்களும் உள்ளன.

4. இந் நூல் நிலையங்கள் அனைத்திலும் உள்ள புத்தகங்களின் மொத்த எண்ணிக்கை 73 இலட்சம். இவையனைத்தின் உறுப்பி னர்களும் மொத்தம் 8 இலட்சம் பேர்கள். உறுப்பினர்களல்லாத வர்களும் நூல் நிலையங்களுக்குச் சென்று அங்குள்ள புத்தகங் களைப் பயன்படுத்தலாம். வளர்ந்து வரும் இந் நூலகப் பணியில் உள்ளவர்கள் எண்ணிக்கை சுமார் 3,284 ஆகும்.

5. 1978–79-ல் மாவட்ட நூலக ஆணைக் குழுக்கள் நூலக மேல்வரியாக ரூ. 97 இலட்சம் பெற்றன (சென்னை மாவட்டக் குழு பெற்ற ரூ. 19 இலட்சம் உட்பட) சென்னை தவிர பிற மாவட்டங்களில் உள்ள நூலக ஆணைக் குழுக்கள் நூலக மேல் வரி மூலம் வசூலிக்கப்படும் தொகைக்குச் சமமாக இணை மானி யத்தையும் அரசிடமிருந்து பெறுகின்றன. 1973–74-ம் ஆண்டி லிருந்து அத்தகைய இணை மானியத்தில் 25 விழுக்காடு புத்தகங் களாகக் கொடுக்கப்படுகின்றது. இவ்வாறு 1978–79-ம் ஆண்டில் கொடுத்த புத்தகங்கள் 1,484 ; மொத்தம் கொடுத்த படிகள் 3,66,000 ; செலவு ரூ. 25 இலட்சம்.

6. சென்னை மாவட்ட நூலக ஆணைக் குழுவைப் பொறுத்த வரை அது 1979-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் நாள் முதல் 1979-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 31-ம் நாள் முடியவுள்ள காலத்தில் தனது நூலகங்களுக்கு வாங்கிய புத்தகங்கள் 4,870; மொத்த படிகள் 2,94,971 ; ஆன செலவு ரூ. 13.91 இலட்சம் ஆகும்.

7. நூலக சீரமைப்புக் குழு, அதன்பின் அமைக்கப்பட்ட அதிகாரிகள் குழு ஆகியவற்றின் பரிந்துரைகள் அரசின் ஆய்வில் உள்ளன. நூலக ஆணைக் குழுக்களின் பணியாளர்களை அரசு ஊழியர்களாக ஆக்க வேண்டாம் என்ற அதிகாரிகள் குழு பரிந்துரையை அரசு ஏற்றுள்ளது. எனினும் அக்குழு பரிந்துரைத்தபடி பின்வரும் சலுகைகள் அப்பணியாளர்களுக்கு அண்மையில் விரிவாக்கப்பட்டுள்ளன.—

(1) உள்ளாட்சி மன்றப் பணியாளர்களுக்கு இருப்பது போன்ற ஓய்வூதியம்—குடும்ப ஓய்வூதியம்—சாவு மற்றும் ஓய்வுப் பணிக்கொடை சலுகை நூலக ஆணைக் குழுக்களின் பணியாளர்களுக்கு 1974-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் நாள் முதல் விரிவாக்கப்பட்டுள்ளது. பணப்பயன் 1979-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் நாள் முதல் கிடைக்கும். அதாவது 1974-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் நாள் அன்று அல்லது அதற்குப் பின் ஓய்வு பெறுபவர்களுக்கு இச்சலுகைகள் உண்டு. ஆனால் 1974-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் நாள் முதல் 1979-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் நாள் வரையுள்ள காலத்தில் ஓய்வு பெற்றவர்களுக்கு பணப்பயன் 1979 ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் நாள் முதல்தான் கணக்கிட்டுத் தரப்படும்.

(2) குடும்ப நலத்திற்கான "குழு காப்புறுதித் திட்டமும்" 1979-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 10-ம் நாள் முதல் விரிவாக்கப் பட்டுள்ளது.

## (4) தொல் பொருளியல்

1. தொல் பொருள் ஆராய்ச்சித்துறை மாநிலத்தில் உள்ள முக்கியமான வரலாற்று நினைவுச் சின்னங்களை பேணிப் பாதுகாத்து வருகிறது. இதுவரை 71-க்கு மேற்பட்ட சின்னங்களை எடுத்துக் கொண்டு 1966-ம் ஆண்டு நிறைவேறிய தமிழ்நாடு பண்டைய வரலாற்றுச் சின்னங்கள் மற்றும் தொல்பொருள் ஆய்வு இடங்கள் சட்டத்தின்கீழ் அவற்றைப் பாதுகாத்து வருகிறது. இவ்வாண்டு தஞ்சாவூர் அரண்மனை, சிவகங்கைக் கோட்டை, மதுரை சொக்கநாத நாயக்கன் சமாதி போன்றவற்றை சிறந்த முறையில் பழுது பார்க்கும் பணி நடைபெறும்.



2. 1979-80-ம் ஆண்டில் இராமநாதபுரம் மாவட்டம் திருப்பத்தூர் வட்டம் பொன்னமராவதி அருகே ஒரு குன்றின் மேல் செதுக்கப்பட்டிருந்த வியக்கத் தகுந்த முக்கியம் வாய்ந்த தமிழ்க் கல்வெட்டு ஒன்றை இத்துறை கண்டு பிடித்தது. அது ஒரு பாறையின் மேல் சுமார் 15 மீட்டர் நீளம் 3 மீட்டர் உயரத்துக்கு செதுக்கப்பட்டுள்ளது. சுமார் கி.பி. 300 என்று சொல்லத் தகுந்த தமிழ் பிராமி எழுத்தில் உள்ளது. இதுவரைக் கண்டு பிடித்த பழந்தமிழ் கல்வெட்டுகளில் மிக நீண்டதும் மிக முக்கியம் வாய்ந்ததும் இதுவே. தமிழக வரலாற்றில் இதுவரை இருண்ட காலம் என்று அழைக்கப்பட்ட காலத்தைப்பற்றி அறிய ஒளி தருவதாக இக்கல்வெட்டு உள்ளது. சேந்தன் மகன் கூற்றன் என்பான் ஆட்சிக் காலத்தில் வெட்டப்பட்டதாகக் கல்வெட்டு கூறுகிறது. பலவழிகளிலும் முக்கியமானது இக்கல்வெட்டு. தொல்பொருள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் இக்கல்வெட்டை இத்துறை பாதுகாப்புக்கு எடுத்துள்ளது.

3. மதுரையில் நடைபெறும் 5 ஆவது உலகத் தமிழ் மாநாட்டை ஒட்டி ஒலி—ஒளிக் காட்சி ஒன்றை ரூ. 28 லட்சம் செலவில் இத்துறை மதுரை, திருமலைநாயக்கன் மகாலில் அமைத்து வருகிறது.

4. 1980-81-ல் மொத்தம் ரூ. 3.70 லட்சம் செலவில் (1) தஞ்சாவூர் மராட்டிய மன்னர் அரண்மனை, (2) இராமேசுவரம், (3) கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் இத்துறை தொல்பொருள் தல அருங்காட்சியகங்களை அமைக்க இருக்கிறது. தஞ்சாவூர் அரண்மனையில் உள்ள சரஸ்வதி மகால் நூலகம் உள்ளிட்ட கட்டடத் தொகுதி முழுவதையும் பேணிச் சீரமைக்க ஒரு விரிவான திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இதற்கு தாராளமாக மைய அரசுப் பண உதவி கிட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

5. இத்துறை 1980-81-ல் 6 மாணவர்களுக்கு, தொல் பொருளியல், பண்டைக் கால மற்றும், இடைக்கால வரலாறு, கல்வெட்டியல் ஆகியவற்றில் ஆராய்ச்சிப் பணியிடங்களை, மாதம் ஆளுக்கு ரூ. 1,000 ஆராய்ச்சிப் பணி ஊதியம் கொடுத்து, தொடங்க இருக்கிறது. இதற்கு ஆண்டுக்கு ரூ. 80,000 செலவாகும்.

6. கோயம்புத்தூர், சேலம், தென் ஆர்க்காடு, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், செங்கல்பட்டு, மதுரை, திருநெல்வேலி ஆகிய இடங்களில் இத்துறை தொல் பொருளியல் பிரிவுகள் ஒன்பதை நிறுவியுள்ளது. பழைய கைப்பிரதிகள், ஓலைச் சுவடிகள், உதிரிச் சிற்பங்கள் ஆகியவற்றைச் சேகரித்துப் பாதுகாத்தல் கிராமப் புற கலைகளைக் கணக்கெடுத்தல் போன்ற பணிகளை இவை செய்கின்றன.

7. ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டை ஒட்டி இதுவரை அச்சில் வெளிவராத தமிழ்ச் சுவடிகளை வெகு விரைவில் பெரும் எண்ணிக்கையில் அச்சிட்டு வெளியிடுவதற்கான திட்டத்தின்கீழ் தமிழ் ஓலைச் சுவடி நூல்களை வெளியிடும் பணியினை இத்துறை ஏற்றுள்ளது. அவ்வாறு வெளியிடத் தகுந்த நூல்களைப் பற்றி ஒரு வல்லுநர் குழுவைக் கலந்து தேர்ந்தெடுத்து அச்சிடும் பணியை இத்துறை இயக்குநர் மேற்கொண்டுள்ளார். நூல்களை தமிழ் நாட்டுப் பாட நூல் நிறுவனம் அச்சிடும். பண்டைப் கைப் பிரதிகளைப் படிப்பதில் பயிற்சி அளிப்பதற்காக வேலை வாய்ப்பு அற்ற தமிழ்ப் புலவர்களுக்கும் பட்டதாரிகளுக்கும் பல இடங்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது. சென்னையிலுள்ள அரசு கீழ்த்திசைக் கையெழுத்துப் பிரதி நூலகம் கல்லூரிக் கல்வி இயக்குநர் நிர்வாகத்திலிருந்து தொல் பொருளியல் இயக்குநர் நிர்வாகத்துக்கு இப்பொழுது மாற்றப்பட்டுள்ளது.

8. கரூரிலும் வரலாற்றுத் தன்மைவாய்ந்த வேறு சில இடங்களிலும் இத்துறை அகழ்வாராய்ச்சி மேற்கொண்டுள்ளது. சோழர்களின் புகழ் பெற்ற தலைநகரமான கங்கை கொண்ட சோழபுரம்; மதுரையருகே கோவலன் பொட்டல், கோயம்புத்தூர் அருகே போலுமாம்பட்டி, இராமநாதபுரம் மாவட்டத்தில் தொண்டி ஆகிய இடங்களில் இப்பொழுது அகழ்வாராய்ச்சி நடக்கிறது. மைய அரசின் தொல்பொருளியல் துறையின் ஒத்துழைப்பைப் பெற்று காவேரி பூம்பட்டினத்திலும் இத்துறை அகழ்வாரய்ச்சி நடத்தக் கருதியுள்ளது.

9. இத்துறை தொல் பொருளியல் ஆய்வுக்கூடம் ஒன்று அமைத்துள்ளது. அது மேலும் விரிவாக்கப்படும். இத்துறையின் நூல் அச்சிடும் பிரிவை விரிவாக்கி தொல்பொருளியல் மற்றும் ஆராய்ச்சி வெளியீடுகளைப் பெரும் எண்ணிக்கையில் வெளியிடவும் ஓவிய அஞ்சல் அட்டைகளை அச்சிட்டு விற்கவும் இத்துறை எண்ணியுள்ளது.

## X தமிழ் வளர்ச்சி.

1980–81 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையில் தமிழ் வளர்ச்சிக்காக ஒதுக்கியுள்ள தொகை ரூ. 136 இலட்சமாகும். பள்ளிகள், கல்லூரிகளில் பணியாற்றும் தமிழாசிரியர்கள் வகையிலும், கல்வி நிலையங்களில் பொதுவாக மேற் கொள்ளப்படும் தமிழ் வளர்ச்சிப்பணிகள் வகையிலும் ஆகும் கணிசமான செலவு இதில் சேர்ந்ததல்ல. இத்தொகையில் ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டுக்காக ரூ. 73 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. கல்லூரிகளில் தமிழைப் பயிற்சி மொழியாகக் கொண்டு பயிலும் மாணவர்களுக்கான புத்தகப்படி வழங்கிட ரூ.28 இலட்சம் செல



விடப்படும். கல்லூரிப் பாடப் புத்தகங்களைத் தமிழில் கொணர்வதற்காக ரூ. 3 இலட்சம் செலவிடப்படும். தமிழ் வளர்ச்சித் துறைக்கும் அதன் பணிகளுக்கும் ரூ. 18 இலட்சம் செலவிடப்படும். வேறு தமிழ் வளர்ச்சிப் பணிகளுக்காக ரூ. 14 இலட்சம் செலவிடப்படும்.

### தமிழ் வளர்ச்சி இயக்ககம்.

2. அனைத்து நிலைகளிலும் தமிழை மாநில அரசின் ஆட்சி மொழியாகக் கொள்ளும் அரசுக் கொள்கையைப் பின்பற்றி சட்டங்கள், விதித் தொகுப்புகள், நடைமுறை நூல்கள் ஆகியவற்றுள் பலவற்றின் தமிழ் வடிவங்களும், அரசுத்துறைகள் பயன்படுத்திட ஆட்சிச் சொல்லகராதிகளும் சிறப்புச் சொல்லகராதிகளும் வெளியிடப் பட்டுள்ளன. மாவட்ட மட்டத்தில் தமிழை ஆட்சி மொழியாகக் கொள்ளும் பணியில் ஏற்படும் வளர்ச்சி தனி ஆய்வுப் பணியாளர்களைக் கொண்டு ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. தலைமைச் செயலகத் துறை ஒவ்வொன்றிலும் ஒரு அதிகாரியும், துறைத் தலைவர்கள் அலுவலகங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு அதிகாரியும் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு அதிகாரியும் தமிழ் வளர்ச்சி இயக்குநருடன் நெருங்கிய தொடர்பு கொண்டு தமிழை ஆட்சி மொழியாக்கும் திட்டம் முழு வெற்றி அடையப் பணியாற்ற வேண்டுமென ஆணையிடப்பட்டுள்ளது.

3. 1867 ஆம் ஆண்டு முதல் வெளியிடப் பெற்றுள்ள தமிழ் நூல்களின் விவர அட்டவணை ஒன்று தொகுக்கப்பட்டு வருகிறது. 1867 முதல் 1925 ஆம் ஆண்டு வரையிலான காலத்திற்கு 13 தொகுதிகள் ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளன. எஞ்சிய தொகுதிகளுக்கான பணிகள் தொடர்ந்து நடைபெற்றுவருகின்றன.

4. தமிழில் மூல நூல்களை ஆக்கி வெளியிடும் ஆசிரியர்களுக்கு நிதி உதவி அளிப்பதற்கான திட்டம் ஒன்றையும் தமிழ் வளர்ச்சித் துறை செயல்படுத்தி வருகிறது. தமிழ்க் கலைக்களஞ்சியத்தின் இரண்டாம் பதிப்பு வெளிவருவதற்கு வேண்டிய உதவிகளையும் அரசு செய்யும்.

### தமிழ் நாட்டு வரலாறு.

5. தமிழ் நாட்டு வரலாற்றை எழுதுவதற்காக வல்லுநர் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. ஆறு தொகுதிகளுடைய இவ்வரலாற்றில் இரண்டு தொகுதிகள் எழுதி முடிக்கப்பெற்றுள்ளன. தொல் பழங்காலத்தைப் பற்றிய முதல் தொகுதி ஏற்கெனவே வெளியிடப்பட்டுவிட்டது. சங்க காலம் பற்றிய இரண்டாவது தொகுதி விரைவில் வெளியிடப்படும்.

## பிற மாநிலங்களில் தமிழ்க் கல்வியையும் தமிழாராய்ச்சியையும் ஊக்குவித்தல்.

6. மற்ற மாநிலங்களிலுள்ள பல்கலைக் கழகங்களும், பிற நிறுவனங்களும் தமிழ்ப் பேராசிரியர் பதவிகளை ஏற்படுத்தவும், தமிழில் ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்ளவும், தமிழில் பகுதி நேரப் பட்டப்படிப்பு வகுப்புகளை நடத்தவும் ஒவ்வொரு பல்கலைக் கழகத்துக்கும் ரூ. 15,000 விதம் இவ்வரசு தாராளமாக மானிய உதவி செய்து வருகிறது. தமிழில் பகுதி நேரப் பட்டயப் படிப்பு வகுப்புகளை தொடங்குவதற்காக பிற மாநிலப் பல்கலைக் கழகங்கள், நிறுவனங்கள் ஆகியவை 15-க்கு 1978-79-லும் 8-க்கு 1979–80-லும் இம்மானியம் ஏற்பளிக்கப்பட்டது.

திருவனந்தபுரத்திலுள்ள "திராவிட மொழிகளின் மொழியியல் ஆராய்ச்சிக்கான பன்னாட்டுப் பள்ளி" யின் ஆராய்ச்சிப் பணிகளுக்காக ஆண்டுக்கு ரூ. 1,36,000 விதம் 1978–79 முதல் 5 ஆண்டுகளுக்கு இவ்வரசு மானியம் தர ஏற்பளித்துள்ளது. இப்பள்ளிக்கான அலுவலகக் கட்டடமும் அரங்கமும் கட்ட ரூ. 4,51,000 மானியம் தரவும் இவ்வரசு இசைந்து முதல் தவணையாக ரூ. 1 இலட்சம் ஏற்கெனவே தரப்பட்டு விட்டது.

## மொழி பெயர்ப்புப் பணி.

7. பிறமொழி நூல்களில் சிறந்தவற்றை தமிழில் வெளியிடுவதற்கும், அரிய தமிழ் இலக்கியங்களைப் பிற மொழிகளில் வெளியிடுவதற்குமான திட்டம் நன்கு நடைபெற்று வருகிறது. ஆங்கில நூல்கள் நான்கின் தமிழ் வடிவமும், "பதிற்றுப் பத்து" "ஞான ரதம்" ஆகியவற்றின் ஆங்கில வடிவங்களும் தயாரிக்கப்பட்டு அச்சிற்குக் கொடுக்கப்பட்டுள்ளன. மேற்கொண்டு மொழிபெயர்க்க வேண்டிய நூல்களின் பட்டியலும் முடிவு செய்யப்பட்டுள்ளது. தமிழாக்கம் செய்யவிருக்கும் நூல்களில் பெர்ட்ராண்ட் ரசல், ழீன்பால் சார்டர், கிப்பன் போன்றோர் நூல்களும் அடங்கும்.

## தமிழ்க் கவிஞர்களுக்கும் அறிஞர்களுக்கும் பாராட்டு.

8. இசுலாமியத் தமிழ் இலக்கியத்தில் ஆராய்ச்சி செய்வதற்காக மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் உமறுப் புலவர் பெயரில் ஆராய்ச்சிப் பணியிடம் ஒன்றையும், பாவேந்தர் பாரதிதாசன் நினைவாக சென்னைப் பல்கலைக் கழகத்தில் அறக்கட்டளைச் சொற்பொழிவுகளையும் இவ்வரசு ஏற்படுத்தியுள்ளது.



பாவேந்தர் பாரதிதாசன் 'விருது' ஒன்றையும் அரசு ஏற்படுத்தியுள்ளது. ஆண்டுதோறும் தமிழ்க் கவிஞர் ஒருவருக்கு இவ்விருது வழங்கப்பட்டு அவருக்கு பதக்கம் ஒன்றும், ரூ. 10 ஆயிரம் ரொக்கப் பரிசும் அளிக்கப்படும். 1978-க்கான விருது கவிஞர் சுரதாவுக்கு அளிக்கப்பட்டது. 1979-க்கான விருது ஆளுக்கு ரூ. 10 ஆயிரம் விதம் இருவருக்கு அதாவது இறந்துவிட்ட கவிஞர்கள் வாணிதாசன், எஸ். டி. சுந்தரம் ஆகியோர் குடும்பத்தினருக்கு அளிக்கப்பட்டது.

## வறுமையில் வாடும் தமிழறிஞர்களுக்கு ஓய்வூதியம்.

9. வறுமையில் வாடும் தமிழறிஞர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்கான திட்டம் ஒன்று 1978 ஆம் ஆண்டு சனவரியில் தொடங்கப்பட்டது. மாத வருமானம் ரூ. 100-க்கு மேல் இல்லாமல் இருக்கிற தமிழறிஞர்களுக்கு இந்த ஓய்வூதியம் இப்பொழுது தரப்படுகிறது. இதுவரை 32 அறிஞர்களுக்கு ஓய்வூதியம் தரப்பட்டுள்ளது. ஓய்வூதியத் தொகை இப்பொழுது மாதம் ரூ. 250 ஆக உள்ளது. தமிழ் மொழிக்கும் இலக்கியத்துக்கும் அரும்பணியாற்றியுள்ள அறிஞர்களுக்கும், அத்தகையோர் தங்கள் குடும்பங்களை வறுமை நிலையில் விட்டு விட்டு மாண்டு போய் இருந்தால் அவர்கள் குடும்பங்களுக்கும் இந்த ஓய்வூதியம் தரப்படும், ஓய்வூதியம் பெறத் தகுதி வாய்ந்தவர்களை வல்லுநர்க் குழு ஒன்று தேர்ந்தெடுக்கிறது. ஓய்வூதியம் முதலில் மூன்று ஆண்டுகளுக்குத் தரப்படுகிறது. மூன்றாண்டு, மூன்றாண்டாகப் புதுப்பித்துக் கொள்ளவும் வகை செய்யப்பட்டுள்ளது,

## செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி.

10. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்டத்தின் இயக்குநர் தமிழிலும், திராவிட மொழிகளிலும் சிறந்த அறிஞரான திரு. ஞா. தேவநேயப் பாவாணர் ஆவார். அவர் இந்த அகர முதலியைத் தொகுக்கும் பணியில் அவர் முனைப்புடன் ஈடுபட்டுள்ளார். முழு விரிவு வாய்ந்ததாகவும் திட்ட வட்டமானதாகவும் அமையும் அந்நூல் 13 தொகுதிகளாக வெளிவரும். முதல் தொகுதியின் முதல் பகுதி விரைவில் வெளியிடப்படும்.

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

11. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தன்னுடைய தமிழ் வளர்ச்சிப் பணிகளைத் தொடர்கிறது. அதாவது தமிழ் ஆராய்ச்சி பற்றிய அரையாண்டு ஆராய்ச்சி இதழை வெளியிடுதல்; மொழிப் பயிற்சிக்கூடம் ஆகியவற்றின் உதவியுடன் வெளிநாட்டு மாணவர்களுக்கு தமிழ் கற்றுத் தருதல்; தமிழ் இலக்கியக் கொள்கைகள் பற்றிய மாதாந்திரக் கருத்தரங்குகளை நடத்துதல்

இலக்கியம், பண்பாடு போன்ற துறைகளில்; தமிழரின் மரபுச் செல்வம் பற்றிய கருத்தரங்குகளை நடத்துதல், தமிழ் இலக்கியம், வரலாறு பற்றிய சிறந்த நூல்களை வெளியிடுதல்; ஆகிய பணிகளைச் செய்து வருகிறது.

12. தமிழிலிருந்து பிறமொழிகளிலும், பிறமொழிகளிலிருந்து தமிழிலும் மொழி பெயர்க்கப்பட்ட இலக்கியங்களின் பட்டியலை இந்நிறுவனம் 'வெளியிட்டுள்ளது. உலகத் தமிழ் எழுத்தாளர்' என்ற தொகுப்பு நூலை 5-வது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் போது வெளியிட இருக்கிறது. இந்நிறுவனம் வெளியிட இருக்கும் நூல்களில் இதுவரை அச்சில் வெளிவராத கூவநூல் குளுவ நாடகம், பிரபந்தத் திரட்டு, திருவேங்கடவன் பிள்ளைத் தமிழ், தந்திவனபுராணம் போன்ற அரிய ஓலைச் சுவடிகளும் உள்ளன.

13. ''தஞ்சை மாவட்டத் தொல்பொருளியல் நாட்டுப் படம்'' தயாரித்து வெளியிடுதல், தமிழ் நாட்டின் இடப் பெயர் பற்றிய ஆராய்ச்சி நூல் வெளியிடுதல் ஆகியவற்றை இந்நிறுவனம் செயல்படுத்தும்.

14. இந்நிறுவனத்தில் 'சுவடியியல்', 'மொழி பெயர்ப்பியல்' எனும் பட்டமேற்படிப்புத் துறைகள் நடைபெற்று வருகின்றன. ''சுவடியியலில்'' தேறும் மாணவர்கள் தாமாகவே பழஞ்சுவடிகளைப் பார்த்துப் பதிப்பிக்கும் ஆற்றல் பெறுவர்.

ஐந்தாவது உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாடு—கருத்தரங்கு.

15. இதுவரை நடந்துள்ள உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாடு கருத்தரங்குகள் நான்கில் முதல் மாநாடு 1966-ல் கோலாலம்பூரிலும், இரண்டாவது 1968-ல் சென்னையிலும், மூன்றாவது 1970-ல் பாரிசிலும், நான்காவது 1973-ல் யாழ்ப்பாணத்திலும் நடைபெற்றன. ஐந்தாவது மாநாடு மதுரையில் நடைபெறும். மாநாடு நடக்கும் காலம் பற்றி விரைவில் முடிவாகும்.

16. மாநாட்டுப் பணியின் ஒரு கூறாக மதுரையில் பல வளர்ச்சிப் பணிகள் சாலைமேம்பாடு, தெருவிளக்குகள், குடிநீர், குடிசை சீரமைப்பு போன்றவை நடந்துள்ளன. திருமலை நாயக்கர் மகாலில் ரூ. 28 லட்சம் செலவில் ஒலி-ஒளிக் காட்சி ஒன்று அமைக்கப்படும்.

17. தஞ்சாவூர் சரசுவதிமகால் நூலகம், சென்னையிலுள்ள அரசு கீழ்த் திசைச் சுவடிகள் நூலகம் அவற்றில் உள்ள இதுவரை வெளியிடப்படாத தமிழ் ஓலைச் சுவடிகளை வெளியிடும் பணி தொடங்கியுள்ளது.



18. மாநில அரசு பொறுப்பேற்று நடத்தும் இம்மாநாட்டில் ம்நாட்டிலிருந்தும் பிற நாடுகளிலிருந்தும் பெரும் அளவில் அறிநர்களும் ஆராய்ச்சியாளர்களும் கலந்து கொள்வர்.

19. முதன்மையான ஆராய்ச்சி மாநாடு-கருத்தரங்கு உடன் ின்வரும் சிறப்பான நடவடிக்கைகளும் மாநாட்டை ஒட்டி டுக்கப்படும்:—

(1) முறையான மாநாடு-கருத்தரங்கோடு சேர்ந்து அல்லாமல், தனியாக பொதுமக்கள் கலந்து கொள்ளக் கூடிய வகையில் பட்டி மன்றம், கவியரங்கம், சிறப்புச் சொற்பொழிவுகள் ஆகியவை நடக்கும் பொதுமாநாடு நடத்துதல்.

(2) பண்டைத் தமிழ் பண்பாடு, இலக்கியக் காட்சிகள், தொன்று தொட்டு இன்று வரை தமிழர் நாகரிக வளர்ச்சி போன்றவற்றைக் காட்டும் கலைக் கண்காட்சி.

(3) வரலாறு, இலக்கியம், இரண்டு வகையிலும் தமிழ்ப் பண்பாட்டை விளக்கும் அலங்கார ஊர்திகளைக் கொண்ட ஊர்வலம்.

(4) கலை நிகழ்ச்சிகளும், கிராமப் புற நடனங்களும் போன்றவையும்.

(5) மாநாட்டுப் பிரதிநிதிகளுக்கு கலைச் சுற்றுலா.

(6) மலர் வெளியீடு.

## இணைப்பு I—தொடர்ச்சி

பள்ளிக் கல்வி பற்றிய விவரங்கள்.

| (1) | 1965–66 (மூன்றாவது திட்ட முடிவு.) (2) | 1973–74 (நான்காவது திட்ட முடிவு). (3) | 1976–77 (ஆகஸ்டு முதல் நாள் உள்ளபடி). (4) | 1977–78 (ஆகஸ்டு முதல் நாள் உள்ளபடி). (5) | 1978–79 (ஆகஸ்டு முதல் நாள் உள்ளபடி). (6) | 1979–80 (ஆகஸ்டு முதல் நாள் உள்ளபடி). (7) |
|---|---|---|---|---|---|---|
| | | | (மாணவர்கள் இலட்சத்தில்). | | | |
| அ. வெவ்வேறு வயதுத் தொகுதிச் சிறார் மொத்த எண்ணிக்கை— | | | | | | |
| வயதுத் தொகுதி 6—11— | | | | | | |
| சிறுவர் .. | 25·85 | 30·45 | 31·93 | 32·39 | 32·84 | 33·27 |
| சிறுமியர் .. | 25·64 | 29·79 | 31·23 | 31·68 | 32·11 | 32·54 |
| மொத்தம் .. | 51·49 | 60·24 | 63·16 | 64·07 | 64·95 | 65·81 |
| வயதுத் தொகுதி 11—14— | | | | | | |
| சிறுவர் .. | 11·31 | 13·71 | 14·37 | 14·58 | 14·78 | 14·97 |
| சிறுமியர் .. | 11·23 | 13·40 | 14·05 | 14·25 | 14·45 | 14·64 |
| மொத்தம் .. | 22·54 | 27·11 | 28·42 | 28·83 | 29·23 | 29·61 |
| வயதுத் தொகுதி 14—17— | | | | | | |
| சிறுவர் .. | 9·33 | 11·31 | 11·86 | 12·03 | .. | .. |
| சிறுமியர் .. | 9·26 | 11·07 | 11·60 | 11·77 | .. | .. |
| மொத்தம் .. | 18·59 | 22·38 | 23·46 | 23·80 | .. | .. |
| வயதுத் தொகுதி 14—16— | .. | .. | .. | .. | 16·32 | 16·51 |
| ஆ. பள்ளிகளில் சேர்க்கப்பட்டோர் எண்ணிக்கை— | | | | | | |
| வயதுத் தொகுதி 6—11— | | | | | | |
| சிறுவர் .. | 26·37 | 30·64 | 32·02 | 33·11 | 33·83 | 34·34 |
| சிறுமியர் .. | 18·74 | 23·74 | 25·50 | 26·74 | 27·38 | 27·94 |
| மொத்தம் .. | 45·11 | 54·38 | 57·52 | 59·85 | 61·21 | 62·28 |
| வயதுத் தொகுதி 11—14— | | | | | | |
| சிறுவர் .. | 7.21 | 9.10 | 9.74 | 10.26 | 10.73 | 11.02 |
| சிறுமியர் .. | 3.45 | 5.09 | 5.76 | 6.12 | 6.29 | 6.65 |
| மொத்தம் .. | 10.66 | 14.19 | 15.50 | 16.38 | 17.02 | 17.67 |

## இணைப்பு 1—தொடர்ச்சி.

### பள்ளிக் கல்வி பற்றிய விவரங்கள்—தொடர்ச்சி.

| (1) | 1965–66 (மூன்றாவது திட்ட முடிவு.) (2) | 1973–74 (நான்காவது திட்ட முடிவு.) (3) | 1976–77 (ஆகஸ்டு முதல் நாள் உள்ளபடி.) (4) | 1977–78 (ஆகஸ்டு முதல் நாள் உள்ளபடி.) (5) | 1978–79 (ஆகஸ்டு முதல் நாள் உள்ளபடி.) (6) | 1979–80 (ஆகஸ்டு முதல்நாள் உள்ளபடி.) (7) |
|---|---|---|---|---|---|---|
| | (மாணவர்கள் இலட்சத்தில்.) | | | | | |
| வயதுத் தொகுதி 14–17 | | | | | | |
| சிறுவர் .. .. | 3.86 | 4.97 | 5.34 | 5.24 | .. | .. |
| சிறுமியர் .. | 1.65 | 2.42 | 2.68 | 2.69 | .. | .. |
| மொத்தம் .. | 5.51 | 7.39 | 8.02 | 7.93 | .. | .. |
| வயதுத் தொகுதி 14–16 .. .. | .. | .. | .. | .. | 6.28 | 6.34 |
| இ. பள்ளியில் சேர்க்கப்பட்டோர் சதவீதம்— | | | | | | |
| வயதுத் தொகுதி 6–11 | | | | | | |
| சிறுவர் .. .. | 102.03 | 100.6 | 100.3 | 102.2 | 103.21 | 103.21 |
| சிறுமியர் .. | 73.08 | 79.6 | 81.7 | 84.4 | 85.27 | 85.87 |
| மொத்தம் .. | 87.61 | 90.2 | 91.7 | 93.4 | 94.25 | 94.64 |
| வயதுத் தொகுதி 11–14 | | | | | | |
| சிறுவர் .. .. | 63.78 | 66.3 | 67.7 | 70.3 | 72.26 | 73.60 |
| சிறுமியர் .. | 30.72 | 37.9 | 41.0 | 42.9 | 43.39 | 45.44 |
| மொத்தம் .. | 47.31 | 52.3 | 54.4 | 56.8 | 58.25 | 59.68 |
| வயதுத் தொகுதி 14–17— | | | | | | |
| சிறுவர் .. .. | 41.38 | 43.0 | 44.9 | 43.7 | .. | .. |
| சிறுமியர் .. | 17.83 | 21.8 | 23.1 | 22.9 | .. | .. |
| மொத்தம் .. | 29.65 | 33.0 | 34.1 | 33.4 | .. | .. |
| வயதுத் தொகுதி 14–16 .. .. | .. | .. | .. | .. | 38.46 | 38.44 |
| ஈ. பள்ளிகளின் எண்ணிக்கை— | | | | | | |
| தொடக்கப்பள்ளிகள். | 24,641 | 26,726 | 27,306 | 27,395 | 27,425 | 27,662 |
| உயர் தொடக்கப் பள்ளிகள். .. | 6,065 | 5,773 | 5,730 | 5,709 | 5,705 | 5,685 |

இணைப்பு 1—தொடர்ச்சி.

பள்ளிக் கல்வி பற்றிய விவரங்கள்—தொடர்ச்சி.

| (1) | 1965–66 (மூன்றாவது திட்ட முடிவு). (2) | 1973–74 (நான்காவது திட்ட முடிவு). (3) | 1976–77 (ஆகஸ்டு முதல் நாள் உள்ளபடி). (4) | 1977–78 (ஆகஸ்டு முதல் நாள் உள்ளபடி). (5) | 1978–79 (ஆகஸ்டு முதல் நாள் உள்ளபடி). (6) | 1979–80 (ஆகஸ்டு முதல் நாள் உள்ளபடி). (7) |
|---|---|---|---|---|---|---|
| | | (மாணவர்கள் இலட்சத்தில்) | | | | |
| உயர்நிலைப் பள்ளிகள் | 2,234 | 2,823 | 3,030 | 3,058 | 2,196 | 2,088 |
| மேல்நிலைப் பள்ளிகள் | .. | .. | .. | .. | 912 | 1,138 |
| மொத்தம் .. | 32,940 | 35,329 | 36,066 | 36,162 | 36,238 | 36,573 |

மேல் நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரையில் ஆசிரியர்கள் எண்ணிக்கை, மாணவர் எண்ணிக்கை, ஆசிரியர்–மாணவர் விகிதம் போன்ற வகையில் பின்தரப்பட்டுள்ள பள்ளி விவரங்கள், உயர்நிலைப் பள்ளி வகுப்புகளில் (10–ம் வகுப்பும் கீழும்) அப்பள்ளிகளில் பயின்று வந்த மாணவர்கள் பயிற்றுவித்த ஆசிரியர்கள் ஆகியோரையும் உள்ளடக்கியவையாகும்.

உ. ஆசிரியர்களின் எண்ணிக்கை—

| | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| தொடக்கப் பள்ளிகள் .. | 88,173 | 1,06,332 | 1,11,033 | 1,11,184 | 1,11,808 | 1,12,535 |
| உயர் தொடக்கப் பள்ளிகள் .. | 59,943 | 66,843 | 67,846 | 68,794 | 69,279 | 66,568 |
| உயர் நிலைப் பள்ளிகள் .. | 48,574 | 65,959 | 72,838 | 73,039 | 75,136 | 34,102 |



| | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| மேல் நிலைப் பள்ளிகள் .. | .. | .. | .. | .. | .. | 45,257 |
| மொத்தம் .. | 1,96,690 | 2,39,134 | 2,51,717 | 2,53,017 | 2,56,223 | 2,58,462 |

ஊ. ஆசிரியர்—மாணவர் விகிதம்—(ஆகஸ்டு முதல் நாள் உள்ளபடி)—

(1) பள்ளிவாரியாக (சிறப்பு ஆசிரியர்களையும், ஆசிரியர் தொகையில் சேர்த்து)—

| | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| தொடக்கப் பள்ளிகள் | 27 | 35 | 36 | 37 | 38 | 39 |
| உயர் தொடக்கப் பள்ளிகள் .. | 35 | 33 | 33 | 33 | 36 | 37 |
| உயர்நிலைப் பள்ளிகள் .. | 31 | 24 | 24 | 24 | 24 | 23 |
| மேல் நிலைப் பள்ளிகள் .. | .. | .. | .. | .. | .. | 28 |

2) வகுப்புத் தொகுதி வாரியாக (சிறப்பு ஆசிரியர்களை, ஆசிரியர் தொகுதியில் சேர்த்து)—

| | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| தொடக்கப்பள்ளி வகுப்புத் தொகுதி | 37 | 37 | 36 | 37 | 39 | 38 |
| உயர் தொடக்கப் பள்ளி வகுப்புத் தொகுதி .. | 32 | 33 | 33 | 33 | 33 | 32 |
| உயர்நிலைப் பள்ளி வகுப்புத் தொகுதி | 32 | 29 | 30 | 27 | 26 | 26 |
| மேல்நிலைப் பள்ளி வகுப்புத் தொகுதி | .. | .. | .. | .. | .. | 22 |

## இணைப்பு 1—தொடர்ச்சி.

1979-80-ல் (1—8—1979-ல் இருந்தவாறு) பள்ளிக்கூடங்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகிய பள்ளி விவரங்கள்.

| பள்ளிக்கூடங்கள். (1) | | எண்ணிக்கை. (2) | | மாணவர்கள் (லட்சத்தில்.) (3) | ஆசிரியர்கள் (4) |
|---|---|---|---|---|---|
| தொடக்கப்பள்ளிகள்— | | | | | |
| அரசு .. .. .. .. | | 1,422 | | | |
| நகராட்சி .. .. .. | | 1,094 | | | |
| ஊராட்சி ஒன்றியம் .. .. | | 20,193 | | | |
| தனியார் .. .. .. .. | | 4,953 | | | |
| | | | 27,662 | 43.52 | 1,12,530 |
| உயர் தொடக்கப் பள்ளிகள்— | | | | | |
| அரசு .. .. .. .. | | 250 | | | |
| நகராட்சி .. .. .. | | 400 | | | |
| ஊராட்சி ஒன்றியம் .. .. | | 3,073 | | | |
| தனியார் .. .. .. .. | | 1,962 | | | |
| | | | 5,685 | 24.83 | 66,568 |
| உயர்நிலைப் பள்ளிகள்—சாதாரணப் பள்ளிகள்— | | | | | |
| அரசு | 1,500 | | | | |
| நகராட்சி .. | 73 | | | | |
| தனியார் .. .. | 426 | | | | |
| | | 1,999 | | | |
| ஆங்கிலோ இந்தியப் பள்ளிகள். | 15 | | | | |
| மெட்ரிகுலேஷன் .. | 8 | | | | |
| C.B.S.E. பள்ளிகள் | 65 | | | | |
| முதலியவை. | | 88 | 2,087 | 7.75 | 34,102 |
| மொத்தம் | | | | | |
| மேல்நிலைப் பள்ளிகள், சாதாரணப் பள்ளிகள்— | | | | | |
| அரசு .. .. .. | 485 | | | | |
| அரசு (தொழில் நுட்பம்) | 14 | | | | |

## இணைப்பு 1—தொடர்ச்சி

**1979-80-ல் (1—8—1979-ல் இருந்தவாறு) பள்ளிக்கூடங்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகிய பள்ளி விவரங்கள்—தொடர்ச்சி**

| பள்ளிக்கூடங்கள். (1) | | எண்ணிக்கை. (2) | | மாணவர்கள் (லட்சத்தில்). (3) | ஆசிரியர்கள். (4) |
|---|---|---|---|---|---|
| நகராட்சி .. .. | 54 | | | | |
| னியார் .. .. | 483 | | | | |
| | 1,036 | | | | |
| ஆங்கிலோ இந்தியன் .. | 26 | | | | |
| மெட்ரிகுலேஷன் .. | 25 | | | | |
| | | 1,087 | | | |
| C.B.S.C. முதலியவை .. .. | | 52* | | | |
| | | | 1,139 | 12.69 | 45.257 |
| | | | 36,573 | 88.79 | 2,58,462 |
| மொத்தம் .. | | | சிறுவர் | 51.13 | |
| | | | சிறுமியர் | 37.66 | |

* தமிழ்நாடு அரசு 1978-79 முதல் மேல் நிலைப் பள்ளி வகுப்புகளைத் தொடங்கியது. அதற்கு முன்பிருந்தே இந்த 52 C.B.S.E. பள்ளிகளில் மேல் நிலைப் பள்ளி வகுப்புகள் இருந்தன.

| | எண்ணிக்கை. | மாணவர்கள். | ஆசிரியர்கள் |
|---|---|---|---|
| ஏனைய நிறுவனங்கள் .. .. | 40 (தனியார்) | 5,100 | 127 |
| கீழ்த்திசை பள்ளிகள் .. .. | 18 | 3,700 | 209 |
| ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் .. .. | 79 | 2,080 | 319 |
| கைத்தொழில் பயிற்சி மையங்கள் .. .. | 7 | 500 | 40 |

ஊனமுற்றோருக்கா : 45 பள்ளிகள் சமுதாய நல இயக்குநரின் கீழ் மாற்றப்பட்டு விட்டன.

## இணைப்பு II.

### கல்லூரிக் கல்வி பற்றிய புள்ளி விவரங்கள்.

| விவரங்கள். | 1965–66 மூன்றாவது திட்ட முடிவு. | 1973–74 நான்காவது திட்ட முடிவு. | 1976–77. | 1977–78. | 1978–79. | 1979–80. |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1. மொத்த மாணவர் எண்ணிக்கை— | | | | | | |
| (1) புகுமுக வகுப்பு. | 39,507 | 72,646 | 84,257 | 89,423 | 77,802 | .. |
| (2) பி.ஏ. .. | 11,349 | 51,698 | 44,697 | 43,077 | 42,871 | 47,872 |
| (3) பி.எஸ்சி. .. | 22,381 | 49,057 | 48,110 | 48,948 | 51,622 | 56,847 |
| (4) பி.காம். .. | 3,050 | 14,859 | 19,195 | 20,451 | 20,725 | 21,744 |
| (5) பட்ட மேற் படிப்பு. | 2,607 | 6,993 | 7,043 | 7,012 | 7,509 | 9,263 |
| மொத்தம் .. | 78,894 | 1,95,253 | 2,08,302 | 2,03,911 | 2,00,529 | 1,35,726 |
| 2. ஆசிரியர்களின் எண்ணிக்கை— | | | | | | |
| (1) அரசுக் கல்லூரிகள் .. | | 2,969 | 3,733 | 3,812 | 3,813 | 3,752 |
| (2) தனியார் கல்லூரிகள். .. | | 7,090 | 7,883 | 8,394 | 3,329 | 8,438 |
| | 4,932 | 10,059 | 11,616 | 12,206 | 12,142 | 12,190 |
| 3. கல்லூரிகள் எண்ணிக்கை— | | | | | | |
| (1) அரசு .. | 21 | 51 | 51 | 51 | 51 | 51 |
| (2) தனியார் .. | 71 | 127 | 138 | 137 | 137 | 136* |
| | 92 | 178 | 189 | 188 | 188 | 187 |

* அண்ணாமலைப்பல்கலைக் கழக புகுமுகக் கல்லூரி 1979-80 முதல் மூடப்பட்டு விட்டது.

பிற கல்லூரிகளுக்கான 1979–80-ம் ஆண்டு விவரங்கள்.

| வகை. | கல்லூரிகள் எண்ணிக்கை. அரசு. | கல்லூரிகள் எண்ணிக்கை. தனியார். | மாணவர் எண்ணிக்கை. | ஆசிரியர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| (1) ஆசிரியர் பயிற்சி கல்லூரிகள் .. .. | 7 | 16 | 3,265 | 246 |
| (2) உடற்பயிற்சிக் கல்லூரிகள் .. .. | .. | 3 | 366 | 36 |
| (3) புலவர் கல்லூரிகள் .. .. | .. | 15 | 1,784 | 133 |
| (4) சமுதாயப் பணிப்பள்ளி .. .. | .. | 2 | 174 | 16 |
| (5) கிராமப்புற உயர் கல்வி நிலையம் .. | .. | 1 | 443 | 70 |
| (6) இசைக்கல்லூரிகள் .. .. | 2 | .. | 426 | 35 |
| மொத்தம் .. | 9 | 37 | 6,458 | 536 |



## இணைப்பு III.

1979–80-ல் தொழில் நுட்பக் கல்வி பற்றிய விவரங்கள்.

| (1) | | கல்வி நிலையங்கள் எண்ணிக்கை. | ஆசிரியர் எண்ணிக்கை. | மொத்த மாணவர் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) |
| 1 பொறியியற் கல்லூரிகள்— | | | | |
| (1) அரசு .. .. .. | 3 | 13 | 950 | 13,084 |
| (2) தனியார் .. .. .. | 3 | | | |
| (3) தன்னுரிமையுள்ளவை .. .. | 7 | | | |
| 2 பாலிடெக்னிக்குகளும் சிறப்பு பட்டயப் படிப்பு நிலையங்களும்— | | | | |
| (1) அரசு .. .. .. | 20 | 40 | 1,353 | 16,560 |
| (2) தனியார் .. .. .. | 19 | | | |
| (3) தன்னுரிமையுள்ளவை .. .. | 1 | | | |
| 3 தொழில் பாட மேல்நிலைப் பள்ளிகள்— | | | | |
| (1) அரசு | 11 | 14 | 103 | 1,977 |
| (2) தனியார் .. | 3 | | | |
| மொத்தம் .. | | 67 | 2,406 | 31,621 |

123082

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்,
எழும்பூர், சென்னை-600 008.

## தவணைத்தாள்.

சே. எண் : ப. எண் :

| வழங்கிய நாள். (1) | திரும்பிய நாள். (2) | வழங்கிய நாள். (1) | திரும்பிய நாள். (2) |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

S.F. 259A-6—1,00,000—30-1-84.